உ

ஸ்ரீராமஜெயம்.



ஸ்ரீராம லெட்சுமண சம்பாஷணை

என்ற

கிராமக் கணக்கு

மான்யூல் சுருக்கம்.

இஃது

திருமங்கலம் தாலூகா,

திருமங்கலம்

ஞானதேசிகம் பிள்ளை அவர்கள் குமாரர்,

செங்கப்படை கிராமம் கர்ணம், வேலைபார்த்த

அய்யாத்துரை பிள்ளை என்ற

பால்வண்ணம் பிள்ளை அவர்களால்,

இயற்றியதை

செங்கப்படை கிராமம்

வெ. அ. ராமசாமி நாயக்கர் அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

Title page only printed at the

Shunmuga Vilas Press,

MADURA.

1923. விலை ரூ. 1-8-0

உ

முகவுரை.

நான் 1891-௵ முதல் கிராமக் கணக்கு வேலைபார்த்து கர்ணம், முன்சீபு, பரீக்ஷைகளிலும் சர்வேபரீக்ஷையிலும் தேறுதலடைந்து மதுரை ஜில்லா திருமங்கலம் தாலூகா செங்கப்படைகிராமம் கர்ணம் வேலைபார்த்துக்கொண்டிருந்தகாலத்தில் எனக்கு பிதாவுக்கும் குருவுக்கும் சமானமாகிய இப்புஸ்தகத்தை அச்சியற்றியவரான வெ. அ ராமசாமி நாயக்கர் அவர்கள் குமாரர் அய்யலு நாயுடுவுக்கும் எனக்கு உடன்பிறந்த சகோதரர்க்குச் சமானமானவரும் மேற்கண்டசெங்கப்படை கிராமம் கிராமமுன்சீபுமான எ: ம. பெருமாள் நாயுடு அவர்கள் குமாரர் ரெங்கசாம்நாயுடுவுக்கும் மருமகனா ப. கொ. வெங்கிடசாமிநாயுடுவுக்கும் கிராம உத்தியோகஸ்தர்கள்பரீக்ஷைக்குவேண்டிய பாடங்களை ஒருமாசத்திற்குள் சொல்லிக்கொடுத்து கடவுள் அருளால் தேர்ச்சியடைந்ததைக்கண்டு அடுத்த பக்கத்திலுள்ள சிவரகோட்டைக்கிராமமுனசீப் ராமசாமிக்கவண்டரும்சாணிமல்லம்பட்டி கிராமமுன்சீப் ராவுத்தக்கவுண்டரும்இன்னும் சிலர்களும் என்னிடம் வந்து படித்துபரீக்ஷையிலதேர்ச்சியடைந்ததையும்இவர்கள்படிக்கும் காலத்தில் கற்பித்ததன்மையையும் பரீக்ஷைக்குசிலநாளைக்குமுன்மதுரை திருமலைராயர்படித்துரை அருகிலுள்ளமகா-ள-ள-ஸ்ரீமலையாளத்து செட்டியார் சத்திரத்தில் ஸ்கூல்ஏற்படுத்தி படித்தவர் மனதில் நன்றாய்ப்பதியும்வண்ணம் சில௵சங்களாக கற்றுக்கொடுத்துகொண்டு வரும் நன்மையையும் தெரிந்தும் கேள்வியுற்றும் இந்தஜில்லாவில்இருந்தும் இதரஜில்லாக்களிலிருந்தும் அனேகம்பேர் என்னிடம் வந்து படித்து பரீக்ஷையில் தேர்ந்து ஒருவர் உதவியன்னியில் தங்கள்வேலைகளை தாங்களே பார்த்துக்கொள்ளும்திறமையடைந்துநாளுக்கு நாள் பிரபலம் அடைந்திருக்கிறார்கள் மேல்கண்டவர்களை கண்ணால் கண்டவர்களும் காதால்கேட்டவர்களுமான அனேகம்பேர்கள் என்னிடம்வந்து கிராமஉத்தியோகஸ்தர்கள் பரீக்ஷைக்கு வேண்டியவிஷயங்களுக்கு சுருக்கமாக ஒரு நோட்டெழுதித்தரவேண்டுமென்றும் சிலர் புஸ்தகத்தில் முக்கியமான விஷயங்களைக் குறித்துதரவேண்டுமென்றும் அனேகர் அடிக்கடி என்னிடம்கேட்டுக்கொண்டதை உத்தேசித்து அவரவர்கள் எண்ணப்படி செய்துகொண்டுவந்து அதனால் அடிக்கடி எனக்கேற்படும் சிரமத்தை உத்தேசித்து கணக்கு மேன்

நூலில்கண்ட விஷயங்களை இராமன் லெட்சுமணனுக்கு கதைசொல்வது போல சம்பாஷணையாக யெழுதிவைத்துக்கொண்டு என்னிடம் படிக்க வருபவர்களுக்கு கற்றுக்கொடுத்துக்கொண்டிருந்தேன்.

அதைக்கண்ணுற்றவரும் எனது பிராணசிநேகிதரும் பெரியகுளம் தாலூகா ஆண்டிபட்டி யூனியன் போர்டுபிரசிடெண்டு உசிலம்பட்டி தாலூகா போர்டுமெம்பர் மதுரை டிஸ்டிரிகட்போர்டு மெம்பர் முதலிய ஸ்தானங்களைப்பெற்றிருப்பவரும் பாகவதபக்தர்களில் ஒருவருமான ஜக்கம்பட்டி அளகிரிசாமி நாயுடு அவர்கள் இதை கட்டாயம் அச்சிட வேண்டுமென்றதின்மேல்படித்தவர் மனதில்நன்றாய்ப்பதியும்வண்ணம் சிலபாட்டுகளும் அமைத்து அதை எனக்கு குருவாகப்பாவித்துநான் பணிந்துகொண்டுவருபவரும் என்மீது மிகுந்த அன்புள்ளவரும் சற்குணம்நிறைந்தவரும் டைட்டில்பேஜில் கண்டவருமானசெங்கப்படை கிராமம் வெ. அ. ராமசாமி நாயுடு அவர்களிடம் காட்டியதில் அவர் பலருக்கும் உபயோகப்படும்படியாக அச்சிடவேண்டிய தவசிய மென்றும் அதற்குவேண்டிய ஏற்பாடுசெய்து அவர்களால் இப் புஸ்தகம் அச்சிடலாயிற்று:

இதின் முன்பக்கத்தில் ஒவ்வொருகணக்குகளின் விவரத்தை சுருக்கமாகவும் எந்தெந்தவிஷயங்கள் எந்தெந்தக்கணக்குகளில் தெரிந்து கொள்ளலாமென்ற விவரத்தை வினா விடையாகவும் கூறப்பட்டிருக்கிறது.

இதில் அ. ரிஜிஸ்டர் முதல் 12- நம்பர் ஸ்டேட்மெண்டு வரையுள்ள விஷயங்களை ராமன் கதைசொல்வது போல லெக்ஷுமணனுக்கு சம்பாஷணை யாகவும் கோபாலனுக்கு கும்மிப்பாட்டாகவும் கூறி அவைகள் தயார்செய்யும் விதத்தை ஜெகநாதனுக்கு சிந்துவாகவும் லெக்ஷுமணனுக்கு சம்பாஷணையாகவும் கூறப்பட்டிருக்கிறது:

13-நம்பர் முதல் 24-நம்பர் வரையுள்ள ஸ்டேட்டுமெண்டுகளின் விவரங்களையும் தயார்செய்யும் விதங்களையும் சேர்த்து சிவப்பிரகாசனுக்கு மற்றொருவிதச்சிந்துப் போக்காகவும்லெக்ஷுமணனோடு மறுபடியும் சம்பாஷணை செய்வதுபோல சம்பாஷணையாகவும் எடுத்துச் சொல்லப்பட்டிருக்கிறது;

கணக்குகள் தயாரிக்கும் விதத்தை யாவரும் வெகுஇலகுவாகதெரிந்துகொள்ளும் பொருட்டு பஞ்சாக்ஷரத்துக்குச் சொல்வது

போல அதிகச்சுருக்கமாகச்சொல்லப் பட்டிருப்பதுடன் சோதனை செய்பவர்களுக்கு அதிக அனுகூலமாயிருக்கும்பொருட்டு ஒவ்வொரு கணக்குகளின் விபரம், அவைகளின் உபயோகம், எந்தக்கணக்கிலிரு க்து, உற்பத்தியானது எந்தெந்தக்கணக்குகள் தயார்செய்ய உதவு கிறது எந்தெந்தக்கணக்குகளுக்கு தகவல் கொடுக்கிறதுஎன்றவிபரங் களைக் காட்டக்கூடிய விதமாய் கலங்களமைத்து மிமோராண்ட மூல மாய் இதன் கடாசிபக்கத்தில் காட்டப்பட்டிருக்கிறது.

கிராம உத்தியோகஸ்தர்கள் பரீக்ஷைக்குப் போகிறவர்களுக்கும் ஒருவர்உதவியன்னியில் கிராமஉத்தியோக வேலைபார்க்க யெண்ண முடைய வர்களுக்கும் கிராம உத்தியோகவேலை பார்த்துக்கொண்டி ருக்கிறவர்களுக்கும் தயாரித்தகணக்குகளை தணிக்கை (சரி) பார்க்கிற உத்தியோகஸ்தர்களுக்கும் ரிவினியூ டெக்ஸ்டு பரீக்ஷைக்குபோகக் கூடிய ரிவினியூ உத்தியோகஸ்த்தர்களுக்கும் பொதுவாய் எழுதப் படிக்கத்தெரிந்த பட்டாதார்கள் அனைவருக்கும் இந்த புஸ்தகம் அவசியம் வேண்டுமென்பதை கையிலெடுத்துப் பார்க்கும்பொழுதே உள்ளங்கைநெல்லிக்கனிபோல் நன்றாய் விளங்கும்.

இந்தப்புஸ்தகத்திலுள்ள சகல விஷயங்களையும் நன்றாய்ப் படித்து மனதில் வைத்துக்கொண்டால் தேர்ந்த கர்ணத்தினிடமிரு ந்து மூன்றுவருஷகாலம் கணக்கு வேலை பழகியதுபோலாம் நல்ல ஞாபகசக்த்தியுடையவர்கள் ஒரேமனதாக ஒருவாரம் இப்புஸ்தகத் தைப் படித்தால் ஒருவருடைய உதவியன்னியில் பரீக்ஷையில் தேர் ந்துவேலைபார்க்கும்திராணியை அடைவார்கள்மிமோராண்டத்தையும் பஞ்சாக்ஷரத்துக்குச் சொல்லியிருக்கும் கணக்குகள் தயாரிக்கும் சுருக்கத்தையும் கவனித்தால் ஒரேநாளில் கணக்குகள் தயாரிக்கும் சுருக்கத்தைத் தெரிந்துகொள்வார்கள் சாதாரணமான ஞாபக சக் தியையுடையவர்கள் அவரவர்களிருந்த இடத்திலிருந்து முன்பக்கத் தில் கண்ட கணக்குகளின் விவரம் வினா விடை பஞ்சாக்ஷத்துக்கு சொல்லிய கணக்குகள் தயாரிக்கும் சுருக்கம் கடாசியில்காட்டியிருக் கிற மிமோராண்ட முதலியவைகளைப்படித்துக் கொண்டு ஒருவாரம் என்னிடம் வந்திருப்பார்களானால் கடவுளருளால் பரீக்ஷைக்குவேண் டிய விஷயங்களை அதிக சுலபமாகக் கற்றுக்கொடுக்கும்சக்தி எனக்கு உண்டு என்பதையும் இதன் மூலமாய்த் தெரியப்படுத்திக் கொண்டேன்.

<u>இதை இயற்றியவர்கருத்து</u>. இந்த ஜில்லாவிலும் இதரஜில்லாவிலுமிருந்து அநேகமிராசுதார்கள் ஒவ்வொருவருஷத்திலும்திருமங்கலத்துக்கும் செங்கப்படைகிராமத்துக்கும் என்னிடம் படிக்கவந்து அவர்கள் படும் அவஸ்தை சிரமம் அலைச்சல் சிலவு முதலிய அநேககஷ்டநஷ்டங்களைப்பார்த்த நான் சில மிராசுதார்கள் உதவியைப்பெற்று முன்னேற்றத்திற்குவந்த நன்மையைக் கருதிநன்றிமறவாது சகலமிராசுதார்களும் யாதொரு சிரமமும் பிரயாசையுமின்றி அவரவர்கள் இருந்தஇடங்களிலிருந்து இந்த புஸ்தக உதவியைத்தவிர மற்றொருவருடைய உதவியன்னியில் கிராம உத்தியோகப் பரீக்ஷைக்கேற்ப்பட்ட விஷயங்களைச் சீக்கிரத்தில் கற்று பரீக்ஷையில் தேர்ச்சியடையும்பொருட்டும், பரீக்ஷை தேர்ந்த பின் கிராமக்கணக்குவேலையில் தேர்ச்சியடையவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடனும் மான்யூலில் கண்ட விஷயங்கள் மனதில் நன்றாய்ப் பதியவேண்டுமென்ற நல்ல எண்ணத்துடனும், ஏற்படுத்தியிருக்கும் இப்புஸ்தகத்திலுள்ள பாட்டுகளிலும், மற்ற சகல விஷயங்களிலும், ஏதேனும் பிழையிருந்தால் பெரியோர்கள் அப்பிழைகளைக் குற்றமாகப்பாராட்டாமல் ஏற்றுக்கொண்டு அதை திருத்தம்செய்துகொள்வதற்காக தயவுசெய்து எனக்குத் தெரியச்செய்யக் கோருகிறேன்.

A. நிலையான ரிஜிஸ்டர்.

ஒரு கிராமத்திலுள்ள சகல நிலங்களையும் சகலவிவரத்துடன் சர்வே நம்பர் வரிசையாய்க் காட்டி அவைகளின் மாறுதல்களையும் காட்டும் சாஸ்வதமான ரிஜிஸ்டர்

A. ரிஜிஸ்டருக்கு உள்ளடக்கம்

ஒரு கிராமத்திலுள்ள ஒவ்வொரு பாபத்துக்களின் மொத்தத்தை தரவாரியாகவும் வகுப்புவாரியாகவும் தனித்தனியாகப்பிரித்து கவர்ண்மெண்டு இனும் வேறாகக்காட்டும் நிலையான கோஷ்வாரா.

B, நிலையான ரிஜிஸ்டர்.

கிராமத்திலுள்ள இனம் நிலங்களையும் அவைகளுக்கு ஏற்பட்ட சகலவிவரங்களையும் அவைகளின் மாறுதல்களையும்காட்டுகிறநிலையான ரிஜிஸ்டர்.

சோதனை நோட்டு

கவர்ண்மெண்டு இனம் பிரித்து சர்வேநம்பர் வரிசையாய் சாகுபடியான பயிர்களையும் அவைகள் சம்மந்தமான சகல விவரங்களையும் தாக்கல்செய்யும் நோட்டு.

1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

ஒவ்வொரு மாதத்திலும் சாகுபடியான பயிர்களை பயிர்வாரியாகவும் சர்வே நம்பர் வரிசையாகவும் காட்டும் மாதவாரி ஸ்டேட்மெண்டு.

1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டுக்கு A. உள்ளடக்கம்.

ஒவ்வொருமாதத்திலும் சாகுபடியான ஒவ்வொரு பயிர்களின் மொத்தத்தையும் அவைகளின் அறுவடை மதிப்பையும் காட்டுகிற மாதவாரி கோஷ்வாரு.

2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு

ஒவ்வொரு பசலியில் ஏற்படுகிற ஆயக்கட்டு கைப்பற்று சாகுபடி முதலிய மூன்று விவரங்களை பாபத்துவாரியாய் சர்வே நம்பர் வரிசையாகக்காட்டுகிற வருஷவாரி அடங்கல் கணக்கு.

2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டுக்கு A. குறிப்பு உள்ளடக்கம்.

தற்காஸ்தில்லாமல் சிவாய்ஜமா புரம்போக்கு முதலிய நிலங்களை கைப்பற்றிய விவரங்களைக் காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு

2-ம் நம்பர் ஸ்டேட்மேண்டுக்கு B. குறிப்பு உள்ளடக்கம்

ஒவ்வொரு பசலிக்கும் ஏற்பட்ட அயன் இனும் உள்பட மொத்தம் சாகுபடிகளை நீர் பாய்ந்த விவரத்துடன் பயிர்வாரியாய்க்காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

2-ம் நம்பர் ஸ்டேட்மேண்டுக்கு C. குறிப்பு உள்ளடக்கம்.

கிராமத்திலுள்ள மரத்தீர்வை சம்மந்தமான தோட்டம் தோப்புகளைக் குறித்த வருஷவாரி ஸ்டேட்மெண்டு

2-ம் நம்பர் ஸ்டேட்மேண்டுக்கு D. குறிப்பு உள்ளடக்கம்.

பாய்ச்சலாதாரங்களையும் பாய்ச்சல் விவரங்களையும் நீர் பாய்ந்த பயிர்களின் விஸ்தீரணத்தையும் காட்டுகிற வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

2-ம் நம்பர் ஸ்டேட்மேண்டுக்கு E. குறிப்பு உள்ளடக்கம்.

ஆயக்கட்டு விவரங்களையும் அவைகளின் மாறுதல் விவரங்களையும் காட்டுகிற வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

3-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

நிலங்களின் சகல மாறுதல்களையும் காட்டுகிற வருஷவாரி ரிஜிஸ்டர்.

3-ம் நம்பர் ஸ்டேட்மேண்டுக்கு A. உள்ளடக்கம்.

கைப்பற்று நிலங்களையும் அவைகளில் உண்டாகிற மாறுதல் விவரங்களையும் காட்டுகிற வருஷவாரி கோஷ்வாரு.

4-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

பேரீஜ் வஜாக்களைக்காட்டுகிற வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

5-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 1.வது பிரிவு.

வஜா சாங்ஷன் பெருவதர்க்காக டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

5-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 11-வது பிரிவு.

சாங்க்ஷனை வஜாவை பிரித்தும் அவைகளை மொத்தம் கூட்டியும் பட்டாவாரிகாட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

5-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 111-வது பிரிவு.

அபூர்வமாய் ஏற்படும் ஸ்பெஷல் வஜாக்களைத் தெரிவிக்கும் ஸ்டேட்மெண்டு.

6-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு

சர்க்கார் சம்மந்தமான சகல தண்ணீர்த் தீர்வையையும் காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

6-ம் நம்பர்ஸ்டேட்மெண்டுக்கு A. உள்ளடக்கம்.

ஒவ்வொரு பட்டாவுக்கும் பலபாய்ச்சலாதாரங்களிலிருந்து ஏற்பட்ட தண்ணீர் தீர்வை மொத்தத்தைக்காட்டும் தண்ணீர் தீர்வை கோஷ்வாரு.

7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

எல்லாவிதமான சில்லரை ரிவின்யூகளையும் எடுத்துக்காட்டும் வருஷவாரி ரிஜிஸ்டர்

8-ம் நம்பர் கணக்கும் அதின் உள்ளடக்கமும்.

ஒவ்வொரு பாய்ச்சலாதாரங்களில் ஏற்படும் நஞ்சை கைபற்றுகளின் விவரத்தை காட்டுகிற வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

9-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

சில்லரைக் கேற்பட்ட லாண்டுசெஸ்களையும் லோக்கல் பண்டு ஸ்பெஷல் பண்டுகளையும் குறித்தவருஷவாரி ஸ்டேட்மெண்டு.

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவு.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்பட்ட கைபற்று ஸ்தலங்களின் விவரத்தையும்மொத்தத்தையும் பட்டாவாரி காட்டும் நபர்கதி சிட்டா

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-வது பிரிவு.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்பட்ட கைபற்று விவரத்தையும் அவைகளின் மேல் ஏற்படும் சகலவித ரிவின்யூ விவரங்களையும் ஒவ்வொரு இணங்களுக்கு ஏற்படும் மொத்தம் பேரிஜையும் பட்டாவாரி காட்டும் வருஷவாரி ஜமாபந்தி பைசல் விவரக்கணக்கு,

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-வது பிரிவுக்கு உள்ளடக்கம்
போஸ்டிங்ஸ்டேட்மெண்டு.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஒரு கிராமத்துக்கும் ஏற்பட்ட மொத்தம் பேரிஜையும் கைபற்று நிலங்களின் லாண்டுசெஸ்ஸையும் காட்டுகிற வருஷவாரி போஸ்டிங் ஸ்டேட்மெண்டு.

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு A. உள்ளடக்கம்

இறந்துபோன பட்டாதார்களின் பெயரையும் பதில்தாக்கல் செய்யவேண்டிய வார்சுகளின் பெயரையும் காட்டும் மாதவாரிஸ்டேட்மெண்டு.

11-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

பட்டாதாருக்கு ஏற்பட்ட பேரீஜ் முதலிய விவரம் தெரிந்து கொள்வதற்காக பட்டாதாருக்குக் கொடுக்கபட்ட நமூனா.

11ம் நம்பர் ஸ்டேட்மெண்டுக்கு A உள்ளடக்கம்

பட்டா இல்லாத குடிகளுக்குக்கொடுக்கும் மிஸ்லேனியஸ் ரெவனியூ பட்டா நமூனா.

12-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு!

கிராமத்தின் மொத்தக்கைபற்று முதல் ஏற்பட்ட சகலவிவரங்களையும் கிராமம்மொத்தம் பேரீஜையும்காட்டுகிற வருஷவாரி ஜமாபந்தி கோஷ்வாரு.

13-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

தேதிவாரி வசூல் விவரங்களைக் காண்பிக்கும் தண்டல் கணக்கு.

14- நம்பர் ஸ்டேட்மேண்டு.

ஒரு பட்டாதாருக்கு ஏற்பட்ட வசூலை தேதிவாரி விவரத்துடன் காட்டும் கோஷ்வாரு.

14-ம் நம்பருக்கு A. குறிப்பு உள்ளடக்கம்.

எவ்வொரு பட்டாவுக்கு ஏற்பட்ட மொத்தவசூலையும் கிராமத்துக்கு ஏற்பட்ட டிமாண்டு வசூல் பாக்கிகளையும் காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

14-ம் நம்பருக்கு B. குறிப்பு உள்ளடக்கம்.

வசூலாக மாட்டாத பாக்கிகளின் விவரத்தைக் காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

14-ம் நம்பருக்கு C குறிப்பு உள்ளடக்கம்.

ஜாஸ்தி வசூலைக்காட்டும் வருஷவாரி ஸ்டேட்மெண்டு.

15-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

இருசால் நாமா.

16-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

ஒவ்வொருபட்டாதாருக்கும் ஒவ்வொருகிஸ்திக்கும் ஏறபட்ட டிமாண்டு வசூல் பாக்கி முதலிய விவரங்களையும் ஒவ்வொருவருஷத்தில் ஏற்பட்ட கிஸ்தி மாதவாரி பதிந்து காட்டும் ஸ்டேட்மெண்டு

17-ம் நம்பர் ஸடேட்மேண்டு.

வட்டியின் டிமாண்டு வசூல் பாக்கியைபாபத்து வாரியாய் காட்டும் ஸ்டேட்மெண்டு.

18-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு

குடிகள் கிஸ்திசெலுத்துவதற்காக பெற்றுக்கொள்ளும் ரசீது நமுனா.

19-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 1-வது பிரிவு.

ஜெனனத்தை தினவாரி பதியும் வருஷவாரி ரிஜிஸ்டர்

19-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 2-வது பிரிவு.

மரணத்தை தினவாரி பதியும் வருஷவாரி ரிஜிஸ்டர்

19:ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 3.வது பிரிவு.

கால்நடை மரணத்தை தினவாரிபதியும் வருஷவாரி ரிஜிஸ்டர்.

20.ம் நம்பர் ஸ்டேட்மேண்டு

மழையின் விவரங்களையும் பாய்ச்சலாதாரங் களின் வரவு சிலவு பாக்கிகளையும் காட்டும் மாதவாரி ஸ்டேட்மெண்டு.

21ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

ஐந்துவருஷத்துக்கு ஒருதடவை தயார்செய்யும் விவசாய சம்மந்தமான கால்நடை முதலியவைகளின் விவரங்களைக்காட்டும் கால்நடைக்கணக்கு

23.ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

கிராமத்திலுள்ள கூட்டுப்பட்டாதார்களையும்தனிப்பட்டாதார்களையும் தனித்தனியாகப்பிரித்தும் இத்தனை ரூபாய் செலுத்தக் கூடியவர் களென்பதை விவரித்தும் அவர்களின் சங்கியைக் காட்டக்கூடியதும் 5 வருஷத்துக்கு ஒருதடவை தயார்செய்யக்கூடியதுமான தர்ஜே வாரிக்கணக்கு.

24ம் நம்பர் ஸ்டேட்மேண்டு.

உலோக உற்பத்தி முதலிய விவரங்களைப்பற்றிய வருஷவாரி சுரங்க ரிஜிஸ்டர்.

கணக்கு சம்மந்தமான விஷயங்களைப் பற்றிய வினாவிடைகள்

வினா:—ஆயக்கட்டு மொத்தவிஸ்தீரணம் தீர்வைகள்எந்தெந்தகணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—ஒரு சர்வே நம்பருக்கேற்பட்டதை ஏ. ரிஜிஸ்டர், 11-12-வது கலங்களிலும் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 3-4-வதுகலங்களிலும் ஒவ்வொரு பாபத்தின் மொத்தத்தை [ஏ.] ரிஜிஸ்டர் உள்ளடக்கதிலும் 2-நம்பர் இ. உள்ளடக்கத்திலும் தெரிந்துகொள்ளலாம்

வினா:—கைப்பற்று விஸ்தீரணம் தீர்வை எந்தக்கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—ஒவ்வொரு சர்வே நம்பர்க்கேற்பட்டதை 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 7-8-வது கலங்களிலும் கிராம மொத்தக்கைப்பற்று விஸ்தீரணம் தீர்வை 3-ம் நம்பர் ஏ. உளடக்கம் 11-வதுஐட்டத்திலும் 12:நம்பர் ஸ்டேட்மெண்டு 1-முதல் 6-வரை கலங்களிலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—சாகுபடி விஸ்தீரணம் எந்தெந்த கணக்குகளிலிருந்துதெரிந்து கொள்ளலாம்:

விடை—ஒவ்வொரு ஸ்தலத்தின் சாகுபடியை தவணைநோட்டு 7-13வது கலங்களிலும் 1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 3-முதல் 6-வரை கலங்களிலும் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 10-11-வது கலங்களிலும் தெரிந்துகொள்ளலாம் பட்டாமுதல்போகம்புஞ்சைசாகுபடி 12-ம்நம்பர் ஸ்டேட்மெண்டு13-வதுகலத்திலும், நஞ்சைசாகுபடி 18-வது கலத்திலும் கிராமமொத்தம் சாகுபடி 1-நம்பர் ஸ்டேட்மெண்டு 1-ம் நம்பர் ஏ. உள்ளடக்கம்; 2-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு 2-ம் நம்பர் பி. உள்ளடக்கம் முதலியவைகளிலும்தெரிந்துகொள்ளலாம்.

வினா—பட்டா நிலங்களின் விவரம் எங்கெந்த கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—ஏ. ரிஜிஸ்டரிலும் 2-ம் நம்பர் 1-வதுசெக்ஷனிலும் 10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவிலும் தெரிந்துகொள்ளலாம்

வினா—இனும் நிலங்களை எங்கெந்த கணக்குகளில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—[ஏ.] ரிஜிடர் [பி.] ரிஜிஸ்டர் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு இவைகளில் தெரிந்து கொள்ளலாம்.

வினா—இனும் குயிட்ரெண்டு தொகைகளை எங்கெந்த கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—[பி.] ரிஜிஸ்டர் 9-கலத்திலும் 2-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டு 8-வதுகலத்திலும் 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 8-வது கலத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—சர்க்கார்தருசுகளையும் புறம்போக்கு நிலங்களையும் எங்கெந்த கணக்குகளில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—[ஏ.] ரிஜிஸ்டரிலும் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா—புறம்போக்கு மொத்தவிஸ்தீரணம் எங்கெந்தக்கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—[ஏ] ரிஜிஸ்டர் உள்ளடக்கம் 2-ம்நம்பர் ஸ்டேட்மெண்டு 2-ம் நம்பர் இ. உள்ளடக்கம், இவைகளில் தெரிந்துகொள்ளலாம்.

வினா—சிவாய்ஜமா புறம்போக்கு கைப்பற்றுகளின் விவரங்களை எங்கெந்த கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—தவணைநோட், 1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-ம் நம்பர்ஸ்டேட்மெண்டு, 2-ம் நம்பர் ஏ. உள்ளடக்கம், 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு, ஏ. மிமோ, பி. மிமோக்கள், முதலியவைகளில் தெரிந்து கொள்ளலாம்.

வினா—நீர்பாய்ந்த பயிர்களை எங்கெந்த கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—சோதனைநோட்டு 1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-ம் நம்ப ஸ்டேட்மெண்டு இவைகளில் ஒவ்வொருஸ்தலத்தில் நீர்பாய்ந்த பயிர்களேயும் 2-ம் நம்பர் பி. உள்ளடக்கம் 2.ம் நம்பர் டி. உள்ளடக்கம் இவைகளில் நீர்பாய்ந்த பயிர்களின் மொத்தவிஸ்தீர்ணத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

வினு—மரத்தீர்வைகளே எந்தெந்த கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை— 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டின் சி. உள்ளடக்கத்திலும் 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும் தெரிந்து கொள்ளலாம்

வினு—மாறுதல்களின் விவரங்களே எந்தெந்தகணக்குகளிலிருந்துதெரிந்துகொள்ளலாம்.

விடை—சகலமாறுதல்களும் 3-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் பதிந்திருக்கும் சக விதமான காயமாறுதல்களுா (ஏ) ரிஜிஸ்டரிலும் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும் பட்டா நிலமானல் 10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவிலும் காயமாறுதல்கள் மொத்தா 2-ம் நம்பர் இ. உள்ளடக்கத்திலும் (ஏ.) ரிஜிஸ்டர் உள்ளடக்கத்திலும், தெரிந்து கொள்ளலாம்.

வினு—இனம் நிலமானல் அவைகளின் மாறுதல்களே எந்தெந்த கணக்குகளிலில் தெரிந்து கொள்ளலாம்.

விடை—3-ம நம்பரில் பதிந்திருக்கும் அதன் விபரம்[ஏ] [பி] ரிஜிஸ்டர்களிலும் 2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும் 'மாறுதல்மொத்தத்தை [ஏ.] ரிஸ்ஜிடர் உள்ளடக்கத்திலும் 2-ம்நம்பர் இ. உள்ளடக்கத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

கேள்வி—பேரீஜ்வஜாவை எந்தெந்தகணக்குகளில் தெரிந்து கொள்ளலாம்.

விடை—4-ம் ஸ்டேட் மெண்டிலும் 12-நம்பர் ஸ்டேட் மெண்டு 39-41வது கலங்களில் பதிந்திருக்கும் தொகைகளுக்கு கீழேயும் தெரிந்து கொள்ளலாம்.

வினு—லாண்டுரிவினியூ வஜாக்களே எந்தெந்த கணக்குகளில் தெரிந்து கொள்ளலாம்.

விடை—5-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவிலும் 5-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு IIவது பிரிவிலும் இனவாரியாகவும் இதர வஜா மொத்தத்தை 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 29-வது கலத்திலும் தருசு வசாமொத்தத்தை 9. 10-வது கலங்களிலும் தெரியலாம்

வினு—லாண்டு ரிவினியூவஜாக்களில் நஞ்சை தருசுவாஜாவை எந்தெந்த கணக்குகளில் தெரிந்து கொள்ளலாம்.

விடை—5- நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவிலும் 5-ம் நம்பர் ஸ்டேட்மேண்டு 2-வது பிரிவின் 3-4வது கலங்களிலும் மொத்தம் நஞ்சை தருசுவஜாவை 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 9-10வது கலங்களிலும், தெரிந்து கொள்ளலாம்.

வினா—புஞ்சை தருசுவஜாவை எந்தக்கணக்கில் தெரிந்துகொள்ளலாம்

விடை—5-ம்நம்பர் ஸ்டேட்மெண்டு 3-வது பிரிவு 7-8-வது கலங்களிலும் மொத்தம் புஞ்சைத்தருசு வஜாவை 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 7-8-வது கலங்களிலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—பட்டா நிலங்களின் தண்ணீர்த்தீர்வையை எந்தெந்தகணக்கில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—6-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் ஒவ்வொரு பாபத்துகளுக்கு ஏற்பட்ட முதல் போகத் தண்ணீர்தீர்வையை 8-வது கலத்திலும் இரண்டாம் போகத்தண்ணீர்த்தீர்வையை 13வதுகலத்திலும் 6-நம்பர் [ஏ] உள்ளடக்கம் 3-4-வது கலங்களிலும்கிராமமொத்தம் பட்டா புஞ்சைத்தண்ணீர்த்தீர்வையை 12-ம்நம்பர் ஸ்டேட்மெண்டு 17-வது கலத்திலும் நஞ்சைத்தண்ணீர்த்தீர்வையை22-வது கலத்திலும் இரண்டும்சேர்ந்த மொத்தத்தை 28-வதுகலத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—இனாம் நிலங்களின் தண்ணீர்த்தீர்வையை எந்தக்கணக்கில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—6-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 8-13-வதுகலங்களிலும் 6-ம்நம்பர் ஏ. உள்ளடக்கம்3-4-வதுகலங்களிலும் 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 9-வதுகலத்திலும் 9-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் செஸ்விதிப்பதற்காக 5-வது கலத்திலும் தெரிந்துகொள்ளலாம்

வினா—சிவாய் ஜமா புறம்போக்குத்தண்ணீர் தீர்வையை எந்தெந்த கணக்கில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—6-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 8-13-வது கலங்கள் 6-ம் நம்பர் ஏ: உள்ளடக்கம் 3-4-வது கலங்களிலும் 7-ம் நம்பர்ஸ்டேட்மெண்டு 9-கலத்திலும் 9-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் செஸ்விதிப்பதற்காக 5-வது கலத்திலும் தெரிந்துகொள்ளலாம்

வினா—தண்ணீர்த்தீர்வை தண்டங்களை எந்தக்கணக்கில் தெரிந்துகொள்ளலாம்.

விடை—6-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 19-வது கலத்திலும் 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 9-வதுகலத்திலும் தெரிந்துகொள்ளலாம்

வினா—பாரஸ்டு ரெவினியூவை எந்தெந்தக் கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம.

விடை—7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் கடைசியில் இனவாரியாகப் பதிந்திருக்கும் பாரஸ்ட்டுமொத்தத்தை 7-ம்நம்பர்ஸ்டேட்மெண்டின் கோஷ்வாரா 8-வது ஐட்டத்திலும் 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 42-வது கலத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—மொத்தம் சில்லரை ரிவினியூவை எந்தெந்தக்கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்

விடை—7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் இனவாரியாகவும் 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு கோஷ்வாராவின் ஐட்டத்திலும் 12-ம்நம்பர் ஸ்டேட்மெண்டு 31-வது கலத்தில்கிராமமொத்தம்சில்லரைரெவினியூவையும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—மானிய நிலங்களின் லாண்டுசெஸ் சிவாய்ஜாமாபுறம் போந்த லாண்டுசெஸ் இவைகளின் மொத்தம் எந்தெந்தக்கணக்கிலிருந்துதெரிந்து கொள்ளலாம்.

விடை—9-ம் ஸ்டேட்மெண்டு 7-வதுகலத்திலும் மொத்த லாண்டுசெஸை 12-ம்-நம்பர் ஸ்டேட்மெண்டு 34-வது கலத்திலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—லோக்கல்பண்டு ஸ்பெஷல் பண்டுகள் எந்தெந்தக்கணக்குகளிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—9-ம் நம்பர் ஸ்டேட்மெண்டிலும்12-ம நம்பர்ஸ்டேட்மெண்டு 36-37-வது கலங்களிலும் தெரிந்துகொள்ளலாம்.

வினா—ஒரு பட்டாதாருக்கு ஏற்பட்ட கைப்பற்றுமொத்தம்எந்தக்கணக்கிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—10-ம் நம்பர்ஸ்டேட்மெண்டு1-வதுபிரிவிலிருந்துதெரியலாம்.

வினா—ஒரு பட்டாதாருக்கு ஏற்பட்ட பேரீஜ மொத்தம் எந்தெந்தக்கணக்கிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு II-வதுபிரிவு 14-வது ஐட்டத்திலும் 10-நம்பர் ஸ்டேட்மெண்டு II-வது பிரிவின் உள்ளடக்கம் என்கிற போஸ்டிங் ஸ்டேட்மெண்டின் 1-வது கலத்திலும் 14-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் கண்டடிமாண்டு 16-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் 28-வது கலமாகிய கடாசி கிஸ்திகலம் இவைகளிலும் தெரிந்து கொள்ளலாம.

வினா—ஒரு பட்டாதார் கைப்பற்று நிலத்துக்கு ஏற்பட்ட லாண்டுசெஸ்ஸை எந்தெந்தக்கணக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்

விடை—10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2வதுபிரிவு10-வது ஐயிட்டத்திலும்10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-வதுபிரிவின்உள்ளடக்கம் போஸ்டிங் 3-வது கலத்திலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா—கிராமமொத்தம் கைப்பற்றுக்கு ஏற்பட்ட மொத்த லாண்டுசெஸ் எந்தெந்தக்கணக்கிலிருந்து தெரிந்துகொள்ளலாம்.

விடை—10- நம்பர் ஸ்டேட்மெண்ட் 2-வது பிரிவின் உள்ளடக்கமாகிய போஸ்டிங் ஸ்டேட்மெண்டு 3-வது கலத்திலும் 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 33-வது கலத்திலும் தெரியலாம்.

வினா—கிராமமொத்தம் பேரீஜஎந்தெந்தக்கணக்கிலிருந்துதெரியலாம்.

விடை—10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-வதுபிரிவு உள்ளடக்கமாகிய போஸ்டிங் ஸ்டேட்மெண்டு 2-வது கலத்திலும் 12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 41-வது கலத்திலும் 14-ம் நம்பர்ஸ்டேட்மெண்டு 14-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு எ. உள்ளடக்கம் 16-ம நம்பர்ஸ்டேட்மெண்டுஇவைகளின்கோஷ்வாராக்களிலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா—வசூல் எந்தெந்தக்கணக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—தேதிவாரிவசூல் 13-ம்நம்பர் தண்டலிலும் பட்டாவின் வசூல் 14-ம் நம்பர்ஸ்டேட்மெண்டிலும் தெரிந்துகொள்ளலாம.

வினா—பட்டா மொத்தம் வசூல் எந்தெந்தக்கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—14-ம் நம்பர் 16-ம்நம்பர் ஸ்டேட்மெண்டுகளிலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா—கிஸ்தியை எந்தக்கணக்கிலிருந்து தெரிந்து கொள்ளலாம்

விடை—16-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் தெரிந்து கொள்ளலாம்.

வினா—சம்பழக்கழிவை எந்தெந்தக் கணக்குகளிலிருந்து தெரிந்து கொள்ளலாம்.

விடை—13-ம் நம்பர் 15-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில் தெரியலாம்

வினா:—வட்டி விவரம் எந்தக்கணக்கில் தெரிந்து கொள்ளலாம்.

விடை:—17-ம் நம்பர் கணக்கில் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—குடிகள் செலுத்திய கிஸ்தி துகையைஎந்தக்கணக்கில் தெரிந்து கொள்ளலாம்.

விடை:—13- நம்பர் 14- நம்பர் குடிகளுக்கு கொடுக்கும் 18-ம் நம்பர் ரசீது முதலியவைகளில் தெரியலாம்.

வினா:—ஜெனனமரணங்கள் சம்மந்தமான விஷயங்களை எந்தெந்தக்கணக்குகளில் தெரிந்து கொள்ளலாம்.

விடை:—ஜெனனங்களை 19-ம் நம்பர் 1-வது பிரிவிலும் மரணங்களை 2-வது பிரிவிலும் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—கால்நடை மரணங்களைஎந்தக்கணக்குகளில் தெரியலாம்.

விடை:—19-ம் நம்பர் 3-வது பிரிவில் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—பாய்ச்சலாதாரங்களுக்கு வரும்தண்ணீர் விவரங்களைஎந்தெந்தக்கணக்கில் தெரிந்து கொள்ளலாம்.

விடை:—மழை பெய்த விவரத்தையும் பாய்ச்சலாதரங்களுக்கு தண்ணீர் வரவு சிலவு முதலிய விவரங்களையும் 20-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டில் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—விவசாய சம்மந்தமான கால் நடைகளையும் விவசாயக்கருவிகளையும் எந்தக்கணக்கில தெரிந்து கொள்ளலாம்.

விடை:—ஐந்து வருஷத்துக்கொருதடவைதயார்செய்யும் 21-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டில் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—கிராமத்திலுள்ள பட்டாதார்களில் கூட்டுபட்டாதார் சங்கியையும் தனிப்பட்டாதார் சங்கியையும் எந்தக்கணக்கில் தெரிந்து கொள்ளலாம்.

விடை.:—ஐந்து வருஷத்துக்கு ஒருதடவை தயார்செய்யும் 23-ம்நம்பர் ஸ்டேட்டு மெண்டில் தெரிந்து கொள்ளலாம்.

வினா:—தங்கமுதலிய உலோக உற்பத்திகளை எந்தக்கணக்கில்தெரிந்து கொள்ளலாம்.

விடை:—24-ம் நம்பர் ஸடேட்டு மெண்டில் தெரிந்து கொள்ளலாம்.

(*)——

உ

சிவமயம்

கணபதிதுணை.

சரஸ்வதி ஸஹாயம்.

கிராம கணக்கு மானியூலைப் பற்றிய

இராமலட்சுமண

சம்பாஷணை.

இராஜலக்ஷணம்.

எந்தவேளையினும் நொந்தவர் துயர்கேட்டிட
ரிளைப்பவன் தனதேச

மைந்தனேஎனினும் வதைத்திட ஒல்கான்
மாக்களின் சுகநலமன்றிச்

சிந்தனைவேருர் வழியினும் செலுத்தான்
தீமொழி கனவிலும்நினையான்

தந்தைபோல்தாய்போ லனைத்தையுங் கார்க்கும்
தன்மையே இறையவர்குணமாம்.

மநுதர்ம சாஸ்திரத்தில் சொல்லப் பட்ட திட்டப்படி அரசாளுகின்ற மகுத்துவம் பொருந்திய இந்தியா சக்கிரவர்த்தியவர்கள் ஆளுகைக் குள்பட்டதும் நீர்வளம் நிலவள முதலிய சகல வளங்கள் நிறைந்ததுமான ஒரு கிராமத்தில் உத்தம குலத்தில் உதித்தவரும் சற்குணமும் சகல சம்பத்தும் நிறைந்த வருமான கோபால கிருஷ்ண முதலியார் என்ற பெரியவர் ஒருவர் இருந்தார் அவர் அந்தக் கிராமக் கர்ணம் மிராஸ்தார் அவருக்கு அத்தை மகனும் அவர் தங்கை கணவனுமாகிய அவர் மைத்துனர் ஒருவர் அடுத்துப் பக்கக் கிராமத்தில் பெரியதனக்காரர் வேலை

மிராசுபாத்தியமாகி வேலைபார்த்து வருகிறார் ஆனால் அவருக்கு ஆண்சந்ததி கிடையாது.

கோபாலகிருஷ்ணமுதலியாருக்கு ராமன், லட்சுமணன், கோபாலன், ஜெகநாதன், சிவப்ரகாசன் என்று ஐந்து குமாரர்கள் உண்டு ராமன் என்னும் மூத்த குமாரன் தன் தகப்பனார் விருத்தாப்பிய பருவமா யிருப்பதை உத்தேசித்து, தகப்பனார் பார்த்த கணக்கு வேலையை தான் பார்த்துக் கொண்டு குடும்பக் காரியங்களையும் மேல்ப்பார்த்துக் கொண்டு வந்தார் மற்ற சகோதரர்கள் நால்வரும் கனவான் வீட்டுக் குழந்தைகளாகையால் ஒன்றும் கவனியாது வெளியில் உலாவுவதும் வீட்டில் சாப்பிடுவதுமாக இருந்தார்கள் தமையனாராகிய ராமன் ஒருநாள் பௌர்ணமியன்று இரவில் சந்திரன் சரியாக பிரகாசித்துக் கொண்டிருக்கும் போது தன் சகோதரர்களைத்தன் அருகில் இருக்கும்படி செய்து அவர்களைப் பார்த்துச் சொல்லுகிறார்

ராமன்.— சகோதரர்களே, நமக்கு இந்த கிருமத்தில், பைசல் முதல், கர்ணம் மிராசு வேலையும், நமது மாமாவுக்கு அடுத்தகிருமத்தில் நாட்டாண்மைமிராசுபாத்தியமும் இருக்கிறது முன்னோர்கள் காலமுதல் இது வரையில இடைவிடாமல் ஈசனருளால் வேலை பார்த்து வருகிற விவரம் உங்களுக்கு நன்றாய்த் தெரிந்திருந்தும் அதைப் பற்றி நீங்கள், ஒன்றும் படியா திருப்பது சரியா.

கோபாலன் ஜெகநாதன் சிவப்பிரகாசன்.— அண்ணா! கிராம உத்தியோக வேலை பார்க்க எங்களுக்குப் பிரிய மில்லை இப்போது அது மதிப்பில்லாத வேலையாயிருக்கிறது.

ராம.— வாழையடி வாழை என்பதுபோல், கருணை மிகுந்த கவர்மெண்டார் சந்ததி பாரம்பரை பாத்தியமாய்க் கொடுத்திருக்கும் வேலையைக் கேவலமாக எண்ண வேண்டாம், தவிரவும், கிராமத்துக்கு அதிகாரியாகவும், அவருக்கு யோசனை சொல்லும் மந்திரியுமாக இருக்கிற இரண்டு கௌரவம் பொருந்திய வேலை என்று தெரிந்திருந்தும்

இப்படிச் சொல்வது சரியா அந்த வேலைகளைப் பெறுவதற்கான முயற்சிகளைத் தேடுங்கள் சகோதரர்களே.

லட்சுமணன்.— அண்ணு சொல்லுகிறபடி, நாம் நடந்து கொள்ள வேண்டியது அத்தியாவசியம் என்று தோணுகிறது.

கோபாலன், ஜெகநாதன், சிவப்பிரகாசன்—எங்கள் மனமும் அப்படித் தானிருக்கிறது அண்ணு விடமிருந்து கேட்க வேண்டிய விஷயங்களை விவரமாய்க் கேளுங்கள் நாங்களும் கூட இருந்து கேட்டுக் கொண்டி ருக்கிறோம்.

லட்.— ராமண்ணு தங்கள் உத்திரவின்படி இன்று முதல் நடந்து வருகிறோம் கணக்குவேலை பரீக்ஷைக்கு என்னென்ன புஸ்தகங்கள் படிக்க வேண்டும்

ராம.— கணக்குமான்யூல் புஸ்தகமும் கிராம உத்தியோகஸ்த்தர்களைக்குறித்தசட்டப் புஸ்தகமும் படிக்க வேண்டும்

லட்.— கணக்கு மான்யூல் புஸ்தகம் என்றால் என்ன அண்ணு!

ராம.— நமது வீட்டில் நமது தகப்பனரும் நானும் அடிக்கடி எடுத்துப் பார்த்துக் கொண்டு வரும் கணக்கு மான்யூல் புஸ்தகத்தை பார்த்திருக்கிறயல்லவா அதுதான்

லட்.— நமது அப்பாவும் தாங்களும் அடிக்கடி பார்த்துக் கொண்டு வரும் புஸ்தகம் அகலமாகவும் நீளமாகவும் இருக்கும் என்பது எனக்கு நன்றாய்த் தெரியும் அதில் கண்டவிஷயங்கள் ஒன்றுகூட எனக்குத் தெரியாது. ஒன்றை சொன்னால் என் மனதில் பதியாது கதை பேசுவதுபோல் சம்பாஷணை செய்து கொண்டு வந்தால் நலமாயிருக்கும் என்று எண்ணுகிறேன்.

ராம — அப்படியே கதை பேசுவது போல் சொல்கிறேன். லட்சுமணு கோபாலா ஜெகநாதா சிவப்பிரகாசா நான் சொல்லிக் கொண்டு வருவதைக் கவனமாகக் கேட்டுக்கொண்டு வரவேண்டும். (ஏ) (பீ) என்ற இரண்டு நிலையான ரிஜிஸ்டர்களும், ஏ—ரிஜிஸ்தருக்கு ஒரு உள்ளடக்கமும், 1-முதல் 24-ம் நம்பர்வரை கணக்குகளும் அவைகளில் சிலவற்றிற்கு

சில உள்ளடக்கங்களும் சிலவற்றிற்கு சில பிரிவுகளும் உண்டு. ஒவ்வொரு கணக்கும் ஒவ்வொரு முக்கிய விஷயத்தையும் சாதாரண இதர விவரங்களையும் தெரிவிக்கும்.

ஏ-ரிஜிஸ்டர்.

லட்.— ஏ-ரிஜிஸ்டர் என்றால் என்ன அண்ணா.

ராம.— சர்வே முடிந்த வுடன் செட்டில் மெண்டாரால் 30-வருஷத்துக்கு ஒருதபா தயாரித்துக் கொடுக்கப் படும் ரிஜிஸ்டர்.

லட்.— இவைகள் எந்தெந்த விவரங்களைத் தெரிவிக்கும்.

ராம.— 1-சர்வே நம்பர் 2-லெட்டர், 3-பழய சர்வே நம்பர் 4-சர்க்தார் அல்லது இனும் 5-நிலத்தின் விவரம் 6-பாய்ச்சலாதாரம் 7-ஒரு போகம் அல்லது இரு போகம் 8-நிலத்தின் வகுப்பு 9-தரம் 10-யேக்கர் 1-க்கு தீர்வை வீதம் 11-விஸ்தீரணம் 12-தீர்வை 13-ஷரா என்ற விவரங்களைத் தெரிவிப் பதுடன் இதன் ஷராக் கலத்தில், இவைகள் அல்லாத இதர விவரங் களையும் தெரிவிக்கும்.

லட்.— இதன் ஷராக் கலத்தில் எழுத வேண்டிய இதர விவரங்களை எடுத்துச் சொல்ல வேண்டும் அண்ணா.

ராம.— புரம் போக்கு நிலவிவரம், பழய கால கட்டிடங்கள், நீலத் தொட்டி முதலிய கட்டிடங்கள், பாய்ச் சலுக்கு உபயோகப் படும் சாஸ்வத மான கிணறுகள், கால்வாய்கள், கரைகள், கலெக்டர் துரையவர் களுடைய உத்திரவின் நம்பர் தேதி யுள்பட சொந்தப் பாய்ச்ச லாதாரங்கள் அளவு ஜலத்தின் ஆழம் பாயும் விஸ்தீரணம், தன்மை ஸ்திதி முதலிய விவரங் களுடன் கிணறுகள் முதலிய வைகளை பதிவதுடன் ஒரு பாபத்தி விருந்து, மற்றொரு பாபத்துக்கு மாறுதலாகிற காய மாறுதல் தர்காஸ்து ஜாரி விடுதலை ராஜினாமா சப்டிவிஷன் பேரில் மாறுதல் முதலிய மாறுதல்களையும் உத்திரவின் நம்பர், வருஷம் மாசம் தேதியுள்பட பதிய வேண்டும்.

லட்.— (ஏ)ரிஜிஸ்டர், எல்லாக் கிரமங்களிலும் உபயோகப்பட்டு வருகிறதா.

ராம.— அச்சிடப் பட்ட செட்டில் மெண்ட்டு, டைகிளாட், ரிஜிஸ்தர் மிமோயர் இருக்கிறகிருமங்களில் அவைகளே(ஏ)ரிஜிஸ்தராக உபயோகப் பட்டு வருகின்றன செட்டில் மெண்டு ரிஜிஸ்டர் கிடைக்கும் வரையிலும், அவை களில்லாத கிருமங் களிலும் ஏ. ரிஜிஸ்தர் உபயோகப் பட்டு வருகிறது

லட்.— (ஏ) ரிஜிஸ் தருக்கும் அச்சிட்ட செட்டில் மெண்டு டைக்கிளாட், ரிஜிஸ் டருக்கும் ஏற்பட்ட பாரங் களில் யேதேனும் பேதம் உண்டோ.

ராம.— இரண்டு பாரமும் ஒன்றே யாதொரு பேதமும் கிடையாது.

லட்.— செட்டில் மெண்டு ரிஜிஸ்தர் கிடைத்த வுடன் கர்ணம் செய்ய வேண்டிய வேலே என்ன.

ராம.— அடங்கல் கணக்குடன் ஒத்துப் பார்த்து ஏற்பட்ட வித்தியாசத்தை ஒரு புஸ்த்த கத்தில் தனியாகப் பதிந்து அதன் ஷுருக் கலத்தில் வித்தியாச விஷயமாய் கர்ணத்துக்குத் தோணும் காரணத்தை எழுதி வைத்து ஜமா பந்தி காலத்தில் சரிப் படுத்திக் கொள்ள வேண்டும்.

லட்.— இனும் நிலங் களில் வித்தியாசம் யேதேனு முண்டானல் என்ன செய்ய வேண்டும்.

ராம.— செட்டில் மெண்டாரால் யேற்படுத்திய வகுப்புக்கும் இனும் கமிஷனர் யேற்படுத்திய வகுப்புக்கும் யேதேனும் வித்தியாச மிருந்தால் (ஏ) ரிஜிஸ் தரின் ஷுருக் கலத்தில் குறிக்க வேண்டும்.

லட்.— (ஏ) ரிஜிஸ்தர் எத்தனே பிரிதிகள் உண்டு.

ராம.— இரண்டு பிரதிகள் உண்டு ஒன்று தாலூகாவிலும் ஒன்று கிருமத்திலும் உள்ளது, மாறுதல் நேரிடும் பொழுது இரண்டிலும் பதிவு செய்ய வேண்டியது.

ஏ-ரிஜிஸ்தர் உள்ளடக்கம்.

லட்.—(ஏ) ரிஜிஸ்தர் உள்ளடக்கம் என்றால் என்ன.

ராம—சகல நிலங்களின் விஸ்தீரணத்தையும், தீர்வையையும் கவர்னமெண்டு, இனாம், பிரித்து நிலவாரியாயும் தரவாரியாயும், தெரிவிக்கும் கோஷ்வாரு.

லட்.—இதற்கேற்பட்ட பாரத்தின், கலங்கள் ஒவ்வொன்றையும் விவரமாய்ச் சொல்ல வேண்டும் அண்ணா.

ராம.—1-நிலத்தின் விவரம் 2-வகுப்பு 3-தரம் 4-ஒரு போகம் அல்லது இரு போகம் 5-தீர்வை வீதம் என்ற ஐந்து வித விவரங்களாய், சர்க்கார், இனாம், மொத்தம், என்று மூன்று விதமாய்ப் பிரித்து ஒவ்வொன்றிலும் விஸ்தீரணம் தீர்வையுடன் தெரிவிப்பதுடன், இதர விவரங்களை இதன் ஷராக் கலத்திலும் தெரிவிக்கும்.

லட்.—இதை எப்படி எப்போது தயாரிக்க வேண்டும்.

ராம.—செட்டில்மெண்டாரால் தயாரித்துக் கொடுக்கப்பட்டதை வைத்து நிலையான மாறுதல் நேரிட்ட காலத்தில் திருத்திக் கொண்டே வரவேண்டியது செட்டில்மெண்ட் பிரதிகள் கிடைத்தவுடன் இவைகளைத் தாலூகாவில் ஒப்பிவித்து விட்டு செட்டில்மெண்டு ரிஜிஸ்டர் பெற்றுக் கொண்டு மாறுதல் நேரிட்டால் பதிந்து உள்ளடக்கத்தில் திருத்தியும் மாற்றியும் வேறு கோஷ்வாரா தயாரித்துக் கொண்டு வரவேண்டியது மாறுதல் இல்லாத காலத்தில் மாறுதல் பூச்சியம் என்று யெழுதினால் போதுமானது.

லட்.—இந்த உள்ளடக்கத்தின் பிரயோஜனம் என்ன.

ராம—கிராமத்திலுள்ள சகல நிலங்களின் ஆயக்கட்டு விஸ்தீரணத்தையும், தீர்வையையும், தரவாரியாயும் பாப்புவாரியாயும், காட்டுவதற்காக ஏற்பட்ட கணக்கு.

குறிப்பு.—இதிலுள்ள ஒவ்வொரு பாபத்தின் விஸ்தீரணம் தீர்வை 2-நிர். கணக்கின் 3-4- கலங்களில் கண்ட தொகைகளுக்கு ஒத்திருக்க வேண்டும்.

பீ-ரிஜிஸ்டர்.

லட் — (பீ) ரிஜிஸ்டர் என்றால் என்ன.

ராம. — இனம் நிலங்களின் விவரங்களையும் அவைகளின் மாறுதல்களையும் காட்டும் நிலையான ரிஜிஸ்டர்.

லட், -- (பீ) ரிஜிஸ்டருக்கு யேற்பட்ட பாரங்களின் கலங்களை, விவரமாய்ச் சொல்ல வேண்டும்.

ராம. --- 1-இனம் நிலங்களின் விவரம், 2-இனம் பட்டா நம்பர் 3-சர்வே நம்பர், 4-லெட்டர், 5-நிலத்தின் விவரம், 6-ஒரு போகம் அல்லது இரு போகம், 7-விஸ்தீரணம், 8-தீர்வை 9-குயிட்ரெண்டு, 10-அளவுஜாஸ்தி, 11-மொத்தம், 12-இனம்தார் பெயர், 13-இனம்தார்களின் தொழில் முதலிய விவரங்களைக் காட்டுவதுடன் மாறுதல் களின் விவரத்தை ஷரா கலத்தில் தெரிவிக்கும்

லட் — (பீ) ரிஜிஸ்டருக்கும் இனம் கமிஷன் ரிஜிஸ்டருக்கும் ஒத்திருக்க வேண்டிய அம்சங்கள் எவை.

ராம. — (பீ) ரிஜிஸ்டர் 5-வது கலத்தில்கண்ட நிலத்தின் விவரமும் 6-வது கலத்தில் கண்ட போகமும், இனம் கமிஷனர் ரிஜிஸ்டருக்கு ஒத்திருக்க வேண்டும்.

லட். — (எ) ரிஜிஸ்டருக்கும், (பீ) ரிஜிஸ்டருக்கும் மேல்கண்ட நிலத்தின் விவரம் முதலியவைகளில் யேதேனும் வித்தியாசமிருந்தால் என்ன செய்ய வேண்டும்.

ராம. — (எ) ரிஜிஸ்டரின் ஷரா கலத்தில் குறித்து (பீ) ரிஜிஸ்டரை அனுசரித்து கணக்குகளில் தாக்கல் செய்ய வேண்டியது.

லட். — இனம் கமிஷனர், ரிஜிஸ்டரில்,(பீ)ரிஜிஸ்டரில் கண்ட இனங்களுக்குக் குயிட்ரெண்டு மொத்தமாக யேற்பட்டிருக்குமா? ஸ்தல வாரியாக பிரித்துத் தாக்கல் செய்திருப் பார்களா.

ராம. — இனம் கமிஷனர், ரிஜிஸ்டரில் மொத்த மாகத்தான் காட்டப்பட்டிருக்கும் பீ.ரிஜிஸ்டரில் 8-வது கலத்தில் கண்ட தீர்வை வீதம் ஸ்தலவாரியாய்ப் பிரித்துத் தாக்கல் செய்து கொள்ள வேண்டும்.

லட் — குயிட்ரெண்டை ஸ்தல வாரியாகப் பிரிப்பதில் அனுசரிக்க வேண்டிய விதிகள் என்ன.

ராம — ஸ்தல வாரியாய்ப் பிரிப்பதில் பைசா மட்டமாக (அதாவது) ஈவுப்படி பைசா வரையில், தாக்கல் செய்ய வேண்டியது.

லட் — ஒரு சர்வே ஸ்தலத்தை சிலபாகமாக, சப்டிவிஷன் செய்து பிரிக்கும்போது மை பைசா அளவு வரையில் பிரித்து தான் தாக்கல் செய்ய வேண்டுமோ.

ராம — சப்டிவிஷன் செய்து பிரிக்கும் போது பைசாக்களைப் பதியாமல் அணு மட்டமாகப் பதிய வேண்டும்.

லட். — பீ ரிஜிஸ்டர், 8-வது கலத்தில் தரம் தீர்வையையும் 9-வது கலத்தில் குயிட் ரெண்டையும் பதிய வேண்டு மென்று தெரிந்து கொண்டேன், இனம் நிலத்துக்கு செட்டில்மெண்டாருல் தீர்வை ஏற்படுத்தாம லிருந்தால் செய்ய வேண்டிய விஷய மென்ன.

ராம. — இனம் டிபார்ட் மெண்டாரால் யேற்படுத்தப் பட்டிருக்கிற தீர்வையைப் பதிய வேண்டியது.

லட். — 10-வது கலத்தில் எந்தெந்த தொகையை பதிய வேண்டியது.

ராம — அளவு ஜாஸ்தி, தொகையைப் பதிய வேண்டும்.

லட். — அளவு ஜாஸ்தி என்றுல் என்ன.

ராம — செட்டில் மெண்டுக்கு பின் இனம் நிலத்தில் கண்டு பிடிக்கப் பட்ட, ஜாஸ்திக்காக விதிக்கப் பட்ட தீர்வைக்கு அளவு ஜாஸ்தி என்று பெயர்.

லட். — அளவு ஜாஸ்தி தொகையை பதியும் போது அனுசரிக்க வேண்டிய விதிகள் எவை.

ராம. — அளவு ஜாஸ்தி விஸ்தீரணம், யேற்பட்ட புலங் களுக்கு மட்டும் பங்கிட்டுத் தாக்கல் செய்ய வேண்டும்.

லட். — பீ. ரிஜிஸ்டரில் 9-வது கலத்தில் கண்ட ஜோடி அல்லது குயிட்ரெண்டு, செட்டில் மெண்டு தீர்வையை விட ஜாஸ்தியாக யிருந்தாலென்ன செய்கிறது.

ராம — அப்படி யிருக்கிற இனங்கள் அபூர்வம் அவை களிலும் மேல் கண்ட விதிப் பிரகாரம் தான் செய்ய வேண்டும்.

லட் — குயிட்ரெண்டு தொகையை பங்கிட்டுத் தாக்கல் செய்வதின் பிரயோஜனம் என்ன.

ராம — தகவலுக்குச் சரியான ரிக்கார்டுகள் யேற்படுத்துவதற்கும் இனும் நிலங்களில் மாறுதல் நேரிடும் பொழுது அவைகளுக்குத் தக்கபடி குயிட்ரெண்டை மாற்றிக் கொள்வதற்கும் சாதகமாக யிருக்கும் பொருட்டு குயிட் ரெண்டை ஸ்தல வாரி பிரித்து தாக்கல் செய்ய வேண்டும்.

லட்.— (பீ)ரிஜிஸ்டரின் ஷரூக்கலத்தில் பதிய வேண்டியவை எவை

ராம.— நிலையான மாறுதல் நேரிடும் போது (ஏ)ரிஜிஸ்டரின் ஷரூக் கலத்தில் பதிவது போல் இதிலும் உத்திரவின் நம்பர் வருஷம் மாசம் தேதி உள்படப் பதிய வேண்டும்.

லட்.— (பீ)ரிஜிஸ்டரில்கண்ட குயிட்ரெண்டுத் தொகைக்கும், வெர்னகுலர் ரிஜிஸ்டரில் கண்ட துகைக்கும் பேதமிருந்தால் என்ன செய்கிறது.

ராம.— இதன் கீழ் காட்டி யிருக்கும் சோஷ்வாரா பாரத்தில் விவரம் சொல்ல வேண்டியது.

லட்.— கோஷ்வாரா பாரத்தில் எப்படி விவரம் குறித்து எழுது • கிறது.

ராம.— விவரமென்றொரு கலமும் அதற்கு நேரே தேவாதாயம் தர்மதாயம், பேர்வழி மானிபம் தசபந்தம், கிருமஊழியம் என்று ஐந்துவகை இனுங்களையும் காட்டி அதன்கீழ் வெர்னகுலர் ரிஜிஸ்டர்படி ஏற்பட்ட தொகைகளைப் பதிந்து கம்மியாக வேண்டிய பாபத்தை எழுதிக் கழித்து, கழித்து நின்ற தொகையுடன் புதிதாய்க் கொடுத்த இனுங்களின் ஜாஸ்தியைச் சேர்த்து (பீ) ரிஜிஸ்டர் பிரகாரம் நிலத்த ஜாஸ்திக்காக ஏற்பட்ட ஜாஸ்தி உள்படக் குயிட்ரெண்டு மொத்தமென்று கண்டு, அவைகளின் நேருகத் தொகைகளைப் பதிய வேண்டும் இதுதான் கோஷ்வாரு பதியும் விதம்.

லட்.— இந்த அப்ஸ்டிராக்டில் கண்ட தொகைகள், எந்தக் கணக்குக்கு ஒத்திருக்க வேண்டும்,

ராம.— கிராம 7-நிர்- கணக்கில் கண்ட இனம் சம்மந்தமான தொகைக்கு ஒத்திருக்க வேண்டும்.

லட்.— (பீ)ரிஜிஸ்டருக்கு எத்தனை பிரதிகள் உண்டு.

ராம.— (ஏ)ரிஜிஸ்டரைப் போலவே இதற்கும் தாலுகா கச்சேரியிலும் ஒரு பிரதியுண்டு மாறுதல்கள் நேரிடும் பொழுது கிராமப் பிரதியிலும தாலுகா பிரதியிலும் மாறுதல் விவரங்களை தாக்கல் செய்து ஜமாபந்தி காலத்தில் ஒத்திட்டுப் பார்ப்பார்கள்.

லட்.— நிலையான ரிஜிஸ்டராகையால் தாலுகாவில் ஒப்பிவிக்க வேண்டிய தில்லையே.

ராம.— மறுபடியும் புதிதாய் எழுதும் போது தாலுகாவில் ஒப்பிவித்து விட வேண்டும்.

தவணைநோட்டு.

லட்.— தவணை நோட்டென்றால் என்ன.

ராம.— கர்ணம் ஒவ்வொரு மாதம், பிற் பாதியில் சாத்தியப்பட்ட மட்டில் சகல ஸ்தலங்களையும் பார்வையிட்டு சாகுபடிகளையும் சாகுபடியான ஸ்தலங்களில், ஜமாபந்திக்கு வேண்டிய சகல விவரங்களையும் குறித்துக் கொள்ளும் நோட்டுக்கு தவணை நோட்டு என்று பெயர்.

லட்.— தவணை நோட்டுக்கு ஏற்பட்ட பாரத்தின் கலங்களின் விவரமென்ன.

ராம.— 1-லட்டர் உள்பட சர்வே நம்பர் 2-நிலத்தின் விவரம் 3-புலத்தின் விஸ்தீரணம் முதலிய மூன்றையும் அப்பால் 4-சாகுபடி மாதம் 5-பயிரின் விவரம் 6-பாய்ச்ச லாதாரம் 7-சாகுபடி விஸ்தீரணம், 8-அறுவடை மாதம், 9-மகசூல் மதிப்பு என்ற ஆறுவித விவரங்களை முதல் போகத்துக்கும்

இரண்டாம் போகத்திற்கும் காட்டுவதுடன் இதன் ஷுருக் கலத்தில் சாகுபடிக்கும் ஜமாபந்திக்கும், சம்மந்த மான சகல விவரங் களேயும் எடுத்து ரைக்கும்.

லட்.— ஷுருக் கலத்தில் காண வேண்டிய விஷயங்கள் எவை.

ராம.—(1) புகல் சாகுபடி என்ற அரை குறை ஸ்தலத்தின் அளவு களே லிங்கஸ் கணக்கிலே அளந்து தாக்கல் செய்ய வேண்டும்

(2) பட்டாவில் சேராத நிலத்தை சாகுபடி செய்தவர் அல்லது கைப் பற்றினவர் பெயர்

(3) சாகுபடி யன்னியில் வேறு விதமாய்க் கைப் பற்றி யிருந்தால் கைப் பற்றின தன்மை,

(4) முந்தியமாதத்தில் சாகுபடியான புலங்களுக்குப் பிந்திய மாதங்களில் நீர்ப் பாய்ச்சப்பட்டால் அவைகளின் விவரங் களேயும் பதிய வேண்டும்.

லட்.— ஒரே மாதத்தில் வெவ்வேறிடங்களில் வெவ்வேறு பயிர்கள் சாகுபடி செய்தாலும் அல்லது ஒரே பயிருக்கு வெவ் வேறு பாய்ச்ச லாதாரங் களிலிருந்து நீர் பாய்ச்சினுலும் இந்தக் கணக்கில் பூரிக்கும் விதமெப்படி.

ராம — ஒவ்வொரு பாகத்தையும் ஒவ்வொரு தனி வரிசையில் எழுத வேண்டும்.

லட்.— ஒரு ஸ்தலத்தில் 2. அல்லது அதற்குமேல் பட்ட பயிர்கள் முளேத் திருந்தால் பதியு விதமெப்படி,

ராம.— தனி வரிசையாய் விதைத்திருந் தாலும் விதை கலந்து விதைத் திருந்தாலும் ஒவ்வொரு பயிரின் விஸ்தீரணத்தையும் உத்தேச மதிப்பாய் எழுத வேண்டியது.

லட்.— ஒரு ஸ்தலத்தில் ஒரு பயிர் சாகுபடியாகி அது பூமியிலிருக்கும் போதே அவை களின் மத்தியில் வேர்க் கடலே போன்ற பயிர்கள் இரண்டாம் போகம் சாகுபடி செய்தால் அதைப் பற்றி கவனிக்க வேண்டிய விஷயம் என்ன.

ராம.— இரண்டாவது போகமாக விதைக்கப் பட்ட பயிர் முதல் போகப் பயிர் அறுவடையான பிறகு அதிக காலம் நிலத்திலிருந்து வந்தால் அதை அதே புலத்தில் 2-ம் போகமாகப் பாவிக்க வேண்டியது.

லட்.— முந்தின மாதங்களில் மழையால் சாகுபடியான சில பாகத்துக்குப் பிந்தின மாதங் களில் நீர்ப் பாய்ச்சினால் செய்ய வேண்டிய தென்ன.

ராம.— கணக்கில் ஏற்பட்ட விஸ்தீரணத்துக்கு குறைவாகப் பாய்ச்சினால் பாய்ச்சப்பட்ட விஸ்தீரணம், மாதம், பாய்ச்ச லாதாரம், இறவை தன்பாசனம், என்ற விவரத்தை ஷரூக் கலத்தில் எழுத வேண்டும்.

லட்.— எந்த மாதங்களின் சாகுபடிகளை சாகுபடியான மாதத்தில் தவறாமல் கணக்குக்கு கொண்டு வர வேண்டும்.

ராம.— எல்லா மாதங் களின் சாகுபடி களையும் தவறாமல் கணக்குக்கு கொண்டுவர வேண்டியதுதான் ஆனால் மார்ச்சு மாதத்துக்கு பின்னிட்ட சாகுபடிகளை கட்டாயம் சாகுபடியான மாதத்திலேயே தவறாமல் கணக்குக்கு கொண்டுவர வேண்டியது.

லட்.— கர்ணம் எல்லாப் புலங்களையும் அளந்து தான் தாக்கல் செய்ய வேண்டுமோ.

ராம.— கணக்குப்படி பூறா விஸ்தீரணம், சாகுபடியாகி இருந்தால், அளக்காமல் கணக்குப்படி, பதிந்து கொள்ள வேண்டியது, விஸ்தீரணத்தின் மேல் தீர்வை ஏற்படாமல் கணக்குக்கு மட்டும் தகவலுக்கு வரவேண்டிய தாயிருக்கிற கேசுகளை அளக்காமல் உத்தேசமாய்த் தாக்கல் செய்யலாம்.

லட்.— மூன்றாம் போகம் சாகுபடி யானால் எந்தக் கலத்தில் பதிய வேண்டியது.

ராம.— மூன்றாம் போகம் அபூர்வம் ஆகையால் தனிக்கலங்கள், ஏற்பட வில்லை தேவையான போது ஒரு தனிக்கலம் சேர்த்துக் கொள்ள வேண்டும்.

லட்.— தீர்வை விதிக்கும் இரண்டாம் போகம் மட்டும் இந்தக் கணக்குக்கு கொண்டுவர வேண்டுமா எல்லா இரண்டாம் போகங்களையும் இந்தக் கணக்குக்கு கொண்டுவர வேண்டுமா.

ராம.— எல்லா இரண்டாம் போகங் களையும், இந்தக் கணக்குக்கு கொண்டு வர வேண்டியது தான்.

லட்.— தோப்புகள், தென்னை முதலிய மரங்கள் இருக்கப் பட்ட நிலங்களை எந்த மாசம் சாகுபடி கணக்குக்கு கொண்டுவர வேண்டும்.

ராம.— பசலி ஆரம்பமாகிய ஜூலைமீ கணக்குக்கு கொண்டு வர வேண்டும்.

லட்.— பாரஸ்ட்டு இலாகாக்களைச் சேர்ந்த மூங்கில்களையும், வீடு மேய்ச்சலுக்கு உபயோகப் படும் புல் முதலியவை களையும் ஜூலைமீ கணக்குக்குத் தான் கொண்டு வர வேண்டுமோ.

ராம — அவைகளை லாயக் கில்லாத லாயக்குத் தருசாக எடுத்து வ, II டேபிளில் சேர்த்து இருக்கிற படியால் அவைகளைச் சாகுபடி கணக்குக்குக் கொண்டு வரவே கூடாது.

லட்.— அறுவடையான பயிர் விவரத்தை எந்தக் கலத்தில் எப்படிக் குறிக்க வேண்டும்.

ராம.— முதல் போகம் அறுவடை யானால் 8-வது கலத்தில் அறுவடை மாதத்தையும் 9—வது கலத்தில் மகசூல் மதிப்பையும், இரண்டாம் போகமானால் 14—வது கலத்தில் அறுவடை மாதத்தையும், 15—வது கலத்தில் மகசூல் மதிப்பையும் பதிய வேண்டும்.

லட்.— மதிப்பிடக் கூடாத பயிர்கள் எவை.

ராம.— இளந் தென்னை, இளம் புளி, தோப்புப் பயிர்கள், மதிப்பிடக்கூடாதவைகள்.

லட்.— அறுவடை தாக்கல் செய்வதில் கவனிக்க வேண்டிய கேஸுகள் எவை.

ராம.— சூன்மாதம் ஆகைய ருக்குள் அறுவடைக்கு லாயக்கில்லாமலிருந்தால் எவ்வளவு மகசூல் காணக் கூடிய தென்பதை மட்டும் முதல் போகமானல் 9-வது கலத்திலும் 2-ம் போகமானல் 15-வது கலத்திலும் தாக்கல் செய்து 8-வது கலத்திலும், 14-வது கலத்திலும், ஒன்றும் பதியாமல் விட்டு வைக்க வேண்டும்.

லட்— அறுவடையானமாதம் பதியாமல் மகசூல் மதிப்பு மட்டும் பதிவதின் பிரயோஜனம் என்ன.

ராம.— நிலுவைக் குறிய பயிர் என்று நிச்சயமாய்த் தெரிந்து கொள்ளலாம்.

(1-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட். 1-நிர். ஸ்டேட்மெண்டு என்றால் என்ன.

ராம.— மாத வாரி சாகுபடிக் கணக்கு.

லட்— இந்த 1-நிர். ஸ்டேட்மெண்ட், பாரத்தின் கலங்கள் என்னென்ன விவரங்களைத் தெரிவிக்கும்.

ராம.— பயிர் வரிசையாய் லட்டருள்பட சர்வே நம்பர்வாரியாய் நீர்பாய்ச்சப்பட்டது நீர்பாய்ச்சலில்லாதது என்று பிரித்து ஒவ்வொன்றிலும் முதல் போகத்தையும் இரண்டாம் போகத்தையும் தனித்தனியே விவரிக்கும்.

லட்.— எப்போது தயாரிக்க வேண்டியது.

ராம.— மாதாமாதம் 25–தேதிக்குள் தயாரித்து தவறாமல் 25–தேதி ரெவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

லட்.— இத்துடன் அனுப்ப வேண்டிய கணக்குகள் எவை.

ராம.— 1–நிர். I-நிர்·ஏ, 20–நிர். கணக்குகளை தவணைக் கணக்குடன் அனுப்ப வேண்டும்.

லட்.— 20–நிர். கணக்கை இத்துடன் அனுப்புவதின் பிரயோஜனம் என்ன.

ராம.— மழை பெய்ததை அனுசரித்து சாகுபடிகளை சரியான படி கணக்குக்கு கொண்டு வந்திருக்கிறதா என்று பார்ப்பதற்கு சாதகமாய் இருக்கும்படி 20--நிர். கணக்கை அனுப்ப வேணடும்.

லட்.— இந்தக் கணக்கை இன்ஸ்பெக்டரென்ன செய்வார்.

ராம.— தாலுகாவுக்கு அனுப்ப வேண்டிய தவணைக் கோஷ்வாருவில் பதிந்து கொண்டு, தவணை, அவருக்கு வந்து சேர்ந்த தேதியையும், குறித்துக் கொண்டு திருப்பி கிருமத்துக்கு அனுப்பி விடுவார்.

லட்.— டிபிகல் கிருமம் என்றால் என்ன.

ராம.— ரெவினியூ இன்ஸ்பெக்டர்கள் மாதத்திற்கு ஒருதடவை போய் 1-நிர். 1—நிர்.எ 20—நிர். கணக்குகளின் பதிவுகளைச் சரியாயிருக்கிறதா என்று தணிக்கை செய்து அதன் விவரத்தைப் பிரதி மாதத்திலும் குறித்து வர வேண்டிய கிருமத்திற்கு டிபிகல் கிருமம் என்று பெயர்.

லட்.— எந்த மாதம் முதல் எந்த மாதம் வரையில் பார்வையிட வேண்டும் அப்படி பார்வை யிடுவதற்கு எத்தனை கிருமங்கள் குறிப்பிடு வார்கள்.

ராம.— ஜூன்மாதம் முதல் பிப்ரவரி மாதம் வரைக்கும் பார்வையிட வேண்டும், ஒரு பிர்க்காவில் 2—அல்லது 3—கிருமங்களைக்குறிப்பிடு வார்கள்.

லட்.— இந்தக் கணக்குக்கு ஜவாப்தாரி யார்.

ராம — தவணைக் கணக்குக்கு கர்ணமே ஜவாப்தாரி.

லட்.— கிருமப் பெரியதனக் காரருக்கு தவணைக் கணக்கு விஷயமாய் யாதொரு சம்மந்தமு மில்லையா.

ராம.— எல்லாப் புலங்களும் சரியாய்க் கணக்குக்கு கொண்டு வரப்பட்டிருக்கிறதா என்று கர்ணத்தைக் கேட்கவும் எந்தப்புலமாவது, மறைக்கப் பட்டதென்றாவது, விட்டுவிடப் பட்டதென்றாவது நிச்சயமாய்த் தெரிந்தால் அதைப் பற்றி தாசில்தாருக்கு ரிப்போர்ட் செய்யவும் அதிகார முண்டு.

லட்.— இந்தக் கணக்கை ஆரம்பிக்கிறது எப்ரல்மீ என்று தெரிந்து கொண்டேன் முடிக்கும் காலம் எது.

ராம.— தவணைக் கணக்கை எப்ரல்மீ முதல் ஆரம்பித்து மார்ச்சுமீ வரை முடிக்க வேண்டும்.

லட்.— பசலி ஆகையர் ஜூன்மாத மாக யிருக்க மார்ச்சு மாதத்தோடு தவணைக் கணக்கு முடிக்க வேண்டுமென்றால் அதற்குப் பின்னிட்ட சாகுபடிகளை என்ன செய்கிறது.

ராம.— தவணைக் கணக்கு மார்ச்சு மாதமாகையால் அதற்குப்பின் சாகுபடிகளை அடுத்த பசலிக் கணக்கில் காட்டி அவைகள் பசலி ஆகையறாகிய ஜூன் மாதத்திற்குள் அறுவடையானால் அவைகளுக்கு சப்ளிமெண்ட் கணக்கு ஒன்று கொடுத்து சாகுபடிக் கணக்கி லிருந்து கழித்து மார்ச்சுமீ வரை சாகுபடி யோடு சேர்த்து கொள்வதுடன் அதற்குச் சம்மந்தமான ஸ்டேட்மெண்டுகளும் சப்ளிமெண்டாகக் கொடுத்து பேரீஜ் தொகைகளோடு சேர்த்துக் கொள்ள வேண்டும்.

லட்.— இதைத் தாலுகாவில் ஒப்பிவிக்கும் காலமெது.

ராம.— பசலி முடிந்த இரண்டு மாதத்திற்குள் ஒப்பிவிக்க வேண்டும்.

(1-ஏ. உள்ளடக்கம்.)

லட்.— 1-நீர். ஏ உள்ளடக்கம் என்றால் என்ன.

ராம.— சாகுபடி யாகிற பயிர்களையும் அறுவடை விஸ்தீரணத்தையும் பயிர் வாரியாய்க் காட்டுகிற கோஷ்வாரா.

லட்.— இந்த ஸ்டேட்மெண்டில் 17,18,வது கலங்களில் தாக்கல் செய்ய வேண்டிய விவரம் எது.

ராம.— ஜூன்மீ ஆகையரில் அனுப்பும கணக்குக்கு மட்டும் 17-வது கலத்தில் பதிய வேண்டும் 18-வது கலத்தில் இருப்புப் பயிர் ஸ்திதியைத் தெரிவிக்க வேண்டும்.

லட்.— 1-ஏ உள்ளடக்கம் தெரிவிக்கும் விவரம் ஒவ்வொன்றையும் விவரமாய்ச் சொல்ல வேண்டும் அண்ணா.

ராம.— பயிர் வரிசையாய் நாளது மாதம் சாகு படியையும் நாளது மாதம் வரையில் சாகு படியையும் தெரிவித்து அறுவடையான பயிர்களை பூரா முக்கால், அரை கால் பூச்சியம் மொத்தம் என்ற ஆறு விவரமாய் நாளது மாதத்திற்குக் காட்டி, இதேபிரகாரம் நாளது மாதம் வரைக்கும், காட்டுவதுடன் நிற்கும் பயிரையும், ஷரூக் கலத்தில் இருப்புப் பயிர் ஸ்திதியையும் தெரிவிக்கும்.

லட்.— இந்தக் கணக்கின் 3-வது கலத்தில் கண்ட மொத்தம் தவணைக் கணக்கில் எந்த மொத்தத்திற்கு ஒத்திருக்க வேண்டும்.

ராம.— கவர்மெண்டு, இனம், இரண்டு செக்ஷனிலும் உள்ள சகல சாகுபடிகளின் மொத்தத்திற்கு ஒத்திருக்க வேண்டும். பசலி ஆகையரில் 2-நிர். பீ, உள்ளடக்கத்தில் கண்ட விஸ்தீரணத்துக்கு ஒத்திருக்க வேண்டும்.

லட்.— மேய்ச் சலுக்கு உபயோகப் படும் பயிர் சணல் போன்ற பயிர்கள் முதலிய வைகளை எந்தப் பிரிவில் எழுத வேண்டும்.

ராம.— 3-வது பிரிவாகிய தோப்புள்பட மற்றெல்லாப் பயிரென்ற வகுப்பில் சேர்த்து அவை களுக்கு நேரே பதிய வேண்டும்.

(2-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்.— 2-நிர். ஸ்டேட்மெண்டு என்றால் என்ன.

ராம.— கைப் பற்று நிலங்களையும் சாகு படியையும் புலவாரியாகக் காட்டுகிற வருஷ வாரி ரிஜிஸ்டர் அல்லது அடங்கல்.

லட்,— இதில் என்னென்ன விவரங்கள் அடங்கி யிருக்கின்றன.

ராம,— அஜிமாயிஷ்தாருக்கும் ஜமாபந்திக்கும் வேண்டிய சகல விவரங் களும் அடங்கி யிருக்கின்றன ஆகையால் இந்தக் கணக்குக்கு அடங்க லென்று பெயர்.

லட்,— இந்தக் கணக்குக்கு கோஷ்வாரா, தயாரிக்கும் விதமெப்படி.

3

ராம,— புஞ்சை நஞ்சை பிரித்து கைப்பற்று விஸ்தீரணம் வாஸ்தவத்தில் சாகுபடி விஸ்தீரணம் தருசு விஸ்தீரணம், என்று மூன்று பிரிவாய் பாய்ச்சல் விவரத்துடன் பிரித்துக் காட்டியும் பட்டாப் பதிவாகாத நிலங்களை தீர்வை ஏற்படாதது தீர்வை ஏற்பட்டது புறம் போக்கு என்ற விவரமாய் புஞ்சை நஞ்சை பிரித்து மொத்த விஸ்தீரணம் சில்லரை பாபத்தாக பாவித்த சாகுபடி இதர கைப்பற்று மொத்தம் கைப்பற்று, நிகரம் என்ற விவரமாய்க் காட்டிக் கோஷ்வாரா தயாரிக்க வேண்டும்.

லட்,— 2-நிர், ஸ்டேட்மெண்டின் பாரத்தின் கலங்கள் என்னென்ன விவரங்கள் தெரிவிக்கும்.

ராம,— 1,சர்வே நம்பர் 2,லெட்டர் 3,விஸ்தீரணம் 4,தீர்வை 5, போகம் என்ற ஐந்து விவரங்களையும் 6,கைப் பற்றுதார் பேர், 7,கைப் பற்றின விஸ்தீரணம் 8,தீர்வை 9,சாகுபடிப் பயிர் 10,முதல் போகம் 11, இரண்டாம் போகம் 12,கர்ணம்ஷரா 13, அஜிமாயிஷ்தார் ஷரா என்ற 13, கலங்களாக தெரிவிப் பதுடன் கர்ணம் ஷராக் கலத்தில் அஜிமாயிஷ்தாருக்கும் ஜமாபந்திக்கும் வேண்டிய விவரங்களையும் 13, வது கலத்தில் பார்வை யிடும் அதிகாரி களின் ஷுருவையும தெரிந்து கொள்ளலாம்,

லட்,— பாய்ச்சலாதார வாரியாய் எழுதப் பட்டிருக்கும் நஞ்சை நிலங்களில் ஏதாவது ஒரு ஸ்தலம் வேறெபாய்ச்சலாதாரத்தால் சாகுபடியானல் எப்படிப் பதிகிறது.

ராம,— வேறு பாய்ச்சலால் சாகுபடியான ஸ்தலம் பூரு ஸ்தலமாக யிருந்தால்ஸ்தலத்துக்கு நேரே ஷராக்கலத்தில் விவரத்தைக்குறிக்க வேண்டும் அரைகுறை ஸ்தலமாக யிருந்தால் தனி வரிசையாக சாகுபடியான பாகத்தை மட்டும் எழுதி அவசியமான ஷுருவையும் அதன் நேரே குறிக்க வேண்டும்

லட்,— தனி நஞ்சை ஆயக்கட்டுக் கிணறு களிலிருந்து சாகுபடியாகும் புலங்களின் விஷயத்தில் கவனிக்க வேண்டிய தென்ன.

ராம,— நஞ்சையின் கீழ் மற்ற பாய்ச்சலாதாரங்களைத் தாக்கல் செய்த பிறகு தனியாயக்கட்டு நஞ்சை கிணறு பாய்ச்சலாதாரங்களைத் தனியாகக் காட்ட வேண்டும்,

லட்,— தனி ஆயக்கட்டு கிணறு களல்லாத இதர கிணறுகளை எப்படிப் பதிகிறது.

ராம,— இதர கிணறுகளை நீர்ப் பாய்ச்சப் பட்ட புலங்களுக்கு நேராகக் காட்ட வேண்டியது.

லட்,— ஒரு சர்க்கார் சம்மந்தமான கண்மாயின் கீழ் புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர் பாய்ச்சினால் அவை களையும் பாய்ச்சல் வாரியர்ப் பதிய வேண்டுமோ.

ராம,— பெரிய பாய்ச்ச லாதாரங்களைப் போன்ற குறிப்பிட்ட இடங்களில் கணக்குகளில் புஞ்சையாக எடுக்கப் பட்டு பிரதி வருஷமும் நஞ்சைப் பயிர் சாகுபடியாகி வரும் ஸ்தலங்களை பாய்ச்சலுக்குத் தக்கவாறு பிரித்துத் தாக்கல் செய்ய வேண்டும் மற்ற சாகுபடிகளை அப்படி பதிய வேண்டிய தில்லை.

லட்,— தீர்வை ஏற்படாத தருசு நிலங்களை எந்தப் பிரிவில் தாக்கல் செய்ய வேண்டும்.

ராம,— தீர்வை ஏற்படாத தருசு நிலங் களையும் சர்வே செய்யப் படாத நிலங் களிருந்தால் அவைகளையும் சி,வகுப்பு 1-காடு 2-இதர புறம்போக்கு என்று பிரித்து சி, 1—காடு, என்ற வகுப்பில் காட்ட வேண்டும்.

லட்,— கவர்னமெண்டாருல் ஏலமெடுத்த நிலங்களை எந்தக் கலத்தில் எப்படித் தாக்கல் செய்ய வேண்டும்.

ராம,— 6—வது கலத்தில் கவர்மெண்டு நிலமென்று தாக்கல் செய்ய வேண்டும்.

லட்,— இந்தக் கணக்கில் 4-வது கலத்திலும் 8—வது கலத்திலும் தாக்கல் செய்திருக்கும் தீர்வையில் எந்தத் தொகைகள் சேர்ந்திருக் கின்றன.

ராம,— ரிஜிஸ்டரான இருபோக நிலங்களுக்கு தண்ணீர்த் தீர்வை

யையும், தரம் தீர்வையையும், சேர்த்தும், மற்ற நிலங்களுக்கெல்லாம், தரம் தீர்வை மட்டும் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறது.

லட்,— இனும் நிலங் களுக்கும், இதே விதம் தானு ஏதேனும் பேத முண்டோ.

ராம,— இனும் நிலங் களுக்கு 4—வது கலத்தில் தரம் தீர்வையும் 8—வது கலத்தில் கவர்மெண்டுக்குச் செலுத்த வேண்டிய குயிட்ரெண்டு முதலிய தீர்வை களையும் பதிய வேண்டியது

லட்,— இனும் டைடில், டீடில், கண்ட விவரங் களுக்கும் செட்டில் மெண்ட் ரிஜிஸ்டரில் கண்ட விவரங் களுக்கும் பேதமிருந்தால் அநுசரிக்க வேண்டிய விதிகள் என்ன

ராம,— செட்டில் மெண்டுப் படிக்குள்ள தீர்வையை மட்டும் 4—வது கலத்தில் தாக்கல் செய்து 5—வது கலத்தில் செட்டில் மெண்டு விவரம், இனும் விவரம். இரண்டையும தாக்கல் செய்து, செ, இ, என்னும எழுத்துக்களை முறையே அவைகளுக்கு முன்னால் குறிக்க வேண்டியது

லட்,— கர்ணம் ஷெரா கலமாகிய 12—வது கலத்தில் பதிய வேண்டிய விவரங்கள் எவை.

ராம,— அஜிமாயிஷ்தாருக்கு அவசியமாய்த் தெரிய வேண்டியிருக்கிற சாவி, மசகூல்கமபி, ருஜினுமாக்களையும், எறப்பு என்ற ஷெராவையும், பதிய வேண்டும்.

லட்,— எறப்பு என்றால் என்ன.

ராம,— 1-2—வகுப்புக் கண்மாயின் ஆயக்கட்டு நஞ்சை களில் முதல் போகத்துக்கு எறப்புத் தண்ணீர் பாய்ந்திருந்தால் அப்பேர்ப்பட்டவைகளை எறப்பு என்று குறிப்பிடுவதற்குதான் எறப்பு என்று எழுத வேண்டும்.

லட்,— அப்படி எறப்பு என்று எழுதுவதின் பிரயோஜனம் என்ன.

ராம,— அப்பேர் பட்ட. விஸ்தீரணங்களின் ஒட்டு மொத்தத்தை கூட்டி 8—கிர், கணக்கில் தாக்கல் செய்வதற்கு உபயோகப்படும்.

லட்,— இந்தக் கணக்கில் ரெவினியூ இன்ஸ்பெக் டருக்குள்ள சம்ம ந்த மென்ன.

ராம,— இந்த 2-நிர். ஸ்டேட் மெண்டுதான் அஜிமாயிஷ்தாருக்கு வேண்டிய முக்கிய கணக்கு ரெவினியூ இன்ஸ் பெக்டர் இந்தக் கணக்கை வைத்து புலங்களைப் பார்வை யிட்டு (இன்ஷியல்)முதல் குறிப்பு கையெழுத்துச் செய்ய வேண்டு ம் ஏதேனும் வித்தியாச மிருந்தால், திருத்தி எழுதியும், சாகுபடி முதலியவைகள் ஏதேனும் விட்டுப் போயிருந் தால் ஸ்தலவாரி விவரத்துடன் சாகுபடிகளையும் அது விஷ யமாய்த் தனக்குள்ள அபிப்பிராயத் தையும், 13-வது கல த்தில் குறித்து தேதியுடன் கையெழுத்துச்செய்யவேண்டும்

லட்,— இந்தக் கணக்கை முடிவு செய்யுங் காலமெது

ராம,— தாசில்தார் முடிவு செய்கிற தேதிக்கு முன்னமே கணக்கை முடிவு செய்ய வேண்டும்

லட்,— இவைகளில் தாக்கல் செய்திருககும் விவரங்களை எப்போ எந்தக் கணக்குடன் ஒத்துப் பாரப் பார்கள்

ராம— ஜமாபந்தி காலத்தில் தவணை நோட்டுடனும் 1-நிர், கணக்கு டனும் ஒத்துப் பார்ப் பார்கள்

லட்,— அஜிமாயிஷ்தார்கள் அதிக கவலை செலுத்தி பார்க்க வேண்டிய கேசுகள் எவை

ராம,— சர்க்காரால், தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டிய சகல விஷயங்களையும், சர்க்கார் நிலங்கள் ஆக்கிரமிப்புகளையும் சென்ற பசலியில் ஏற்பட்ட புதுவல் புறம்புகல் நிலங்களை யும் தீர்வைஜாஸ்தி பசலிஜாஸ்தி முதலியவை களையும் கட்டாயம் பார்க்க வேண்டும்

லட்,— இந்த 2-நிர், ஸ்டேட் மெண்டுக்கு எத்தனை உள்ளடக்கங் கள் உண்டு

ராம,— ஏ, பீ, சீ, டீ, இ என்ற ஐந்து உள்ளடக்கங்கள் உண்டு

(2-நிர். (ஏ)உள்ளடக்கம்)

லட்,— 2-நிர் (ஏ) உள்ளடக்கம் என்றால் என்ன?

ராம.— பட்டாவில் சேராத கைப்பற்று மிஸ்லேனியஸ் ரெவினியூ பாபத்துகளைக் காட்டும் ஸ்டேட்மெண்டு அதாவது தர்க்காஸ்துதில்லாமல் சர்க்கார் நிலத்தில் சாகுபடி செய்தல் அல்லது வேறு விதமாய்க் கைப்பற்றுதல் முதலிய நிலங்களின் விஸ்தீரணத்தையும் தீர்வையையும் தெவிக்கும்-

லட்.— இந்த ஸ்டேட்மெண்டு தயாரிக்கும் காலமெது?

ராம.— புறம்போக்கு நிலங்கள் தீர்வை ஏற்பட்ட அல்லது ஏற்படாத தருசு நிலங்கள் இவைகளை உத்திரவின்றி எவ்விதமாக கைப்பற்றின போதிலும் தாசில்தார், டிவிஷனபீசர், முதலியோர் பைசல் செய்யாதிருந்த போதிலும் இந்தக் கணக்குக்கு கொண்டு வர வேண்டியது.

லட்.— தயார் செய்யும் விதத்தை சொல்லும் போது 12-வது கலத்தில் ஏ, பீ, மிமோக்களை வைத்துப் பதிய வேண்டுமென்று சொன்னீர்களே, ஏ, மிமோ பீ, மிமோ என்றால் என்ன?

ராம.— தீர்வை ஏற்படாத நிலத்திலாகிலும் தீர்வை ஏற்பட்ட தருசு நிலத்திலாகிலும் ஒரு நபர் பிரவேசித்த பொழுது தீர்வை விதிப்பதற்கு ஏற்பட்டது ஏ, மிமோ என்றும் பொது நன்மைக் குரிய நிலங்களை கைப்பற்றியதற்கு தண்டம் விதிப்பதற்காக ஏற்பட்டதற்கு பீ, மிமோ என்றும் பெயர்.

லட்,—ஏ, மிமோ பீ, மிமோ தயாரிக்க வேண்டிய காலமெது?

ராம.— சர்க்கார் நிலங்களை கைப்பற்றின மாதத்திலே அதற்கென்று ஏற்பட்ட பாரத்தில் சம்பந்தபட்ட கலங்களைப் பூரித்து தாமத மன்னியில் தாலுகாவிற்கு அனுப்ப வேண்டும்.

லட்.— ஏ, மிமோ பீ, மிமோ பைசலானதின் பேரில் தான் 2-நிர் (ஏ) குறிப்பு உள்ளடக்கம் தயாரிக்க வேண்டுமோ?

ராம.— பைசலை எதிர் பார்க்க வேண்டிய அவசிய மில்லை 12-வது கலம் தவிர மற்ற கலங்களை 2-நிர் ஸ்டேட்மெண்டை

வைத்து பூரித்து ஜமாபந்தி ஆபீசர் அல்லது டிவிஷனுபீசர் தாசில்தார் முதலியவர்களின் பைசலின் பேரில்12-வது கலம் பதியலாம்.

லட்.— தர்காஸ்தில்லாமல் கைப்பற்றப்பட்ட கேசுகளை எத்தனை நாளைக்குள்ளாக கணக்குக்கு கொண்டு வர வேண்டும்.

ராம.—கைப்பற்றின மாதத்திலேயே கட்டாயம் கணக்குக்கு கொண்டு வரவேண்டும் என்று ஸ்டாண்டிங் ஆர்டர் 15-19 வது பாராவிலிருப்பதால் சாகுபடியான மாதத்திலேயே கொண்டு வர வேண்டும். 1900ஷ (பதிப்பு)

லட்.—கைப்பற்றினவன் பட்டா வேணுமென்று கோரு விட்டாலும் கணக்குக்கு கொண்டு வர வேண்டுமோ?

ராம.— கைப்பற்ற பட்ட நிலம் தீர்வை ஏற்பட்டதா யிருந்தாலும் தீர்வை யேற்படாததா யிருந்தாலும் கைப்பற்றினவன் பட்டா வேணுமென்று கோறினாலும் கோரு விட்டாலும் மேலேகண்ட ஸ்டாண்டிங் ஆர்டரை யனுசரித்து 2-நிர்(ஏ) குறிப்பு உள்ளடக்கத்துச் சாகுபடி மாதத்திலேயே கொண்டு வர வேண்டும்.

(2-நிர். பீ உள்ளடக்கம்.)

லட்.—2-நிர் பீ, உள்ளடக்கம் ஸ்டேட்மெண்டு எந்த விவரத்தைத் தெரிவிக்கும்?

ராம.—வருஷ வாரி பயிர் வாரி ஸ்டேட்மெண்டு.

லட்.—இந்தக் கணக்கில் கண்ட மொத்தம் எந்தக் கணக்குக்கு ஒத்திருக்க வேண்டும்?

ராம.— 1-நிர் ஸ்டேட்மெண்டின் மொத்தத்துக்கும் (1-நிர் ஏ) உள்ளடக்கம் மார்ச்சு மாதத்தில் கண்ட 3-வது கலம் மொத்தத்துக்கும் இதன் 14-15, இரண்டு கலங்களின் மொததம் சரியா யிருக்க வேண்டும்.

(2-நிர். (சீ)உள்ளடக்கம்.)

லட்.— 2-நிர் சி, உள்ளடக்கம் எதைப் பற்றியது?

ராம.—இனும் நிலங்களல்லாத நிலங்களிலுள்ள சர்க்காருக்கும் குடிசளுக்கும் பாத்தியப் பட்ட தோட்டந் தோப்புகளைக் குறித்த ஸ்டேட்டுமெண்டு.

லட்,— கிருமத்தி லுள்ள சகல தோப்பு களையும் இந்தக் கணக்குக் குக் கொண்டு வர வேண்டுமோ

ராம,—பாரஸ்ட்டு இலாகாவுக்கு சம்மந்த பட்ட தோப்புகளை இந்த க்கணக்குக்கு கொண்டு வர வேண்டிய தில்லை, சர்க்காருக்கும், குடிகளுக்கும் பாத்தியப்பட்ட தோப்புகளையும், சர்க்காருக்குப் பாத்தியப் பட்டு குத்தகைக்கு விடப் பட்ட அல்லது மரத்தீர்வை யேற்பட்ட விடுமரங் களையும் இந்தக் கணக்குக்கு கொண்டு வர வேண்டும்

லட்,— தீர்வை யேற்படாத கவுல் தோப்புகளை, இந்த ஸ்டேட்மெண்டுக்கு கொண்டுவர வேண்டுமா?

ராம,— கவுல் தோப்புகளுக்கு தீர்வை யேற்படாவிட்டாலும், சர்க்காருக்குப் பாத்தியப்பட்ட தோப்பு என்று தெரிவதற்காக, 2—நிர்,சீ, உள்ளடக்கத்துக்குக் கொண்டு வரத்தான் வேண்டும்

லட்,— 2—நிர், (சீ)உள்ளடக்கத்தின் 12—வது கலமாகிய ஷருக்கலத்தில் எழுத வேண்டிய விவரங்கள் எவை

ராம,— தோப்பின் குத்தகைகள் விவரங்கள் தோப்புக்கு யேற்பட்ட நிபந்தனை விவரங்கள் முதலியவைகளை எழுத வேண்டும்

லட்,— 2—நிர், (சீ)ஸ்டேட்மெண்டு, விஷயமாய் அஜிமாயிஷ்தார்கள் கவனிக்க வேண்டிய தென்ன

ராம,—கணக்கில் கண்ட எல்லா மரங்களும் சரியாயிருக்கிறதாவென்று பார்க்கவேண்டும் கவுல் தோப்புகளை அதிககவனமாய்ப் பார்த்து அஜிமாயிஷில், கண்டசோதனைக் குறிப்புகள் பூருவையும் 2—நிர், (சீ) கணக்கில் பதிவு செய்ய வேண்டும்

(2-நிர்.டீ.உள்ளடக்கம்.)

லட்,— 2-நிர், டீ, உள்ளடக்கம் தெரிவிக்கும் விவரங்கள் எவை?

ராம,— பாய்ச்சலாதாரங்களின் பேர்களையும் பாத்தியதை, முதலிய விவரங்களையும், நீர்பாய்ச்சப்பட்ட பயிர்களின் விஸ்தீரணத்தையும் காட்டுகிற கணக்கு

லட்,— தனிஆயக்கட்டு கிணறுகளையும் ஆயக்கட்டில் சேராதகிணறுகளையும், இந்தக் கணக்கில் பதிவதில் யேற்பட்ட பேதம் என்ன

ராம,— தனிஆயக்கட்டுக் கிணறுகளுக்கு 3-வது கலத்தில் பாய்ச்சக் கூடிய விஸ்தீரணம் தாக்கல் செய்ய வேண்டும் மற்ற கிணறுகளுக்குப் பதிய வேண்டியதில்லை

லட்,— 2-நிர், டி, 5-வது கலத்தில் எந்த விஸ்தீரணம் தாக்கல் செய்ய வேண்டும்?

ராம,— முதல் போகம் நஞ்சை சாகுபடியைக் காட்ட வேண்டும்

லட்,— கவர்மெண்டையும், இனத்தையும், தனித்தனியே பதிய வேண்டுமோ?

ராம,— பாய்ச்சல் விவரத்தைக் குறித்து கவர்னமெண்டு இனம் என்கிற வித்தியாசம், பாராட்டாமல், சேர்த்துத்தான், பதிய வேண்டும்

(2-நிர்.இ.உள்ளடக்கம்.)

லட்,- 2-நிர், இ,உள்ளடக்கம் தெரிவிக்கும் விவரமென்ன?

ராம,- கிருமத்தின் நிலங்களை ஐந்துவகையாய்ப் பிரித்து ஆயக்கட்டுவகுப்பு விவரத்துடன் புஞ்சை; நஞ்சை, மொத்தம், என்ற மூன்று ஹெட்டிங்கின்கீழ் விஸ்தீரணத்தையும், தீர்வையும்,காட்டும்

☞ குறிப்பு.— இதில்கண்ட ஒவ்வொரு பாபத்தின் மொத்தமும் 2-நிர், ஸ்டேட்மெண்டில் கண்ட ஒவ்வொரு பாபத்தின் 3,4,வதுகலங்களில்கண்ட தொகைக்கு ஒத்திருக்கவேண்டும்

லட்,— 5-விதமான ஆயக்கட்டுகள் எவை

ராம,— 1-தீர்வை யேற்பட்ட கவர்மெண்டு நிலங்கள் 2-இனும் 3-தீர்வை யேற்படாதது 4-புறம் போக்கு 5-பாரஸ்டு என்று ஐந்து விதமுண்டு

லட்,- இந்தக் கணக்கு எழுதுவதில் 1,2,பாபத்துக்களைப் பதிவதிலும் 3,4,5,பாபத்துக்களைப் பதிவதிலும் யேற்பட்ட பேதமென்ன

ராம.- 1,2,பாபத்துக் களுக்கு விஸ்தீரணமும் தீர்வையும், பதிய வேண்டியது 3,4,5, பாபத்துக் களுக்கு தீர்வை யில்லாமல் விஸ்தீரணம் மட்டும் பதிய வேண்டும்

லட்,- தரம் எற்பட்ட கவர்மெண்டு நிலமாகிய சர்க்கார்தருசு நிலங்களைத் தனித்தனியாக எழுத வேண்டுமோ?

ராம,- தனியாகக் காட்டவேண்டிய தில்லை தீர்வை யேற்பட்ட கவர்மெண்டு நிலங்களுடன் சேர்த்து எழுத வேண்டும்

லட்,- கிருமத்தில் சர்வே செய்யப்படாத விஸ்தீரண மிருந்தால் அது விஷயத்தில் கவனிக்க வேண்டிய தென்ன

ராம,- சர்வே செய்யப் படாத விஸ்தீரண மிருந்தால் தீர்வை யேற்படாம லிருந்து கைப்பற்றுக்கு வரக்கூடியதா யிருந்தால் அந்தப் பாகத்தை 2-நிர்,இ, ஸ்டேட்மெண்டின் அடியில் காண்பிக்க வேண்டும்

லட்,- தீர்வை யேற்படாத அல்லது புறம் போக்காக எடுக்கப் பட்டிருக்கிற நிலத்தை ஒருவன் கைப்பற்றினால் அதை எந்தப் பாகத்தில் சேர்க்க வேண்டும்

ராம,- புறம் போக்கு நிலத்தை ஆக்கிரமித்தால் இந்தக் கணக்குக்கு கொண்டுவரக் கூடாது தீர்வை யேற்பட்ட கவர்மெண்டு நிலத்துக்கு மாற்றும்படி உத்திரவு வரும்வரை யாதொன்றும் செய்யப்படாது புறம்போக்காகவே இருக்க வேண்டும்

லட்,- பாரஸ்ட்டுக்குச் சம்மந்தப்பட்டநிலத்தை எப்படிக் காண்பிக்க வேண்டும்

ராம,- மொத்தத்துடன் சேர்க்காமல் தனியாகக்காட்ட வேண்டும்

லட், இந்தக்கணக்கைத் தயாரிக்கும் வருஷம் எது

ராம, காயம் மாறுதலென்ற நிலையான மாறுதல் நேரிடும் வருஷங்களில் தான் தயாரிக்க வேண்டும்

லட். மாறுதல்கள் நேரிடாத வருஷங்களில் இந்தக் கணக்கில் ஒன்றும் பதிய வேண்டாமா

ராம, மாறுதல் இல்லையென்று எழுதினால் போதும்

(3-நிர். ஸ்டேட் மெண்டு.)

லட், 3-நிர், ஸ்டேட்மெண்டு என்றாலென்ன

ராம, சகல புலங்களின் மாறுதல்களைக் காட்டும் வருஷவாரி ரிஜிஸ்டர்

லட், இதில் காட்டவேண்டிய விவரங்கள் எவை

ராம, ரிவினியூ அதிகாரிகளால் உத்திரவு செய்யப் பட்ட நிலங்களின் மாறுதல் களின் விவரங்களைக் காட்ட வேண்டியது

லட், இதில் 1-வது பிரிவு ராஜினமா என்றதில் எந்தக் கேசுகளைப் பதிய வேண்டும்

ராம, விடுதலை ராஜிநமாக் கொடுக்கப்பட்ட கேசுகளைப்பதிய வேண்டும்

லட், 2-வது பிரிவு தர்க்காஸ்து அல்லது அடமானம் என்பதில் என்ன பதிய வேண்டும்

ராம, தர்க்காஸ்தின் பேரில் காயம் பட்டாவான கேசுகளையும் சர்க்கார்தருசு சாகுபடிசெய்து காயம் பட்டாவான கேசுகளையும் பதிய வேண்டும்

லட், 3-வது பிரிவில் பட்டாமாறுதல் என்றதில் எந்தக்கேசுகளைப் பதிய வேண்டும்

ராம, சகலவித பட்டா மாறுதல்களையும் பதிய வேண்டியது

லட், 3-வது பிரிவு இதரமாறுதல் என்றதில் பதிய வேண்டிய விவரங்கள் எவை

ராம, ஒரு பாபத்தி லிருந்து மற்றொரு பாபத்துக்கு மாறுகிற மாறுதல்களையும், அஸ்வுஜாஸ்தி முதலியவை போன்ற மாறுதல்களையும், இந்தப் பிரிவில் தாக்கல் செய்ய வேண்டும்

லட், ஒரு பாபத்திலிருந்து மற்றொரு பாபத்துக்கு மாறுகிறதென்றால் தெரியவில்லை எப்பேர்பட்ட மாறுதல் கேசுகளை ஒரு பாபத்திலிருந்து மற்றொரு பாபத்துக்கு மாறுகிறவைகள் என்று செல்லப்படும்

ராம, நஞ்சை, புஞ்சையாகவும், இனும், அயனாகவும் புறம்போக்கு கவர்மெண்டு நிலமாகவும், மாறுகிற கேசுகளுக்கு பாபத்து மாறுதல் என்று பெயர் சொல்லப்படும்

லட், நிலையான மாறுதல் யேற்பட்டால் எந்தக்கணக்கில் தாக்கல் செய்ய வேண்டும்

ராம, (ஏ) ரிஜிஸ்டர் ஷரூக்கலத்திலும் 2-நிர், ஸ்டேட்மெண்டிலு ம் பதிவு செய்ய வேண்டும்

லட், இந்தக் கணக்கின் ஷரூக்கலத்தில் பதிவு செய்ய வேண்டிய வை எவை

ராம, 2-முதல் 9-கலங்கள்வரை யேற்பட்ட மாறுதல்களை எந்தெந்த கணக்கில் மாற்றப்பட்டிருக்கிறதென்ற விவரத்தை ஷரூக்கலத்தில் குறிக்க வேண்டும்

லட், சர்க்கார் தருசில் சாகுபடிசெய்து காயம் பட்டாவாகாத கேசுகளின் விஷயத்தில் கவனிக்க வேண்டியதென்ன

ராம, சர்க்கார் தருசு நிலங்களை சாகுபடி செய்தாகிலும், கைப்பற்றினாலும், காயம் பட்டாவாகும் வரை இந்தக்கணக்குக்கு வரவேண்டியதில்லை

லட், அடமானமெனும் தர்க்காஸ்து மனு கொடுத்த விஷயங்களில் கவனிக்க வேண்டியதென்ன

ராம, தர்க்காஸ்து மனுக் கொடுத்தவைகளும், மனுவில்லாமல் சாகுபடியின்மேல் கைப்பற்றினாலும் ஒன்றுதான் ஆகையா

ல் அவைகளை காயம் பட்டாவாகும் வரை இந்தக்கணக்குக்கு கொண்டு வரக்கூடாது

லட், இனும் நிலங்களின் விஷயமாய்க் கவனிக்க வேண்டிய விஷயமென்ன

ராம, 1,2,3,பிரிவுகளில், திறப்பு என்னும் கவர்மெண்டு நிலங்கள் எழுதகப் போதுமான இடம் விட்டுவிட்டு இனும நிலங்களைப் பதிய வேண்டும்

லட், ரிவினியூ பாக்கியில் நிலம் யேலமெடுத்தவன் பேரை உடனே கணக்கில் பதிவு செய்யலாமா

ராம, ஏலமெடுத்தவுடன் பதிவு செய்யக்கூடாது ஏலம் அங்கிகாரம் செய்தவுடன் கணக்குகளில் பதிவு செய்ய வேண்டும் ஏலம் எடுத்தவன் ஏல சர்டிபிகேட் வாங்கும் வரை காத்திருக்க கூடாது

(3–நிர். ஏ.உள்ளடக்கம்.)

லட். 3–நிர்,(ஏ)உள்ளடக்கமென்றால் என்ன?

ராம. 3–நிர்,கணக்கில் கண்டகைப்பற்று மாறுதல் களின் மொத்தத்தைக் காட்டும் கோஷ்வாரா

லட், மாறுதல்களை மொத்தமாய்ப் பதியவேண்டுமா பிரித்தெழுத வேண்டுமா

ராம, மாறுதல்களை விவரமாய்ப் பிரித்தும் ஒவ்வொரு மாறுதல்களில் யேற்பட்ட கேசுகளின் மொத்தம் இவ்வளவு என்றும் புஞ்சை நஞ்சை மொத்தம் என்ற ஹெட்டிங்கின்கீழ் ஒவ்வொன்றிலும் விஸ்தீரணத் தையும், தீர்வையையும் பதிய வேண்டும்

லட், இதில்கண்ட கைப்பற்று மொத்தம் எந்தக் கணக்குக்கு ஒத்திருக்க வேண்டும்

ராம, அடங்கலில் கண்ட கோஷ்வாருவில் கைப்பற்று மொத்தத்துக்கும்,12–நிர்கணக்கின் 1–முதல்6–வது கலங்களில்கண்ட கைப்பற்று மொத்தத்துக்கும் ஒத்திருக்க வேண்டும்

லட், இந்தக் கணக்கின் உபயோக மென்ன

ராம, ஒவ்வொரு பசலியில் நிலைத்த கைப்பற்று தெரிவதற்கு உபயோக மாகிறது

(4-நிர். ஸ்டேட்மெண்டு.

லட், 4-நிர் ஸ்டேட்மெண்ட் என்றால் **என்ன**

ராம, பேரீஜ் வஜாக்களைக் காட்டும் ஸ்டேட்மெண்ட்

லட்.— பேரீஜ் வஜாக்களில் எத்தனை வகை உண்டு.

ராம.— மத சம்பந்தமான பேரீஜ் வஜா இதர பேரீஜ் வஜா என்று இரண்டு வகை உண்டு.

லட்.— இந்த ஸ்டேட்மெண்டில் பதியும் விதம் எப்படி.

ராம.— மத சம்பந்தமான பேரீஜ் வஜாக்களை முதலிலும் மற்ற பேரீஜ் வஜாக்களை பின்னாலும் பதிய வேண்டும்.

லட்.— இதில் கண்ட வஜாக்கள் எந்தக் கணக்குக்குப் போக வேண்டும்.

ராம.— 12-நிர் ஸ்டேட்மெண்டில்மொத்தம் பேரீஜுக்குக்கீழ் தனி வரி யொன்றுயெழுதி 39, 41-வது கலங்களில் கண்ட மொத்தம் பேரீஜ் தொகையில் கழிக்க வேண்டும்.

(5-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்.— 5-நிர் ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராம.— லாண்டு ரிவினியூ வஜாக்களைக் காட்டும் வருஷவாரி ரிஜிஸ்டர்.

லட்.— இதை எத்தனை பிரிவுகளாய் எழுத வேண்டும்?

ராம.— மூன்று பிரிவுகளாய் எழுத வேண்டும்.

லட்.— ஒவ்வொன்றும் எதைப்பற்றியது.

ராம.— I-வதுபிரிவு. வஜாவுக்கு டிவிஷனுபீசருக்கு அனுப்புவது

II-வது பிரிவு சாங்கஷனான வஜாவை பிரித்து பட்டாவாரி மொத்தம் காட்டுவது.

III-வது பிரிவு அபூர்பமாய் ஏற்படும் ஸ்பெஷல் வஜாவைக் காட்டுவது.

லட்.— 5-கிர்.I-வது பிரிவை அயனுக்கும், இனுத்துக்கும் தனித்தனியே எழுத வேண்டுமோ?

ராம.— ஆம் கவர்னமெண்டு இனும் பிரித்து பாய்ச்சலாதார வாரியாயும் பட்டா வரிசையாயும் எழுத வேண்டும் நஞ்சை ஸ்தலங்களை எழுதிக்கொண்டு அதன் பின் தண்ணீர் பாய்ந்த புஞ்சைத் தண்ணீர்த் தீர்வை வஜாக்களை எழுத வேண்டும்

லட்.— ஒரு ஸ்தலத்தை வஜாவுக்கு லாயக்குள்ளதென்று எப்படித் தெரிந்து கொள்ளலாம்?

ராம.—அனுஷ்டானத்திலிருக்கும் விதிகளின்படி வஜாவுக்கு லாயக்குள்ளதென்று தெரிந்து கொள்ளலாம் அல்லது சோதனை ஆபீசருல் 2-கிர் ஸ்டேட்மெண்டில் பதின்மூன்றுவது கலத்தில் எழுதி யிருக்கும் ஷருவினுல் தெரிந்து கொள்ளலாம்.

லட்,— 8-வது கலத்தில் பதியும் அம்சத்தையும் அதை மாற்ற வேண்டிய சந்தர்ப்பத்தையும் சொல்ல வேண்டும் அண்ணு

ராம.— வஜாவுக்கு சிபார்சு செய்யக் கூடிய தொகையை கர்ணன் 8-வது கலத்தில் தாக்கல் செய்ய வேண்டும் 11-வது கலத்தில் தாசில்தார் எழுதும் ஷராவுக்கு ஒத்திராவிட்டால் 8-வது கலத்தை திருத்திக் கொள்ள வேண்டும்.

லட்.— உசூர் அதிகாரிகள் முக்கியமாய்த் தனிக்கை செய்ய வேண்டிய கலங்கள் எவை?

ராம.— 7-8-9-10 வது கலங்கள்,

லட்.— இதன் 9-வது கலத்தில் என்னென்ன அம்சங்களைக் காட்ட வேண்டும்?

ராம.— அடங்கல் ஷராக்கலத்தின் விவரத்தையும் அந்தப் பசலியில் பக்க நிலங்களிலிருக்கிற ஸ்திதியையும் நஞ்சை தீர்வைக்கும் புஞ்சை தீர்வைக்கும் உள்ள வித்தியாசத் தொகை தீர்வைஜாஸ்தி பசலிஜாஸ்தி முதலியவைகளின்வஜா தொகை எவ்விதம் கணக்கிடப் பட்டதென்பதை மாமூல் தருசு விவரங்களையும் காட்ட வேண்டியது.

லட்.— வஜா விஷயமாய் அஜிமாயிஷ்தார்கள் கவனிக்க வேண்டிய விஷய மென்ன?

ராம.— வஜா ஸ்தலங்களுக்குப் பக்க நிலங்களின் ஸ்திதிகளையும் கவனித்து அவைகள் நல்ல ஸ்திதியிலிருந்தால் அதற்குக் காரணத்தையும் கவனித்து எழுத வேண்டும்.

லட்.— 10-வது கலத்தில் தாக்கல் செய்ய வேண்டிய விஷயங்கள் எவை?

ராம,—வஜா ஸ்தலத்தையும் பக்க ஸ்தலத்தையும் பற்றி அடங்கலில் 13-வது கலத்தில் அஜிமாயிஷ்தார் எழுதிய ஷராவை எடுத்துப் பதிய வேண்டும்.

லட்.— 5-நிர் II-வது பிரிவில் எந்த வஜாக்களை எந்த வரிசையில் பதிவு செய்ய வேண்டும்.

ராம.— கால ஸ்திதி வஜாக்களையும் காயம் வஜாக்களையும் காண வேண்டும் ஆனால் இவைகளுக்கு 2-3- வகைகளுக்கு புல வாரி விவரம் தேவை யில்லை.

லட்.— இறவை வஜாவைப் பற்றி கவனிக்க வேண்டிய விஷய மென்ன?

ராம— செட்டில் மெண்ட் ரிஜிஸ்டரில் இறவை வஜா ஸ்தலங்களுக்கு நேரே ஷராக் கலத்தில் இறவை வஜா என்று கண்டிருக்கும் அதை வருஷம் தோறும் இந்த ஸ்டேட்மெண்டில் காட்டி 10-நிர் II-வது பிரிவில் 2-வது ஐட்டத்தின் நேரே பதிந்து கழித்துக் கொண்டு வர வேண்டும்.

லட்.— செட்டில் மெண்டாரால் இறவை வஜா என்று குறிக்கப் பட்ட நிலத்துக்குத் தண்ணீர் பாய்ந்தால் என்ன செய்ய வேண்டும்.

ராம.— இறவை வஜா ஏற்பட்ட ஸ்தலங்களுக்கு எந்த வருஷத்திலாவது தண்ணீர் நேராகப் பாய்ந்தால் அவைகளை இறவை வஜா இடத்திலிருந்து கழித்து விட வேண்டும்.

லட்.— நிலத்தீர்வையும் மரத்தீர்வையும் சேர்ந்த கேசுகளின் வஜாத் தொகையை இந்தக் கணக்குக்கு கொண்டு வர வேண்டுமா?

ராம.— ஆம் நிலத்தீர்வைவஜா செய்தாலும் மரத்தீர்வை வஜாச் செய்தாலும் இந்த இரண்டாம் பிரிவுக்குக் கொண்டு வரத் தான் வேண்டும்.

6-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 6-நிர் ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராம.—சர்க்கார் பாய்ச்சலா தாரத்திலிருந்து நீர் பாய்ந்த விஸ்தீரணத்தையும் தீர்வையையும் காட்டும் ஸ்டேட்மெண்டு.

லட்.—இதில் எந்தெந்த பாபத்துக்களைத் தெரிந்து கொள்ளலாம்?

ராம.—தண்ணீர்த் தீர்வை ஏற்பட்ட எல்லா பாபத்துக்களையும் தண்ணீர்த் தீர்வைக்கு ஏற்பட்ட தெண்டத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

லட்.—ஒரு பாய்ச்சலாதாரம் எந்த வகுப்பை சேர்ந்ததென்று தெரிந்து கொள்ளும் விதமெப்படி?

ராம.—பைசல் செய்யப்பட்ட ஜில்லாக்களில் செட்டில் மெண்டாரால் முதலாவது இரண்டாவது வகுப்புகளாகச் சேர்க்கப்பட்ட பாய்ச்சலாதாரங்களை முதலாவது வகுப்பாகவும் மற்ற பாய்ச்சலாதாரங்களை இரண்டாவது வகுப்பாகவும் காண்பிக்க வேணடும்.

லட்.—பைசலாகாத ஜில்லாக்களில் பாய்ச்சலாதாரங்களின் வகுப்பைத் தெரிந்து கொள்ளும் விதமெப்படி?

ராம.—ஜில்லாக் கலெக்டர் உத்திரவு செய்யும் வகுப்பை அனுசரிக்க வேண்டியது தாசில்தாரிடத்திலிருந்து பாய்ச்சலாதாரங்களின் வகுப்பின் ஜாப்தாவைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

லட்.—இந்தக் கணக்கை எந்த வரிசையாக எழுத வேண்டும்?

ராம.—கவர்மெண்டுக்கு ஒரு பிரிவும் இனுங்களுக்கு ஒரு பிரிவாகவும் எழுதி ஒவ்வொரு பிரிவிலும் பாய்ச்சலாதார வாரியாகப் பட்டா வரிசையாக தீர்வைஜாஸ்தி, பசலிஜாஸ்தி, புறம்போக்கு, சிவாய் ஜமா முதலிய பாபத்து வரிசையாய் எழுத வேண்டும்.

லட்.—பாய்ச்சலாதாரங்களின் பெயரை எந்தக் கலத்தில் தாக்கல் செய்ய வேண்டும்?

ராம.—பாய்ச்ச லாதாரங்களின் பெயரையும் வகுப்பையும் பாரத்துக்குக் கீழே மத்தியில் குறுக்கே எழுதிக் கொள்ள வேண்டும்.

லட்.— கர்ணம் சகஜத் தண்ணீர் தீர்வை கணக்கிடும் விதம் எப்படி?

ராம—.மான்யூல்படிஅனுஷ்டான உத்திரவுகளையும் ஜில்லாக்கலெக்டரால் வில்லேஜ்சிட்டில் பிரசுரமாகும் உத்திரவுகளையும்அனுசரித்தும் நீர் பாய்ந்த விஸ்தீரணத்துக்கு சகஜத்தண்ணீர்த்தீர்வை கணக்கிட வேண்டும் அப்படிக் கணக்கிடுவதில் ஒவ்வொரு புலனுக்கும் பைசா மட்டமாகவும் ஒவ்வொரு பேர்வழிக்கும் அணுமட்டமாகவும் தாக்கல் செய்ய வேண்டும் இறவைக்கு முக்கால் பங்கு தாக்கல் செய்ய வேண்டும்.

லட்.—எந்தெந்த நீர்த்தீர்வைகள் இந்த கணக்குக்கு வரும்?

ராம.—நஞ்சையில் 2-ம்போகம்சாகுபடி நஞ்சையில்ஆறுமாதம் நீர்செல்லக் கூடிய பயிர்களின் சாகுபடி, புஞ்சை, சிவாய்ஜமா, புறம்புகல், முதலியவைகளில் சர்க்கார் தண்ணீர் பாய்ச்சிய சாகுபடி முதலியவைகளின் நீர்த்தீர்வை இந்தக் கணக்குக்கு வர வேண்டும்.

லட்.—அப்பேர்ப் பட்ட கேசுகள் 10–செண்டுக்கு உள்பட்டபோதிலும் இந்தக்கணக்குக்கு வரத் தான் வேண்டுமோ?

ராம.—10.செண்டுக்கு உன்பட்ட கேசுகளுககுத் தண்ணீர்த் தீர்வை விதிப்பது ஜமாபந்தி ஆபீசர்அபிப்பிராயத்தைப் பொருத்திருக்கிறபடியால் அவைகளை ஸ்டேட்மெண்டின் அடியில் தனியாகப் பதிய வேண்டும்.

லட்.—தெண்டத்தண்ணீர் தீர்வை என்றால் என்ன?

ராம.—சர்க்கார் தண்ணீரை புஞ்சை ஸ்தலங்களுக்கு பாய்ச்சுகிறதற்கு எற்படுத்தப் பட்ட அபராதத் தீர்வைக்குத்தெண்டத்தீர்வைஎன்று பெயர்.

லட்.—புஞ்சை நிலங்களுக்குத் தண்ணீர்பாய்ச்சினால் கட்டாயம்தெண்டத் தீர்வை ஏற்படுமோ?

ராம.—புஞ்சை நிலத்துக்குச் சர்க்கார் தண்ணீர் கொண்டுபோவதினால் சர்க்காருக்காவது நஞ்சை பட்டாதாருக்காவது நஷ்டம் ஏற்படும் பக்ஷத்தில் தெண்டத் தீர்வை விதிக்கலாம். உத்திர வன்னியில் பாய்ச்சினாலும் தெண்டம் எற்படும்.

லட்.—இறவை வஜா ஏற்பட்ட இனங்களுக்கு நேராகத் தண்ணீர் பாய்ச்சிக் கொண்டால் என்ன செய்ய வேண்டும்?

ராம.—5-நிர் ஸ்டேட்மெண்டு 2-வது பிரிவில் வஜா இனத்திலிருந்து கழித்து இந்தக் கணக்கில் காட்டி பாய்ச்சலுக்கு வந்த விவரத்தை

15-வது கலத்தில் தெளிவாய்க் குறித்து பூருத் தீர்வைக்கும் இறவை வஜாப் போக பாக்கி யிருக்கும் தீர்வைக்குமுள்ள வித்தியாசத்தை 7, 8, அல்லது 12, 13, கலங்களில் காட்ட வேண்டியது.

லட்.—இறவை வஜா இனங்களைப் பற்றி கிராம உத்தியோகஸ்தர்கள் முக்கியமாய்க் காண வேண்டிய அம்சங்கள் எது?

ராம.—இறவை வஜா இனங்கள் பாய்ச்சலுக்கு வராதிருந்தால் பாய்ச்சலுக்கு வரவில்லை யென்றும் எதாவது ஒரு ஸ்தலம் பாய்ச்சலுக்கு வந்திருந்தால் இதில்கண்டதுபோக மற்றவைகள் வரவில்லையென்றும் சர்டிபிக்கேட் செய்து கையெழுத்துச் செய்ய வேண்டும்.

லட்.— தண்ணீர்த் தீர்வைக்காக எற்படும் வஜாக்களை இந்தக் கணக்கில் காட்ட வேண்டுமா?

ராம.—தண்ணீர்த் தீர்வைக்கும் சேர்த்து செஸ் விதிக்க வேண்டியிருப்பதால் இதில் காட்ட வேண்டியதில்லை.

லட்.—மூன்றும் போகம் சாகுபடிகளை எந்தக் கலத்தில் பதிய வேண்டும்?

ராம-—மூன்றும் போகம் அபூர்வமானதால் தனிக்க கலம் யேற்படவில்லை அதைக் கடாசியில் பதியலாம் ஆனல் திட்டஇருபோகநிலங்களில் சாகுபடியாகும் மூன்றும் போகத்தை மற்றவைகளோடு சேர்க்காமல் பிரத்தியேகமாய் எழுத வேண்டும்.

லட்.—ஜமாபந்திக்குப் பிறகு எற்படும் தண்ணீர்த் தீர்வையை என்ன செய்ய வேண்டும்?

ராம-—அவைகளுக்கு இவ்விதமே கணக்குத் தயாரித்து பசலி ஆகையருக்குள் (சப்ளிமெண்டாக) அனுப்ப வேண்டும்.

(6-(ஏ) உள்ளடக்கம்)

லட்.—6- ஏ, உள்ளடக்கம் என்ருல் என்ன?

ராம.—ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஒவ்வொரு பாய்ச்சலாதாரத்திலும் எற்பட்ட தண்ணீர்த் தீர்வையை நாட்டி அவைகளை மொத்தங் கூட்டி பட்டாவாரி காட்டும் கணக்கு.

லட்-—இதை எதற்காகத் தயார் செய்ய வேண்டும்?

ராம.—10-நிர் ஸ்டேட்மெண்டு 4-வது ஐட்டம் பதிவதற்காக எழுத வேண்டும்.

லட்.—ஒரே பாய்ச்சலாதாரமட்டு மிருந்தாலும் இந்தக் கணக்கைத் தயார் செய்ய வேண்டுமோ?

ராம.—ஒரே பாய்ச்சலாதாரத்துக்கு வேண்டியதில்லை.

(7-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்.—7-நிர் ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராம.—சில்லரை பாபத்து ரிவினியூவைக் காட்டுகிற ரிஜிஸ்டர்.

லட், இதை எப்போது தயார் செய்ய வேண்டும்

ராம, ஜமாபந்திக்கு முன்னிட்டு ஏற்படுகிற பாபத்தைக் குறித்து முன்னாலும், ஜமாபந்திக்கு பின்னிட்டு வருவதற்கு பின்னாலும் எழுத வேண்டும்

லட். இதில்வரும் எல்லாக் கேசுகளுக்கும் புலவாரி விவரங்கள் பூரிக்க வேண்டுமோ

ராம, இனவாரியாக புலவாரி விவரங்களுடன் பூரிக்க வேண்டும் ஆனால் புலவாரி விவரங்கள் இதரகணக்கில் எழுதப்பட்டிருந்தால் அவைகளுக்கு இதில் புலவாரி விவரம் எழுத வேண்டியதில்லை

லட், இப்போது தாங்கள் சொல்லியது எனக்கு நன்றாய் புலப்படவில்லை அண்ணா இதற்கு உ தா ர ண ம் ஒன்று காட்ட வேண்டும்

ராம, இதில்வரும் இனம் குயிட்ரெண்டு தொகைக்கு (பி)ரிஜிஸ்டரில் புலவாரி விவர மிருபபதால் விவரம் எழுதாமல் குயிட்ரெண்டு மொத்தத்தை மட்டும் கண்டால் போதுமானது.

லட்.—இதன் 9-வது கலத்தில் எந்தெந்த தொகையை பதிய வேண்டும்?

ராம.—புகலினம் நிலங்களுக்கும் பட்டாவின்றி கைப்பற்றிய நிலங்களுக்கும் ஏற்பட்ட தீர்வைஜாஸ்தி, பசலிஜாஸ்தி, தண்ணீர்த்தீர்வை தெண்டம் முதலியவைகளைப் பதிய வேண்டும்.

லட்.—இதில் வரும் பாபத்துக்களைப் பதியும் விதம் எப்படி?

ராம.—இதில் வரும் ஒவ்வொரு பாபத்துக்களையும் வரிசைக் கிரமமாய் எழுதி ஒவ்வொன்றுக்கும் மொத்தம் போட்டு கடாசியில் ஒரு கோஷ்வாரு போட வேணடும் அந்தக் கோஷ்வாருவானது லாண்டு ரெவினியூ பாரஸ்டு ரெவினியூ என்றுதனியாகப் பிரித்து மொத்தம் போட வேண்டியது.

லட்.—சகல சில்லரை ரிவினியூவும் இதில் அடங்கியிருப்பதால் கோஷ்வாருபோடும் விவரத்தை விவரமாகச்சொல்ல வேணடும் அண்ணை

ராம.—சொல்லுகிறேன்கேள் (1) புகலினும் குயிட்ரெண்டு (2) புகலினும் நீர்த்தீர்வை(3)அனுமதியின்றிஜலம் பாய்ச்சினஅபராதம் (4) உத்திரவின்றி கைப்பற்றின தருசுநிலம் (5) புறம்போக்கு கைப்பற்றியது (6) மரப்பட்டா ரிவினியூ (7) இதர பாபத்து என்று ஏழுவகையாய்க்காட்டி ஒவ்வொரு பாபத்துக்கும் ஏற்பட்ட விஸ்தீரணம் தீர்வையை நாட்டி அவைகளை மொத்தம் கூட்டி அதற்குக் கீழே (8) வது ஐட்டத்தில் பாரஸ்டு ரிவினியூவைப் பதிய வேணடும் (4 - 5) ஐட்டங்களில் சாகுபடியையும் இதர கைப்பற்றையும் பிரித்துக் காட்டியும் (5) வது ஐட்டத்தில் நிலத்தீர்வை, நீர்த்தீர்வை, அபராதத்தீர்வை, என்று பிரித்தும் தாக்கல் செய்ய வேண்டும்.

(8-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்:— 8-நிர் என்பது என்ன கணக்கு?

ராம.—இரிகேசன் ரிவினியூ கணக்கு அல்லது பாசன வாரி.

லட்.—இந்தக் கணக்கில் எந்தெந்த விவரங்களைத் தெரிந்து கொள்ளலாம்?

ராம.—நஞ்சைத் தீர்வையில் பாய்ச்சலுக்குள்ள நீர்த்தீர்வை புதுப்பாசன விருத்தி, ரிப்பேரின்ஜாஸ்தி, முதலிய கண்மாயைப் பற்றிய லாப நஷ்டங் காட்டுவதைத் தெரிந்துகொள்ளலாம்.

லட்.— இந்தக் கணக்கில் ஏற்பட்ட நஞ்சை மானிபங்களின், கட்டுத்துமுலுக்கும், எரிமேரைக்கும் ஏற்பட்ட பேதமென்ன?

ராம.— பாய்ச்சலாதாரங்களை, நல்லஸ்திதியில் காப்பாற்று வதற்காக கோதாவரி, கிருஷ்ணு ஜில்லாக்களில் இனும்தாரிடமிருந்து வசூல் செய்யப்படும் ஒருவரிக்கு நஞ்சைமானிபங்களின் கட்டுத்துமுலு என்றும், பாய்ச்சலாதாரங்களைப் பழுது பார்க்க வேணடி சில இனும்தார்களிடமிருந்து வசூல் செய்யப்படும் வரிக்கு எரிமேரை என்றும் பெயர்.

லட்.— நஞ்சை நிலங்களில்ஜலம் பாய்ந்த பாகத்திலிருந்து வருஷவாரியாக, கொடுக்கும் வஜாக்கள் ஏதேனும் உண்டா?

ராம.— ஆம், காயம், அங்காமி, காலஸ்திதி, என மூன்று வித வஜாக்கள் உண்டு.

லட்.— காயம் வஜா என்றால் என்ன?

ராம.— காயம் வஜாக்கள் 5–விதமுண்டு.—அதாவது

(1) கிருஷ்ணா, கோதாவரி. டெல்டாக் ஜெமீன் எஸ்டேட்டு களில் தண்ணீர்த் தீர்வை வசூல் செய்வதற்காக ஜமீன்தார் களுக்கு 100-க்கு 10–வீதம் தள்ளிக் கொடுக்கும் தொகை.

(2) கிருஷ்ணாஜில்லா குடிவாடாதாலூகா கோலேர்பாகத்தில் பா துஇனாம்தாருக்கு தள்ளிக்கொடுக்கிறதொகையில் ஜலத்து க்குள்ள பாகம் காயம்வஜா. முதல் போகத் தீர்வையில் (6-4-0) வீதமும் இரண்டாம்போகத்தீர்வையில் (12-8-0) வீதமும் தள்ளிக் கொடுக்கப் படும்.

(3) நஞ்சை மொத்தத் தீர்வையில் கழிக்கப் பட்டுக் கொடுக்கிற மேரை அல்லது.கிராம உத்தியோகஸ்தர்கள் சம்பளத்தில் பாய்ச்சலுக் குள்ளபாகம்.

(4) மொத்தம் நஞ்சைத் தீர்வையுடன் சேர்த்து அதிலிருந்து கழிக்கப் பட்டிருக்கிற ரோட்டு செஸ்ஸில் பாய்ச்சலுக் குள்ள பாகம்.

(5) சேட்டெட்ஜில்லாக்களில் தசபந்ததார்களுக்குக் கொடுக்கும் வஜா.

லட்.— அங்காமிவஜா என்றால் என்ன?

ராம,— நஞ்சையில் ஏரிநீர் பாய்ச்சுவதற்கு இடமின்றிக்குடிகள் சொந்தச் சிலவில் இறவை இறைத்து நீர்ப்பாய்ச்சும் நிலங்களுக்கு ஏற்படும் வஜாவுக்குக் காயம்வஜா என்றுபெயர்

லட்,— இந்த வஜாவுககு ஏற்பட்ட தீர்வை எவ்வளவு?

ராம,— ஏககர் 1–ககு 1-ரூபாயும், சில செட்டில்மெண்டில் மொத்தம் தீர் வையில் நாலிலொரு பங்கும் வஜாக்கொடுத்திருக்கிறார்கள்.

லட்.—கால ஸ்திதி வஜா என்றால் என்ன?

ராம.—காலா காலத்தில் மழை பெய்யாததாலும் அதிக மழை பெய்த கெடுதியாலும் விளைவில்லாமல் போனகாலத்தில் ஏற்படும் வஜா வுக்கு கால ஸ்திதி வஜாஎன்று பெயர்.

லட்,— முக்கியமாய் இந்தக் கணக்கின் உபயோக மென்ன?

ராம,— நஞ்சை நிலத்தில் நீர்க்குள்ள தீர்வையையும் நிலத்துக்குள்ள தீர் வையையும் எடுத்துக் காட்ட ஏற்பட்டது.

லட்,— இந்தக் கணக்கை எப்போது தயார் செய்ய வேண்டும்?

ராம,— ஒவ்வொரு வருஷம் மே-மாதம், 20-தேதிக்குள் கர்ணம், தாசில் தாருக்கு அனுப்ப வேண்டும் அவர் ஜுன்மீ த்துக்குள் போர்டாபீசுக்கு அனுப்புவார்கள்.

லட்,— எல்லாப்பாய்ச்சலாதாரங்களுக்கும் புலவாரி விவரம் வேணடுமோ

ராம,— 3-வது வகுப்பு பாய்ச்சலாதாரங் களுக்கு புலவாரி விவரம் வேண்டியதில்லை.

லட்,— போர்டாபீசுக்கு அனுப்புவதற்கு முன்,இது விஷயமாய் மேலான ஆபீசர்கள் கவனிக்க வேண்டிய விஷய மென்ன?

ராம,— மராமத்து இலாகா விசாரணையிலுள்ள பாய்ச்சலாதாரங்களுக்கு ஒரு கணக்கும் 4-வது வகுப்பு பாய்ச்சலாதாரங்களைச் சேர்ந்த எல்லா வகுப்பு பாசனங்களுக்கும் ஒரு கணக்கும் வாங்கி அனுப்ப வேண்டும். இதில் தாக்கலான தொகைகள் 2, 5, 6, 7, 12-நிர். கணக்குகளுக்குச் சரியாயிருக்கிறதாவென்று ஒத்திட்டுப் பார்த்து தாசில்தாராவது ஹெட்அக்கவுண்டாவது ஒவ்வொரு கணக்கிலும் சர்ட்பிகேட் எழுதி கையெழுத்துச் செய்ய வேண்டியது.

(9-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்,— 9-நிர், ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராம,— லோகல் பண்டுகளையும், ஸ்பெஷல் பண்டுகளையும், காட்டும் ஸ்டேட்மெண்டு(சில்லரைரெவினியூக்களுக்குசெஸ்ஸும்)காட்டும்

லட்,— ஸ்பெஷல் பண்டைச் சேர்ந்த பவுண்டுபெண்டை இந்த ஸ்டேட் மெணடில் காட்டலாமா?

ராம,— பவுண்டுபெண்டை இதில் காட்டக்கூடாது

லட்,— 9-நிர், 5-வது கலத்தில் எந்தத் தணணீர்த் தீர்வையைத் தாக்கல் செய்கிறது?

ராம,— சகஜத் தணணீர்த் தீர்வையைத் தாக்கல் செய்ய வேணடியது.

லட்,— இந்தக் கணக்கில் செஸ் ஏற்படுத்தும் பொழுது வஜாத்தொகையைக்கழித்து செஸ் ஏற்படுத்த வேணடுமா, வஜாத் தொகைக்கும் சேர்த்து செஸ் ஏற்படுத்த வேணடுமா?

ராம.— மொத்தக் கைப்பற்று தீர்வையின் பேரிலும், தண்ணீர்த் தீர்வையின் பேரிலும் சேர்த்து செஸ் ஏற்படுத்த வேண்டுமேதவிர, வஜாத்தொகையை கழித்து செஸ் ஏற்படுத்தக் கூடாது.

லட்.— க்ரௌண் ரெண்டு ஏற்பட்ட நிலங்களுக்கு செஸ்விதிக்கும் விதம் எப்படி?

ராம— க்ரௌண்ட்ரெண்டு, தொகைக்கு செஸ் விதிக்க வேண்டும்.

லட் — எந்தெந்த தீர்வைகளுக்கு செஸ் விதிப்பது கிடையாது?

ராம.— கிராமங்களில் பொதுக்காரிய நிமித்தம் ஒதுக்கி வைக்கப்பட்ட, போரி லோகல் போர்டுகளால், பள்ளிக்கூடம், வைத்தியசாலை, முதலிய பொது உபயோகத்திற்காக, ஏற்படுத்தபட்டிருக்கிற நிலங்கள் லோகல் பண்டு பங்களாக்கள், லோகல் போர்டார் சுவாதீனத்திலிருக்கிற கிருமாநத்தம், தீர்வையின்றி அனுபவிக்கும் நிலத்திலிருக்கும், மரக்குத்தகையால், லோகல் போர்டார் அடையும், வரும்படி பாரஸ்ட் சம்மந்தமான மரம் சர்க்கார் தருசு புறம்போக்கு மரம் இவைகளின் குத்தகைத்தொகை, மரத்தீர்வை, தெண்டத் தண்ணீர்த் தீர்வை முதலியவைகளுக்கு, லாண்டுசெஸ் கிடையாது. ஆனால் மராமத்து இலாகாதார்கள் வசத்திலுள்ள கைப்பற்று நிலங்களுக்கு வசூலாகும் குத்தகைத் தொகைக்கும் நிலத்தீர்வையைக் காட்டிலும மரத்தீர்வை ஜாஸ்தி இருக்கும். மரத் தீர்வைக்கும் செஸ் ஏற்படுத்த வேண்டும்.

லட்.— நிலத்தீர்வையைக் காட்டிலும், ஜாஸ்திஇருக்கும் மரத்தீர்வைக்கு செஸ் ஏற்படுத்த வேண்டுமென்று சொன்னீர்களே அந்தப்பட்டா தாருக்கு வசூலாகும் தீர்வைமரத் தீர்வையா நிலத்தீர்வையா, என்பதையும் வசூல் செய்யாத தீர்வையை எந்தக் கணக்கில் எப்படிக் கழிக்க வேண்டும் என்ற விவரத்தையும் எடுத்துச் சொல்ல வேண்டும் அண்ணா?

ராம.— மரத்தீர்வைதான் வசூலாக வேண்டும், நிலத்தீர்வையை 10-விர், ஸ்டேட்மெண்டு II-வது பிரிவில் 2-வது ஐட்டத்தில் தரகதி இறவை வஜாக்கள் என்பதில் பதிந்து, கழிக்க வேண்டும்.

லட்.— திட்ட இருபோக நிலத்திலும் சம்பவுண்டான இருபோக நிலத்திலும் செய்த இரண்டாம் போகத் தீர்வை வஜாவானால் எந்தத் தொகைக்கு செஸ் வசூல் செய்கிறது?

ராம — இரண்டாம் போகத் தீர்வை வஜா வானாலும், வசூலானாலும் இருபோகத்துக்கு யேற்பட்ட தீர்வையின் பேரில் தான் செஸ் வசூல் செய்ய வேண்டும்.

லட்.— புகலினங் களுக்கு செஸ் விதிக்கும்விதம் எப்படி?

ராம — புதிய செட்டில் மெண்டாரால் யேற்படுத்தபட்ட வகுப்பை அநுசரித்து செஸ் ஏற்படுத்த வேண்டும்.

லட்.— இருபோக இனம் நிலத்தை ஒரு போகமாக செட்டில் மெண்டில் எடுக்கப்பட்டிருந்தால் எந்தத் தீர்வைக்கு செஸ் ஏற்படுத்த வேண்டும்?

ராம.— ஒரும்பாகத் தீர்வையின் பேரில் செஸ் யேற்படுத்த வேண்டும், ஆனல் இருபோகம் சாகுபடியானல் $1\frac{1}{2}$–தீர்வைக்கு செஸ் யேற்படுத்த வேணும்.

லட்.— ஒரு நஞ்சை இனம் நிலத்தை, செட்டில் மெண்டில் புஞ்சையாக எடுத்து அதில் கண்மாய் தண்ணீரைக் கொண்டு நஞ்சை சாகுபடி செய்திருந்தால் எந்த தீர்வைக்கு செஸ் யேற்படுத்த வேண்டும்?

ராம.— புஞ்சைத் தீர்வைக்கும், தண்ணீர்த் தீர்வைக்கும் சேர்த்து செஸ் ஏற்படுத்த வேண்டும்.

லட் — இனம் புஞ்சை நிலமானது, நஞ்சையாக எடுக்கப்பட்டு சொந்தக் கிணத்துத் தண்ணீரைக் கொண்டு புஞ்சைப்பயிர் சாகுபடி செய்திருந்தால், எந்தத் தீர்வையின் பேரில் செஸ் ஏற்படுத்த வேண்டும்?

ராம.— நஞ்சைத் தீர்வையின் பேரில் செஸ் ஏற்படுத்த வேண்டும்.

(10-நிர். ஸ்டேட்மெண்டு.)

லட்.— 10-நிர். ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராம.— ஒவ்வொரு பட்டாதாருக்கு ஏற்பட்ட கைப்பற்றுநிலவிவரங்களையும் அவைகளில் கூடுகிற ரிவினியூ வகைகளையும் பட்டா மொத்தத்தையும் இரண்டு பிரிவாக எடுத்துக் காட்டுகிற வருஷவாரி நபர்கதி சிட்டா.

லட்.— 10–ம் நம்பர் I–வது பிரிவில் எந்த வகைகள் தெரிந்து கொள்ளலாம்.

ராம — ஒருபட்டாதாருக்கு யேற்பட்ட கைப்பற்று நிலங்களின் விவரங் களையும் அவைகளின் மாறுதல் களையும் ஒவ்வொரு வருஷத்திய நிலைதத கைப்பற்று மொத்தத்தையும் தெரிந்து கொள்ளலாம்.

லட்.— *II*–வது பிரிவில் எந்தெந்த விவரங்கள் தெரிந்து கொள்ளலாம்.

ராம.— முதலில் 1வது பிரிவிலுள்ள கைப்பற்று மொத்த விவரத்தையும் அதன்பின் 5–நிர் ஸ்டேட்மெண் டிலுள்ள காயம் வஜா, 6–நிர் ஸ்டேட்மெண் டிலுள்ள பட்டாநிலத்தண்ணீர்த்தீர்வை, 5–நிர் ஸ்டேட்மெண் டிலுள்ள இதரவஜா, 7-நிர் ஸ்டேட்மெண் டிலுள்ள சில்லரை ரிவினியூ 5-வது ஐட்டத்தில் கண்ட தொகைக்கு யேற்படுத்தி யிருக்கிற லாண்டு செஸ், 9–நிர்.படி லாண்டு செஸ், லோகல்பண்டு, ஸ்பெஷல் பண்டு, முதலியவைகளையும் சகலமும் கூடிய மொத்தத்தையும்,கடாசியில் இருக்கும் 15–வது ஐட்டத்தில் பாரஸ்ட்டு ரிவினியூவையும் தெரிந்து கொள்ளலாம்.

லட்.— 10–நம்பர் Iவது பிரிவு, முதல்முதல் எந்தக் கணக்கிலிருந்து உற்பத்தி யானது,

ராம.— முதல் முதல செட்டில மெண்டாரால் கொடுக்கப் பட்ட சிட்டா விலிருந்து உற்பத்தி யானது.

லட்.— இதில் புலங்களை எந்த வரிசையாக எழுத வேண்டியது.

ராம.— சர்வே நம்பர் வரிசையாய் எழுத வேண்டியது.

ராம — இதன் முன் பக்கத்தில் இண்டெக்ஸ் போடவேணுமென்று சொல்லு கிறார்களே அதன் அர்த்த மென்ன

ராம.— ஒவ்வொரு பட்டாவுக்குச் சம்மந்தமான விவரங்கள் எந்தெந்த பக்கங்களிலிருக்கிற தென்ற விவரத்தைக்குறித்துக் கொள்ளும் அட்டவணைக்கு இண்டெக்ஸ் என்று சொல்லுவார்கள்.

லட்.— புதிதாக பட்டாஏற்பட்டால் என்ன செய்ய வேண்டும்

ராம.— ஏற்பட்டா நம்பர்களுக்குப்பின் துயர்ச்சி ந ம் பர் கொடுத்து புதுப்பட்டாநம்பர் கொடுக்க வேண்டும்.

லட் — காலியாக இருக்கும் பட்டாநம்பரில் பதிவு செய்யக் கூடாதோ,

ராம.— வேறே புஸ்தகம் எழுதும் வரையில் காலியாக இருக்கும் பட்டாநம்பரில் ஒன்றும் பதிவு செய்யாமல் காலியாகவே விட்டு வைத்திருக்க வேண்டும்.

லட் — ஒருபட்டாவுக் குரிய மாறுதல்களைப் பதிய இடம்போதாமலிருந்தால் என்ன செய்ய வேண்டும்,

ராம.— இதன் கடாசிப் பக்கத்தில் துயர்ச்சியாக பக்கநம்பர் கொடுத்து அந்தப் பக்கத்தின் விவரத்தையும் முன் பக்கம் இண்டெக்ஸில் பட்டா நம்பருக்கு நேரேகுறிக்க வேண்டும்

லட்.— இதில் யேற்படும் மாறுதல்களை எவ்விதம் பதிவு செய்ய வேண்டும்.

ராம — பட்டாதார் பெயர்களில் யேற்படும் மாறுதல்களை உத்திரவின்நிம்பர்தேதி உள்பட கணக்கின் தலைப்பிலே குறிக்க வேண்டியது மற்றமாறுதலின் உத்திரவை நம்பர் தேதி உள்பட ஷராக் கலத்தில் குறிக்க வேண்டியது.

லட்.— II—வது பிரிவுக்கும் இதே மாதிரி இண்டெக்ஸ் போட வேண்டுமோ,

ராம — இந்தப் பிரிவை வருஷம் தோறும் எழுத வேண்டியது ஆனால் இதற்கும் முன்பக்கத்தில் ஒருஇண்டெக்ஸ் போட்டுக் காட்ட வேண்டியது.

லட்.— இந்தப் பிரிவின் 4—வது ஐட்டத் தண்ணீர்த் தீர்வையில் இனும்தண்ணீர்த் தீர்வையும் சேர்த்துப் பதியவேண்டுமோ?

ராம — இனும் தண்ணீர்த்தீர்வையை 4—வது ஐட்டத்தில் சேர்க்கப்படாது 7—நம்பர் ஸ்டேட்மெண்டில் பதிந்து 8—வது ஐட்டத்தில் காட்ட வேண்டும்.

10-நிர். IIவது பிரிவுக்கு உள்ளடக்கம் (போஸ்ட்டிங்)

லட்.— 10—நிம்பர், II வது பிரிவுக்கு ஒரு உள்ளடக்கம் உண்டோ.

ராம.— ஆம், 10-நம்பர் 2-பிரிவின் உள்ளடக்கத்தை தான் போஸ்டிங் என்று சொல்வார்கள்.

லட்.— இந்த போஸ்டிங் ஸ்டேட்மெண்டின் பிரயோஜனமென்ன.

ராம.— ஒவ்வொரு பட்டாவுக்கும் கிராம மொத்தத்திற்கும் யேற்படுத்தப்பட்ட லாண்டு செஸ்ஸும் மொத்தமும் சரியாயிருக்கிறதா என்று பார்ப்பதற்கும், 12-நம்பர் ஸ்டேட்மெண்டில் 10-நிர்படி லாண்டுசெஸ் என்ற 33-வது கலத்தைப்பதிவதற்கும், யேற்பட்ட ஸ்டேட்மெண்டு.

☞ குறிப்பு.— இதின் 2-வது கலத்தில் கண்ட தொகையை 12-நம்பர் ஸ்டேட்மெண்டு 41-வது கலத்திலும் 3-வது கலத்தில்கண்ட தொகை 33-வது கலத்திலும் தாக்கலாயிருக்கும்

லட்.— இதன் 3-வது கலத்தை எந்தக் கணக்கிலிருந்து பதிவு செய்ய வேண்டும்.

ராம.— 10-நிர் ஸ்டேட்மெண்டு II-வது பிரிவின் 10-வது ஐட்டத்தில் கண்ட தொகையை 3-வது கலத்திலும் 14-வது ஐட்டத்தில் கண்ட தொகையை இதன் 2-வது கலத்திலும் பதிய வேண்டும்.

லட்.— 10-நிர் II-வது பிரிவின் 10-வது ஐட்டத்தில் எந்தத் தொகையை அனுசரித்து லாண்டுசெஸ் பதிய வேண்டும்.

ராம.— ஒரு பட்டாதாருக்கு யேற்பட்ட வஜாக்களில் காயம் வஜாவைக் கழித்துக் கொண்டு பாக்கி நின்ற தொகையுடன் பட்டா நிலத்தண்ணீர் தீர்வை சேர்ந்த மொத்தத்திற்கு லாண்டு செஸ் யேற்படுத்த வேண்டும இதை உத்தேசித்துத் தான் காயம் வஜாக்களை முதலில் காட்டி அதன பின்னால் இதர வஜாக்களைத் துண்டாகக் காட்டப் பட்டிருக்கிறது.

☞ குறிப்பு— இதர வஜாத் தொகைக்கு லாண்டுரிவினியூ வஜாவானாலும் செஸ்உண்டு.

லட்.— பாஸ்ட்டு ரிவினியூவை எந்த ஐட்டத்தில் பதிய வேண்டும்.

ராம.— பிரத்தியேகமாய் 15 வது ஐட்டத்தில் பதிய வேண்டும்.

லட்.— இந்தக் கணக்குக்கும், குடிகளுக்கும் என்ன சம்மந்தம்?

ராம.— படிக்கத் தெரிந்தகுடிகள் இதைப் பார்க்க விரும்பினால் தாராளமாய்ப் பார்வையிடும்படி செய்து கையெழுத்து வாங்கலாம்.

லட் — 10-நிர் II-வது பிரிவை வருஷந்தோறும் எழுத வேண்டுமென்று சொன்னீர்களே அப்படியானால் 1-வது பிரிவை வருஷந்தோறும் எழுத வேண்டாமா.

ராம.— 1-வது பிரிவை வருஷந்தோறும் எழுதவேண்டாம் மாறுதல் அதிகமாயிருக்கிறதென்ற காரணத்தால் கர்ணம் அபிப்பிராயப் பட்டபோதும் தாசில்தார் ஜமாபந்தி ஆபீசர் உத்திரவு செய்தபோதும் வேறே எழுதிக் கொண்டு இந்தக்கணக்கைத் தாலுகாவில் ஒப்பிவித்து விட வேண்டியது.

லட்.—இங்கப்புஸ்தகம் வேறே தயாரிக்கும் போது முந்தினபுஸ்தகத்தில் இருக்கும் காலிப்பட்டாக்களை என்ன செய்கிறது.

ராம.—இதை புதிதாக எழுதும் காலத்தில் புதுப்பட்டாக்கள் வந்தால் காலியாக வைத்திருக்கிற நம்பர்களில் தாக்கல் செய்யலாம் இல்லா விட்டால் காலியாகவே வைத்திருக்க வேண்டும்.

(10-ஏ. உள்ளடக்கம்.)

லட். 10-ஏ. உள்ளடக்கம் எதைப் பற்றியது,

ராம. இறந்துபோன பட்டாதார்களின் பேர்களையும் பதில் தாக்கல் செய்யும் வார்சுகளையும் பற்றியது.

லட். இந்த உள்ளடக்கத்தை எப்போது யாருக்கு அனுப்ப வேணடும்.

ராம, ஒவ்வொருமாதம் நேரிடுகிற எல்லாக் கேசுகளையும் இந்த நமூனாவில் பூரித்து ரிவினியூ இன்ஸ்பெக்டர் மூலமாகத் தாசில் தாருக்கு அனுப்ப வேணடும்.

லட். ரிவினியூ இன்ஸ்பெக்டர் பைசல் செய்யலாமா?

ராம, சாதாரண கேசுகளை ரிவின்யூ இன்ஸ்பெக்டரும் விசாரணை கேசுகளை தாசில்தாரும் விசாரித்துப் பைசல் செய்யலாம்.

லட். இது விஷயமாய்ச் கர்ணம் செய்ய வேண்டிய வேலைஎன்ன.

ராம, பட்டாதார் இறந்தவுடன் பவுத்திப் பட்டாதார் வார்சுகளைப் பற்றியும் அவன் சகோதரர் களுடன் பாகம் பிரித்துக்கொண்ட விவரமும் பாகம் பிரியாவிட்டால் குடும்பத் தலைவன் பேரையும் வார்சுகள் மைனராக இருந்தால் கார்டியன் பேரையும் விசாரித்து 4-வது கலத்தில் பூரித்து அனுப்ப வேணடும்.

லட், பட்டாதார் இறந்து போனகேசு களைமட்டும் தான் இதில் பதிவு செய்ய வேணடுமோ.

ராம, பட்டாதார் இறந்துபோன கேசுகளையும் (7)—வருஷம் ஊரில் ஆஜரில்லாமலும் இருக்குமிடம் தெரியமலும் இருக்கின்ற பட்டாதார்களுக்குப் பதில் பேர்தாக்கல் செய்ய வேணடிய கேசுகளையும் 12—வருஷத்துக்கு மேல் பட்ட காலம் நிலத்தை அனுபோகம் செய்து தீர்வை செலுத்தி வருகிற ஒரு ஆதரவுமில்லாத கேஸுகளையும் இந்த நமூனுவில் தாக்கல் செய்து அனுப்ப வேண்டும்.

(11-நிர். பட்டாநமூனு.)

லட், 11—நிர் ஸ்டேட்மெண்டின் உபயோகமென்ன.

ராம, குடிகள் தங்கள் பட்டாவுக்குச்சேர்ந்த ரிவினியூக்களைத்தெரிந்து கொள்வதற்கு குடிகளுக்கு கொடுக்கும் பட்டாநமூனு.

லட், இதை எப்போது தயார் செய்கிறது.

ராம, 10-நிர் ஸ்டேட்மெண்டு (I-II) பிரிவுகள் தயாரானவுடன் தயார் செய்ய வேண்டியது (குடிகள் கொடுக்கும் பழயபட்டாக்களை வாங்கி அதில் விவரங்களைப் பதிவு செய்தும் கொடுப்பதுண்டு.)

11—ஏ.உள்ளடக்கம்.)

லட், 11-நிர் ஏ. உள்ளடக்கத்தில் என்ன தெரிந்து கொள்ளாம்?

ராம, இது பட்டா இல்லாத குடிகளுக்கு கொடுக்கும் மிஸ்லேனியஸ் பட்டா.

லட், பட்டா இல்லாதவர்களுக்கு என்ன விவரம் பதிந்து கொடுக்கிறது.

ராம, சர்க்காருக்குப் பாத்தியப்பட்ட நிலங்களைக் கைப்பற்றி பட்டாவாகாத விஷயத்தில் கூடும ரிவின்யூககளாகிய 7நிர் 9-நிர் ஸ்டேட்டுமெண்டுகளிலுள்ள தொகையை பதிந்து கொடுக்க வேண்டும்.

12-நிர். ஸ்டேட்மெண்டு.

லட், 12-நிர். ஸ்டேட்மெண்டு என்றால் என்ன.

ராம, கிராம மொத்த பைசலாதி கோஷ்வரு எனகிற ஜமாபந்தி கோஷ்வாரு.

லட், இந்த ஸ்டேட் மெண்டில் எந்தெந்த விவரங்கள் தெரிந்து கொள்ளலாம.

ராம, கிராம மொத்தக் கைப்பற்றுத்தீர்வை, வஜாத்தொகை, தண்ணீர்த்தீர்வை, சில்லரைரிவினியூ, பட்டாநிலங்களின செஸ்கள், சில்லரைவகையின செஸ்கள், லோக்கல்பண்டு, ஸ்பெஷல்பண்டு, முதலிய விபரங்களைத் தனித்தனியாகவும் அவைகள் சேர்ந்த கிராம மொத்தபேரீஜையும் தெரிந்து கொள்ளலாம.

லட், இந்தக்கணக்கில் பாரஸ்ட்டு ரிவினியூவைக் காட்ட வேண்டியதில்லையோ.

ராம, பாரஸ்ட்டு ரிவினியூக் கடாசிக்கலமாகிய 42-ம் கலத்தில் தனியாக காட்டவேண்டும்.

லட், கிராம மொத்தம் பேரீஜை எந்தக்கலத்தில் தெரிந்து கொள்ளலாம்,

ராம, 41-வது கலத்தில் கிராம மொத்தம் பேரீஜைத் தெரிந்து கொள்ளலாம்.

லட், பேரீஜ்வஜா இருந்தால் இதில் காட்ட வேண்டுமோ.

ராம, ஆம் 39-41வது கலங்களின் நேர் பதிந்திருக்கும் தொகைகளின் கீழ்ழ காட்ட வேண்டும்.

லட், இதைத்தவிர வேறேதேனும் எழுத வேண்டுமா.

ராம, சென்றபசலி 12-நம்பர் ஸ்டேட்டு மெண்டிலுள்ள விவரங்களைப் பூரித்து இந்தப்பசலிக்கும் முந்தினபசலிக்கும் உள்ள வித்தியாசத்தைக் கீழேகுறித்து குறைந்த தொகைக்கு(–) கழித்தல் அடையாளமும ஜாஸ்தி தொகை களுக்கு கூட்டல் அடையாளமும் போட்டுக் காட்ட வேண்டும்.

லட், இதில்கண்ட பாயத்துக்களை எந்தெந்த கணக்குகளிலிருந்து பதிய வேண்டும்.

ராம, கைப்பற்று விவரத்தை 3-கிர் ஏ உள்ளடக்கத்தைக் கொண்டும், கருசுவஜா இதாவஜாக்களை 5-கிர் 2-வது பிரிவைக் கொண்டும் சாகுபடிகளை 2-கிர் ஸ்டேட் மெண்டைக கொண்டும் தண்ணீர்த் தீர்வைகளை 6-கிர் அல்லது 6-கிர் ஏ உள்ளடக்கத்தைக்கொண்டும், மிஸ்லேனியஸ் ரிவினியூக்களை 7-கிர ஸ்டேட் மெண்டைக்கொண்டும லோகல்பண்டு ஸ்பெஷல்பண்டுகளையும் 9-கிர்படி லாண்டுசெஸையும் 9-கிர் ஸ்டேட்மெண்டைக், கொண்டும் 10-கிர்படி லாண்டு செஸ்ஸை 10-கிர்2-வது பிரிவின் உள்ளடக்கமாகிய போஸ்டிங் ஸ்டேட் மெண்டைக் கொண்டும் பாரஸ்டு ரிவினியூவை 7-கிர் ஸ்டேட்மெண்டைக்கொண்டும் பதிவு செய்ய வேண்டும்.

லட், கணக்குகளின் விவரம் இன்னதென்று கொஞ்சங்கூடத் தெரியாத எனக்கு என்மனம்போல் Aரிஜிஸ்ட்டர் முதல்12 நம்பர் வரையிலுள்ள கணக்குகளின்சகல விவரங்களையும் என்மனதில்நன்றாய்ப்பதியும்படி எடுத்துரைதத வல்லமையை என்னென்றுரைப்பேன் அண்ணா.

கோபாலன், ராமண்ணா. லட்சமண அண்ணாவுக்கு தாங்கள் (ஏ) ரிஜிஸ்ட்டர்முதல் 12ம் நம்பர்வரையிலுள்ள கணக்குகளின் விவரங்களை சொல்லிவந்தது எனக்கு நன்றாய்தெரியவில்லை அவைகளைப்பாட்டாகச் சொல்லவேண்டும் அண்ணா

ராம, எந்தவித பாட்டாகச் சொல்ல வேண்டும்.

கோபாலன், தங்கள் இஷ்டம்போல் சொல்லுங்கள்.

ராம, (ஏ)ரிஜிஸ்ட்டர்(அதன் உள்ளடக்கம்)(பீ)ரிஜிஸ்ட்டர் மூன்றையும் நோட்டுமெட்டாகவும்அதன்பின் 12-நமபர்ஸ்டேட் மெண்டுவரையில் கும்மிப்பாட்டாகவும் கூறுகிறேன் கேள்.

கோபாலன், அண்ணா தங்கள் உத்திரவின் பிரகாரம் நாங்கள் நால்வரும் கவனத்துடன் கேட்கிறோம் தயவு செய்து தாங்கள் சொல்ல வேண்டும் அண்ணா

லட்சுமணன்,ஜெகநாதன்,சிவப்பிரகாசன், கோபாலன் கேட்டது தான் சரி பாட்டாகச் சொன்னால் மனதிலும் நன்றாய்ப் பதியும் எப்பொழுதும் மறக்காமல் ஞாபகத்திலும் இருக்கும் இதுவேசரி இதுவேசரி கட்டாயம் தங்கள் சிரமத்தை பார்க்காமல் பாட்டாகச் சொல்லவேண்டும் அண்ணா.

ராம, அப்படியே சொல்கிறேன் அமருங்கள் சகோதரர்களே.

உ
கணபதியேதுணை.
சரஸ்வதிஸஹாயம்.
லட்சுமிகடாட்சம்.

இராம லட்சுமண சம்பாஷணை
என்ற

கிராம கணக்கு மானியூல்

சுருக்கம்.

கணபதி துதி.

சங்கரன்புதல்வா கணபதியுன் தாமரைப்பதத்தைப் போற்றிசெய்து
பொங்குங்கணக்கு மான்யூலை புகலவேகிருபை செய்வாயே

சரஸ்வதி துதி.

சதுர்முகன்றேவி சரஸ்வதியுன் தாளடிக்கமலம் போற்றிசெய்து
இதமுள்ளமான்யூலெடுத்துரைக்க எந்தன்நாவில்குடியிருப்பாய் 2

ஏ-ரிஜிஸ்டர்.

சர்வே நம்பர் வரிசையாய் சகல விவரத்தையும் காட்டும்
சாஸ்வத ரிஜிஸ்டர்.

சாசுவதமாம் ஏ-ரிஜிஸ்டர் சகலவிவரம் இதிலுண்டு
நேசமாகச் செட்டில்மெண்ட் நேரிட்டகாலத்தி லுண்டாச்சு 3

தலத்தைநம்பர் வரிசையாக சகலவிவரத் துடனெடுத்து
நிலத்தின்வகுப்பு முதலான நேர்மைமுழுதும் எடுத்துரைக்கும் 4

ஏ-ரிஜிஸ்டர் உள்ளடக்கம்.

கிராமம் மொத்தம் ஆயக்கட்டைக் காட்டும் கோஷ்வாரு.

ஆயக்கட்டைத் தெரிவிக்க அமைந்தது(ஏ)யின் உள்ளடக்கம்
சேயகலங்கள் பனிரண்டு கோரம்பார மதனிலுண்டு 5

புஞ்சைநஞ்சை தனியாயும் பொருந்துந்தரப் பிரிவாயும்
வந்திடுமொத்தந் தனைக்கூட்டி வாகாயிக்கணக் கதில்காட்டி 6

புறம்புகல்மொத்தப்பூரித்தும்புறம்புகல்விவரம்தனைப்பிரித்தும்
எழுதியேஇருக்கும் நீபாராய் இதுவே(ஏ)யின் கோஷ்வாரு 7

பீ-ரிஜிஸ்டர்.

இனும் நிலங்களைப் பற்றிய எல்லா விவரங்களையும் இயம்பும் நிலையான ரிஜிஸ்டர்.

மாணிபவிவரந் தெரிவிக்கும் மகுத்துவமான (பீ)ரிஜிஸ்டர்
கோனெனுமாசர்விதித்திட்டகுயிட்ரெண்டதனைத்தெரிவிக்கும் 8

ஒவ்வொருமாணிபநிலங்களுக்கும் உற்றதீர்வை குயிட்ரெண்டு.
செவ்வையளவு ஜாஸ்திமுதல் சேர்ந்திடுமற்ற வகைமுழுதும் 9

எட்டாங்கலமேமுதலாக இயம்பும்பத்தாங் கலம்வரைக்கும்
திட்டமதாகஉரைத்திடுமே சேர்ந்திடுமொத்தம்பதினொன்றில் 10

கலம்பதினொன்றில் கண்டதுகை காணுமேழாம் நம்பரிலே
நலமாய்ப்பதியவேண்டுமென்றார் நாடியேநீயும் அறிந்திடுவாய் 11

தேவாலயவகைமாணிபங்கள் சிறந்திடுதர்மத்தின்மாணிபங்கள்
தாவிடுசொந்தம் தசபந்தம் சாற்றிடும்ஊழிய வகையனந்தம் 12

ஐந்துவகையாய் இவ்விதமாய் அடுத்தடுத்துக் கோர்வையதாய்
வந்திடுமாணிப வகைமுழுதும் வாகாயெடுத்துக் கூறிடுமே 13

பூராத்தீர்வைதுகைதனக்கும் பொருந்திடுரூயீட்ரெண்டுக்கும்
நேராய்வகுத் தவ்விதப்படி நேருந்துகைக்குத் தக்கபடி 14

ஒவ்வொருமானிபவகைகளுக்கும் உற்றபுலங்கள்முழுவதுக்கும்
அவ்விதவிதப் படிசேரும் ஆனபைசாவரை தான்கூறும் 15

இன்னும்பலவித விவரம்உண்டு இயம்பிடுமுக்ய கணக்கென்று
சொன்னேன்நீயும்அறிவாயே சோதனைநோட்டைதெறிவாயே 16

கும்மி.

சாகுபடி நோட்டென்றும் தவணை நோட்டென்றும்
சொல்லுகிற
சோதனை நோட்டு.

சாகுபடி, அறுவடை, முதலிய ஜமாபந்திக்கு வேண்டிய
சகல தகவல்களையும் தாக்கல் செய்யும் நோட்டு.

சோதனை நோட்டென்று சொல்லுங் கணக்கொன்று
தொடருங் கலங்க ளீரெட் டுண்டு
சாதக மாகவே லட்டருள் படவே
சார்ந்த சர்வே நம்பர் நிலவிவரம் 1

நிலத்தின் விவரம் இரண்டாங் கலத்திலும்
நேரும் விஸ்தீரண மூன்றிலு மாம்
பலித்திடு மாதம் பயிரின்பேர் பாசனம்
பகரும் விஸ்தீரணம் நான் குடனே 2

அறுவடை மாதம் அறுவடை மேனியென்
றுறுவி தங்கள் விவர மாக
ஒருபோகம் இருபோகம் இரண்டுந் தனியாக
உரைத்திடு மேபதி னைந்து வரை 3

பதினாறென்னும் ஷராக் கலம் தன்னிலே
பதியும் விதங்கள் நாலுண் டதிலே
மதியணி யீசனருளா லெடுத் ததை
மார்க்க மதாக வுரைத் திடுவேன் 4

உரைத்திடு வேனொரு ஸ்தலத்தில் சிலபாகம்
உழுது சாகுபடி செய் திருந்தால்
கருத்துட னேயதை அளந்துலிங்ஸ் கணக்கிலே
காட்டிப் பின் சர்க்கார் நிலங்களிலே 5

சர்க்கார் நிலங்களில் சாகுபடி யின்றிச்
சார்ந்திடும் இதர கைப் பற்றையும்
பக்குவமாகக் கைப்பற்றி னோர் பேரையும்
பதிவுகள் செய்திட வேண்டு மென்றார் 6

வேண்டியே மழையின் உதவியால் பூமிக்கு
வெளிவந் திருக்கும் பயிர் களுக்குத்
தாண்டியே பிந்தின மாதங்களில் தண்ணீர்
தான் பாய்ச்சிக் கொண்ட விவரங்களும் 7

விவரம தாகப் பதினாறு கலங்களில்
விவரிக்கும் விவரம் எடுத் துரைத்தேன்
கவனமாய் ஒவ்வொரு மாதம்பிற் பாதியில்
கர்ணம் கையில் இதைத்தா னெடுத்து 8

ஒவ்வொரு மாதமும் பூமியில் சென்றுமே
ஓங்கி வளரும் பயிர் களையும்
செவ்வை யுடனே அறுவடை மேனியும்
சேர்ந்திடு மற்ற விவர மெல்லாம் 9

பாரத்தில் கண்ட கலத்துக்கு நேராகப்
பார்த்துப் பென்சலால் பதிந்து
ஈரத்துட னதற்குடனைக் குடனே தான்
இங்க்என்னு மையா லெழுத வேண்டும் 10

சாகுபடியின் விவரந் தெரிவிக்கும்
தவணை யுடன் அதன் உள்ளடக்கம்
வாகுட னேவெகு முக்கிய கணக்குகள்
வரைவதற் கிதுவே ஆகாரம் 11

ஆதாரமான கணக்கிது வாகை யால்
அக்கரை யாகவே பார்க்க வேண்டும்
தீதொன்றும் நேரா திருக்கும் படியினைச்
செவ்வை யுடனே பதிய வேண்டும் 12

1-நிர். ஸ்டேட்டுமெண்டு.

த வ ணை.

மாதவாரி சாகுபடிக் கணக்கு.

சாகுபடி நோட்டில் தாக்கல்செய் பயிர்களைத்
தவறுமல் பார்த்துப் பயிர் வாரியாய்
வாகுடனே முதல் நம்பர் கணக்கினில்
வாய்த்த கலங்களில் தான் நாட்டி 13

நாட்டிப் பயிர்களின் மொத்தத்தைக் கூட்டியே
நாடும் சாகுபடி மொத்தம் கண்டு
தேட்டம தாயொரு கோஷ்வாரு போட்டுமே
தெளிவாகக் கர்ணம் கையொப்ப மிட்டு 14

மாதா மாதமும் ஐயஞ்சு தேதிக்குள்
வட்டத்தைச் சேர்ந்த இன்ஸ்பெக் டருக்குச்
சாதக மாகத் தவறு தனுப்பித்
தசுவல் கொடுக்கும் கணக் கிதுவாம் 15

கணக்குக ளில்முதல் நம்பர் கணக்கென்று
கண்டறி வாயிதற் காறு கலம்
இணக்கம தாகஅமைந் திருக்கு மிதற்
கேற்பட்ட உள் ளடக்கம் ஒன்று 16

1–நிர். ஏ-உள்ளடக்கம்.

சாகுபடியையும் அறுவடையையும் தெரிவிக்கும்
மாதவாரிப் பயிர்வாரி.

உள்ளடக்கம் என்ற பயிரவாரி இதற்
குற்ற கலங்கள் பதினெட்டு
வெள்ளாண்மை என்கிற பயிர்களின் மொத்தமும்
விளைந்த அறுவடை மேனிகளும் 17

அறுவடை பதிந்து மாதந் தவறாமல்
அனுப்புவார்கள் தவணையுடன்
திரமுள்ள ரெண்டாம் நம்பர் கணக்கென்று
செப்பும் அடங்கல் கணக்கொன்று 18

―――

2–நிர். ஸ்டேட்டுமெண்டு.

அடங்கல்.

ஜமாபந்திக்கு வேண்டிய சகல விவரங்களும் அடங்கியது.

அடங்கலென்கிற ஸ்டேட்மெண்டாமதற்
கான கலங்கள் பதின்மூன்றும
தொடங்கிய கைப்பற்று சாகுபடி களைத்
தோரணையாகவே கூறிடுமே 19

கூறிடுமே இதில் சகல விவரமும்
குணமாகத் தானே தெரிந்திடுவாய்
மாறிடும் மாறுதல் விவரம் ஷறாவினில்
மார்க்கமதாகவே தான் காட்டும் 20

காட்டிடும் பூமியில் அஜிமாயிஷ் தார்கள்
கண்ட விவர முழுவதையும்
நாட்டியே இதில் இன்ஷியலும் செய்வார்கள்
நாடும் பிரிவுகள் ஐந்துண்டாம் 21

―――

2-நிர். ஏ-உள்ளடக்கம்.

உத்திரவின்றிச் சர்க்கார் நிலங்களை ஆக்கிரமித்த
ஏக்சால் கைபபற்றை காட்டக் கூடியது.

ஐந்து பிரிவினில் (ஏ)உள் ளடக்கமும்
ஆதர வின்றிச் சர்க்கார் நிலத்தைச்
சொந்தம தாக்கிடச் செய்யும் விவரத்தைத்
தோரணை யாகத் தொடுத் துரைக்கும் 22

தொடுத்தே யுரைக்கும் அறிந்திடு வாயிதில்
தொடர்ந்த கலங்கள் பதின் மூன்று
அடுத்தே யிருக்கும் (பீ)உள் ளடக்கமும்
ஆன வருஷப் பயிர்வாரி 23

2-நிர். பீ-உள்ளடக்கம்.

வருஷவாரிப் பயிர்வாரி.

பயிரின் விவரம் அறிந்திடுவாய் தண்ணீர்
பாய்ந்ததும் பாயாததும் தெரி வாய்
ஒயிலா யிரண்டின் (சீ)உள் ளடக்கத்தில்
உற்ற விவரத்தைக் கூறிடு வேன் 24

2-நிர். சீ-உள்ளடக்கம்.

தோட்டம் தோப்புகளின் விவரத்தைக் காட்டக் கூடியது.

கூறும்(சீ)யினில் சர்க்கார் தோப்புத் தீர்வை
குடிகளின் சொந்தத் தோப்புத் தீர்வை
தேறுத லாய்ச்சித றுண்ட மரங்களின்
தீர்வை முதலாக முப்பிரி வாய் 25

பிரிவாய் எடுத்து விரிவாய்க் கூறிடும்
பேசுங் கலங்களும் ஈராறு
தெரிவாய் அடியினில் இரண்டாம் நம்பரின்
(டி)உள்ளடக் கத்தின் தன்மை தன்னை 26

2-நிர். டி-உள்ளடக்கம்.

பாய்ச்சலாதார வரிசையாய் நீர் பாய்ந்த பயிர்களைக்
காண்பிக்கும் பயிர்வாரி.

தன்மையைப் பார்த்தே யறிந்திடுவா யிதைச்
சார்ந்த கலங்களும் ஒன்ப தென்பார்
நன்னய மானசுண் மாயின் விவரமும்
நாடும் பயிர்கள் விவரம் சொல்லும் 27

2-நிர். இ-உள்ளடக்கம்.

கிராம மொத்த ஆயக்கட்டை பாபத்து வாரியாய்
தெரிவிக்கும் கோஷ்வாரு.

சொல்லுமே இரண்டின் (இ)உள் ளடக்கத்தில்
தோன்றும் விவரங்கள் ஆயக் கட்டாம்
நல்லகுணத் துடன் நீகேட்பா யிதை
நாடுங் கலங்களும் எட்டாகும் 28

எட்டென் றறிவாய் முந்தின பசலியில்
ஏற்பட்ட மொத்தம் ஆயக் கட்டைத்
திட்ட மதாக வுரைத்து அப்பசலியில்
சேர்ந்திடு மாறுதல் செப் பிடுமே 30

மாறுதல் விவரம் பாபத்து வாரியாய்
மார்க்க முள்ள பாரப் படியாய்
கூறுங் கணக்கென்று நீயறிவா யிதில்
குறித்த தொகையது ஆயக் கட்டாம். 31

3-நிர். ஸ்டேட்டுமெண்டு.

மாறுதல் கணக்கு.

சகல மாறுதல்களையும் சகல விவரத்துடன்
தாக்கல் செய்யும் கணக்கு.

ஆயக்கட்டை நீயும் அறிந்துகொண்டாய் பின்பு
அடுத்திடும் நம்பர் மூன் றதுவும்
நியாயம தாகிடும் விடுதலை, தர்க்காஸ்த்து
நாடிடும் பட்டா மாறு தலும் 32

பட்டா மாறுதல் தன்னைப் பதிந்தபின்
பாங்கான இதர மாறு தலும்
சட்ட மதாகவே நாலு பிரிவாகத்
தானே வகுத்து விரித்து ரைக்கும் 33

விரித்தே யுரைத்திடு மூன்றும் பிரிவினில்
விளம்பிடும் பட்டா மாறு தலைப்
பிரித்தே நாலு சிறுபிரி வாகவே
பேணி எழுதிட வேண்டும் என்றார் 34

எழுதும் விவரம் எடுத்துரைத் தேன்கிஸ்தி
ஏற்பட்ட பாக்கியின் விற்ப னையில்
பழுதின்றிச் சர்க்கார் எடுத்த விவரமும்
பக்கத்தில் மற்றோர் எடுத்த துவும் 35

எடுத்திடும் ஏலத் திருவித மாறுதல்
இயம்புவது முதல் உட்பிரி வாம்
அடுத்திடும் இரண்டில் சிவில் கோர்ட்டின்
ஆதாவின் பேரில் மாறின தும் 36

மாறுதல் விவரம் எடுத்துரைத்தேன் அந்த
மார்க்க முள்ள மூன்றும் உட்பிரிவு
தேறுத லாகிடும் கிரயமும் தானமும்
சேர்ந் திட்ட மாறுதல் செப்பிடுமே 37

செப்பிடுங் கிரைய மாறுதலின் பின்னே
சீராகவே பன்னிரெண் டாண்டு
ஒப்பிடு மனு போகத்தின் மாறுதல்
உரைக்கும் பிரிவது நாலாகும் 38

நாலு பிரிவின் விவர முழுவதும்
நாடியே நானும் எடுத் துரைத்தேன்
சேலெனும் விழியார் மயக்கத்தை நீக்கியோர்
சித்தம தாகவே கேட்டிடுவாய் 39

3-நிர். ஏ உள்ளடக்கம்.

மாறுதலுக்குக் கோவஷ்வாரு.

கிராமம் மோத்தம் கைப்பற்றைக் காட்டக் கூடியது.

கேட்டிடுவாய் நீயும் மூன்றும் நம்பரைக்
கிட்டிய (ஏ) என்னும் உள்ளடக்கம்
தேட்டம தாகக் கைப்பற்றுடன் மாறுதல்
சீரா யெடுத்துமே தான் காட்டும் 40

காட்டுமே மூன்றும் நம்பர் கணக்கினில்
கண்டிட்ட மாறுதல் வகைக்கு மொத்தம்
கூட்டி இதன்பாரம் ஐட்டம்நேர் பதிந்திடக்
குறித்த பசலிக் கைப்பற் றாகும் 41

கைப்பற்றைநீயும் தெரிந்து கொள்வாய் இதன்
கலங்கள் எட்டென் றறிந்து கொள்வாய்
எப்பற்று மில்லாத ஈசன் அருளாலே
எடுத் துரைப்பேன் நம்பர் ஈரிரண்டை 42

4-நிர். ஸ்டேட்டுமெண்டு.

பேரீஜ் வஜாக் கணக்கு.

எல்லாவிதமான பேரீஜ் வஜாக்களையும் எடுத்துரைப்பது.

ஈரிரண் டாகிய நாலாம் நம்பரில்
இன்ப முள்ள தேவால யங்கள்
சீருடனே மத சம்பந்த முதலாகச்
சேர்ந்திடு பேரீஜ் வஜா முழுதும் 43

முழுதும் எடுத்து இருபாக மாகவும்
முந்தி மதாலய சம்பந்த மும்
பழுதிலா இதர பேரீஜ் வஜாக்களும்
பதினொரு கலம் வரை அறிந்திடுவாய் 44

5-நிர். ஸ்டேட்டுமெண்டு.

வஜாப்பட்டி.

சகல லாண்டு ரிவினியூ வஜாக்களின் விவரங்களைக் காட்டக் கூடியது.

அறிந்த விவரம் எடுத்துரைத்தேன் நம்பர்
ஐந்தென்று சொல்லும் வஜாப் பட்டி
தெரிந்திடு சகல ரிவனியூ வஜாக்களைச்
சேர்ந்த விவரங்கள் செப் பிடுமே 45

செப்பும் விவரத்தை இப்புவிக் சேற்பட்ட
சீரான கணக்கு மான்யூ வில்
ஒப்பிடு மந்த விவரம் முழுவதும்
உரைக்கும் பிரிவுகள் மூன்று கும்
46

5-நிர். ஸ்டேட்டுமெண்டு வஜாப்பட்டியின் I-வது பிரிவு.

வஜாப் பெறுவதற்காக டிவிஷனல்ஆபீஸருடைய பைசலுக்கு அனுப்ப வேண்டிய கணக்கு.

ஆகும் பிரிவொன்றில் வஜாவை எழுதியே
அனுப்புவார்கள் டிவிஷனுக்கு
வாகுள்ள டிவிஷன லாபீஸர் பார்த்துமே
வகையுடன் பைசலும் செய்திடுவார் 47

செய்த வஜாவைத் தெரிந்தப் பிரிவினில்
சேர்ந்த கலமது பதின் மூன்றில்
கைதவ மில்லாமல் கர்ணம் கவனித்துக்
காட்டி யிருப்பதைப் பார்த்திடுவாய் 48

5-நிர். ஸ்டேட்டுமெண்டு வஜாப்பட்டியின் II-வது பிரிவு.

நிலைத்த வஜாவை 10-ம் நிர். சிட்டாவில் பதிவதற்காக மொத்தம் கூட்டிக் காட்டுவது.

பார்த்த வஜாவதை பேர்த்தேழு வகையாகப்
பாரத்தில் கண்ட கலப்படியே
நேர்த்தியுடனே இரண்டாம் பிரிவினில்
நேரும் பட்டா நம்பர் வரிசையதாய் 49

பட்டா நம்பர் வரிசையாய்ச் சிட்டாவில்
பதிவு செய்வதற் காகரவாய்த்
திட்டமதாக எழுதும் கணக்கென்று
தெளிவாக நீயும் தெரிந்திடுவாய் 50

5-நிர். ஸ்டேட்டுமெண்டு வஜாப்பட்டியின் 111-வது பிரிவு.

ஸ்பெஷல் வஜாவைக் குறித்தது.

தெரிந்திடுவாய் பின்னும் ஐந்தாம் நம்பரைச்
சேர்ந்திட்ட மூன்றும் உட் பிரிவு
வருந்திடு பஞ்ச காலங்கள் வந்துமே
வருந்து மக்கிராம முழுவ துக்கும் 51

கிராமம் முழுதும் மழையின் மிகுதியால்
கிடைக்கும் வேளாண்மைகள் சேதப் பட்டுச்
சிரமம் அடைந்து வருந்து மக்காலமும்
சிறக்கு மழை யில்லாக் காலத்திலும் 52

காலத்தி னால்சேரும் கஷ்டத்தை யோஜித்து
கருணை மிகுந்த ரிவினியூ போர்டார்
சீலமுடனே கொடுக்கும் வஜாக் களின்
சேர்க்கை முழுவதும் செப் பிடுமே 53

செப்பும் பிரிவொன்று பதின்மூன் று கலம்
சேரும் இரண் டிருபத் திரண்டு
ஒப்பிடும் அந்த மூன்றும் பிரிவுக்
குற்ற கலங்கள் பதி னாறும் 54

6-நிர். ஸ்டேட்டுமெண்டு
தண்ணீர்த் தீர்வைக் கணக்கு.

சர்க்காரால் தண்ணீர்த் தீர்வை விதிக்க வேண்டிய
சகல விவரங்களையும் காட்டுவது.

கலத்தின் விவரம் எடுத்துரைத்தே னதைக்
கண்டறிவாய் நம்பர் ஆறது வும்
நிலத்துக்குத் தண்ணீர் பாய்ந்ததின் தீர்வையும்
நேர்ந்திடுந் தெண்டத் தீர்வையு மாய் 55

தீர்வை இரண்டும் தனித்தனி கலங்களில்
செப்பும் இதன்கலம் பத்தொன் பது
பார்வையிட்டே நீதெளிந் திடுவாய் இதைப்
பாசன வாரியாய் எழுதிடு வார் 56

பாசன வாரியாய்ப் பட்டா வரிசையாய்ப்
பகரும்தீர்வை ஜாஸ்தி பசலி ஜாஸ்தி
நேசத்துடன் சர்க்கார் நிலங்களைக் கைப்பற்றி
நேர்ந்திட்ட சிவாய் ஜமா என்றும் 57

என்றிந்தப் படியாக மூன்று விதமாக
எடுத்துப் பிரித்துக் கொண் டெழுதுகையில்
நன்றாகச் சென்டது பத்துக்கு உள்ளானல்
நாட்டித் துண்டாகவே காட்டிடு வார் 58

துண்டாகக் காட்டிப்பின் சோர்வடை யாமலே
தோன்றிய சட்டங்கள் சொல்லும் வகை
கண்டறிந்து கொண்டும் மாதக் கெஜட்டினில்
காட்டிய வீத மனு சரித்தும் 59

அனுசரித்து வந்த நீர்த்தீர்வை தன்னையும்
அதனோடு சேர்கின்ற தெண்டத் தையும்
கனிவாகும் பாரத்தி லததற் கேற்பட்ட
கலங்களைப் பார்த்துப் பதிந்திடு வார் 60

பதியும் விவரம் எடுத்துரைத்தேன் இதில்
பகரும் விவரம் அனேக முண்டு
துதிமிகும் அரசர் தங்கள் ஆதாயத்தைச்
சொல்லும் கணக்கினில் ஒன்றாகும் 61

6-நிர். ஸ்டேட்டுமெண்டு ஏ-உள்ளடக்கம்

தண்ணீர்த் தீர்வைக் கோஷ்வாரு.

ஒவ்வொரு பட்டாவிற்கும் ஏற்பட்ட மொத்தம் தண்ணீர் தீர்வையைத் தெரிவிக்கும் கணக்கு.

10-நிர். சிட்டா II-வது பிரிவில் தண்ணீர்த் தீர்வை பதிவு செய்வதற்கு ஏற்பட்டது.

ஒன்றுகும் இது ஆறெனு நம்பருக்
குற்றதோர் கோஷ்வாரு தானுகும்
நன்ருகப் பாசனம் ஒன்ருகக் கூட்டியே
நாடும்நீர்த் தீர்வையை பட்டா வாரி 62

பட்டா வாரியாய் நீர்த்தீர்வை மொத்தத்தைப்
பகரும் கணக் கென்று நீயறிவாய்
திட்டம தாகவோர் பாசன மட்டுமே
சேருங் கிராமத்துக் கில்லே யென்ருர் 63

என்றே மான்யூல் இயம்பும் விவரத்தை
இன்பம தாக எடுத் துரைத்தேன்
நன்ருக வேயறி கண்மாய் ஒவ்வொன்றுக்கும்
நாட்டிய பேர்களும் காட்டிடு மே 64

7-நிர். ஸ்டேட்டுமெண்டு

சில்லறை ரிவனியூ சிட்டா

எல்லாவிதமான சில்லறை ரிவனியூக்களையும் எடுத்துரைப்பது

காட்டுவ தறிவாய் ஏழாம் நம்பரில்
கண்ட கலங்கள் பதின் மூன்று
நாட்டில் வழங்கிடும் சில்லறை ஆதாயம்
நாடி யுரைக்கும் வகைக ளெட்டாம் 65

எட்டினில் ஒன்று இனும் குயிட்ரெண்டு
ஏற்கும் இனும் தண்ணீர்த் தீர்வைரெண்டு
சட்டப்படி மேலோர் உத்திர வில்லாமல்
தண்ணீர் பாய்ச்சும அப ராதம் 66

தண்ணீரின் தெண்டம் மூன்றும் ஐட்டமும்
சர்க்கார் தருசு நிலங் களிலே
எண்ணி அனுபோகம் செய்த விவரத்தை
ஈரிரண்டாம் ஐட்டம் எடுத் துரைக்கும் 67

உரைக்கும் ஐந்தாம்ஐட்டப் புறம்போக்குக் கைப்பற்றில்
உற்ற விவரங்கள் மூன்றாகும்
தரைக்குள்ள சகஜம் நீர்த்தீர்வை தன்னுடன்
சாரும் அபராதத் தீர்வையு மாம் 68

தீர்வை யெனுமரப் பட்டாவின் தீர்வைகள்
செப்பும் ஐட்டமது ஆறாகும்
கோர்வை யதாயிதில் கூடும் இகா
குறிப்பு முழுவதும் ஐட்டம் ஏழாம் 69

ஏழைட்ட மாகவே எடுத்துப் பதிந்துமே
இருக்கும் வகைகள் முழுவ தையும்
தாழ்வின்றிக் கூட்டியே ஒவ்வொன்றின் மொத்தத்தைத்
தாக்கல் செய்வா ரதன் கீழாக 70

ஆருமே இந்த ஏழுவகை களை
அமைத்துக் கொண் டதன் பின்னாலே
வாகுள்ள பாரஸ்ட் ரிவினியூ வகைகளை
வரைந்தே யிருப்ப தறிந்திடு வாய் 71

அறிந்திடு வாயேநீ இந்த விதமாக
அதற்கொரு கோஷ்வாரு தான் போட்டுத்
தெரிந்திடும் ஒவ்வொன்றின் மொத்தம் எடுத்துமே
செப்புங் கலங்களில் தான் காட்டி 72

காட்டிய ஐட்டம் ஏழையுங் கூட்டியே
கணக்கிட் டதற்கொரு மொத்தம் போட்டு
நாட்டிய பாரஸ்ட்டு ரிவினியூவின் மொத்தத்தை
நாடும் ஐட்டம் எட்டில் தான்வரைந்தும் 73

வரைந்தே இருப்ப தறிந்திடுவா யிதில்
வழுத்திய வகைகள் முழு வதையும்
மறந் திடாம லினவாரி யாகவே
மார்க்கம தாகப் பதிந்திருப் பார் 74

பதிவின் விவரம் எடுத்துரைத்தே னிதில்
பகர்வது பலவித சில்லரை யாம்
மதியூகமாய்ச் செய்த கணக்கு மான்யூல்படி
மதிப்புள்ள சில்லரைச் சிட்டா வாம் 75

சில்லரைக் கேற்பட்ட சிட்டா வென்றுநான்
செப்பு கின்றதைநீ ஒப்புக் கொண்டுன்
வல்லமையாலே தெரிந்து கொள்வாய் நானும்
வழுத்துவேன் நம்பர் எட்டென் பதை 76

8-நிர். ஸ்டேட்டுமெண்டு.
பாசனவாரிக் கணக்கு.

கண்மாய்களின் லாப நஷ்டங்களையும் நீர்க்குள்ள பாகம் முதலியவற்றையும் காட்டக் கூடியது.

எட்டாம் நம்பரி லொவ்வொரு பாசனத்
தியற்கை யுட னதன் கூடுதலும்
திட்டம தாகவே தானுரைக்கு மிதைச்
சீரான பாசன வாரி யென்பார் 77

பாசன வாரியாய் நஞ்சைத் தீர்வையில்
பாய்ச்சலுக் குள்ளநீர்த் தீர்வை யையும்
நேசத்துடன் புதுப் பாசன விர்த்தியும்
நேர்ந்திடு ரிப்பேரின் ஜாஸ்தி யையும் 78

ஜாஸ்தியும் விர்த்தியும் தானுரைத்துப் பின்னே
சார்ந்திடு லாப நஷ்டங் காட்டும்
நேர்த்திய தான ஒருபோக நஞ்சையில்
நீர்த்தீர்வை பிரிக்கும் வித முரைப்பேன் 79

உரைத்திடுவேன் நஞ்சைக் குற்ற குரூப்பதில்
உள்ள புஞ்சை ரேட்டை யனுசரித்து
தரைத்தீர்வை கண்டந்த மொத்தத்தில் கழித்திட
தங்கிய பாக்கி நீர்த் தீர்வையாகும் 80

தீர்வை பிரிக்கும் வகையுரைத்தே னிதில்
சேரும் வஜாவின் விவரம் சொல்வேன்
கேர்மையா யுற்றிடு காயம் அங்காமியும்
நேர்ந்திடுங் கால ஸ்திதி மூன்றும் 81

மூன்று விதமாகும் வஜாக்கள் விவரத்தை
முழுதும் எடுத்து விவர மாக
ஊன்றியே மான்யூ லிருபத்தோராம் பக்கம்
உற்ற விவரத்தைக் கற்றறி வாய் 82

அறிவாய் காயம் என்னும் வஜாவதில்
அடங்கும் விவரங்கள் ஐந்து உண்டு
விரிவாயந்த விவர முழுவதும்
விளம்புகிறேன் நன்றாய்க் கேட்டிடு வாய் 83

கேட்டிடு கிருஷ்ணகோ தாவரி டெல்டாக்கள்
கிட்டிய ஜமீன் எஸ்டேட்டு களில்
நாட்டிய நீர்த்தீர்வை தன்னை வசூல்செய்ய
நன்மை மிகும் ஜமீன் தார்களுக்கு 84

ஜமீன்தார் தங்கள் சிரமத்தை யோஜித்து
சார்ந்திடு நூற்றுக்குப் பத்து வீதம்
அமைவுடன் தள்ளிக் கொடுக்கும் தொகைஒன்று
அதற் கடுத்தது பாது இனும் 85

பாது இனும்தார் தங்களுக் கீயும்
பாகமும் காயம் வஜா வாகும்
தோதாகும் ஒருபோகம் ஆறய கால்
சொல்லு மிருபோகம் பனிரண் டரை 86

பன்னிரண்டரை ரூபாய் தாளவா என்றுமே
பகரு மிருபோகத் தீர்வை யாகும்
நன்னய மாகிடுஞ் சார்வ என்றுமே
நவிலு மொருபோகம் பார்த்திடு வாய் 87

பார்த்திடுவாய் நஞ்சை மொத்தத்தின் தீர்வையில்
பாங்காய் கழிக்கப் பட்டுக் கொடுக்கும்
நேர்த்தி யுள்ளமேரை அல்லது கிராமத்தில்
நேர்உத்தி யோகஸ்தர் சம்ப ளத்தில் 88

சம்பளம் அல்லது மேரை என்பதில்
தண்ணீருக் குள்ள பாகம் வஜா
நம்பியே மான்யூலைப் பார்த்திடுவா யந்த
நான்காம் விவர மெடுத்துச் சொல்வேன் 89

சொல்லுமொத்த நஞ்சைத் தீர்வையுடன் சேர்த்து
தோன்று மதி லிருந்து கழித்து
நல்லதோர் ரோட்செஸில் பாய்ச்சலின் பாகமும்
நாடிடும் காயம் வஜா என்பார் 90

என்பார் சீலெட் ஜில்லாக்க ளென்பதில்
ஏற்ற தசபந்த தார் களுக்கு
அன்பாய்க் கொடுக்கும் வஜாக்கள் முழுவதும்
ஆனதோர் காயம் வஜா என்பார் 91

என்பதை நீயும் தெரிந்துகொள் வாயேமுன்
எடுத் துரைத்த அங்காமி வஜா
இன்பமாய் நஞ்சையில் ஏரிநீர் பாய்வதற்
கிடமின்றிக் குடிகள் சொந்தத் திலே 92

சொந்தச் சில்வில் இறவை இறைத்துமேல்
சொல்லிய நஞ்சைக்கு நீர் பாய்ச்சி
வந்திடு மந்த நிலங்களுக் காகவே
வாகாய்க் கொடுக்கும் வஜா வாகும் 93

ஆகும் வஜாரூபாய் ஏக்கர்க் கொன்றாகவே
அமைந் திருக்கும் சில ஜில்லாவில்
வாகுடன் நாலில் ஒருபாக மாகவும்
வகுத்திருக் கின்றார் செட்டில் மெண்டார் 94

செட்டில் மெண்டார்கள் சித்தம் இறங்கியே
சீராய்க் கொடுத்த அங்காமி வஜா
திட்டத்தை நீயும் அறிந்துகொண்டயே நான்
செப்புவேன் கால ஸ்திதி யதனை 95

காலாகாலத்தில் மழை பெய்யாத தாற்
கடுமழை பெய்த கெடுதி யதால்
ஞாலமதில் பஞ்ச காலங்கள் வந்துமே
நஷ்ட மடைந்திட்ட தன்மை யினால் 96

தன்மையை யோஜித்து நன்மன தாகவே
தள்ளிக் கொடுப்பது கால ஸ்திதி
உண்மையைநீயும் தெரிந்து கொள்வாய் நா
னுரைத்திடுவேன் நம்பர் ஒன்ப தையும் 97

9-நிர். ஸ்டேட்டுமெண்டு.

லோக்கல்பண்டு ஸ்பெஷல்பண்டு கணக்கு.

சகல இனும் நிலங்களின் பேரிலும் சகல ஏக்சால்
நிலங்களின் பேரிலும் ஏற்படும் சேஸ் முதலிய
விவரங்களைக் காட்டக் கூடியது

ஒன்பதாம் நம்பர் என்னும் கணக்கினில்
உள்ளது லோகல்பண்ட் ஸ்பெஷல் பண்டு
அன்பாகிடும் குளம் பாசி வரிகளும்
அடங்குங் கணக் கென் றறிவாயே 98

அறிவாயே ஒவ்வொரு மானிப நிலத்துக்கும்
அப்பசலி ஏக்சால் கைப்பற்றுக் கும்
விரிவாக ஏற்பட்ட தரம்தீர்வை விவரத்தை
விளம்பிடுமே இன வாரி யாக 99

இனவாரி யாகவே நாலாம் கலம்வரை
இயம்பும் விஸ்தீரணம் தீர்வை யுடன்
கனமாகிடும் தண்ணீர்த் தீர்வை ஏற்பட்டதைக்
காட்டுங் கலமது ஐந்தா கும் 100

ஐந்தாம் கலத்துடன் நாலாம் கலத்தையும்
ஆகமொத்தம் கூட்டி ஆறில் காட்டி
சொந்தமா யதற்கு யேற்பட்ட செஸ்ஸதைச்
சொல்லுங் கலமது ஏழா கும் 101

ஏழாங் கலத்தி லிருக்கும் செஸ்போலவே
இதர வகைகள் ஏதேனும் வந்தால்
கேளாயந்த விவரங் குறித் திதைக்
கிட்டி யொருகலம் ஏற் படுத்தி 102

ஏற்படுத்தி யந்த செஸ்ஸின் விவரத்தை
எழுதிப்பூரித்துப் பின்மொத்த மிட்டுப்
பார்ப்பதற் கேதுவாய் கோஷ்வாரா போட்டுமே
பதிந் திருப்பதைப் பார்த் திடுவாய் 103

10-நீர். ஸ்டேட்டுமெண்டு.

I-வது பிரிவு.

நபர்கதி சிட்டா.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்பட்ட கைப்பற்று நிலங்களை
விஸ்தீரணம் தீர்வையுடன் சர்வேநம்பர்
வரிசையாய்க் காட்டக்கூடியது.

பார்த்திடு வாயேநீ பத்தென்னும் நம்பரைப்
பற்றும் பிரிவுக ளிரண் டுண்டு
நேர்த்தியுட னென்று பட்டா நிலங்களை
நிம்பர் வாரி காட்டி மாறுதலை 104

மாறுதல் தன்னைப் பதிந்தபின் கிழந்த
மாறுதல் தன்னை யனு சரித்து
சேருதல் சேர்த்துக் சழிவைக் கழித்துமே
சீரான கைப்பற்றைத் தான் காட்டும் 105

காட்டு மிதில்வரும் மாறுதல் விவரத்தைக்
கண்டகலம் ஒன்றில் தான் காட்டி
நாட்டிய மாறுதல் உத்திரவின் நம்பர்
நாடிடும் தேதி விவர மெல்லாம் 106

எல்லாமெடுத்து ஷாக்கலம் தன்னிலே
இயம்பி இருப்பதை நீ பார்த்து
நல்லகுணத்துடன் தெரிந்து கொள்வாய் முன்னால்
நாட்டிட வேண்டுமே இன்டெக்ஸ் ஒன்று 107

இண்டெக் ஸென்றல் ஒவ்வொரு பட்டாவுக்
கேற்பட்ட விவரம் இன்ன பக்கம
கண்டே இருக்கிற தென்ற விவரத்தைக்
காட்டும் அட்டவணை தானுகும் 108

தானுகுமே ஒரு பட்டா நம்பரில்
சார்ந்த விவரம் பதிவு செய்ய
ஆன இடம தடங்கா திருந்திடில்
அந்த விவரம் கடாசிப் பக்கம் 109

பக்கத்தில் துயர்ச்சி நம்பரைக் காட்டியே
பதிவு விவரம் பதிவு செய்தும்
முக்கிய மாகிடும் முன்பக்கம் இன்டெக்ஸில்
மொழிந் திடுவா ரந்தப் பக்கத்தையும் 110

பக்கம்பதியும் விவரம் உரைத்தேன் நான்
பதிந்திட்ட பட்டா நம்பர் ஒன்று
தக்க விவர முழுதும் எடுபட்டுத்
தானது காலி யாகுமே யாஞல் 111

காலிப் பட்டாவினில் யாதொன் றும் பதியாமல்
காலியாக வேதான் வைத் திருப்பார்
சிலமா யுந்தனுக் கிந்த விதமாகச்
செப்பினேன் கைப்பற்றின் விவர மெல்லாம் 112

10-நிர். ஸ்டேட்டுமெண்டு.

II-வதுபிரிவு

ஜயாபந்தி பைசல் விவரக் கணக்கு

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்பட்ட தரம் தீர்வை முதல்
சகல வகை ரிவினியூக்களையும் விவரமாகக் காட்டி
அவைகளை மொத்தம் கூட்டி வந்த
மொத்தம் பேரீஜை காட்டக்கூடியது

கைப்பற்றைப் பிரிவொன்றில் தெரிந்து கொண்டாய்நானும்
கழறுவே னிரண்டாம் பிரிவு தன்னை
செப்பிய கைப்பற்றை ஐட்டம் ஒன்றில்காட்டி
சேரும் இரண்டில் தரகதி யும் 113

தரகதி தருசுவஜாப் போக நிகரத்தைச்
சாற்றும் ஐட்ட மது மூன்றாகும்
பரவிடும் ஆறும் நம்பர்க் கணக்குற்ற
பட்டாநீர்த் தீர்வைகள் நாலா கும் 114

ஆகுமே ஐட்டம் மூன்றையும் நாலையும்
ஆக மொத்தம் கூட்டி ஐந்துரைக்கும்
வாகுட னேந்தாம் நம்பர்க் கணக்கில்
வழுத்தும் இதர வஜா ஆறும் 115

ஆறுகு மைட்டத்தில் கண்ட வஜாக்களை
ஐந்தாகு மைட்டத்தில் தான் கழித்துச்
சீராகும் ஏழைட்டம் நிகரம் என்பதில்
செப்பும் விவரத்தை ஒப்பிடு வாய் 116

ஒப்பிடுவா யந்த ஏழாம் நம்பரென்
றுரைக்கும் கணக் குற்ற சில்லரையைத்
தப்பின்றிக் கூட்டியே மொத்தம தாகவே
சாற்றும் ஐட்ட மது எட்டாகும் 117

ஆகுமே ஐட்டம் ஏழையும் எட்டையும்
ஆக மொத்தம் கூட்டி ஒன்ப தென்றும்
வாகுடன் ஐட்டம் ஒன்பதின் தொகையது
வழுத்திய சில்லரை சேர்ந்த தென்றும் (118)

என்றே நீயும் அறிந்து கொள்வாயிப்போ
தியம்பும் விவரம் தெரிந்து கொள்வாய்
நன்ருகமுத லேட்டக் கைப்பற்றுத் தொகையுடன்
நாலேட்டத் தண்ணீர்த் தீர்வை கூட்டி (119)

கூட்டியே ஐட்டம் ஐந்தினில் காட்டிய
கூடிடும் மொத்தம் தொகை தனக்குத்
தேட்டமாய் ஏற்பட்ட செஸ்வின் தொகையதைச்
சேறும் ஐட்டம் பத்தில் செப்பிடுமே (120)

செப்பிடுமே நம்பர் ஒன்பதிலே கண்ட
செஸ்வின் வகைகள் முழு வதையும்
தப்பில் லாமலே ஐட்டம் பதினொன்றில்
தாக்கல் செய்திருப் பதைப்பார்த் திடுவாய் (121)

பார்த்திடு பனிரண்டு லோக்கல் பண்டென்று
பகரும் ஸ்பெஷல்பண்டு பதின் மூன்று
நேர்த்தியுடனே தான் கோர்வை யதாகவே
நேர்ந்தே யிருக்கும் தொகை யாகும் (122)

தொகையுடன் ஐட்டம் ஒன்பதைக் கூட்டியே
சொல்லுமே ஐட்டம் பதினான் கில்
வகையுட னிந்தப் பதினாலாம் ஐட்டத்தில்
வரைந்தது பட்டாவின் மொத்த மாகும் (123)

மொத்தத்தைப்பதினான்கில் தெரிந்து கொள்வாய் ஐட்டம்
மூவைந்தில் பாரஸ்டை அறிந்து கொள்வாய்
சித்தமகிழ்ந்தே எடுத்து துரைத் தேனிதைச்
சேர்ந்த விவரங்கள் செப்பு கிறேன் (124)

செப்புகிறேன் ஊரில் சிற்சில குடிகள்
சேர்ந்திடும் பட்டா நிலங் களின்றி
ஒப்பிடு இனும் குயிட்ரெண்டு செஸ்ஸுகள்
உகந்திடு மேக்சால் தீர்வை முதல் (125)

தீர்வை முதலிய சில்லரை வகைமட்டும்
சேர்ந் திருக்கின்ற குடிகள் பேரை
கோர்வை யதாகவே இந்தப் பிரிவினில்
குறித்துத் துயர்ச்சி நம்பர் கொடுத்து (126)

கொடுத்தந்த இனத்துக்குக் கூடுந்தொகை களைக்
கூறிடும் எழிழான் பதி விருந்து
எடுத்தந்த ஐட்டங்கள் நேராய்ப் பதிந்துமே
ஏற்ற மொத்தம் பதினுலில் காட்டும் (127)

காட்டு மிப்பிரிவில் சமுறுமைட்டம் பத்தில்
கண்டிட்ட லாண்டு செஸ்தொகை எடுத்துக்
கூட்டி மொத்தம் சரிபார்க்கும் கணக்கென்றும்
கூறு வாரித னுள்ளடக்க மென்றும் (128)

10-நிர். ஸ்டேட்டுமெண்டு.

IIவது பிரிவுக்கு உள்ளடக்கம்.

போஸ்ட்டிங் கணக்கு.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்படுத்திய மொத்தம் லாண்டுசெஸ் சரி பார்ப்பதற் கேற்பட்டது.

உள்ளடக்க மென்னும் போஸ்ட் டிங்காம்
இதற் குற்ற கலங்களு மூன்றுண்டாம்
கள்ள மிலாத கலமொன்றில் பட்டாவும்
காட்டு மிரண்டில் பட்டாவின் மொத்தம் (129)

பட்டா வரிசையாய் மொத்த மிரண்டிலும்
பகர்கின்ற செஸ்ஸது மூன்றிலு மாம்
சட்டப்படி பத்தில் கண்டதோர் பட்டாவும்
சார்ந்திடும் சில்லரைப் பட்டா வும் (130)

பட்டா வாரி எழுதி யதன்கீழே
பதராமல் கூட்டியே போட்ட மொத்தம்
திட்டமாய்க் கைப்பற்றுந் தீர்வையுடன் தண்ணீர்
தீர்வைகள் சேர்ந்திட்ட மொத்தத் துக்கு (131)

மொத்தம் தரம்தீர்வை அடங்கல் கோஷ்வாராவில்
மொழிந் திருப்பதைக் குறித்துக் கொண்டு
சுத்தமுள்ள ஆறும் நம்பர் கணக்கினில்
சொல்லும் பட்டா வினீர்த்தீர்வை சேர்த்து (132)

சேர்த்துவரும் தொகை தனக்குமே ஏற்பட்ட
செஸ்ஸுகள் வீதப்படி கணக்குப்
பார்த்தந்த செஸ்ஸுகள் சரியாய்ப் பதியவே
பாங்கா யமைதத தோர் உள்ளடக்கம் (133)

அடக்கம் கலத்தி லிரண்டாங் கலமது
அமைத்த பனிரெண் டெனுங் கணக்கில்
ஒடுக்க மாகுங்கலம் நாற்பத்து ஒன்றினில்
உற்ற தொகைக் குமே ஒத்திருக்கும் (134)

ஒத்திருக்கும் இதன் மூன்றும் கலத்தினில்
உற்ற தொகை நம்பர் பன்னிரண்டை
பற்றுங் கலமது முப்பத்து மூன்றினில்
பதிவு செய்வதற் காதர வாம் (135)

10-நிர். ஸ்டேட்டுமெண்டின்
ஏ-உள்ளடக்கம்.

பவுத்தி கைபீது.

இறந்துபோன பட்டாதார்களையும் அவர்களுக்குப் பதில்
தாக்கல் செய்ய வேண்டிய பேர்களையும்
காட்டக் கூடியது.

ஆதரவாகிய ஸ்டேட்டு மெண்டு பத்துக்
கடுத்திட்ட (ஏ)உள்ள டக்க மொன்று
சாதக மாகிடும் பட்டாதார் பவுத்தியும்
சாற்றுமே வார்சின் விவர மெல்லாம் (136)

எல்லாம் அறிவாயே பட்டாதா ரொருவன்
இறந்த வுடனந்தக் கிராமக் கர்ணம்
சொல்லும் பட்டாதாரின் வார்சு விவரமும்
சொந்த மைனர் களின் கார்டியனும் (137)

கார்டியன் பேரைத் தெளிவாய் விசாரித்துக்
கார்டியனுக் குள்ள சொந்தத் தையும்
நேர்மையுள்ள அந்தக் குடும்பம் பிரிவுகள்
நேர்ந்த தென்றும் அல்ல தில்லை என்றும் (138)

என்றிந்த விதமாகக் கூறும் விவரங்கள்
ஏற்கை யுடன் விசாரித் தறிந்து
நன்றாகக் குடும்பம் ஒன்று யிருந்திடில்
நாடுங் குடும்பத் தலைவன் பேரும் (139)

தலைவனின்னு னென்றிந்து கொண்டவன் பேரை
தாக்கல் செய்திட வேண்டு மென்றும்
பலவிதமாய்ச் சேரும் விவர முழுவதும்
பதிவுகள் செய்வார்கள் கலம் நாவில் (140)

நாலாம் கலத்தில் கிராம உத்தியோகஸ்தர்
நாடியுரைத்த விவரந் தன்னைச்
சில முடனே எழுதிடு வாரிதைச்
சேர்ந்த விவரம் சிலதுரைப் பேன் (141)

உரைப்பேன் ஊரில் குடியில் லாமலே
உகந்திடும் ஏழு வருஷ காலம்
தரைக்குளி ருப்பிடம் தெரிந்திடா மலும்
தக்கருஜு வொன்று மில்லா மலும் (142)

இல்லாமலிருக்கும் எல்லாப் பட்டா தாரும்
இறந்துமே போன தாகப் பாவித்துச்
சொல்லிடு மவாகள் வார்சுகள் பேரையும்
சொந்தத்தின் தன்மைகள் இன்ன தென்றும் (143)

என்றுமே ரிப்போர்ட்டு செய்துவார் வார்சுகள்
இல்லை என்றாலப் பட்டா நிலத்தை
நன்றாயனு போகம் செய்திடும் பேர்களை
நலமாய்க் குறித்தே அனுப்பு வார்கள் (144)

அனுப்பி வைப்பார்கள் பனிரண்டு வருஷம்
ஆதாவின்றி யனுபோகம்
சனிவுடன் செய்து வருகின்ற பேர்களைக்
காட்டு மனுபோகஸ்டேட்டுமெண்டொன்று (145)

ஒன்றாகு மிதில் மூன்று விதமாக
உரைத்திடட மாறுதல் வகை முழுதும்
நன்றாகக் கேட்டு விசாரித் தறிந்துமே
காட்டிய விவரத்தைக் பார்த்திடுவாய் (146)

பார்த்திடுவாய் நாலில் பகர்ந்த விவரத்தை
பைசலதி காரி தான் பார்த்து
நேர்த்தியுடன் செய்யும் பைசல் விவரத்தை
நேருங் கலம் ஐந்து தான்காட்டும் (I47)

11-திர். ஸ்டேட்டுமெண்டு.

பட்டா.

ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்பட்ட சகல விவரங்களையும்
தெரிந்து கொள்வ தற்காக குடிகளுக்குக்
கொடுக்கும் பட்டா

காட்டும் என்பதை நீ யறிவாயே நான்
கழறுவேன் நம்பர் பதினொன்றைத்
தேட்டமதாயிரு பிரிவுடனே யந்தச்
சிட்டாக் கணக்கதை ஒத்திருக்கும் (148)

சிட்டா நகலென்றே நீ யறிவாயானால்
தீர்வையினீவு சிட்டாவிலில்லை
பட்டாவின் ஹெட்டிங்கில் தீர்வையின் பாகமும்
பகரும் ஏக்சாலின் விவரம் உண்டு (149)

உண்டுமே இந்த இரண்டையும் நீக்கினல்
உற்ற இப்பட்டாவே சிட்டா வாம்
கண்டறிந்து கொண்டு பத்தாம் நம்பரைக்
கொண்டு பட்டாவை எழுதிடு வார் (150)

எழுதும் விவர மெடுத்துரைத் தேனிதற்
கிசைந் திடும் உள்ளடக்க மொன்று
பழுதில் லாமலிருக் கும்விவ ரத்தைப்
பார்த்திடு கணக்கு மான் யூலில் (151)

மான்யூல் கணக்கை நீ பார்த்திடுவா யெல்லா
மானி பமுழுதும் ஏக்சால் களும்
பேணியே மற்ற சில்லரை முழுவதும்
பேசும் பதினொன்றி னுள்ளடக்கம் (152)

11-நிர். ஸ்டேட்டுமெண்டு.

ஏ-உள்ளடக்கம்.

மிஸ்லேனியஸ பட்டா

அயன் இனும் நிலங்கள் இல்லாத இனங்களுக்குக்
கொடுக்கும் மிஸ்லேனியஸ் பட்டா

உள்ளடக் கமதை (ஏ)என் பாரிதற்
குற்ற கலங் களு மூன்ருகும்
கள்ள மிலாத இப்பட்டாவின் நாமத்தைக்
காணு மிஸ்லேனியஸ் பட்டாவென்பார் (153)

என் பாரிதனை நீயறிவா யூசில்
எவ்விதப் பட்டாவு மில்லார்க்கு
அன்பாய்க் கொடுக்கின்ற பட்டா விதுவாகும்
அறை குவேன் நம்பர் பனிரண்டை (154)

12-நிர். ஸ்டேட்டுமெண்டு.

ஜமாபந்தி கோவஷ்வாரா

கிராமம் மோத்தம் பேரீஜுக்கு ஏற்படக் கூடிய சில்லரை
ரிவினியூ வகைகளையும் கிராம மோத்தம்
பேரீஜையும் காட்டக் கூடியது

பன்னி ரண்டெனும் ஜமாபந்தி கோஷ்வாரா
பலத்திடு முக்கிய கணக் காகும்
அங்நாளி லிதைப் பட்டா வாரியாய்
அக்கரை யாக வரைந் திடுவார் (155)

வரைந்திடு வாரிப் போதப் படியில்லாமல்
வாய்த்த விவர முழுவதையும்
விரிந்தி திலுள்ள கலங்களொவ் வொன்றிலும்
விவரித்து நன்றாய் விளம் பிடுமே (156)

விளம்புங் கைபற்றையும் தருசு வஜாவையும்
விஸ்தீரணம் தீர்வை தன்னுடனே
களங்கமில்லாமலே புஞ்சை நஞ்சை துண்டாய்க்
காட்டிப்பின் மொத்தமும் காட்டிடுமே (157)

காட்டிடுமே கலம் பனிரண்டுவரையும் பின்
கண்ட சாகுபடி, தருசு, மொத்தம்,
நாட்டிய தீர்வை, தண்ணீர் தீர்வை, என்றுமே
நாடிடும் அஞ்சு விதமாக (158)

அஞ்சு விவரத்தைப் புஞ்சைக்கும் நஞ்சைக்கும்
ஆகுமவை களின் மொத்தத்துக்கும்
வஞ்சனை யில்லாமல் மூவஞ்சு கலமாக
வழுத்து மிருபத்தேழ் கலம் வரைக்கும் (159)

இருபத்தேழாம் கலம் இருக்கும் தொகையுடன்
இருபத் தாறுங் கலத் தொகைகூட்டி
மருவில்லா மலிருபத் தெட்டாங் கலம்
மார்க்கமதாக வழுத்து மேபார் (150)

பார்ப்பாயே நீயும் இருபத்திஒன்பதில்
பாங்கான இதரவஜா முழுவதும்
கேட்பாயே அந்தவஜாப்போக நிகரத்ததைக்
கிட்டியகலமது முப்பதினில் (161)

முப்பதாம் கலமது வஜாப் போக நிகரமும்
முப்பத்தொன்றில் ஏழின்சில்லரையும்
தப்பில்லாக்கலங் களிரண்டுஞ் சேர்ந்தமொத்தம்
சாற்றுதல் முப்பத்திரண்டாகும் (162)

ஆறும்பத்தா நம்பர் போஸ்டிங்கின் செஸ்களை
அறையுமே முப்பத்து மூன்றாங் கலம்
வாகுள்ள ஒன்பதாம் நம்பரின் செஸ்களை
வழுத்துமே முப்பத்து நாலாம் கலம் (163)

முப்பத்து நாலாம் கலத்தின் தொகையுடன்
முப்பத்து மூன்றும் கலத் தொகையைத்
தப்பின்றிக் கூட்டிட வந்திட்ட செஸ்மொத்தம்
தக்ககல முப்பத் தைந் தியம்பும் (164)

இயம்பிடும் முப்பத் தாறுங்கல மதில்
ஏற்பட்டது மொத்தம் லோக்கல் பண்டாம்
நயம்பெறும் ஸ்பெஷல் பண்டு விவரத்தை
நாட்டுங் கலமது முப்பத் தேழாம் (165)

முப்பத்தஞ்சு முப்பத்தாறு முப்பத் தேழு
மூன்றுகலம் கூட்டி வந்த தொகை
செப்ப மதாகவே முப்பத்து எட்டினில்
சேர்ந்திருக்கும் முப்பத் தொன்பதைக் கேள் (166)

முப்பத் திரண்டில் முடிந்த தொகையுடன்
முப்பத் தைந்தாங்கலத் தொகை சேர்த்துத்
தப்பின்றிக் கூட்டிய மொத்தந் தொகையதைச்
சாற்றுங் கலம் முப்பத் தொன்பதாகும் (167)

கலமுப்பத் தாறினில் கண்ட தொகையுடன்
கலமுப்பத் தேழ்கண்ட தொகை சேர்த்து
நலமாகவே இதன் நாற்பதாம் கலத்தினில்
நாட்டி யிருப்பதைக் கேட்டறி வாய் (168)

கேட்டறிவாய் கலம் முப்பத்து ஒன்பதில்
கிடைத் திருக்கும் தொகை தன்னுடனே
நாட்டி யிருக்கின்ற நாற்பதாம் கலந்தனில்
நாடும் தொகை சேர்த்து நாற்பத்தொன்றில் (169)

நாலு பத்தொன்றெனும் நாற்பத் தொன்றுங்கலம்
நாட்டி யிருக்கும் தொகை தானும்
சில மிகுந்த கிராம முழுதுக்கும்
சேர்ந்த மொத்தம் பேரீஜ் என்றறிவாய் (170)

என்றறிவாய் கணக் கேழாம் நம்பரில்
இருக்கின்ற பாரஸ்ட் ரிவினியூ மொத்தம்
நன்றாயிதன் கலம் நாற்பத் திரண்டினில்
நாட்டி யிருப்பதைப் பார்த் திடுவாய் (171)

பார்த்திடு வாய்கீழே பேரீஜ்வஜாக் களைப்
பகருங் கலமுப் பத்தொன் பதின்கீழ்
நேர்த்தி யுடனே பதிந்து சமீத்ததை
நேராகப் பார்த்துத் தெரிந் திடுவாய் (172)

தெரிந்திடு வாயேநீ சென்ற பசலியில்
சேர்ந்த விவர முழுவதையும்
விரிந்த கலங்களில் விவரித் திருப்பதை
விருப்பத்துடன் உந்தன் கருத்தில் வைப்பாய் (173)

கருத்தினில் வைப்பாயே (ஏ)ரிஜிஸ்டர் முதலாக
கணக்கு நம்பர் பன்னிரண்டு வரை
திருத்தமாகக் கிராமக் கணக்கு மான்யூல்தனில்
செப்பும் விபரம் முழுவதையும் (174)

முழுது மெடுத்து விவரம தாகவே
மொழிந் திருக்கின்ற வகை யதனில்
பழுதிருந்தா லதைப் பாலகர் மொழிபோலப்
பாவலர் ஏற்று மன மகிழ்வார். (175)

சம்பாஷணை

இராமன்.— தம்பி லட்சுமணா! (ஏ) ரிஜிஸ்டர் (பி) ரிஜிஸ்டர் என்ற இரண்டு ரிஜிஸ்டர்களையும் 1-ம் நம்பர் முதல் 12-ம் நம்பர் வரையிலுள்ள கணக்குகளையும் அவைகளின் விவரங்களையும் ஒருவர்க்கொருவர் கதை பேசுவது போல சம்பாஷணை செய்து கொண்டு வந்து உன் கருத்தில் பதியும் விதமாக எடுத்துரைத்தேனே அதை நன்றாய்த் தெரிந்து கொண்டாயா?

லட்சுமணன்— ஆம் அண்ணா! (ஏ) ரிஜிஸ்டர் முதல் 12-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டு வரையிலுள்ள கணக்குகளின் விவரங்களை நன்றாய்த் தெரிந்து கொண்டேன். கோபாலனுக்குத் தாங்கள் கூறிவந்த கும்மிப் பாட்டானது என் மனதில் நன்றாய்ப் பதிந்து கொண்டது. அவ்விதமாகவே 13-ம் நம்பர் முதல் 24-ம் நம்பர் வரையிலுள்ள கணக்குகளின் விவரங்களை எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்கிறேன் அண்ணா.

ஜெகநாதன்— அண்ணா! 13-ம் நம்பர் முதல் 24-ம் நம்பர் வரையிலுள்ள கணக்குகளைப் பற்றி பின்னால் கேட்டுக் கொள்கிறோம். தாங்கள் சொல்லி வந்தபடி கிராம மொத்தம் பேரீஜ் தெரிவதற் கேற்பட்ட 12-ம் நம்பர் ஜமாபந்தி கோஷ்வாரா வரையிலுள்ள கணக்குகளை முடிக்கும் விதங்களை விவரமாக எடுத்துரைக்க வேண்டும் அண்ணா.

இராமன்— அப்படியே சொல்லுகிறேன் கேட்டுக் கொண்டு வாருங்கள். லட்சுமணனுக்குச் சொன்ன விதமாக வசனமாகச் சொல்ல வேண்டுமா? கோபாலனுக் குரைத்த பிரகாரம் கும்மிப் பாட்டாகச் சொல்ல வேண்டுமா? என்பதைத் தெரிவித்தால் உங்கள் இஷ்டம் போல் எடுத்துக் கூறுகிறேன்.

ஜெகநாதன்—அண்ணு! பாட்டாகச் சொன்னுல் தான் மனதில் நன்ருய்ப் பதிகிறது. பாட்டாகத் தான் சொல்ல வேண்டும். ஆனுல் கணக்குகளின் விவரங்கள் கும்மிப் பாட்டுகளாகவும் கணக்குகள் தயார் செய்யும் விதங்கள் சிந்துப் போக்காகவும் இருந்தால் சிலாக்கியமாய் இருக்கும் சித்தத்திலும் நன்ருய்ப் பதியும் என்று எண்ணுகிறேன்.

இராமன்—ஜெகநாதா! உன் சித்தத்தில் நன்ருய்ப் பதியும்படியாக சிந்தாகவே சொல்லுகிறேன். கேள்.

சிந்து

(பல்லவி)

சொல்லுவேன்கேளாய் கிராமக்கணக்குமுடிக்கும்வகைச்
சுருக்கத்தைநேராய்

(அனுபல்லவி)

சொல்லுவேன் சகலமும் சுருக்கவகையாகத்
தொல்லுலகந்தன்னில் உள்ளோரறிந்திடச் (சொ)

(சரணம்)

ஏ—ரிஜிஸ்டர்

(ஏ)யென்றும்(பி)என்றும் நிலையானரிஜிஸ்டர்ரெண்டு
இதமுள்ளசெட்டில்மெண்டார்கள் கொடுத்ததுண்டு
(ஏ)என்னும்ரிஜிஸ்டரில் எல்லாவிவரமுண்டு
இதன்ஷராக்கலந்தனில் அநேகவிவரங்கண்டு
எழுதவேவேணும் எழுதும்விவரத்தை
இயம்புவேன் நானும்

புறம்போக்குவிவரங்கள் புராதனக்கட்டிடங்கள்
பூமியில்புதைத்திடும் புகழ்நீலத்தொட்டிகள்
சாஸ்வதக்கிணறுகள் சார்ந்தகால்வாய்கரைகள்
சாருங்கிணறுகளின் தன்மையளவுகள்

எல்லாம்குறித்து ஜலத்தின் ஆழமதை
எடுத்துப் பூரித்து

கிணறுகள் தவிரவேயற்ற சொந்தபாசனங்கள்
கிடைத்திட்டகாலத்தில் கலெக்டரால்தான்கொடுத்த
உத்திரவின் நம்பருடன் உற்றதேதிவிவரங்கண்டு
உரிமையாய்நிலையான மாறுதல்முழுவதும்
பதிவாயேதோழா நிலையானமாறுதல்
பகருவேன் கேளாய்

நிலையாகவேயிருக்கும் பாபத்துமாறுதல்
நேரானசப்டிவிஷ ஞலேபிரிகுதல்
பலவிதவகைகளால் நிலம்ஜாரிசெய்குதல்
பட்டாநிலங்களை விட்டுவிடுகுதல்
இவைஎல்லாம்தானே காயமாறுதலென்று
எடுத்துரைத் தேனே

ஏ-ரிஜிஸ்டர் உள்ளடக்கம்

(ஏ)ரிஜிஸ்டர்தன்னிலே ஏற்படும்மொத்தத்தை
ஏற்கையுடன் தரவாரிபிரித்ததை
ஆவனுடன்மொத்தம் கூட்டிப்பதிவதை
ஆயக்கட்டைக்காட்டும் கோஷ்வாராவென்றதைச்
செப்புமேமான்யூல் மற்றவிவரத்தைச்
சீருடன் நீகேள்

பீ-ரிஜிஸ்டர்

இனம்நிலமுழுவதும் (பீ)ரிஜிஸ்டர்தனிலுண்டு
இதன்கலம்ஒன்பதில் ஏற்பட்டகுயிட்ரெண்டு
ஏற்றஇனங்களை ஏற்கும்ஐவகைகண்டு
இனவாரியாகவே பிரித்துஎழுதவேண்டும்
கவனித்துப்பாராய் இனம்ஐந்தின்விவரத்தைக்
கழறுவேன் கேளாய்

தேவதாயம்நல்ல சிறந்திடும்தர்மா.தாயம்
சேர்க்கையாம்ஊழியம் சொந்தந்தசபந்தம்
ஆவலாய்இவ்விதம் ஐந்துவகையாகவும்
அதிலுள்ளகுயிட்ரெண்டை ஸ்தலவாரியாகவும்
பதியவேவேணும் (தவணை)நோட்டின்விவரத்தை
பகருவேன் நாளும்

தவணைநோட்டு

சோதனைநோட்டென்று சொல்லுங்கணக்கொன்று
தொடர்கலம்மூன்றுவரை அடங்கல்தனைக்கொண்டும்
பாக்கிபதின்மூன்றும் பிற்பாதிபூமிகண்டும்
பார்த்தவிவரத்தைப் பென்சலால்பதியவேண்டும்
ஷராக்கலம்தனிலே சார்ந்தவிவரங்கள்
நாலுண் டதிலே

அரைகுறையாகச்செய்யும் சாகுபடிகளை
அளந்துலிங்ஸ்கணக்காகப் பதிவுசெய்யவைகளை
ஆருக்கும்பட்டாவாகா சர்க்கார்நிலங்களை
அனுபோகம்செய்திடும் நபர்களின் தன்பேரை
பதிவாயேநண்பா இதரகைப்பற்றின்
விவரத்தைத் துண்டாய்

முன்மாதம் மழையினுல் முளைத்த பயிர்களுக்கு
பின்மாதத்தில் தண்ணீர் பாய்ச்சினு லவைகளுக்கு
இன்னபாசன மென்றும் இவ்விதப்பாய்ச்ச லென்றும்
எடுத்தந்த விவரத்தைத் தொடுத்துவிரிவாக
குறித்திடுவாயே வீட்டுக்குவந்தபின்
மைகொடுப் பாயே

1-நிர். ஸ்டேட்டுமெண்டு தவணை.

இவ்விதமாகவே ஒவ்வொருமாதமும்
எழுதிமுடித்தபின்பு இக்கணக்கதைக்கொண்டு

சாகுபடி விவரத்தைச் சாற்றுமுசல்நம்பரில்
சர்க்கார்இனுமெனப் பிரித்துஒவ்வொன்றினில்
நஞ்சை, புஞ்சை, என்றும் விவரித்துஅதன்பின்னே
புறம்புகல் கண்டும்

பயிர்வாரியாகவே பாரப்படிபதிந்து
பதிந்தபின்ஒவ்வொரு பயிரின்மொத்தம்தெரிந்து
தெரிந்திடுமொத்தத்தைச் சேர்த்துஒன்றாய்க்கூட்டி
சிரானகோஷ்வாராவில் நேராகவேகாட்டி
முன்மாதத்தவணை சேர்ந்திட்டசாகுபடி
தன்னுட னிதனை

கூட்டிநாளதுமாதம் வரையிலோர்மொத்தமிட்டு
கோஷ்வாராஅடியினில் கர்ணம்கையொப்பமிட்டு
அந்தந்தமாசத்தில் ஐயஞ்சுதேதிக்குள்
ஆவலுடனெடுத்து மேவுமின்ஸ்பெக்டருக்கு
இதனோடுஅன்பாய் இதன்(ஏ)உள்ளடக்கமும்
இருபதாம் நம்பர்

இரண்டுகணக்குகளும் இதரமிமோக்களும்
இக்கணக்கோடுதான் முக்கியமாகவே
சேர்த்தனுப்பவேண்டுமென்று செப்புமேமான்யூலும்
சேருமுள்ளடக்கத்தின் விவரத்தைநீர்கேளும்
மாதங்கள்தோறும் சாகுபடியுடன்
அறுவடை கூறும்

1-நிர். ஸ்டேட்டுமெண்டுக்கு(ஏ)உள்ளடக்கம் மாதப்பயிர்வாரி.

தவணைக்கணக்கினில் தாக்கல்செய்பயிர்களை
சர்க்கார்இனுமென்று பேதமில்லாமலே
ஒருபோக, மிருபோக, முற்றிடும்முப்போகம்
உகந்துநீர்பாயாத பயிர்களும்பாய்ந்ததும்
சகலமும்ஒன்றாய் சேர்த்துமேகூட்டிய
மொத்தத்தை நன்றாய்

மொத்தத்தைகூட்டியே   கலம்ரெண்டில்வரைவாயே
முன்மாதம்வரைமொத்தம்   கூட்டிமூன்றில்பதிவாயே
அறுவடைபயிர்களை   ஆகும்தகவலைநோட்டில்
ஆனஎட்டொன்பது   பதினாலுபதினைந்து
கலங்களைப்பார்த்து   பாரப்படியேதான்
பிரித்துப்பின்   சேர்த்து

நாலாங்கலமுதலாக   நாடும்ஒன்பதுவரை
நாட்டிப்பின்பத்துமுதல்   பதினைந்துகலம்வரை
சென்றமாதக்கணக்கில்   சேருங்கலம்பத்துமுதல்
சீரானபதினைந்துகலம்   வரைதொகைகளை
இதனோடுகூட்டி   பத்துமுதல்பதினைந்து
கலங்களில்   காட்டி

பகரும்மூன்றும்கலத்தில்   பதிந்ததுகையதனில்
பதினைந்தாங்கலத்தொகையைக்   கழித்துப்பதினாறில்
இதமாகப்பதியவே   இருப்புப்பயிராகும்
இதன்மேனிபதினேழில்   சூன்மாதம்தானாகும்
மொத்தமும்சேரு   முதல்நிம்பர்கணக்குக்கு
ஒத்துமே   பாரு

2 நிர்ஸ்டேட்டுமெண்டு அடங்கல்

அடங்கல்கணக்கென்னும்   ரெண்டாம்நம்பர்ஸ்டேட்டுமெண்டாம்
அயன்இனாம்வேறாக   பிரித்துமேசெக்ஷன் இரண்டாய்
அதற்குமுன்பசலியின்   அடங்கல்தனைக்கொண்டும்
அந்தப்பசலிநம்பர்   மூன்றின்மாறுதல்கண்டும்
நஞ்சை,புஞ்சை,என்றும்   சீஎன்னும்உட்பிரிவில்
புறம்புகல்   கண்டும்

(ஏ)நஞ்சை(பீ)நஞ்சை   என்றுஎழுதிக்கொண்டு
(ஏ)என்னும்நஞ்சையைப்   பாசனவாரிகண்டும்
இருபோகம்கம்பவுண்டு   ஒருபோக,வரிசையாய்
எட்டுக்கலம்வரையில்   பட்டாநிலமுழுதும்

திட்டமாய்க்குறிப்பார்　　மற்றவிவரங்கள்
சீருட　　னுரைப்பேன்

சர்க்கார் தருசுகளைச்　　சார்ந்தகலம்ஐந்துவரை
தாக்கல்செய்தவைகளில்　　சாகுபடிசெய்தவரை
ஆறுங்கலந்தனில்　　அவர்பேரைப்பதிவாயே
அடுத்தகலம்ஏழும்எட்டும்　　நிலத்துடன் தீர்வையும்
பதிவுகள்செய்வாய்　　ஒன்பதுமுதலாகப்
பதினொன்று　　வரையில்

தவணைநோட்டல்லது　　தவணைக்கணக்கைவைத்து
சாகுபடிவிவரத்தைச்　　சரியாகப்பூரித்து
சார்ந்தகலம்பனிரண்டில்　　தரும்ஷராக்குறிப்பிட்டுச்
சகலபாபத்துகளைத்　　தனித்தனிமொத்தமிட்டுக்
கோஷ்வாராசரியாய்　　இரண்டுபிரிவுக்கும்
குறிப்பாயே　　தனியாய்

அடங்கல்கலம்மூன்றுநாலும் ஆயக்கட்டைத்தெரிவிக்கும்
ஆதியாம்(ஏ)ரிஜிஸ்டர்　　மொத்தத்திற்சொத்திருக்கும்
அப்பசலி(இரண்டையில்)　　கண்டதொகைதனக்கும்
ஆலனுடனேஒத்து　　மேவியிருக்கவேண்டும்
என்பதையறிவாய்　　இதன்கலம்ஏழெட்டில்
சைப்பற்றைத்　　தெரிவாய்

தெரியும்(நம்பர்மூன்றேயில்)　　சேர்ந்திட்டகைப்பற்று
சேருங்கலம்ஏழுஎட்டில்　　கண்டதொகைக்குஒத்து
இருந்திடவேவேண்டும்　　என்பதையறிவாயே
இனம்நிலக்குயிட்ரெண்டை　　எட்டாங்கலம்பதிவாயே
பக்ஷமுள்ளநண்பா　　இதன்உள்ளடக்கத்தைப்
பகருவேன்　　அன்பாய்

2-திர். ஏ-உள்ளடக்கம்.

ஏக்சால் கைப்பற்றுக் கணக்கு.

(ஏ)முதல்(இ)வரையில் ஐந்துள்ளடக்கமுண்டு
(ஏ)ஒன்பதுகலமும் இரண்டாம்நம்பர்கணக்கைக்கொண்டும்
இசைந்தபத்தாங்கலம் (ஏ)ரிஜிஸ்டர்தனைக்கொண்டும்
ஈராறுகலமதை (ஏ-பி-மிமோ)பைசல்கொண்டும்
எழுதவேவேணும் (பீ)உள்ளடக்கத்தை
இயம்புவேன் நானும்

2-திர். பீ-உள்ளடக்கம்.

வருஷவாரிப் பயிர்வாரி.

முதல்நம்பர்கணக்கிலுள்ள மாதமுங்கான்கைக்கூட்டி
முதல்கலம்தன்னிலே பயிர்களின்பேரைநாட்டி
நீர்பாய்ந்தகலத்தின்நேர் நீர்பாய்ந்தமொத்தத்தை
நேராய்ப்பதிந்துகொண்டு நீர்பாயாப்பயிர்களை
மொத்தமதுகூட்டு நீர்பாயாக்கலத்தின்நேர்
எடுத்துமே காட்டு

சார்ந்திடுமிதன்மொத்தம் (தவணை)யின்மொத்தத்துக்கும்
தவணைஉள்ளடக்கத்தில் சார்ந்தமூன்றுங்கலத்துக்கும்
சரியாயிருக்கவேண்டும் என்பதையறிவாயே
சார்ந்துநீர்பாய்ந்ததை (டி)யதில்தெரிவாயே
(சிஉள்ளடக்கம்) மூன்றுபிரிவுகள்
இக்கணக்கில் ஒடுக்கம்

2-திர். சி-உள்ளடக்கம்.

தோட்டம் தோப்புக் கணக்கு.

கவர்மெண்டுதோட்டங்களைப் பிரிவொன்றில்காட்டவேண்டும்
கண்டபிரிவிரண்டில் குடிகள்சொந்தத்தோப்புக்கண்டும்

தனித்தனியாகநின்று மாத்தீர்வைகுத்தகை
சர்க்காருக்குக்கொடுக்கும் மாங்களைபிரிவுமூன்றில்
பதியவேவேணும் இக்கணக்கெழுதும்வகை
பகருவேன் நானும்

சென்றபசலி(ரெண்டின்) (சிஉள்ளடக்கங்)கொண்டு
சேரும்மாக்கைபிதின் தீர்வைகள்சேர்த்துக்கொண்டு
கழிக்கும்வகையிருந்தால் கழித்துவிவரங்களை
கழித்ததுபோகமிற்கும் தொகைதன்னைக்காணவேண்டும்
கவுல்தோப்புதன்னை முதலாம்பிரிவுதனில்
சேர்ப்பாயே சொன்னேன்

2-நிர். டி-உள்ளடக்கம்.

நீர்பாய்ந்த வருஷவாரிப் பயிர்வாரி.

(டி)உள்ளடக்கத்தை சேரும்கலம்ஒன்பதாண்டு
சிருடன்எழுகலம் (அடங்கல்)தனைகொண்டும்
எட்டுடனென்பது (இரண்டின்)(பி)தனைக்கொண்டும்
இருபோகம்,ஒருபோகம், எல்லாம்ஒன்பதிலடங்கும்
கலம்ஒன்றில்நண்பா பத்தேக்கருக்குமேல்பட்ட
ஏரியை அன்பாய்

தனித்தனியாகவே சாற்றும்அதன்பேர்களை
தாக்கல்செய்ததின்பின்னே தரும்ஆற்றுக்கால்களை
உறுதியாய்ப்பதிந்தபின் ஊற்றுக்கால்அணைக்கட்டு
உற்றதனிஆயக்கட்டுக் கிணறுடன்மற்றவை
வரிசையாயெழுதி மற்றகலங்களை
வாகுடன் பூரி

ஈரிரண்டாங்கலந்தனில் எழுதும்விஸ்தீரணம்
(இருமூன்றுங்கம்பரில்) இருக்கும்புஞ்சைதனக்கும்

தனியாயக்கட்டுநீர் தான்பாய்ந்தபுஞ்சைக்கும்
சரியாகத்தானைத்துப் பதிவாயேநீயெடுத்து
மூன்றுங்கலத்தில் சொந்தக்கிணறுக்கொன்றும்
பதியாமல் விலக்கி

ஐந்தாங்கலந்தனில் அயன்இனம்நஞ்சைதனில்
ஆகிடும்சாகுபடி முதல்போகம்பதிவாய்சொன்னேன்
நாலுடன்ஐந்தும்கூட்டி நாடும்ஆறும்கலந்தனில்
நலமாகப்பதிந்தேழில் பலமாகும்ஸ்திதிதன்னை
எழுதுவாய் நண்பா(இ)உள்ளடக்கத்தை
இயம்புவேன் அன்பாய்

2-நிர். இ-உள்ளடக்கம்.

மொத்தம் ஆயக்கட்டுக் கணக்கு.

கவர்மெண்டினம்வகைகள் கணக்கிடாஸ்தலங்களும்
காணும்புறம்போக்குகளும் கனத்தபாரஸ்டுகளும்
ஐந்துவிதம்பிரித்திருக்கும் ஆயக்கட்டுப்பிரிவுகளில்
அதற்குமுன்பசலியின் (இ)உள்ளடக்கங்கொண்டு
முன்னாலேபதிந்து நிகழ்பசலி(நம்பர்மூன்றின்)
விவரத்தைத் தெரிந்து

கழிக்கும்தொகைமுழுதும் கம்மிவகையில்பதிந்து
கம்மியைக்கூட்டிமொத்தம் என்பதின்நேர்வரைந்து
கம்மியின்மொத்தத்தைக் கழித்துநிகரங்கண்டு
கலமாகும்ஜாஸ்திவந்தால் இனமாயவ்வகைகளில்
பதிவாயேநேராய் அவைகளைக்கூட்டியே
மொத்தத்தில் சீராய்

3-நிர். ஸ்டேட்டுமெண்டு

மாறுதல் கணக்கு.

மூன்றும்நம்பர்கணக்குக்கு முக்கியபிரிவுநாலாம்
முதலாம்பிரிவுதன்னில் விடுதலைராஜினாமா
இரண்டாம்பிரிவில் அட மானமெனும்தர்க்காஸ்தும்
இணங்கும்பிரிவுமூன்றில் இசையும்பட்டாமாறுதலும்
நாலாம்பிரிவில் இதரமாறுதல்களைப்
பதிவாயே விரைவில்

பட்டாமாறுதலென்று பகரும்மூன்றாம்பிரிவில்
பாங்குடனேரிவினியூ பாக்கிக்கேலமெடுத்தது
கோர்ட்டுஉத்திரவின்படி கூறுமேலமெடுத்தது
கொடுக்குங்கிரையமுதல் தானமடுத்தது
என்றேஒழுங்காய் மூன்றுட்பிரிவாக
எழுதியே நன்றாய்

பன்னிரண்டுவருஷம்ஊரில் பட்டாதாரில்லாமல்
பாங்குடனேயிருக்கும பட்டாதார்பேர்களை
மாற்றிடவேணுமென்று மகிமையுள்ளஸ்டாண்டிங்ஆர்டர்
மருத்துவமுப்பத்தொன்றில் அடுத்தேழில்உரைத்திடும்
இவைகளிருந்தால் நாலெனும்உட்பிரிவில்
பதிவாய் ஒழுங்காய்

பாக்கிக்கேலம்போட்டதென்று பகருமொருஉட்பிரிவில்
பக்ஷமுள்ளகவர்னமெண்டார் பற்றினதை(ஏ)என்றும்
பட்டாதாரும்குடிகளும் பஹிரங்கத்திலெடுத்ததை
பாங்குடனே(பீ)என்றும் பதிவுகள்செய்வதற்கும்
இவ்விதமாக ஒவ்வொருபிரிவுக்கும்
இடம் தக்கதாக

பாரங்களைச்சேர்த்துப் பலமாகவேதைத்துப்
பாங்குடனுத்திரவு வாங்கிஉடனேக்குடன்

அந்தந்தப்பிரிவினில் அன்பாய்ப்பதிந்துவந்து
ஆகிடுஞ்ஜமாபந்தியில் கூடிடும்மொத்தம்தெரிந்து
மொத்தமும்போடு ஷராக்கலம்தனில்மாற்றும்
கணக்கதைக் கூறு

3-நிர். ஏ-உள்ளடக்கம்

மாறுதல் கோவ்ஷ்வாரா.

கூறுவேன் (மூன்றேயின்) குணத்தைத்தெரிவாயே
கூடுங்கைப்பற்றுடன் மாறுதல் அறிவாயே
ஐட்டம்பதினொன்று ஆனகலம்ஒன்றிலுண்டு
அந்தப்பதினொன்றும் (மூன்றும்நம்பர்) தனில்கண்ட
மாறுதல்படியே செக்ஷன்ஒவ்வொன்றையும்
பார்த்துநீ பதியே

முன்பசலிகணக்கைவைத்து முதல்ஐட்டம்தன்னையும்
(மூன்றும்நம்பரில்) கண்ட முதல்பிரிவால்இரண்டையும்
பட்டாமாறுதலென்னும் மூன்றுலேமூன்றையும்
பதிந்துபின்நான்காலே நாலென்னும்ஐட்டத்தையும்
எழுதியேகூட்டி ஐந்தென்னும்ஐட்டத்தில்
இதன்மொத்தம் காட்டி

ஐட்டம்ஒன்றிலிருந்து ஐட்டம்ஐந்தைக்கழித்தும்
அதில்வந்தநிகரத்தை ஐட்டமஆறில்குறித்தும்
ஏழென்னும்ஐட்டத்தில் பிரிவிரண்டின்தர்க்காஸ்தை
எடுத்துப்பதிந்துகொண்டு இசைந்தபட்டாமாறுதலை
ஐட்டம்எட்டில் வரைவாய்இதராமாறுதலெல்லாம்
ஒன்பதில் பதிவாய்

பதிந்தஜாஸ்திகூட்டியே பத்தாமைட்டம்காட்டியே
பாக்குள்ளஆறுமைட்டத் தொகையுடன்கூட்டியே

பதினொன்றாமைட்டத்தில் பதிவுகள்செய்யவேண்டும்
பதினொன்றின்தொகைதானே நிலைத்தசைப்பற்றென்றும்
சொல்லுவதைஅறிவாய் இனாம்நிலம்தன்னையுந்
துண்டாக வரைவாய்

4-நிர். ஸ்டேட்டுமெண்டு

பேரீஜ் வஜாக்கணக்கு

நாலாம்நம்பர்கணக்கென்று நவிலும்கணக்கொன்று
நாடுங்கலம்ஐந்துவரை மேல்உத்திரவுகொண்டு
பாங்கான ஆறுமுதல் பதினொன்றுகலம்வரை
பட்டுவாடாநபர்களுக்குப் பட்டுவாடாசெய்ததின்மேல்
எழுதிமுடிப்பாய் ஐந்தாம்நம்பர்கணக்கை
இயம்புவேன் குறிப்பாய்

5-நிர். ஸ்டேட்டுமெண்டு.

I-வது உட்பிரிவு.

வஜாப்பட்டி

பகரும்சர்க்கார்இனாம் என்றிரண்டுபிரிவாகப்
பாசனவாரியாகப் பட்டாவரிசையாக
அடங்கல்கணக்கைவைத்தும் ஆனதவணைநோட்டைவைத்தும்
அதிகாரிஅனுப்பிய வஜாமனுதனைவைத்தும்
கலம்ஒன்பதுவரையில் ஷான்போக்கெனும்கர்ணம்
காட்டியே விரைவில்

பத்தாங்கலந்தனில் (அடங்கல்) கலம்பதின்மூன்றின்
பதிவுக்குக்காப்பியும் பற்பலவிவரமும்
குறித்ததின்பின்னாலே குணமிகும்தாசில்தார்
கூறும்ஷராவதனை குறிப்பாரேபதினொன்றில்

டிவிஷனுபீசர் கலம்பணிரெண்டினில்
பைசனும் செய்வார்

பைசலின்பின்னாலே நிலைத்தவஜாத்தெரிந்து
பதின்மூன்றாம்கலந்தனில் பதாரமலேபதிந்து
மொத்தமதுபோட்டு மொத்தம்வஜாத்தெரிவாயே
முக்கியமுதல்பிரிவு தக்கதென்றுஅறிவாயே
இரண்டாம்பிரிவாம் நாலுவகையாக
எடுத்துமே வரைவாம்

5-நிர். ஸ்டேட்டுமெண்டு
II-வது பிரிவு.
சாங்கிஷனான வஜாக் கணக்கு.

காலஸ்திதிஎன்பதைக் காட்டவேண்டுமுன்னாலே
கண்டபின்இறவை வஜாக்களைப்பின்னாலும்
அதற்குப்பின்தசபந்த வஜாக்களெழுதவேண்டும்
அதன்பின்கவுல்வஜாவைத் தெளிவாகக்காட்டவேண்டும்
இந்தப்படியாய் முதல்பிரிவுபதின்மூன்றாங்
கலமிருந்து சரியாய்

சர்க்கார்இனம்பிரித்துச் சாற்றுங்கலங்களில்
சார்ந்தபாசனவாரி தகுந்திடும்பட்டாவாரி
பிரித்தந்தபாரத்தில் பெருமையாங்கலங்களில்
பேசும்எழுவிதமாக நேசத்துடன்பதிந்து
கடாசிக்கலத்தில் ஒவ்வொருபட்டாவுக்கும்
கூடும்மொத்தம் துலக்கி.

கோஷ்வாராஒன்றுமே குணமாகப்போட்டுமே
குறிக்குந்தருசுவஜா கூறும்(ஐந்தாம்நம்பர்)வஜா
(ஏழாம்நம்பர்கணக்கினில்) எழுதும்இதரவஜா
என்றவிவரத்துடன் நன்றாகக்காட்டிக்கூட்டி

மொத்தமும்போடு முதல்பிரிவுபதின்மூன்றும்
கலத்துக் கொத்துப்பாரு

5-நிர். ஸ்டேட்டுமெண்டு III-வது பிரிவு

ஸ்பெஷல் வஜாக் கணக்கு

மழையேயில்லாததாலும் ஜாஸ்திமழைபெய்ததாலும்
மாநிலத்தில்விளைவின்றி மயங்குகின்றகாலத்திலும்
கிராமத்தில்பஞ்சம்வந்து கெஞ்சுகின்றகாலத்திலும்
செவர்ன்மெண்டிலிருந்துமே கிடைக்கும்வஜாஒன்று
அந்தவஜாவை மூன்றெனும்பிரிவினில்
அன்புடன் பதியே

6-நிர். ஸ்டேட்டுமெண்டு

தண்ணீர்த் தீர்வைக் கணக்கு

ஆறும்நம்பர்கணக்குக்கு அயன்இனம்பிரித்துமே
ஆனபாசனவாரி அதற்குள்ளேபட்டாவாரி
தெளிவாயிவ்வரிசையில் தீர்வைஜாஸ்திபசலிஜாஸ்தி
செப்பும்புறம்போக்குகளும் சிவாய்ஜமாவகைகளும்
தனித்தனியேதான் எழுதும்விவரத்தைக்
கவனிப்பாய் நீதான்

முதல்கலமுதலாக மூவிரண்டுகலங்களும்
மொழிந்திடும்ஒன்பதும் பத்தும்பதினொன்றும்
அடங்கல்கணக்கைக்கொண்டும் ஆனதவணைநோட்டைக்கொண்டும்
அக்கரையாகவேதான் பக்குவமாய்ப்பதிந்து
பதினாலாம்கலத்தில் தண்ணீர்மனுஉத்திரவின்
விவரத்தைக் குறித்தும்

கவனமாகக்கர்ணம் கையெழுத்துச்செய்திடுவார்
கர்ணம்பதிந்தபின்பு கனமிகும்இன்ஸ்பெக்டர்

பதினைந்தாம்கலந்தனில் பாய்ச்சல்விவரங்களும்
பாய்ச்சலால்விளைந்திட்ட பயிர்களின்ஸ்திதிகளும்
எழுதுவார்சரியாய் இசையுமிப்பதினைந்தில்
கர்ணம் ஷராவும்

இருந்திடும்மான்யூலே எடுத்துநீதெரிவாயே
ஈரெட்டில்தாசில்தார் தன்ஷராப்பதிவாரே
இதற்குமேல்பதினேழில் ஜமாபந்திஆபீசர்
என்னைப்படிசெய்த பின்னமில்லாப்பைசலும்
இருப்பதைப்பாராய் மற்றவிவரத்தை
இயம்புவேன் கேளாய்

தாசில்தார்அல்லது ஜமாபந்திஆபீசர்
சட்டமனுசரித்துத் திட்டமாய்ச்செய்திட்ட
தண்ணீர்த்தீர்வைவீதமும் தண்டத்தீர்வைவீதமும்
தாக்கல்செய்திருப்பதை நேர்த்தியுடன்கர்ணம்
கவனித்துப்பார்த்து ஏழுடன்ஈராறு
கலங்கள் பூரித்து

எட்டாங்கலந்தனிலும் இசைந்தபதின்மூன்றிலும்
ஏற்பட்டதண்ணீர்த்தீர்வை எடுத்துப்பதிந்துகொண்டு
தெண்டந்தீர்வைவிஸ்தீரணம் தெரிந்துகலம்பதினெட்டிலும்
சேருந்தண்டத்தீர்வையை செப்பும்பத்தொன்பதிலும்
எடுத்துப்பதிவாய் இதற்கொருகோஷ்வாரா
போடுவாய் சரியாய்

6-நிர். ஸ்டேட்டுமெண்டு ஏ-உள்ளடக்கம்.

தண்ணீர்த் தீர்வை கோஷ்வாரா

பட்டாதார்ஒருவனுக்கு பற்பலபாசனத்தில்
பாய்ச்சலுக்கேற்பட்ட நீர்த்தீர்வைவந்தபோது
சேராகப்பட்டாதாரின் நேராகப்பாசனமும்
சேரும்நீர்த்தீர்வையும் செப்பும்நீர்த்தெண்டமும்

பட்டாவாரியாக பாரத்தில்வாய்த்திட்ட
கலத்தின் நேராக

பதிந்துமேமொத்தம்போட்டு பட்டாநிலநீர்த்தீர்வை
பத்தாம்நம்பர்பிரிவிரண்டில் பகரும்நாலேட்டத்தில்
பாங்காய்ப்பதிந்துகொண்டு பற்றும்வ[illegible]தெல்லாம்
பதாரமேலெடுத்துச் [illegible]கிராமமேலேழாநம்பர்
கணக்கில்பதிவாய் அந்தக்கணக்கெழுதும்
விதத்தைநீ தெரிவாய்

7-நிர். ஸ்டேட்டுமெண்டு.

சில்லறை ஆதாயங்களைக்காட்டும் கணக்கு

இனும்நிலக்குயிட்டெண்டை (பீ)ரிஜிஸ்டர்தனைக்கொண்டும்
ஏக்சால்கைப்பற்றுத்தீர்வை (இரண்டே)கணக்கைக்கொண்டும்
செப்புமரத்தீர்வை(ரெண்டின்) (சீ)உள்ளடக்கங்கொண்டும்
சிராய்எட்டுக்கலம்வரை நேராய்இனவாரியாக
பதிந்துமேகொண்டுநீர்பாய்ந்ததெண்டத்தைத்
(நம்பர்ஆறுல்) கண்டு

இனும்நிலம்தன்னுடன் ஏக்சால்நிலங்களுக்கும்
இசைந்தநீர்த்தீர்வையும் எல்லாத்தண்ணீர்தண்டமும்
ஆறும்நம்பர்கணக்கினில் அடங்கியிருப்பதை
அக்கரையுடனேபார்த்துத் தக்ககலம்ஒன்பதிலே
பதியவேவேண்டும் பதிந்தபின்கலம்பத்தில்
அதன்மொத்தம் கண்டும்

கணக்குநம்பர்(ஐந்தினில்) கண்டவஜாக்களில்
காணும்(ஏழாம்நம்பருக்) குகந்தவஜாக்களைத்
தெரிந்துகலம்பதினொன்றில் தெளிவாகவேபதிந்து
செப்பும்பத்தில்கழித்துமே ஒப்புக்கலம்பனிரெண்டில்
சரியாகப்பதிந்து பதிந்தபின்
அதற்கொரு கோஷ்வாராவரைந்து

கோஷ்வாராதன்னிலே குறிக்கும்வகைமுழுதும்
குணமாகஎடுத்துமே இனமாகச்சொல்கிறேன்
புகலினும்குயிட்ரெண்டு புகலினும்நீர்த்தீர்வை
புலன்களுக்குத்தண்ணீர்வேண்டி நலமாம்உத்திரவின்றி
நீர்பாய்ச்சிக்கொண்ட வகையதற்கேற்பட்ட
தெண்டத்தைக் கண்டே

மூன்றுவதைட்டத்தின் முன்னாகப்பதிவாயே
முக்கியமாயிருக்கின்ற தக்கஅதிகாரியிடம்
உத்திரவுபெற்றுக்கொண்டும் உத்திரவுபெறாமலும்
உகந்தநிலம்அனுபவித்துத் தகுந்தபட்டாவாகாமல்
இருக்கும்வகைமுழுதும் நாலென்னும்ஐட்டத்தில்
பெருக்கமா யெழுது

ஐந்தாவதைட்டத்தில் புறம்போக்குக்கைப்பற்றில்
அதற்குள்ளசகலும்நீர்த் தீர்வை அபராதம்
என்றுமூன்றுட்பிரிவாக எடுத்துஎழுதிக்கொண்டும்
இரண்டுவிதவகையிலும் இதாகைப்பற்றைத்துண்டாய்
எடுத்துமேகாட்டி சாகுபடிவிஸ்தீரணம்
தன்னைமுன் நாட்டி

மாப்பட்டாரிவினியூவை ஆறுவதைட்டத்திலும்
மற்றப்படியிதைச்சேரும் பாபத்தைஎழிலும்
பதிவுகள்செய்தபின்பு பாங்குடன்மொத்தங்கண்டும்
பாரஸ்டின்மொத்தத்தை அதன்கீழ்எழுதவேண்டும்
(நம்பர்பனிரெண்டில்) உற்றகலமது
முப்பத்து ஒன்றில்

இதில்கண்டசில்லரை ரிவினியூவின்மொத்தத்தை
எடுத்துப்பதியவேண்டும் இதிலுள்ளபாரஸ்ட்டை
நாற்பத்திரண்டாங்கலம் நாட்டவேவேணுமென்று
நலமாகுமான்யூலும் பலமாயுரைக்குமே
என்பதைஅறிவாய் இதிலுள்ளவகைமுழுதும்
சில்லரை தெரிவாய்

8-நிர். ஸ்டேட்டுமெண்டு.

பாசனவாரிக்கணக்கு.

எட்டாம்நம்பர்கணக்குக்கு (இரண்டு)(ஐந்து)(ஆறு)(ஏழு)
என்னும்கணக்கைக்கொண்டும் (ஏ)ரிஜிஸ்டர்தனைக்கொண்டும்
இனும்சிலவகைகளுக்கு (பீ)ரிஜிஸ்டர்தனைக்கொண்டும்
எட்டாம்நம்பர்கணக்கையும் (ஏ)(பீ)உள்ளடக்கத்தையும்
தயாரிக்கவேண்டும் ஒவ்வொருபாசனத்தைத்
தனித்தனியே கண்டும்

9-நிர். ஸ்டேட்டுமெண்டு.

லோகல்பண்டு ஸ்பெஷல்பண்டுக் கணக்கு.

(ஒன்பதாம்நம்பரில்) லோகல்பண்டுஸ்பெஷல்பண்டு
உகந்திடும்(பீரிஜிஸ்டர்) தன்னைஎடுத்துக்கொண்டு
அதிலுள்ளமானியம் தன்னை இனவாரிகண்டு
ஆனபட்டாநம்பர்,பேர், விஸ்தீரணம்,தீர்வை,என்று
பிரித்தேஇருக்கும் நாலுகலம்வரைக்கும்
எடுத்தே குறித்தும

இரண்டாம்நம்பர்கணக்கின் (ஏ)உள்ளடக்கத்திலே
இருக்கின்றஎக்சாலே இனவாரியாகவே
நாடியேமுன்சொன்ன நாலுகலம்வரையில்
கலமாகப்பதிந்துபின் கலமதுஐந்தினில்
ஆறும்நம்பர்கணக்கால் இவைகளுக்கேற்பட்ட
நீர்த்தீர்வை துலக்கி

நாலாம்கலம்ஐந்தாம்கலம் கூட்டி ஆறில்பூரித்து
நாடுமத்தொகைக்குஎழில் லாண்டுசெஸ்தனைக்குறித்தும்
இதைப்போலசெஸ்ஸுகள் இதரவகையிருந்தால்
இதமாகஅதற்கொரு கலம்ஒன்றுபோட்டுக்கொண்டு
பதியவேவேணும் நிலத்தீர்வைக்குமேலே
மரத்தீர்வை தானும்

ஜாஸ்தியிருந்தாலந்த மாத்தீர்வைதனக்குமே
சாரும்(இரண்டின்சீ) உள்ளடக்கங்கொண்டுமே
இந்தக்கணக்கில்செஸ் ஏற்படுத்தவேண்டுமென்று
இனமாகமான்யூலும கனமாயுரைக்குமே
எல்லாம்அறிவாய் பாசிவாரியைப்பின்
இனவாரி பதிவாய்

கோஷ்வாராபோட்டுக்கொண்டு கூறினவகைகள்நாட்டி
கூட்டிவரும்மொத்தமதை குணமாய்எடுத்துக்காட்டி
பாசிவரிமொத்தம்கீழே பதராமல்பூரித்து
பாங்காயிதனடியில் கர்ணம்கையொப்பமிட்டு
கணக்கைமுடிப்பார் மற்றக்கணக்குகளை
விரித்தே உரைப்பாம்

10-நிர். ஸ்டேட்டுமெண்டு I-வது பிரிவு
நபர்கதி சிட்டா.

கைப்பற்றுக் கணக்கு.

சிட்டாவெனும்பத்தாம்நம்பர் சிறந்தகணக்காகும்
செப்பும்பட்டாவாரியாக சீராயுரைப்பதாகும்
இயம்பும்இந்தக்கணக்குக்குப் பிரிவுகளிரண்டுண்டு
இசைந்தமுதல்பிரிவு ஸ்தலவாரிவிவரங்கண்டு
இருந்திடும்பாராய் முதல்வருஷத்திலே
செட்டில் மெண்டாரால்

கொடுக்கும்பேர்சிட்டாவைக் கொண்டுஎழுதவேணும்
கூறும்பின்பசலியில் முன்பசலிகணக்கைக்கொண்டும்
அப்பசலிமூன்றும்நம்பர் கணக்கின்மாறுதல்கண்டும்
அவைகளுக்கொத்தபடி கூட்டிக்கழித்துக்கொண்டும்
மொத்தமும்காட்டு அந்தப்பசலிக்கிது
முடிந்த கைப்பற்று

மாறுதல்விவரங்களை முதலாம்கலத்திலும்
மார்க்கமுள்ளஉத்திரவின் நம்பருடன்தேதியும்

எட்டாங்கலமென்னும் ஷராக்கலந்தன்னிலே
எடுத்துவிரிவாகவே குறித்திடவேண்டுமென்ற
கணக்குமானியூல்பாரு இரண்டாம்பிரிவெழுதும்
விவரத்தைக் கேளு

10-நிர். ஸ்டேட்டுமெண்டு II-வது பிரிவு.

ஜமாபந்திபைசல்விபரம்.

இரண்டாம்பிரிவெழுதும் விவரத்தைக்கேட்பாயே
ஏற்பட்டஐட்டங்கள் பதினேந்தைப்பார்ப்பாயே
முதல்ஐட்டங்கைப்பற்றை முதல்பிரிவுதனைப்பார்த்து
முக்கியமாய்க்கவனித்துத் தக்ககலம்பூரித்து
தாகதிமுழுதும் இந்தப்பசலிவந்த
தருசு வஜாவும்

ஐட்டம்இரண்டினில் (ஐந்தாம்)நம்பர்கணக்கைக்கொண்டும்
ஆவலுடன்பதிந்தும் அதைக்கழித்துநிகரங்கண்டும்
மூன்றெனும்ஐட்டத்தில் நிகரம்பதிந்துகொண்டும்
மூவிரண்டென்கிற (ஆறும்நம்பர்)கணக்கைக்கொண்டு
நாலென்னும்ஐட்டம் பட்டாநிலத்திலுற்ற
நீர்தீர்வை மொத்தம்

நிலத்தீர்வையுடனந்த நீர்த்தீர்வைகூட்டியே
நேரும்ஐட்டம்ஐந்தின் நேராகக்காட்டியே
(ஐந்தாம்நம்பரில்)கண்ட இதரவஜாக்களை
ஆறெனுமைட்டத்தில் சீராகப்பதிந்துமே
வஜாவைக்கழித்து வஜாப்போகநிகரத்தை
ஐட்டம்ஏழில் குறித்து

எட்டாவதைட்டத்தில் (ஏழாம்நம்பர்)கணக்கில்கண்ட
எல்லாவிதமான சில்லரைமுழுவதும்
எடுத்துப்பதியவேண்டும் என்பதையறிவாயே
ஏழுடன்எட்டைக்கூட்டி ஒன்பதில்பதிவாயே

நீர்த்தீர்வைசேர்த்து ஐட்டம்ஐந்தில்பதிந்த
தொகைதன்னைப் பார்த்து

ஏற்படும்லாண்டுசெஸ்ஸை ஈரைந்தாம்ஐட்டத்தில்
எடுத்துப்பதிந்துகொண்டு இயம்பும்(நம்பர்ஒன்பதிலே)
பதிந்திருக்கும்லாண்டுசெஸ்ஸை பதினொன்றும்ஐட்டத்திலும்
பனிரண்டில்லோகல்பண்டும பதின்மூன்றில்ஸ்பெஷல்பண்டும்
எடுத்துப்பதிவாய் இதிலுள்ளமற்ற
விவரங் தெரிவாய்

பகரும்ஒன்பதுமுதல் பதின்மூன்றைட்டம்வரையில்
பதிவுசெய்ததொகைகளைப் பாங்குடனேமொத்தங்கூட்டி
பதினாலாமைட்டத்தில் பதிந்திடவேண்டுமென்றேன்
பதினாலில்கண்டதொகை பட்டாவின்மொத்தம்என்றேன்
ஐட்டம்பதினைந்தில் நம்பர்(ஏழிலுற்ற)
பாரஸ்டைப் பதிந்து

இரண்டுபிரிவுக்கும் முன்பக்கந்தன்னிலே
இன்பமதாயொரு இன்டெக்ஸ்எழுதியே
பட்டாபதிவுகளுக் கிடம்போதாதிருந்திடில்
பாங்குடன்கடாசிபக்கம் பதிந்திதில்காட்டவேண்டும்
உள்ளடக்கம்ஒன்றும் போஸ்ட்டிங்
ஸ்டேட்டுமெண்டு என்றார்

10-திர். ஸ்டேட்டுமெண்டு.

11-வது பிரிவுக்குள்ளடக்க

போஸ்ட்டிங்.

பட்டாவாரியாகவே பத்திரண்டாம்பிரிவைக்கொண்டு
பதினாலேட்டத்தொகையை இரண்டாங்கலம்பதிந்துகொண்டு
பத்தாவதைட்டத்தில் பதிந்திருக்கும்செஸ்ஸுகளை
பகருங்கலமூன்றதனில் பதிவுகள்செய்யவேண்டும்
கலமதுஇரண்டில் கூட்டிடவந்ததொகை
நம்பர் பனிரண்டில்

நாற்பத்தோரும்கலத்தில் நலமாய்ப்பதிந்திருக்கும்
நாடிடுங்கிராமமொத்தம் பேரீஜுக்குளத்திருக்கும்
இதன்கலமூன்றினில் ஏற்பட்டசெஸ்மொத்தம்
இயம்பும்(நம்பர்பனிரண்டில்) இருபத்தெட்டாங்கலத்தில்
இருக்கும்தொகைக்கு ஏற்பட்டசெஸ்வீதப்
படியே கணக்கு

பார்த்திடப்பதிந்தசெஸ் சரியாயிருக்கவேண்டும்
பைசலாதிவிவரங்கண்ட கணக்குநம்பர்பனிரண்டு
பட்டாவாரியில்லாமலே பலவகையும்மொத்தம்கண்டு
பதிவாகியிருப்பதால் இதமாகஇதில்வந்த
பட்டாமொத்தத்தொகையும் அடுத்தேயிருக்கின்ற
செஸ்மொத்த வகையும்

பதிந்ததுசரியென்று பார்ப்பதற்கேற்பட்ட
பாங்கானகணக்கென்று பகர்ந்திடும்மான்யூலும்
அந்தவிவரந்தன்னை ஆவலுடனெடுத்து
அக்கரையாகவேதான் பக்குவமாயுரைத்தேன்
சரியாகஅறிவாய் மற்றகணக்குகளைச்
சாற்றுகிறேன் விரிவாய்

10-நிர்.ஸ்டேட்டுமெண்டு. ஏ-உள்ளடக்கம்.

பவுத்திகைபீது.

பவுத்திப்பட்டாதார்பேரைப் பதிவாய்கலம்ஒன்றிலே
பகருங்கலமிரண்டைநம்பர் பத்தொன்பதிரண்டினுலே
பவுத்திதாரின்வார்சுகளைப் பற்றுங்கலமூன்றிலே
பதிவாயேகுடும்பத்தில் பாகம்பிரியாவிடில்
தலைவன்பேர்தெரிந்து சாருமற்றவிவரமெல்லாம்
கலம்நாலில் பதிந்து

ஒவ்வொருமாதத்திலும் உற்றமரணங்களின்
உண்மைமுழுவதையும் தன்மையுடனறிந்து

இரட்டைப்பிரதியாக ஈரிரண்டுகலம்வரை
எழுதித்தாலூகாவுக்கு பழுதின்றி அனுப்பவேண்டும்
தாசில்தார்பார்த்து தாக்கல்செய்திருப்பதைச்
சரியாய்ச் சோதித்து

பதிலுக்குயார்பேருல் பட்டாச்செய்வதென்பதை
பதிவுசெய்து அதற்குள்ள ஆதாரவகைகளை
ஐந்தாங்கலந்தனில் அமைத்தொருபிரதியை
அந்தக்கிராமம்கர்ணத்துக்கு அனுப்புவார் தாசில்தார்
கர்ணம்பெற்றவுடனே (இரண்டாம்நம்பர்பத்தாம்நம்பர்)
கணக்குகள் தன்னை

எடுத்துமே இதில்கண்ட பேரைப்பதிந்துகொண்டு
ஏற்றஉத்திரவுநம்பர் தேதியுடனே கண்டு
பைசலானகாபிகளை பைலாகச்சேர்த்துக்கொண்டு
பாங்குடன்ஜமாபந்தியில் தாங்கியதைகாட்டவேண்டும்
ஏழுவருஷம் பட்டாதார்கள்ஊரில்
இல்லாத கேசும்

இறந்துமேபோனதாகப் பாவித்தவைகளேயும்
ஈராறுவருஷமாய் இடையூரில்லாமலும்
ஏற்கையுடன் ஆதரவு இல்லாமலும்அனுபவித்து
இருக்கின்றகேசுகளை இந்தநமூனுவில்
எடுத்துப்பூரித்து கலம்நாலிலேசகல
விவரங் குறித்து

அனுப்பிவைக்கவேண்டுமென்று அறையுமேமான்யூனும்
ஆனதொருபோர்டார்டர் முப்பத்தொன்றில்ஆறுஏழு
பாராக்களில்கண்ட படிநடபடிக்கைகள்
பாங்காகநடத்தியே தீங்கின்றித்தாசில்தார்
பைசல்செய்திடுவார் செய்ததோர்பைசலைக்
கண்டுநீ தெரிவாய்.

11-நிர். ஸ்டேட்டுமெண்டு

பட்டாநமூனு

பட்டாநமூனுஎன்னும் பதினோராம்நம்பரை
பத்தாம்நம்பர்கணக்கென்னும் நபர்கதிச்சிட்டாவை
பற்றும்பிரிவிரண்டாலும் பதிவுகள்செய்யவேண்டும்
பட்டாதார்தங்களுக்கு நேரில்கொடுக்கவேண்டும்
பட்டாஇல்லாத குடிகளுக்குகொடுப்பது
பதினொன்று ஏ.யாம்

11-நிர். (ஏ)உள்ளடக்கம்.

மிஸ்லேனியஸ்பட்டா.

இந்தப்பட்டாஎழுத பத்திரண்டாம்பிரிவுபோதும்
இனம்பட்டாஅயன்பட்டா எதுவும்இல்லாக்குடிகள்
சர்க்கார்நிலங்களைத் தானெடுத்தகாலத்தில்
தகவல்தெரிவதற்குத் தரும்பட்டாவிதுவாகும்
(நம்பர்பனிரெண்டை) நலமாயுரைத்திடுவேன்
கேட்டிடுவாய் நன்றாய்

12-நிர் ஸ்டேட்டுமெண்டு

ஜமாபந்திகோஷ்வாரு

மூவிரண்டுகலம்வரை மூன்றாம்நம்பர்(ஏ)தனில்
முடிந்தகைப்பற்றதனைப் பதிந்தபின் பன்னிரண்டு
கலங்கள்வரையிலும காணும்விவரங்களைக்
கழறுவேனவைகளைக் கவனித்துநீர்கேளும்
தருசுவஜாவை கணக்குநம்பர்ஐந்தாலே
பதிவு செய்வாயே

பதின்மூன் றில்நம்பர்(ரெண்டின்) பத்தாங்கலம்புஞ்சையையும்
பதினெட்டிலந்தநம்பர் பத்தாங்கலநஞ்சையையும்

பதினேழில் (நம்பர் ஆறின்)
பற்றுமிருபத்திரண்டில்
சரியாய்ப்பதிந்து
இதரவஜாத்

பட்டாபுஞ்சைசீர்த்தீர்வையும்
பட்டாநஞ்சைசீர்த்தீர்வையும்
நம்பர்ஐந்திலுற்ற
தெரிந்து

இருபத்தொன்பதாம்கலத்தில்
இதற்குமேல்முப்பத்தொன்ற
முக்கியபத்தின்போஸ்டிங்கால்
முடிந்தநம்பர் (ஒன்பதாலே)
பதிவுகள்செய்வாய்
லோக்கல்பண்டைப்

எடுத்துப்பதியவேண்டும்
ஏழாநம்பர்க்கணக்கைக்கொணடும்
முப்பத்துமூன்றையும்
முப்பத்துநான்கையும்
முப்பத்தாறும்கலத்தில்
பதிவாய்

கணக்குநம்பர் (ஒன்பதில்)
காணுங்கலமுப்பத்தேழில்
ஏழாம்நம்பர்கோஷ்வாறுவில்
இருக்கும்பாரஸ்ட்டுதன்னை
சரியாகப்பதிவாய்
நாற்பத்தொன்றில்

கண்டிருக்கும்ஸ்பெஷல்பண்டை
காட்டிடவேண்டுமென்றேன்
எட்டாவதைட்டத்தில்
எடுத்துநாற்பத்திரண்டில்
பேரீஜின்மொத்தத்தை
வரைவாய்

இந்தக்கலங்களிலே
இதிலுள்ளமற்றெல்லாக்
கணக்குநம்பர்நாலிலே
கலமுப்பத்தொன்பதுடன்
காட்டிக்கழிப்பாய்
கீழே

இருக்கும்தவகல்பார்த்து
கலங்களும்பூரித்து
கண்டவஜாக்களைக்
நாற்பத்துஒன்றின்கீழ்
கழிவுபோகநிகரத்தைக்
குறிப்பாய்

இந்தப்பசலிக்குக்கீழ்
இருக்கின்றபேதத்தை
கூடும்தொகைகளுக்கு
குறைந்திடும்தொகைகளுக்கு
காட்டுவாய்சீராய்
முடிந்தது

முன்பசலியைகுறித்து
எடுத்துமேபூரித்து
கூட்டல்அடையாளமும்
கழித்தல்அடையாளமும்
ஜமாபந்திகோஷ்வாரா
பாராய்

சம்பாஷணை.

லட்சுமணன்-அண்ணு ஏ.ரிஜிஸ்ட்டர் முதல் 12நிர்.ஸ்டேட்டுமெண்டுவரையிலுள்ள கணக்குகள் தயார்செய்யும் விவரத்தை ஜெகநாதன் கேட்டுக்கொண்டபடி சிந்துவாகச்சொல்லிவந்தது கொஞ்சம்கூட என்செவியில்படவில்லை கணக்குகள் தயார்செய்யும் விவரத்தை வசனமாகச்சொல்லவேண்டும் அண்ணு

ராமன்-லட்சுமணு உன் அபிப்பிராயப்படியே ஏ.ரிஜிஸ்ட்டர் முதல் 12.நம்பர் ஸ்டேட்டுமெண்டு வரையிலுள்ள கணக்குகள் தயார்செய்யும்விவரத்தை வசனமாகச்சொல்லுகிறேன்கேள்

(ஏ.ரிஜிஸ்த்தர்) (செட்டில்மெண்ட் ரிஜிஸ்த்தர்)

சர்வேமுடிந்தவுடன் செட்டில்மெண்டாரால் 30.வருஷத்துக்கு ஒருதபா தயாரித்துக் கொடுக்கப்படும் நிலையானரிஜிஸ்தர்- நிலையானமாறுதல் நேரிடும்போது 3 நிர்.கணக்கில்கண்ட மாறுதலை அனுசரித்து மாற்றவேண்டியவைகளை மாற்றிஉத்திரவு நம்பரை வருஷம் மீ தேதியுள்பட ஷாரக்கலத்தில் குறிக்கவேண்டும்

(ஏ.ரிஜிஸ்தரின் உள்ளடக்கம்)

செட்டில்மெண்டாரால் தயாரித்துக் கொடுக்கப்பட்டதைவைத்து மாறுதல்நேரிட்டகாலத்தில் திருத்திக் கொண்டுவர வேண்டியது செட்டில்மெண்ட் பிரதிகள் கிடைத்தவுடன் இவைகளைத்தாலுகாவில்ஒப்பிவித்துவிட்டு செட்டில்மெண்டு ரிஜிஸ்தர் பெற்றுக்கொண்டு மாறுதல் நேரிட்டால் பதிந்துவிட்டு உள்ளடக்கத்தில் திருத்தியும் மாற்றவேண்டியதிருந்தால் மாற்றியும்வேறுகோஷ்வாரா தயாரித்து கொண்டுவர வேண்டியது. மாறுதல் இல்லாதகாலத்தில் மாறுதல் பூச்சியம் என்றுஎழுதினால் போதுமானது

☞ குறிப்பு)இதில்கண்ட ஒவ்வொருபாபத்தின் ஆயக்கட்டுவிஸ்தீரணம் தீர்வை 2.நிர். ஸ்டேட்டுமெண்டின் ஒவ்வொருபாபத்தின்

3, 4-வது கலங்களில் கண்ட தொகைகளுக்கும் 2-நிர் இஉள்ளடக் கத்தில் கண்ட வகைகளின் தொகைகளுக்கும் ஒத்திருக்கவேண்டும்.

(பீ ரிஜிஸ்தர் தயாரிக்கும்விதம்)

ஏ.ரிஜிஸ்டரிலிருந்து இனும் நிலங்களை தேவாதாயம் தர்மாதாயம் சொந்தம் ஊழியம் தசபந்தம் என்ற ஐந்துவகை விவரமாய் 8.வதுகலம்வரைப்பதிந்து இனுங்கமிஷனர் ரிஜிஸ்டரிலிருந்து 9முதல்12கலங்களைப்பதிந்து மொத்தம்போட்டுக்கோஷ்வாராபோடவேண்டியது இது முதலில் செட்டில்மெண்டாரால் தயாரித்துக் கொடுக்கப்படும் ரிஜிஸ்டர்.

தவணைநோட்டு தயாரிக்கும் விதம்.

ஏ-ரிஜிஸ்டர் அல்லது 2-நிர். ஸ்டேட்மெண்டிலிருந்து கெவர்னமெண்டு இனும் பிரித்து சர்வே நம்பர் வரிசையாய் 1-முதல் 3-வரை கலங்களைப் பதிந்து கொண்டு 4-முதல் 16-வரை கலங்களை ஒவ்வொரு மாதம் பிற்பாதிக்கு மேல் கர்ணம் கையில் எடுத்துக் கொண்டு பூமியில் சென்று சாகுபடி விவரங்களையும் முந்திய மாதங்களில் சாகுபடியான பயிர்கள் அறுவடையாகி இருந்தால் அவைகளின் விவரங்களையும் ஒவ்வொரு ஸ்தலங்களுக்கும் நேரே பாரத்தில் கண்ட கலங்களுக்குக் கீழே பென்சலால் பதிந்து வந்து அன்றயதினமே அதை மையால் எழுத வேண்டியது. இதிலிருந்து மற்ற கணக்குகள் தயார் செய்ய வேண்டியதிருப்பதால் பார்வையிடுவதிலும் விவரங்கள் பதிவதிலும் அதிக ஜாக்கிரதையாயிருக்க வேண்டும்.

1-நிர். ஸ்டேட்டுமெண்டு தவணை தயாரிக்கும் விதம்.

எப்பிரல்மீ முதல் ஆரம்பித்து தவணைநோட்டிலிருந்து கவர்மெண்டுக்கும் இனுத்துக்கும் தனித்தனி செக்ஷன்களாகப் பிரித்து ஒவ்வொரு செக்ஷனிலும் சாகுபடியான மாதத்தின் பேரை தலைப்பில்எழுதி முதலில் நஞ்சைசாகுபடியையும் அதன்பின்புஞ்சைசாகுபடியையும் அப்பால் புறம்புகல் சாகுபடிகளையும் பயிர் வரிசையாய்சர்வே நம்பர் துடர்ச்சியாய் 1-வது கலத்தில் பயிரின் பெய

ரையும் 2-வது கலத்தில் சர்வே நம்பரையும் பதிந்து கொண்டு சாகுபடியான பயிர்களில் நீர் பாய்ந்த பயிர்களை 3, 4-கலங்களி லும் நீர் பாயாத பயிர்களை 5, 6-கலங்களிலும பதிந்து ஒவ்வொரு பயிரையும் மொத்தம் போட வேண்டும். அதன்பின் கோஷ்வாரு என்று ஹெட்டிங் கட்டிக் கொண்டு 1-வது கலத்துக்கு நேரே மேல் கண்ட பிரகாரம் நஞ்சை புஞ்சை புறம்போக்கு என்ற பாபத்து வரிசையாய்ப் பதிந்து ஒவ்வொரு பாபத்தையுங் கூட்டிட வந்த மொத்தம் தொகையை 3-முதல் 6-வரை கலங்களுக்கு கீழாகச் சம்பந்தப்பட்ட கலங்களில் பதிந்து மொத்தம் போட வேண்டும். இதற்குக் கீழ் சென்ற மாதம் வரையிலுள்ள சாகுபடிகளைச் சேர்த்து நாளது மாதம் வரையில் மொத்தம் என்று காட்டிக் கோஷ்வாராவின் கீழ் கர்ணம் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

1-நிர். ஏ-உள்ளடக்கம். பயிர்வாரி ஸ்டேட்டுமெண்டு. தயாரிக்கும் விதம்.

1-நிர். ஸ்டேட்மெண்டிலிருந்து 1-நிர். ஏ-உள்ளடக்கத்தின் முதலாவது கலத்தில் கண்ட பயிர் வரிசையாய் சகல சாகுபடிகளையும் மொத்தங் கூட்டி 2-வது கலத்திலும், முந்தின மாதம் வரையில் சாகுபடியைச் சேர்த்து 3-வது கலத்திலும், தவணைநோட்டிலிருந்து 4-முதல் 9-வரை கலங்களையும் பதிந்து, முந்தின மாதக் கணக்கின் 10-முதல் 15-வரை கலங்களின் விஸ்தீரணத்தையும், நாளது மாசம் 4-முதல் 9-வரை கலங்களின் விஸ்தீரணத்தையும் சேர்த்து நாளது மாசம் 10-முதல் 15-வரை கலங்களைப் பதிந்தும், 3-வது கலத்தில் கண்ட விஸ்தீரணத்தில் 15-வது கலத்தில் கண்ட விஸ்தீரணத்தைக் கழித்து, 16-வது கலத்தில் தாக்கல் செய்து மொத்தம் போட வேண்டும். இருப்புப் பயிரின் மேனியை 18-வது கலத்தில் காட்ட வேண்டும். சூன்மீத்துக்கு மட்டும் 17-வது கலத்தில் தாக்கல் செய்யவேண்டும்.

2-நிர். அடங்கல் கணக்கு தயாரிக்கும் விதம்.

I-கவர்மெண்டு, II-இனும் என்று இரண்டு பிரதம பிரிவுகளாகப் பிரித்து I-கவர்மெண்டு செக்ஷனில் (ஏ) நஞ்சை (பீ) புஞ்சை (சீ) புறம்போக்கு என்று (3) உள்பிரிவுகளாகவும், II-

இனும் செக்ஷனில் (ஏ) நஞ்சை (பீ) புஞ்சை என்ற இரண்டு உட்பிரிவுகளாகவும், நஞ்சையைப் பாய்ச்சலாதார வசைரியாய் திட்ட இருபோகம், கம்பவுண்டு, முதல் போகம் என்ற ஒழுங்காய், ஒரு புலத்தில் அனேக பயிர்கள் சாகுபடியானல் அவைகளைப் பிரித்து தனித்தனியே பதிவதற்கு ஒவ்வொரு வரியின் மத்தியில் போதுமான இடம் விட்டு விட்டு முதல் பசலியில் செட்டில்மெண்டு பேர் அடங்கலைக் கொண்டும் மற்றப் பசலிகளில் முன் பசலி 2-நிர். ஸ்டேட்மெண்டைக் கொண்டு நாளது வருஷம் 3-நிர். கணக்கையனுசரித்து கவர்மெண்டுக்குப் பாத்தியமான ஸர்க்கார் தருசு சம்பந்தமான நிலங்களை 5-வது கலம் வரையிலும், மற்றப் பட்டாதார் கைப்பற்று நிலங்களை 8-வது கலங்கள் வரையிலும் பதிந்து 9, 10, 11-வது கலங்களை 1-நிர். ஸ்டேட்மெண்ட் அல்லது தவணை நோட்டை வைத்துப் பதிந்தும், கவர்னமெண்டுக்குப் பாத்தியமான பட்டாப் பதிவாகாத தருசு புறம் புகல் நிலங்களை ஆக்கிரமித்தால் ஆக்கிரமித்தவர்கள் பேரை 6-வது கலத்திலும், 7-வது கலத்தில் விஸ்தீரணத்தையும், 8-வது கலத்தில் தீர்வையையும், அஜிமாயிஷ்தாருக்கும் மாறுதலுக்கும் சம்பந்தமான குறிப்புகளையும், கிணரைப் பற்றிய விவரங்களையும், இதைப் போன்ற சகல விவரங்களையும் கர்ணம் 12-வது கலத்திலும் பதிய வேண்டும். அஜிமாயிஷ்தார் 13-ம் கலம் பதிவு செய்வார். இதில் சகல விவரமும் அடங்கியிருப்பதால் இதற்கு அடங்கல் என்று பெயர்.

2-ஏ-உள்ளடக்கம் தயாரிக்கும் விதம்.

2-நிர், ஸ்டேட்மெண்டிலுள்ள சிவாய் ஜமா புறம்போக்கு முதலியவைகளைத் தனித்தனியாக 2-நிர். ஸ்டேட்மெண்டின் 6-வது கலத்தால் முதலாவது கலத்தையும், 1, 2, 3-கலங்களால் 3, 4, 5-கலங்களையும், 9, 10-கலங்களால் 6, 7-கலங்களையும், 7-வது கலத்தால் 8-வது கலத்தையும், 7, 8-கலங்களிலுள்ள தொகைகளை மொத்தம் கூட்டி 9-வது கலத்தையும், ரிஜிஸ்டர் 10-வது கலத்தால் 10-வது கலத்தையும், 10-வது கலத்தை அனுசரித்து 9-வது கலத்துக்கு ஏற்படும் தீர்வையை 11-வது கலத்திலும், பைசலான (ஏ) (பீ) மிமோக்களால் 12-வது கலத்தையும், நிலத்தின் விவரத்தை 2-வது கலத்திலும், பதிவு செய்து மொத்தம் போடவேண்டும்.

2-நிர். பீ தயாரிக்கும் விதம்.

முதல் நிர். கணக்கில் கண்ட பன்னிரண்டு மாதங்களின் 1-வது செக்ஷனுகிய கவர்மெண்டை மொத்தம் கூட்டி 2-முதல் 5-வரை கலங்கள் பதிந்தும் 11-வது செக்ஷனுகிய இனும் மொத்ததைக் கூட்டி 6-முதல் 9-வரை கலங்களைப் பதிந்தும், கலம் 2-ம் 6-ம் கூட்டி கலம் பத்திலும், 5-ம் 9-ம் கூட்டி பதின்மூன்றிலும், 10-ம் 12-ம் கூட்டி பதினாலாவது கலத்திலும், 11-ம் 13-ம் கூட்டி பதினைந்தாவது கலத்திலும் பதிந்து மொத்தம் போட வேண்டும்.

☞ குறிப்பு.— இதில் கண்ட மொத்தம் 1-நிர். ஸ்டேட்டுமெண்டின் மொத்தத்துக்கும் 1-நிர். ஏ-உள்ளடக்கம் மார்ச்சு மாதத்தில் கண்ட 3-வது கலம் மொத்தத்துக்கும் இதன் 14-வது 15-வது கலங்களின் மொத்தம் சரியாயிருக்க வேண்டும்.

2-நிர். சி-தயாரிக்கும் விதம்.

(1) கவர்மெண்ட் தோட்டங்கள், (2) குடிகள் சொந்தத் தோட்டங்களில் (ஏ) பொது உபயோகத்திற்காக (பீ) மற்றவைகள், (3) தீர்வை ஏற்பட்டதும், குத்தகைக்கு விடப்பட்டதுமான விடு மரங்கள் என்று மூன்று பிரிவாய்ப் பிரித்து சென்ற பசலி 2-நிர். சி-உள்ளடக்கத்தை வைத்தும் நிகழும் பசலி மரத் தீர்வை சம்பந்தமான கைபீதுகளை வைத்தும் கூட்ட வேண்டியவைகளைக் கூட்டிக் கழிக்க வேண்டியவைகளைக் கழித்து கணக்கை முடிக்க வேண்டும்.

2-நிர். டி-தயாரிக்கும் விதம்.

இந்தக் கணக்கை 2-நிர். ஸ்டேட்டுமெண்டைக் கொண்டு 10-எக்கருக்கு மேலபட்ட ஏரிகளின் பேரைத் தனித் தனியாகவும் 10-எக்கருக்கு உள்ப்பட்டவைகளை மொத்தம் கூட்டி இத்தனை என்று கண்டும், அதற்குக்கீழ் ஆற்றுக்கால், ஊற்றுக்கால், அணைக்

கட்டு, தனியாயக்கட்டுக் கிணறுகள், சொந்தக்கிணறுகள் என்ற வரிசையாய் 1-வது கலத்தில் பதிந்து, 2-வது கலத்தில் யாருக்குச் சொந்த மென்ற விவரத்தைக் காட்டி, 3-வது கலத்தில் நீர் பாய்ச்சக் கூடிய விஸ்தீரணத்தையும் பதிந்து, 6-நிர். ஸ்டேட்டுமெண்டில் வந்த நீர் பாய்ந்த புஞ்சை விஸ்தீரணத்தையும், தனியாயக்கட்டுக் கிணற்றினுல் சாகுபடியான விஸ்தீரணங்களையும் சேர்த்து, 4-வது கலத்தில் பதிந்து, அயன் இனும் நஞ்சை முதல் போகம் சாகுபடியை 5-வது கலத்திலும், 4-வது கலத்தையும் 5-வது கலத்தையும் கூட்டி 6-வது கலத்தில் பதிந்தும், 2-நிர். பீ—உள்ளடக்கத்திலுள்ள நீர் பாய்ந்த பயிர்களை 8, 9-வது கலங்களில் அயன் இனும் சேர்த்துப் பதிந்து மொத்தம் போட வேண்டும்.

☞ குறிப்பு.— இதன் 9-வது கலத்தின் மொத்தம் 2—பீ—யின் நீர்பாய்ந்த மொத்தத்துக்கு ஒத்திருக்க வேண்டும்.

2-நிர். இ-தயாரிக்கும் விதம்.

சென்ற பசலி 2-நிர். இ—கணக்கைக் கொண்டு முதல் ஐட்டம் பதிந்து நாளது பசலி 3-ம் நிம்பரை யனுசரித்து கழிக்க வேண்டியதைக் கழித்துக் கூட்ட வேண்டியவைகளைக் கூட்டி நிலைத்த கைப்பற்றை பதிவு செய்ய வேண்டியது. முதல் வருஷத்தில் ஏ-ரிஜிஸ்தர் உள்ளடக்கத்தை வைத்தும் பிந்தின பசலிகளில் முந்தின பசலி 2-நிர். இ-கணக்கை வைத்தும் மேல் சொல்லியபடி தயாரிக்க வேண்டியது.

☞ குறிப்பு.—இதில் கண்ட ஒவ்வொரு பாபத்தின் மொத்தமும் 2—நிர். ஸ்டேட்டுமெண்டில் கண்ட ஒவ்வொரு பாபத்தின் 3, 4- கலங்களில் கண்ட தொகைகளுக்கும் ஏ—ரிஜிஸ்தர் உள்ளடக்கத்தில் கண்ட ஒவ்வொரு பாபத்துக்களின் மொத்தத்திற்கும் ஒத்திருக்க வேண்டும்.

3-நிர். கணக்கு தயாரிக்கும் விதம்.

3-நிர். கணக்கில் I ராஜிநாமா, II அடமானம் அல்லது தர்க்

காஸ்து, III பட்டா மாறுதல், IV இதர மாறுதல் என்ற 4-பிரதம பிரிவுகளாகவும், III-வது பிரிவில் (1) ரிவினியூ பாக்கிக்காக ஏலம் போடப்பட்டது (ஏ) கவர்மெண்டாரால் வாங்கப்பட்டது (பி) இதர பேர் வழிகளால் வாங்கப்பட்டது II கோர்ட்டு உத்திரவுப்படி ஏலமெடுத்தது III கிரையம் தானம் முதலியவைகளால் மாற்றப்பட்டது 4 பன்னிரண்டு வருஷத்துக்கு மேல் கொண்ட காலம் பட்டாதார் ஆஜரில்லாத அனுபோகம் என்று 4 உட்பிரிவுகளாகவும் பிரித்து ஒவ்வொரு பிரிவுகளுக்கும் தக்கவாறு இடம் விட்டு புஸ்தகம் தைத்து மேலான உத்திரவுகள் வந்தவுடன் சம்பந்தப்பட்ட பிரிவுகளில் 9-வது கலம் வரையில் தாக்கல் செய்து வந்து ஜமாபந்திக் காலத்தில் மொத்தம் போட்டு கணக்கை முடிக்க வேண்டும். இனும் மாறுதல்களைப் பிரத்தியேகமாய் எழுத வேண்டும். மாற்றப்படும் கணக்குகளை ஷராவில் குறிக்க வேண்டும்.

3-நிர். ஏ-தயாரிக்கும் விதம்.

இந்தக் கணக்கின் முதலாவது கலத்தில் 1-வது ஐட்டத்துக்கு நேரே சென்ற பசலி 3-நிர். ஏ-உள்ளடக்கத்தில் நிலைத்த கைப்பற்றை 3-முதல் 8-வரை கலங்களில் பதிந்து அதற்குப்பின் கழிக்க வேண்டிய பாபத்துக்களான 3-நிர். ஸ்டேட்டுமெண்டு 1-வது செக்ஷனில் பதிந்திருக்கும் ராஜீநாமாக்களை 2-வது ஐட்டத்திலும் 3-நிர். 3-வது செக்ஷனில் கண்ட 4 உட்பிரிவுகளைக் கொண்டு 3-வது ஐட்டத்தில் 4 உட் பிரிவுகளிலும் 3-நிர். 4-வது செக்ஷனில் கண்ட மாறுதல்களில் கழிக்க வேண்டியவைகளை 4-வது ஐட்டத்தில் கண்ட உட்பிரிவுகளில் பதிந்து கழிக்க வேண்டியவைகளை மொத்தம் கூட்டி 5-வது ஐட்டத்தில் பதிந்தும் 1-வது ஐட்டத்திலிருந்து 5-வது ஐட்டத்தைக் கழித்து 6-வது ஐட்டத்தில் பதிந்து கொண்டு 3-நிர். 2-வது செக்ஷனில் கண்ட தர்க்காஸ்து ஜாரிகளை 7-வது ஐட்டத்திலும் மேலே 3-வது ஐட்டத்தில் கண்டவைகளில் கிஸ்தி பாக்கி ஏலத்தில் (ஏ) கவர்மெண்டாரால் வாங்கப்பட்டது என்பதைத் தவிர மற்றவைகளை எடுத்து 8-வது ஐட்டத்தில் கண்ட உட்பிரிவுகளிலும், 3-நிர். 4-வது

செக்ஷனில்கண்ட சேர்க்கவேண்டிய இதாமா றுதல்களை 9-வது ஐட்டம் உட்பிரிவுகளிலும் தாக்கல் செய்து சேர்க்க வேண்டியவைகளை மொத்தம் கூட்டி 10-வது ஐட்டத்திலும் 6-வது ஐட்டத்தையும 10-வது ஐட்டத்தையும கூட்டி 11-வது ஐட்டத்திலும பதிவுகள் செய்ய வேண்டும். இதுதான் கிராமத்துக்கு நிலைத்த கைப்பற்று.

4-நிர். ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கும்விதம்.

பேரீஜ் வஜாக்களைக் குறித்த உத்திரவுகளிலிருந்து 1-முதல் 5-வரை கலங்களையும மற்றக் கலங்களை பட்டுவாடா செய்ததின் பேரிலும் பதிய வேண்டும் மத சம்பந்தமான பேரீஜ் வஜாக்களை முதலிலும் மற்ற வஜாக்களை பின்னாலும் பதிய வேண்டும்.

5-நிர். I-வது பிரிவு தயாரிக்கும் விதம்.

சர்க்கார் இனும் பிரித்து பாய்ச்சலாதார வாரியாய் பட்டா வரிசையாய் 2-நிர். ஸ்டேட்டுமெண்டு, தவணை நோட்டு இவைகளை வைத்து 1-வது கலத்தையும் 3-முதல் 9-கலத்தையும், வஜா மனுவை வைத்து 2-வது கலத்தையும் கர்ணம் பதிவு செய்த பின் 10-வது கலத்தில் அடங்கலின் 13-வது கலத்தில் அஜிமாயிஷ்தார் தாக்கல் செய்த ஷராவுக்குச் சரியான காப்பியும இதா விவரங்களையும் ரிவினியூ இன்ஸ்பெக்டர் முதலிய ஆபீசர்கள் பதிந்தும் 11-வது கலத்தில் தாசில்தார் ஷரா எழுதியும் டிவிஷனாபீசருக்கு அனுப்புவார்கள். டிவிஷனாபீசர் 12-வது கலத்தில் பைசல் செய்வார். சாங்கிஷனான வஜாவை 13-வது கலத்தில் கர்ணம் பதிவு செய்து மொத்தம் போட வேண்டும். இந்த ஸ்டேட்டுமெண்டில் ஒவ்வொரு பாய்ச்சலாதாரங்களின் கீழ் நஞ்சை வஜாக்களைப் பதிந்து அதன் கீழ் நீர் பாய்ச்சப்பட்ட புஞ்சை வஜாக்களைப் பதிவு செய்ய வேண்டும்.

5-நிர். II-வது பிரிவு தயாரிக்கும் விதம்.

பாய்ச்சலாதார வாரியாய் பட்டா வரிசையாய் 5-நிர். ஸ்டேட்டுமெண்டு 1-வது பிரிவில் 13-வது கலத்திலுள்ள நிலைத்த வஜா

வை (ஏ) காலஸ்திதி (பீ) இறவை (சீ) தசபந்தம (டீ) கவுல் என்ற 4-வகையாய்ப் பிரித்து 5-நிர். ஸ்டேட்டுமெண்டு 2-வது பிரிவின் பாரங்களில் கண்ட 3-முதல் 20-வரை கலங்களிலுள்ள நஞ்சைக் தருசு நஞ்சை முழுப்பயிர் நஷ்டம், திட்ட இருபோகத்தில் ஒரு போக நஷ்டம், திட்ட இருபோக நஞ்சைப் பயிரில் இரண்டாம் போகம் நஷ்டம், நஞ்சை நிலத்தில் கவர்மெண்டு தண்ணீர் பாயாத புஞ்சை சாகுபடியால் ஏற்பட்ட தீர்வை கம்மி, நஞ்சையில் கவர் மெண்டு தண்ணீரால் சாகுபடி செய்யப்பட்டு நஞ்சைத் தீர்வைக் கும் புஞ்சைத் தீர்வைக்குமுள்ள வித்தியாசம், என்ற ஏழு வகை விவரங்களில் இனும் நில வஜாவை 11, 12, 19, 20-கலங்களில் விஸ்தீரணத்தையும் தீர்வையையும் தனியாகப் பதிந்து மற்ற வஜாக்களை மற்ற கலங்களில் விஸ்தீரணம் தீர்வையுடன் பதிந்து ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்ட மொத்தம் விஸ்தீரணத்தை 21-வது கலத்திலும் மொத்த வஜாத் தீர்வையை 22-வது கலத் திலும் பதிவு செய்து மொத்தம் போட்டு கோஷ்வாரா போட்டு தருசு வஜா, 5-நி. கணக்குப்படி இதர வஜா, 7-நிர். கணக்குப்படி வஜா, என்று :-வகையாகப் பிரித்துக் காட்டி அவைகளுக்கு மொத்தம் காட்ட வேண்டும்.

☞ குறிப்பு — இதில் கண்ட தருசு வஜா மொத்தம், 12-நிர். ஸ்டேட்டுமெண்டு 9, 10- கலங்களுக்கும் 5-நிர். கணக்குப் படி வஜா 29-வது கலத்துக்கும் 7-நிர். படி வஜா 7-நிர். ஸ்டேட்டுமெண்டு 11-வது கலத்துக்கும் ஒத்திருக்க வேண்டும்.

5- நிர். III-வது பிரிவு தயாரிக்கும் விதம்.

கிராம முழுமைக்கும் பஞ்சம் வந்த காலத்தில் 14 நிர். போர்ட் ஸ்டாண்டிங் ஆர்டரில் கண்டதை யனுசரித்தும் பாரத்தில் கண்ட கலங்களை யனுசரித்தும் தயாரிக்க வேண்டும்

6- நிர். ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கும் விதம்.

2, நிர். ஸ்டேட்டுமெண்டு தவணைநோட்டு முதலியவைகளை வைத்து சர்க்கார் இனும் பிரித்து பாய்ச்சலாதர வாரியாகவும

பட்டா வரிசையாகவும் தீர்வைஜாஸ்தி, பசலிஜாஸ்தி, சிவாய்ஜமா புறம்போக்கு, என்றவரிசையாய் 1முதல்6-வது கலங்களையும் 9 முதல் 11- கலங்களையும், தண்ணீர்மனுவை வைத்து 14-வது கலத்தையும், கர்ணம் பதிவுசெய்து 15-வது கலத்தில் இதைப்பற்றிய விவரங்களின் ஷறாகளையும், கர்ணம் ஷறாவையும் பதிந்து, 16-வது கலத்தில் தாசில்தார் ஷறாவும், 17—வது கலத்தில் டிவிஷனல் ஆபீசர் பைசலும்செய்வார் அந்தப்பைசலைப் பார்த்து 7,8,12,13,18,19, கலங்களை கர்ணம் பதிவுசெய்து மொத்தம்தெரிந்து கோஷ்வாரு போடவேண்டியது, 10- செண்டுக்குள்பட்ட தண்ணீர்த்தீர்வை யேற்படக்கூடிய விஸ்தீரணத்துக்கு, தீர்வைவிதிப்பதும் தீர்வை விதிக்காமல் இருப்பதும, ஜமாபந்திஆபீசர் அபிப்பிராயத்தை பொருத்திருக்கிறபடியால், அவைகளை ஸ்டேட்டு மெண்டின் அடியில் விவரமாய்ப் பதியவேண்டும், தண்ணீர்த் தீர்வைவிதிக்க அதிகாரம்பெற்ற தாசில்தாராக இருந்தால் டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பாமல் தாமே பைசல் செய்யலாம்.

6-வ. தயாரிக்கும் விதம்

இதுஒவ்வொரு பட்டாதாருக்கும பல பாய்ச்சலாதாரங்களின் கீழ் விதிக்கப்பட்ட தண்ணீர் தீர்வையைக் கூட்டி அதன் மொத்தத்தை 10- நம்பர் II பிரிவுக்கு கொண்டுபோக வேண்டியதற்காக ஏற்பட்டிருக்கிற போஸ்டிங் ஸ்டேட்டு மெண்ட். இதை பட்டாவாரியாய் எழுதவேண்டியது, பலபாசனங்களி லிருந்தால் ஒவ்வொரு பாசனங்களிலும வந்திருக்கிறதும், 6-ம்நம்பர் ஸ்டேட்டு மெண்டின் 8—13 கலங்களில் பதிந்திருக்கிறதுமான புஞ்சைத் தண்ணீர்த் தீர்வை மொத்தத்தையும், நஞ்சைத் தண்ணீர்த் தீர்வை மொத்தத்தையும் 19-வது கலத்தில் கண்ட செண்டத் தீர்வை மொத்தத்தையும் தனித்தனி ஏற்பட்டிருக்கும் கலங்களில் பதிந்து ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்படுகிற தண்ணீர்த் தீர்வை மொத்தத்தைக் கூட்டி அணு மட்டமாக பதிவு செய்ய வேண்டியது. ஒரே பாய்ச்சலாதாரங்களின் கீழ் தீர்வைக்கு வரும் பட்டாதார்களுக்கு இதில் ஒன்றும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

7-நிர். ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கும் விதம்.

பீ-ரிஜிஸ்தரிலிருந்து குயிட்ரெண்ட் ஏற்பட்ட மானிபங்களை எடுத்து மானிபதார் பெயரை முதலாவது கலத்திலும 2-வது கலத்திலுள்ள பட்டா நிம்பரை 3-வது கலத்திலும 2-வது கலத்தில் பாபத்தையும் பதிந்து கொண்டு குயிட்ரெண்டு ஏற்பட்ட விஸ்தீரணத்தை 7-வது கலத்திலும் 11-வது கலத்திலுள்ள குயிட்ரெண்டை 8-வது கலத்திலும் பதிந்து 2-ம் நிம்பர் ஏ-உள்ளடக்கத்திலுள்ள பட்டாவாகாத கைப்பற்று, புறம்புகல் கைப்பற்று, முதலியவைகளையும் இனவாரியாகப் பதிந்து 6-நிர். ஸ்டேட்டுமெண்டு 8—13-வது கலங்களை கூட்டியாவது 6-ஏ-உள்ளடக்கம் செக்ஷனிலிருந்தாவது இவைகளுக்கு ஏற்பட்ட மொத்தம் தண்ணீர்த் தீர்வையைத் தெரிந்து 9-வது கலத்தில் பதிந்து கொண்டு 6-நிர். கணக்கில் 19-வது கலத்திலாவது அல்லது 6-நிர். ஏ-உள்ளடக்கம் 5-வது கலத்திலிருந்தாவது அனுமதியின்றி நீர் பாய்ச்சினதற்காக ஏற்பட்ட அபராதத்தை இனவாரியாய் எழுதி ஏற்பட்ட தெண்டத்தை 9-வது கலத்தில் பதிந்துகொண்டு 8-வது கலத்தொகையையும் 9-வது கலத்தொகையையும் சேர்த்து 10-வது கலத்தில் பூரித்து 5-நிர். ஸ்டேட்டுமெண்டு 2-வது பிரிவிலிருக்கும் இவைகளுக்கேற்பட்ட வஜாக்களைத் தெரிந்து 11-வது கலத்தில் பதிந்து வஜாப்போக நிகரத்தை 12-வது கலத்தில் பதிந்து கொண்டு 2-சீ கணக்கில் மரத் தீர்வை யேற்பட்ட இனங்களை இனவாரியாய் 1-முதல் 3-வரை கலங்களில் எழுதி யேற்பட்ட மர வரியை 8-முதல் 12-வரை கலங்களில் காட்ட வேண்டியது. இதர பாபத்துக்களேதேனும் இருந்தால் இதற்குக் கீழே அவைகளையும் இவ்விதமே எழுதிக் கொண்டு கடைசியில் பாரஸ்ட் ரிவினியூவை இவ்விதமே இனவாரியாகத் தனியாகக் காட்ட வேண்டும். மேலே கண்ட ஐட்டங்கள் ஒவ்வொன்றின் மொத்தத்தை எடுத்துக் காட்டி அவைகளை மொத்தங் கூட்டி கோஷ்வாரா போட வேண்டியது.

☞ குறிப்பு—இதில் கண்ட இனம் குயிட்ரெண்ட் தொகை பீ-ரிஜிஸ்தர் 11-வது கலம் அடங்கல் இனம் செக்ஷன் 8-வது

கலம் தாலூகாவிலுள்ள வெர்னுக்குலர் ரிஜிஸ்தர் முதலிய வைகளிலுள்ள குயிட்ரெண்ட் தொகைக்கு ஒத்திருக்க வேண்டும்.

8-நிர். ஸ்டேட்டுமெண்டு தயாரிக்கும் விதம்

(ஏ) ரிஜிஸ்தர் (பீ) ரிஜிஸ்தர் (2-நிம்பர்) (5-நிம்பர்) (6-நிம்பர்) (7-நிம்பர்) ஸ்டேட்டுமெண்டுகளை வைத்து இந்தக் கணக்கையும் இதன் உள்ளடக்கங்களையும் தயாரிக்க வேண்டியது. 12-நிர். ஸ்டேட்டுமெண்டு தகவலுக்கும் வரும்.

9-நிர். ஸ்டேட் மெண்டு தயாரிக்கும் விதம்.

பீரிஜிஸ்ட்டரி லிருக்கிற மாஸிபதார் பெயரையும் பட்டா நம்பரையும் 1,2,- கலங்களிலும் 7,8,-வது கலங்களை யெடுத்து 3,4,- கலங்களிலும் இனவாரியாகப் பதிந்து, 2-நிர். (ஏ)உள்ளடக் கத்திலிருக்கிற சிவாய் ஜமா, புறம்போக்கு ஏக்சால் கைப்பற்று களைத் தனித்தனியாக 1-வது கலத்திலிருக்கிற பெயரையும் பட்டா நம்பரையும் 1, 2,- கலங்களிலும் 9-வது கலத்திலிருக்கிற விஸ்தீ ணத்தை 3-வது கலத்திலும், 11வது கலத்திலிருக்கிற தீர்வையை 4-வது கலத்திலும், பதிந்துகொண்டு, இவைகளுக்கு ஏற்பட்ட தண்ணீர்த் தீர்வையை, 6-நிர். ஸ்டேட் மெண்ட் 8,13,-வது கலத் திலுள்ள தொகைகளை கூட்டியாவது, 6-நி. (ஏ) உள்ளடக்கத்திலு ள்ள புஞ்சை நஞ்சை தண்ணீர்த் தீர்வையை யெடுத்தாவது 5-வது கலத்தில் பதிந்து 4-வது கலத்தொகையையும் 5-வது கலத்தொகை யையும் சேர்த்து 6-வது கலத்தில் பூரித்து 6-வது கலத்தில் கண்ட தொகைக்கு 7-வது கலத்தில் லாண்டு செஸ் யேற்படுத்தி மொத்தம் போட வேண்டியது இதில் பாசிவரியை இனவாரியாக எழுதி ஒவ்வொரு பட்டாதாருக்கு ஏற்பட்ட நஞ்சைமுதல் போகம் சாகுபடி விஸ்தீரணத்தை 3-வது கலத்தில் காட்டி இட்டப்படி அவைகளுக்கு யேற்படும் பாசிவரியை 8-வது கலத்தில் தாக்கல் செய்து மொத்தம் போடவேண்டும் கடாசியில் கோஷ்வாரு ஒன்றெ ழுதி இதில் பதிந்திருக்கிற ஒவ்வொரு வகைகளின் மொத்தத்தை

யெடுத்துப் பதிந்து அவைகளை மொத்தங்கூட்டி ஆகமொத்தம் ஒன்று போட வேண்டியது (பாசி வரியின்) மொத்தத்தைத் துண்டாகப் பதிய வேண்டியது.

10-நிர். I-வது பிரிவு தயாரிக்கும் விதம்.

இதை முதல் முதல் செட்டில் மெண்டாால் கொடுக்கும் சிட்டாவைக் கொண்டு பட்டாவாரியாக அந்தப் பசலி 3-நிர். கணக்கில் யேற்பட்ட மாறுதலை அனுசரித்து சேர்க்க வேண்டியதைச் சேர்த்துக் கழிக்க வேண்டியதைக் கழித்துக் கைப்பற்று மொத்தத்தைக் காட்ட வேண்டியது மாறுதல் விவரத்தை முதலாவது கலத்திலும், மாறுதலைக் குறித்த உத்திரவின் நம்பர் வருஷம் மாசம் தேதியுள்பட 8-வது கலமாகிய இதன் ஷராக் கலத்திலும் பதிவு செய்ய வேண்டியது இந்தப் புஸ்தகம் பூரா முடியும்வரை ஒவ்வொருபசலிக்கு ஏற்பட்ட 3-நிர். ஸ்டேட் மெண்டைக் கொண்டு சேர்க்க வேண்டியதைச் சேர்த்து கழிக்க வேண்டியதைக் கழித்து நிலைத்த கைப்பற்றெழுதிக் கொண்டு வந்து புஸ்தகம் முடிந்து வேறு புஸ்தகம் ஆரம்பிக்கும்போது பட்டா வாரியாக எழுதி நிலைத்திருக்கும் ஸ்தலங்களை மட்டும் எடுத்தெழுதிக் கொண்டு மேல் கண்ட பிரகாரம் பதிந்து கைப்பற்று தெரிந்து கொள்ள வேண்டியது வேறு புஸ்தகம் ஆரம்பிககும் வரை காலியான பட்டா நம்பரைக் காலியாக விட்டு வைக்க வேண்டும்

10-நிர். II-வது பிரிவு தயாரிக்கும் விதம்.

10-நிர். முதல் பிரிவில் நிலைத்த கைப்பற்றை இதன் முதல் ஐட்டத்தின் நேராக 2- முதல் 7-வரை கலங்களிலும், 5-நிர். 2-வது பிரிவில் 22-வது கலத்தில் இருந்து தாகதி முதலிய காயம் வஜாக்களைத் தெரிந்து, 2-வது ஐட்டத்தின் நேராகப் பதிந்து 1-வது ஐட்டத்திலிருந்து 2-வது ஐட்டத்தைக் கழித்து 3-வது ஐட்டத்திலும், 6-நிர். ஸ்டேட்மெண்ட் 8-13-வது கலங்களிலும் 6-நிர். (ஏ) உள்ளடக்கத்திலுமிருக்கிற புஞ்சை நஞ்சை தண்ணீர்த் தீர்வைகளை மொத்தங் கூட்டி 4-வது ஐட்டத்தின் நேராகவும்,

3-4-வது ஐட்டத்தைக் கூட்டி 5-வது ஐட்டத்தின் நேராகவும், 5-நிர். ஸ்டேட்மெண்டு 2-வது பிரிவிலுள்ள காலஸ்திதி முதலிய இதர வஜாக்களை 6-வது ஐட்டத்தின் நேராகவும், 5-வது ஐட்டத்திலிருந்து 6-வது ஐட்டத்தைக் கழித்து 7-வது ஐட்டத்திலும், 7-நிர். ஸ்டேட்மெண்ட் கோஷ்வாராவில் கண்ட நிலைத்த சில்லரை லாண்டு ரிவினியூ மொத்தத்தை 8-வது ஐட்டத்தின் நேராகவும், 7-வது ஐட்டத்தையும் 8-வது ஐட்டத்தையும் கூட்டி 9-வது ஐட்டத்தின் நேராகவும் 5-வதுஐட்டத்தின் நேராகக் கண்ட தொகைக்கு, அந்தக் காலத்தில் ஏற்படும் உத்திரவை அனுசரித்து ஏற்படும் லாண்டு செஸ்ஸை 10-வது ஐட்டத்தின் நேராகவும், 9-நிர். ஸ்டேட்மெண்டின் 7-வது கலத்தில் கண்டலாண்டு செஸ்ஸை 11-வது ஐட்டத்தின் நேராகவும், லோகல் பண்டை 12-வது ஐட்டத்தின் நேராகவும், ஸ்பெஷல் பண்டை 13,வது ஐட்டத்தின் நேராகவும், 9-முதல் 13-வரை ஐட்டங்களைக் கூட்டி 14-வது ஐட்டத்திலும் பதியவேண்டும். 14-வது ஐட்டத்தொகைதான் ஒரு பட்டாதாருக்கு ஏற்பட்ட மொத்தம் பேரீஜ். 7-நிர். ஸ்டேட்மெண்டிலுள்ள பாரஸ்ட் ரிவினியூவை எடுத்து 15-வது ஐட்டத்தின் நேராகக் காட்ட வேண்டும்.

10-நிர்.2-வதுபிரிவுக்குஉள்ளடக்கம்தயாரிக்கும்விதம்

முதலாவது கலத்தில் பட்டா நம்பரை எழுதிக் கொண்டு 2-வது கலத்தில் 10,நிர் 2,வது பிரிவு 14,வது ஐட்டத்தில் தாக்கல் செய்திருக்கிற பட்டாதாருக்கு ஏற்பட்ட மொத்தம் பேரீஜையும் 3,வது கலத்தில் இதன் 10,நிர். 2,வது பிரிவின் 10,வது ஐட்டத்தில் பதிந்திருக்கும் செஸ்ஸுகளையும், பட்டா வரிசையாகப் பதிந்துகொண்டு அதற்குப்பின் சில்லரை ரிவினியூக்கள் மட்டும் அமைந்திருக்கின்ற இனங்களை, 7,நிர். 9,நீர். ஸ்டேட் மெண்டுகளி லிருந்து மிஸ்லேனியஸ் தயர்ச்சி நம்பர் கொடுத்துப் பதிந்து மொத்தம் போட வேண்டியது.

☞ குறிப்பு—இதன் 2,வது கலத்தில் கண்ட மொத்தம் தொகை 12,நிர். ஸ்டேட் மொண்ட் 41,வது கலத்தில் கண்ட பேரீஜ

மொத்தத்துச்கும் 3-வது கலத்தில் கண்ட தொகை, 12,நிர். ஸ்டேட் மெண்டு 33,வது கலத்தில் தாக்கல் செய்திருக்கும் தொகைக்கும் ஒத்திருக்க வேண்டும்.

10-நிர். (ஏ) தயாரிக்கும் விதம்.

இது இறந்துபோன பட்டாதார்களின் பெயரை முதலாவது கலத்தில் பதிந்து கொண்டு, 19,நிர். ஸ்டேட் மெண்டு இரண்டாவது பிரிவாகிய மரண ரிஜிஸ்தரைக் கொண்டு, 2,வது கலத்திலும் பவுத்தியான வருடைய வார்சுகள் பாத்தியதை முதலியவைகளை 3,வது கலத்திலும், பவுத்தி தாரின் குடும்பம் பாகம் பிரிந்த விவரத்தையும் பாகம் பிரியாவிடில் குடும்பத் தலைவர் இன்னு ரென்பதையும் வார்சு மைனராய் இருந்தால் கார்டியன் இன்னு ரென்பதையும் இது சம்மந்தமான எல்லா விவரங்களையும் 4,வது கலம்வரை கர்ணம் பூரித்து இரண்டு பிரதிகள் தயாரித்து தாலுகாவுக்கு அனுப்ப வேண்டும். 4,வது கலத்தில் கண்ட விஷயங்களை விசாரித்து ஐந்தாவது கலத்தில் தாசில்தார் பைசல் எழுதி ஒரு பிரதியை கர்ணத்துக்கு அனுப்புவார்கள் அதில் கண்ட விவரத்தை 2,நிர். 10,நிர். ஸ்டேட் மெண்டுகளில் பதிவு செய்ய வேண்டும்.

11-நிர். ஸ்டேட் மெண்டு தயாரிக்கும் விதம்

10,நிர். ஸ்டேட் மெண்டு 1,வது பிரிவைக் கொண்டு இதன் முதல் பிரிவில் ஸ்சலவாரியையும் 2,வது பிரிவில் 10,நிர். 2,வது பிரிவிலுள்ள பட்டாதாருக்கு ஏற்பட்ட ரிவினியூ வகைகளையும் பட்டாவுக்கு ஏற்பட்ட மொத்தத்தையும் பதிய வேண்டும்.

11-(ஏ) தயாரிக்கும் விதம்.

10,நிர். 2,வது பிரிவைக் கொண்டாவது 7,நிர். 9,நிர். ஸ்டேட் மெண்டுகளைக் கொண்டாவது, பதிந்து கொடுக்க வேண்டும்

12-நிர். ஸ்டேட் மெண்டு தயாரிக்கும் விதம்

(இந்த ஸ்டேட் மெண்டை)3,நிர். (ஏ) உள்ளடக்கம், 11,வது ஐட்டத்தில் 3, முதல் 8, வரை கலங்களிலுள்ள தொகைகளை

முறையே 1, முதல் 6, வரை கலங்களிலும், 5,நிர். 3-வது பிரிவிலுள்ள கருசு வஜாக்களை 7, முதல் 12, வரை கலங் களிலும, 2,நிர். ஸ்டேட் மெண்டு10, வது கலத்திலுற்ற புஞ்சை சாகுபடியை 13வது கலத்திலும் நஞ்சை சாகுபடியை 18,வது கலத்திலும, 6,நிர். ஸ்டேட் மெண்டில் 8, 13,வது கலங் களிலுள்ள புஞ்சைத் தண்ணீர்த்தீர்வையை யாவது, 6,நிர். (ஏ) உள்ளடக் கத்திலுள்ள புஞ்சைத் தண்ணீர்த் தீர்வையை யாவது, எடுத்து 17,வது கலத்திலும் 6,நிர் ஸ்டேட் மெண்டு 8, 13,வது கலங் களிலுள்ள நஞ்சைத்தண்ணீர்த் தீர்வையை யாவது 6-நிர். (ஏ) உள்ளடக்கத்திலுள்ள நஞ்சைத் தண்ணீர்த் தீர்வையை யாவது எடுத்து 22,வது கலத்திலும் 5-நிர். ஸ்டேட்டு மெண்டு 2-வது பிரிவிலுள்ள இதர வஜாக்களை எடுத்து, 29-வது கலத்திலும் 7-நிர். ஸ்டேட் மெண்டிலுள்ள லாண்டு ரிவினியூ மொத்தத்தை எடுதது 31-வது கலத்திலும் 10-நிர். 2-வது பிரிவுக்கு உள்ளடக்கம் போஸ்டிங் ஸ்டேட் மெண்டின் 3-வது கலத்திலுள்ள செஸ் மொத்தத்தை யெடுத்து, 33,வது கலத்திலும், 9,நிர்.ஸ்டேட் மெண்டில் 7,வது கலத்தி லுள்ள லாண்ட் செஸ் மொதக்கத்தை யெடுத்து 34,வது கலத்திலும் லோக்கல் பண்டை 36,வது கலத்திலும் ஸ்பெஷல் பண்டை 37,வது கலத்திலும் யெடுத்துப் பதிந்து பதிந்த கலங்களின் தகவலால் 41,வது கலம் வரையி லுள்ள யெல்லாக் கலங்களையும், பூரித்துக்கொண்டு, 7,நீர். ஸ்டேட்மெண்டிலுள்ள பாரஸ்ட் ரிவினியூவை, 42,வது கலத்தில் தனியாகக் காட்டி 4,நிர். ஸ்டேட் மெண்டிலுள்ள பேரீஜ் வஜாக்களை இதற்குக்கீழே 39, 41,வது கலங்களுக்கு நேரே காட்டிக் கழித்து நிகரங் கண்டு சென்ற பசலி 12,நிர்.சணக்கைக் கொண்டு, 1முதல் 42,வரையிலுள்ள யெல்லாக் கலங்களையும் பூரித்து, நிகழும் பசலிக்கும் சென்ற பசலிக்கும் இருக்கின்ற வித்தியாசத்தை கீழே ஒவ்வொரு கலங்களின் நேரே குறித்து கூடிடும் தொகைகளுக்குக் (கூட்டல்) அடையாளமும் குறைந்திடும் தொகைகளுக்கு (கழித்தல்) — அடையாளமும் காட்டி கர்ணம் கையெழுத்து செய்ய வேண்டியது.

சம்பாஷணை.

இராமன் —என் அன்பிற்குகந்த சகோதரர்களே! (ஏ) ரிஜிஸ்டர் முதல் 12–நிர். ஸ்டேட்மெண்டு வரையில் சொல்லி வந்த விவரத்தை அறிந்து கொண்டீர்க ளல்லவா? இதற்கு மேல் 13–நம்பர் முதல் 24–நம்பர் வரையிலுள்ள கணக்கு களின் விவரங்களை விவரமாக எடுத்துச் சொல்லுகிறேன்.

நான்கு சகோதரர்கள் — அண்ணு! (ஏ) ரிஜிஸ்டர் முதல் 12–நிர். ஸ்டேட்மெண்டு வரையிலுள்ள கணக்குகளையும் அவை களிலுள்ள விவரங்களையும் கோபாலனுக்குக் கும்மியாக வும், தயார் செய்யும் விதத்தை ஜெகநாதனுக்குச் சிந்தாக வும், லட்சுமணனுக்கு வசனமாகவும் செப்பி வந்ததைக் கேட்டு சித்தத்தில் செவ்வையாய்ப் பதித்து நன்ருய்த் தெரிந்து கொண்டோம். மற்றக் கணக்குகளின் வகை களையும் விவரமாக எடுத்துச் சொல்லும்படி கேட்டுக் கொள்ளுகிருேம். அண்ணு!

இராமன்.— வசனமாகச் சொல்ல வேண்டுமா? கும்மியாகக் கூற வேண்டுமா? என்பதைச் சொன்னுல் உங்களிஷ்டப்படியே சொல்லத் தயாராக இருக்கிறேன்.

லட்சுமணன்.— பாட்டு என்பது எனக்கு வரவே வராது. வசன மாகத்தான் சொல்ல வேண்டும் அண்ணு!

கோபாலன், ஜெகநாதன், சிவப்பிரகாசன். —வசனமாக எத்தனை தரம் சொன்னுலும், எங்கள் இருதயத்தில் பதியவே பதி யாது. எங்களுக்குப் பாட்டாகத்தான் சொல்ல வேண்டும் அண்ணு!

இராமன் — லட்சுமணு! உன் கருத்தின்படி வசனமாகவும், உன் சகோதரரின் கருத்துப்படி பாட்டாகவும் சொல்லுகிறேன் ஆனல் மூவர்கள் கருத்தும் பாட்டாகச் சொல்ல வேண்டு

மென்றிருப்பதால், முதலில் பாட்டாகச் சொல்லுகிறேன். அப்பால் வசனமாகச் சொல்லுகிறேன்.

லட்சுமணன்.— அப்படியே முதலில் பாட்டாகச் சொல்லுங்கள். அதன் பிறகு எனக்கு வசனமாகச் சொல்லுங்கள்.

சிவப்பிரகாசன்.— அண்ணா! இதுவரை சொல்லிவந்த பாட்டுகள் போலில்லாமல் வேறுவிதச் சந்தமாக இருக்க வேண்டும் அண்ணா!

இராமன்.— உன் இஷ்டப்படியே சொல்லுகிறேன். 13-நம்பர் முதல் 24-நமபர் வரையிலுள்ள கணக்குகளின் விவரங்களையும் தயார் செய்யும் விவரத்தையும் வேறுவிதச் சந்தப் பாட்டாகச் சொல்லுகிறேன் கேளுங்கள்.

வசூல் கணக்குகள்.

13-நிர். ஸ்டேட்டு மெண்டு

பதின்மூன்றுமுதலாகப்பதி   னெட்டாம்நம்பர்வரைக்கும்
பணவசூலைச்சேர்ந்ததென்று   கிராமமான்யூலுரைக்கும்

தினசரிவசூலைக்காட்டும்   சிட்டாபதின்மூன்று
தேர்ந்திடுமிதற்குக்கலஞ்   சேரும்பதினைந்து

பணங்கொடுத்தவுடனேஇதில்   பதிவுசெய்துகொண்டு
பதிவுசெய்ததொகையதற்கு   ரசீதெழுதித்தந்து

அன்றுடம்வசூலதனை   ஆகமொத்தஞ்சேர்த்து
அதற்குச்சரியாயிருப்புத்   தொகையைஎண்ணிப்பார்த்து

மொத்தத்தின்கீழ்முந்தினநாள்   வசூல்மொத்தங்காட்டி
முந்தினநாள்வசூலுடனேசேர்ந்து   மொத்தங்கூட்டி

தண்டலுக்குச்சரியான   நகலொன்றுமேயெழுதி
தானனுப்பிவைத்திடுவார்   கர்ணத்துக்குவிரைவில்

தினந்தோறும்இவ்விதமாய்ச் செய்துகொண்டுவந்து
சேர்ந்தமொத்தத்தொகையை இருசாலனுப்புமுந்தி

இதைப்போல்நால்தோறும்கர்ணம் எழுதிவந்தநகலை
இதற்குச்சரிபார்த்துமொத்தம் போட்டதற்குகீழே

வசூலதனில்சம்பளத்தை எடுத்துக்கொள்ளும்படியாய்
வாகுடனேஉத்திரவு கொடுத்திருந்தால்சரியாய்

கழிக்கவேண்டும்விவரத்துடன் இரண்டிலுமேகழித்து
கழிவுபோகமீதத்தொகை இன்னதென்றுகுறித்து

நாணயவாரியுடன் நாடும்எழுத்தாலே
நலமாகத்தானெழுதி அனுப்பவேண்டும்மேலே

இத்துடனேசேர்த்தனுப்பும் கணக்குகளைக்கேளு
இதமானபதினைந்துபதி ஞறுபதினேழு

14-நிர். ஸ்டேட்டு மெண்டு.

வசூல்கோஷ்வாருவென்று வழங்கும்பதிவின்
வகைவிவரமெடுத்துரைப்பேன் கவனத்துடன்கேளீர்

முந்தினபசலிநின்ற பசலிப்பாக்கிதன்னை
முன்னாகவேஇதிலெடுத்துப் பட்டாவாரிதன்னை

எடுத்துப்பதிந்துகொண்டு வசூல்தன்னையும்நாட்டு
ஏற்றஜாஸ்திபாக்கிமுதல் சகலத்தையும்காட்டு

ஜாஸ்திவசூல்தானிருந்தால் அந்தஜாஸ்திதன்னை
சாற்றுமிந்தப்பசலிக்கு வரவுவைப்பாய்சொன்னேன்

எட்டுக்கலங்களுடன் இருக்கிறதையறிவாய்
இறுதியில்டிமாண்டுவசூல் ஜாஸ்திபாக்கிதெரிவாய்

முன்பசலி(சீ)கணக்கில் மூவிரண்டாங்கலத்தில்
இன்பமாயிருக்குமந்த தொகையைஈடுசெய்து

தண்டலில்வசூலதனைத் தாக்கல்செய்தஅன்றே
தவறாமலிக்கணக்கில் பதியவேண்டுமென்றேன்

இருசாலனுப்பவென்று   ஏற்படுமத்தினத்தில்
எடுத்துமொத்தம்கூட்டியதை   வரியேட்டில்குறித்தும்

இவ்விசமாகவேதான்   செய்துகொண்டுவந்து
இன்பமுள்ளபைசலாதி   தான்முடிந்தபின்பு

ஒவ்வொருபட்டாவிற்கும்   உற்றமொத்தங்கண்டு
செவ்வையுடன்முதல்வரியில்   டிமாண்டெழுதிக்கொண்டு

பசலியின்கடாசிஎன்று   பகரும்ஜூன்முடிவில்
பதருமல்மொத்தமதைக்   கூட்டியிதனடியில்

வழக்கம்போல்புகல்வரவு   தானிருந்தால்கண்டும்
வசூல்ஜாஸ்திபாக்கிஎன்ற   வகையெழுதிக்கொண்டும்

கணக்கைமுடிக்கவேண்டும்   என்றுரைத்தேன்அறிவாய்
காணுமிதற்குட்பிரிவு   மூன்றுண்டுவிரிவாய்

14-நிர்.(ஏ) உள்ளடக்கம்.

(ஏ)முதல்(சீ)வரையாய்   இருக்குமந்தமூன்றில்
(ஏ)என்னும்பிரிவதனை   எடுத்துரைப்பேன்முதலில்

பாரத்தில்கண்டகலம்   பன்னிரண்டுஉண்டு
பாங்கானடிமாண்டுவசூல்   பாக்கிஸ்டேட்மெண்டு

பசலியின்முடிவிலிதைப்   பட்டாவாரியாகப்
பதினாலின்வசூலதனைப்   பதிவாய்ஒழுங்சாக

எழுதிமொத்தம்போட்டதன்பின்   இதனடியில்விரிவாய்
ஏற்றவசூல்ஜாஸ்திபாக்கி   என்றெடுத்துவரைவாய்

14-நிர்.(பீ)உள்ளடக்கம்.

வசூலாகமாட்டாத   வகைவிவரங்கண்டு
வாகாயெடுத்துரைக்கும்   பீஸ்டேட்டுமெண்டு

மூவைந்துகலமிதற்கு   முக்கியமாயுண்டு
முதலைந்துகலம்பதிவாய்   பத்திரண்டைக்கொண்டு

நாளதுவரைவசூலை நாடும்ஆறில்உரைக்கும்
நாடிநின்றபாக்கிதனை ஏழதனில்குறிக்கும்

எட்டாங்கலமதனில் இந்தப்பாக்கிக்காக
எடுத்தமுயற்சியெல்லாங் குறித்துவிரிவாக

வசூலாகமாட்டாத வ்கைமுழுதுங்கண்டு
வாகுடனப்பாக்கிதனை கழிக்கவேண்டுமென்று

தக்கதொருஉறுதிமொழி தானெழுதிநவுக்கர்
தங்கள்கையெழுத்திடுவார் ஒன்பதிலின்ஸ்பெக்டர்

நவுக்கரெழுதினதை நன்றாய்விசாரித்து
ஞாயமாகததானிருந்தால் தானுமதற்கொத்து

கழிப்பதற்குத்தான்தகுந்த காரணங்களுரைப்பார்
காரணத்தின்கீழவர்தன் கையெழுத்தும்வைப்பார்

சாற்றிடுஞ்ஷராக்களெல்லாஞ் சரிதானென்று
தன்மையுள்ளதாசில்தார் உண்மையதைக்கண்டு

சரியாயிருந்தாலதைச் சார்ந்தபத்தாங்கலத்தில்
விரிவாய்முழுவதையும் விளம்பிடுவார்துலக்கி

பதினொன்றாங்கலமதனில் பாக்கிதனைப்பதித்து
பாங்குடன்டிவிஷனுக்கு அனுப்பவேண்டும்பின்பு

பன்னிரண்டுமுதலாகப் பதினைந்துவரைக்கும்
பட்சமுள்ளடிவிஷனாபீசர் பைசலெடுத்துரைக்கும்

டிவிஷனாபீசர்கையெழுத்துச் செய்துவந்தபின்பு
செப்புமந்தப்பாக்கிதன்னைக் கழிக்கவேண்டுமென்று

எடுத்துரைத்தேனறிந்திடுவாய் விவரமெல்லாங்கம்பி
அடுத்தடுத்துக்கேட்டிடுவாய் ஆசையுடன்நம்பி

பதினால்(பீ)என்னுமிதில் பதிவுதொகைவிவரம்
பகருகிறேனின்னதென்று பக்ஷமாயின்னேரம்

எல்லாவிதவகையிலுமே — வசூல்செய்யஇசையா
திருக்குமகத்தொகையுடனே — தவறியேகைப்பிசகாய்

பேரிஜாய்ஏற்பட்டிட்ட — பெருமையுள்ளதனமும்
கூறிப்பொதுவுக்காக — கொண்டபட்டாபணமும்

இவ்விதமாய்மூன்றுவகை — எடுத்துரைத்தேன்விரிவாய்
இன்பமாகக்கேட்டிடுவாய் — யென்சொல்லதைமெய்யாய்

14-நிர். (சீ உள்ளடக்கம்.

பதினாலின்(சி)எனவே — பகருமொருகண்க்கு
பட்சமதாய்அதன்விவரம் — பகருகிறேனுனக்கு

ஒன்பதுகலமிதற்கு — உண்டும்என்பதறிவாய்
உற்ற(பதினாலு)க்கொண்டு — ஒன்பதையும்பதிவாய்

ஈடுசெய்யுந்தொகையதனை — எழுதுவாயேமுன்னால்
ஈடுசெய்யாவாப்ஸதனை — இயம்புவாயேபின்னால்

இரண்டுபிரிவாகவேதான் — தனித்தனியேபதிந்து
ஏற்ற(நம்பர்)பதினாலிலே — ஜாஸ்திவசூல்தெரிந்து

பட்டாவாரியாகவேதான் — ஜாஸ்திவசூல்தன்னை
பார்த்தெழுதவேண்டுமென்று — உந்தனுக்குச்சொன்னேன்

15-நிர். ஸ்டேட்டுமெண்டு.

இருசால்நமாவெனவே — இயம்பும்பதினைந்து
ஏற்படுங்கலமிதற்கு — ஏழெனவேஅறிந்து

தண்டலுற்றமொத்தந்தன்னை — தவராமலேஎடுத்து
தக்கதக்ககலங்களிலே — பக்குவமாய்க்குறித்து

இந்தகிராமத்திற்காய் — இருக்கும்வசூலதனை
எடுத்துமூன்றுங்கலமதனில் — குறித்திடுவாய்தானே

இதரகிராமத்திற்காய் — இருசால்செய்யும்பணமாம்
எழுதிடுவாய்நாலதனில் — ஐந்தும்ஆறும்கழிவாம்

ஏழாம்கலத்தில்ஷரா எழுதவேண்டும்அறிவாய்
ஒன்னுமுள்ளவிவரமெல்லாம் சொல்லுவேன்நான்விரிவாய்

கழிக்குந்தொகைவவுச்சரிலே கையெழுத்துவாங்கி
கட்டாயமிதனுடனே அனுப்பவேண்டுந்தாங்கி

இருபதுரூபாய்தனக்கு மேலிருக்குந்தொகைக்கு
இன்பமாய்ஒருஅணாலேபில் ஒட்டவேண்டுமிதற்கு

கழிக்குந்தொகை ஆறதனில் கண்டுமொத்தங்கூட்டிக்
கழித்துநின்றபாக்கிக்கு நாணயவாரிகாட்டி

கழிவுடனேநிகரத்தையும் காட்டும்கலம்ஆறு
கடைசியாகமொத்தமொன்று போடவேண்டும்பாரு

மூன்றும்நாலும்மூவிரண்டுக் சொத்திருக்கும்படியாய்
முக்கியமாய்ப்பார்த்திடுவாய் மொத்தத்துக்குச்சரியாய்

பாரஸ்டிரிவினியூவென்னும் பாபத்துகள்தன்னில்
பாங்கானவெட்டுமரம் விரகுசரிமூங்கில்

மேயத்தக்கபுற்களுடன் மேவிடுங்கால்நடைகள்
நேயமுடன்புசிக்கத்தக்க நீண்டபுல்லின்வகைகள்

இதரசில்லரையின்மாசூல் இவைகளின்விற்பனையில்
ஏற்படுந்தொகையதனை எழுதுவாயேவிரைவில்

கிஸ்திபாக்கிஏலத்தொகைக் கி-மு-விடம்வந்தால்
கிரமமாகவிவரத்துடன் தனியாயிதில்பதிந்தே

நவுக்கர்இருவருமே நாடிஒப்பம்வைத்து
நம்பிக்கையாஞ்சிப்பந்தி ஒருவனிடங்கொடுத்து

அனுப்பிவைக்கலாமானால் அகற்துக்தீங்குவந்தால்
அவர்கள்தான்ஜவாப்தாரி யாகவேண்டுமென்றார்

இருசால்நாமாத்தொகையை ஷரூப்எண்ணிப்பார்த்து
எழுத்துப்படிஇருந்தாலதை ஏற்றுஒப்பம்வைத்து

நகதிகுமாஸ்தாவுடன் நல்லஹெட்டக்கவுண்டாண்டும்
நாடிஇந்தக்கணக்கில்கை யெழுத்துச்செய்யவேண்டும்

தாமிதமாயிருசால் தானனுப்பப்பட்டால்
சரியானகணக்குகளில் தாக்கல்செய்யமாட்டார்

அமானத்தின்பணமென்று அதைவாங்கித்துண்டாய்
அரக்கினலேசீல்போட்டு பூட்டுவார்பூட்டிரண்டால்

அமானத்தில்வைத்தபணம் அதனைப்பெற்றுக்கொண்ட
அதிகாரிதனிரசீது கொடுத்திடுவார்நன்றாய்

மறுநாள் அந்தரசீதை மறுபடியும் அவர்க்கே
மார்க்கமதாய்கொடுத்துமேதான் கேட்டுவாங்கிப்பணத்தை

பணத்தைக்கொடுத்தவுடன் பதினைந்தைதவைத்துக்
குணத்துடனே இருசால்செய்யும் கொள்கைதனைக்குறித்து

பதினைந்தாம்நம்பர்தன்னை சொல்லிவந்தேன் உனக்கு
பதினாறும்நம்பர்தனைப் பகருகிறேனதற்கு

16-நிர். ஸ்டேட்டுமெண்டு (வரியேடு).

நபர்கதிமாசவாரிப் பாக்கிஸ்டேட்டுமெண்டு
நாடுமிதைவரியேடென்று சொல்லுவதும் உண்டு

பசலியின்முடிவில்நின்ற பாக்கிகளைஎடுத்து
பாபத்துவாரிபட்டாவாரி பாங்குடன்பூரித்து

இப்பசலிகிஸ்தியையும் பாபத்துவாரி தானே
எழுதவேண்டுமதன்விவரம் சொல்லுகிறேன் நானே

பட்டாக்கொடுக்குமுன்னே பகரும்கிஸ்திபதிய
சிட்டாத்தொகைவகையில் செப்புமவஜாக்கழிய

சேருங்கர்க்காஸ்த்தீர்வையுடன் தீர்வைஜாஸ்திமுதலாய்
சேருப்வகைதானிருந்தால் சேர்த்துமொத்தவகையாய்

நாலாகப்பகிர்ந்துகொண்டு நாலாங்கலமதனில்
நாடும் அணுமட்டமாக நாடிப்பதிவிரைவில்

இவ்விதமாய்மூன்றுகிஸ்தி ஏற்பட்டிடுந்தொகையாம்
செவ்வையுடன்மற்றதெல்லாம் சேருங்கிஸ்திகாலாம்

உத்தேசடிமாண்டெழுதும் வகை இதுகாண்அறிவாய்
உறுதியுடனுந்தனுக்கு எடுத்துச்சொன்னேன்விரிவாய்

ஒருரூபாய்க்குள்ளாக உற்றதொகையதனை
ஒரேகிஸ்தியாகவேதான் முதலாம்கிஸ்தியதனில்

பதியவேண்டுமென்றறிவாய் பட்டாஇல்லாக்குடிகள்
சதிராய்ச்சர்க்கார்நிலத்தின் சாகுபடிவகைகள்

இவைகளுக்கும்கிஸ்திவாரி கிஸ்திபதிவதில்லை
இன்பமதாயேற்றுக்கொள்வா யெந்தனுடசொல்லை

பகர்ந்தவிவரப்படி பதிந்துமொத்தங்கூட்டி
பாபத்துவாரிபசலிவாரி கோஷ்வாருவுங்காட்டி

பதினாலாம்நம்பர்தன்னில் பதிந்துவந்ததொகையைப்
பதறாமல்கூட்டியித னைந்தாங்கலம்பதியே

முன்பசலிஜாஸ்தியையும் முக்கியமாய்ப்பார்த்து
அன்புடனைந்தாம்கலத்தின் வசூலோடுசேர்த்து

கணக்கைமுடித்துமேதான் கஜானாவுக்குப்போகும்
பணத்துடனேசேர்த்தனுப்ப வேண்டுமென்றுபாரும்

ஒன்றாங்கலந்தனிலே நம்பருடன்பேரும்
உகந்தரெண்டில்பசலியதை உரைக்கும்மான்யூல்பாரும்

மூன்றும்கலமதனில் பாபத்தென்றுஅறிவாய்
முக்கியமாய்க்கிஸ்திவசூல் அட்வான்ஸ்பாக்கிதெரிவாய்

நாலுமுதல்ஏழுவரை நாடியெடுத்துரைக்கும்
நலமாகஇதைப்போல நாலுகிஸ்திவரைக்கும்

17-நிர். ஸ்டேட்டுமெண்டு

பதினேழாம்நம்பரென்று பகருங்கணக்கொன்று
பாங்காய்வட்டி,டிமாண்டுவசூல் பாக்கிஸ்டேட்மெண்டு

மூன்றுபிரிவாகவேதான் முக்கியமாய்இருக்கும்
முதல்பிரிவுலாண்டுரிவினியூ தொகையதனைக்குறிக்கும்

இரண்டாம்பிரிவுஸ்பெஷல் பண்டதனைக்கூறும்
இதற்கடுத்தமூன்றுலோக்கல் பண்டென்பதைப்பாரும்

ஒவ்வொருபாபதத்துக்கும் உற்றபாக்கிவட்டி.
ஒவ்வொன்றின்கிழதனைப் பட்டாவாரிகாட்டி

மூன்றுங்கலத்திலிதைப் பதிவாயென்றுகூறு
மும்மூன்றுகலமிதற்கு உண்டதனைப்பாரு

பசலிமுடியும்வரை வட்டிகிடையாது
பசலிபாக்கியானாலும் அரைக்குறைக்குயேது

ஒருரூபாய்க்குக்குறைவாய் இருக்குமந்தத்தொகைக்கும்
ஒருமாதக்கணக்குக்கு குறைவானநாட்கும்

வட்டிகிடையாதெனவே வழுத்தும்மான்யூல்பாரு
வாகுடனே அறிந்துகொண்டுன் நேசருக்கும்கூறு

18- நிர். ஸ்டேட்டுமெண்டு (ரசீது)

பதினெட்டாம்நம்பரெனப் பகரும்ரசீததனைப்
பகருகிறேனதன்விவரங் கேட்டிடுஎன்முன்னே

பட்டாதாரும்குடிகளுமே பணஞ்செலுத்தும்போது
பணங்கொடுத்ததற்குவாங்கும் ஆதாரவுரசீது

தண்டல்கணக்கில்வருஞல் தாக்கல்செய்தவுடனே
தாக்கல்செய்ததுகையெடுத்து இதில்பதிவாய்பின்னே

இரண்டாம்கலமதனில் பட்டாநம்பர்கண்டும்
இன்னாலந்தத்தொகை செலுத்தப்பட்டதென்றும்

பணவிவரம்தனையெடுத்துப் பகரும்நாலில்விரிவாய்
பாங்குடனேலாண்டுரிவினியூ வகையெடுத்துவரைவாய்

ஐந்தாம்கலத்தில்தொகை அங்கரையாய்ப்பதிந்து
அதைஎடுத்துக்கலம்ஆறில் எழுத்தால்எழுதித்தந்து
நாட்டாண்மைக்காரரேனும் பெரியதனக்காரர்
தேட்டமதாய்கையெழுத்துச் செய்திடுவார்சீராய்

19-நிர். I-II- பிரிவுகள்.

பத்தொன்பதாம் நம்பரொன்று பகருங்கணக்கொன்று
பாங்குடனே அதற்குற்ற பிரிவுகளும் மூன்று

ஜெனனமதை முதற்பிரிவில் சீராகவே பதிந்து
செப்புகின்ற மரணமதைப் பிரிவிரண்டில் வரைந்து

கால்நடை மரணமதைப் பிரிவுமூன்றில் கண்டும
காலண்டர் வருஷமாகக் கணக்குவைக்கவேண்டும்

ஜெனவரிமாதமுதல் டிசம்பர்மாதம்வரைக்கும்
ஜெனனமரண ரிஜிஸ்டரிலே தொடர்ச்சிநம்பர்கொடுத்தும்

ஒவ்வொருமாதத்திலும் உற்றமொத்தங்கூட்டி
செவ்வையுடன் ஒவ்வொன்றிலும் சீராகவே காட்டி

ஜெனனமொத்தம் பத்தொன்பது (ஏ) நமூனா தன்னில்
செவ்வையுடன் தான்பதிந்து (பி) நமூனா அதனில்

மரணமொத்தந்தனை எடுத்து மார்க்கமாகப் பதிவாய்
மாதாமாதம் தாலூகாவுக் கனுப்பவேண்டும் விரைவாய்

கால்நடைமரணமொத்தம் பத்தொன்பது மூன்றில்
கண்டபாரம் (ஏ) யின் கலம் நாலிலதை ஊன்றி

பத்தொன்பதாம் நம்பர் தன்னைப் பற்றும் (ஏ)(பீ) நமூனா
பாரத்தோடு இதையும் சேர்த்து நேராயனுப்புவாராம்

ஆயிரத்து எண்ணூற்றுத் தொண்ணூற்றொன்பதாம் வருஷம்
அமைத்த மூன்றாம் ஆக்ட்டதுவும் அனுஷ்டான கிராமம்
தலைவன் வைக்கும் ரிஜிஸ்டர் பாரம் வேறாகவே இருக்கும்
தக்க அனுஷ்டானமில்லாக் கிராமத்தலைவன் கணக்கும்

வேறாகவே தானிருக்கும் விவரம் நமூனா பாரு
சீராகவே தெரிந்துகொண்டுன் சிநேகனுக்குங்கூறு

ரயில்வேயின் ஹத்துக்குள்ளே குழந்தையது பிறந்தால்
ஒயிலாயந்த குழந்தைகளை ரிஜிஸ்டர்செய்யவேண்டாம்

ஸ்டேஷன் மாஸ்டர்ரிஜிஸ்டர்வைத்துச் சீராகவேபதிந்து
நேசமாகரிஜிஸ்டாருக்கு ஜெனனஜாப்தாவரைந்து

அம்மைகுத்தாய்ரிஜிஸ்டரிலே பதிந்துகொள்ளும்படியாய்
அந்தஜாப்தாசனை எடுத்து அனுப்புவாரேவிரைவாய்

அனுஷ்டானகிராமத்திலே குழந்தையதுபிறந்தால்
அதைப்பெற்றோருமதற்குற்றோரும் இருவாரத்திற்குள்ளாய்

விவரங்களை ரிஜிஸ்டாருக்கு விளம்பவேண்டுமென்ற
விருப்பமுள்ள ஆக்ட்டதனை கருத்துடனே நன்றாய்

பார்த்துத்தெரிந்துகொண்டு அந்தப்படிநடப்பாய்
பகருகின்றமரணமதைப் பதிவதைநீகேட்பாய்

மரணங்கள்நேர்ந்தாலதை நாலுநாளைக்குள்ளாய்
மார்க்கமுள்ளரிஜிஸ்டாருக்கு தாக்கலதைக்கொடுப்பாய்

ஆதரவில்லாக்குழந்தை ஒன்றையாருங்கண்டால்
அதைக்குறித்துரிஜிஸ்டாருக்கு ஒருவாரத்திற்குள்ளாய்

தெரிவிக்கவேண்டுமென்று எட்டுஒன்பதுபத்தும்
தெளிந்திடும்பிரிவுகளில் செப்புவதைப்பார்த்தும்

ஆஸ்பத்திரிதன்னிலொரு குழந்தைபிறந்தாலும்
அதிலிருந்தஒருமனிதன் இறந்துபோனபோதும்

வைத்தியம்செய்யும்உத்தியோகஸ்தர் வாய்த்தநமூனைவரைந்து
வரைந்தநமூனைதன்னை ரிஜிஸ்டாருக்குவிரைந்து

அனுப்பிவைப்பார் அடுத்திருக்கும் சத்திரம்சாவடிஹோட்டல்
ஆனபொதுவிடுதியிடம் சாராயவிற்பனைகள்

செய்யுமிடம்ஜனங்கள்நட மாடும்பொதுஸ்தானம்
சேருமிடங்களிலே செப்பும்ஜெனனமரணம்

நேர்ந்திட்டாலந்தஇடச் சொந்தக்காரமனிதர்
நேசமாய்வளர்ப்போர்விசு வாசமுள்ளபேர்கள்

நாற்பத்தெட்டுமணிக்குள்ளாக நாடும்ரிஜிஸ்டார்முன்பு
நலமாயந்தச்சேதிதன்னை எடுத்துரைப்பார்நம்பு

அம்மைகுத்தும் ரிஜிஸ்டர்.

பத்தொன்பதின்(சி)(டி)என்று பகரும்ரிஜிஸ்டர்ரெண்டு
பாங்குடனே அம்மைகுத்தும் விவரமெல்லாம்உண்டு
அனுஷ்டானகிராமத்துக்கு (டி)என்பதில்வரைவார்
அனுஷ்டானமில்லாவிடில் (சி)என்பதில்பதிவார்
குழந்தைபிறந்தவுடன் ரிஜிஸ்டரிலேபதிந்தும்
குழந்தைகளின்வீட்டுநம்பர் கலம்எட்டினில்வரைந்தும்
காலண்டர்வருஷமாகக் கணக்குவைத்துவருவாய்
கண்டகலம்ஒன்றதனில் தொடர்ச்சிநம்பர்பதிவாய்
இதில்பதிந்த குழந்தையொன்று இறந்துபோனபோதும்
இவ்வூர்தனிலிருந்து வேறிடஞ்சென்றாலும்
ஷராக்கலத்தில்விவரமாகத் தாக்கல்செய்யவேண்டும்
தாய்தந்தைபேர்களையும் ஆறுங்கலம்கண்டும்
அசலூர்தனில்பிறந்த குழந்தை இங்குவந்தால்
அந்தக்குழந்தையையும் இதிலெடுத்துநன்றாய்
வரைந்தபின்ஷராக்கலத்தில் வகைவிவரங்கண்டு
வாகுடனவ்வூரின்பேரை எழுதிடவும்வேண்டும்
அம்மைகுத்தும் அதிகாரிகள் கிராமத்துக்குவந்தால்
அம்மைகுத்தாக்குழந்தைகளை கொண்டுவந்துநன்றாய்
அம்மைவைத்துரிஜிஸ்டரிலே அதின்விவரம்பதிவாய்
அம்மைவைத்தகுழந்தைஜாப்தா எழுதியேநீதருவாய்

20-நிர். ஸ்டேட்மெண்டு.

இருபதாம்நம்பரென்று இயம்புங்கணக்கொன்று
ஏப்பிரல்மாதம்முதல் ஆரம்பிக்கவேண்டும்
மழைபெய்ததேதியொன்றில் மழையளவிரண்டில்
மற்றஏழுகலம்வரையில் பாசனப்பேர்கண்டும்
அதற்குக்கீழேஅளவுமாதம் அமைந்திருப்பதைப்பாரு
அதற்கேற்றவிவரந்தன்னை நீஎடுத்துக்கூறு

மழையளக்குங்கருவியினால்   மழையளவைத்தெரிந்தும்
மழைபெய்தஅங்குலத்தை   இரண்டாங்கலம்பதிந்தும்
கண்மாய்க்குஜலம்வந்ததை   நேராகவேகாட்டி
கலத்தில்கண்டவரவுகளை   ஒன்றாய்மொத்தங்கூட்டி
சிலவானஜலமதனை   சீராகவேகழித்து
சிலவுபோகபாக்கிதன்னைக்   கீழாகவேகுறித்து
காலஸ்திதிவிவரத்துடன்   கால்நடை ஆரோக்கியம்
காணும்பயிர்ஸ்திதிகளையும்   ஷராக்கலத்தில்முக்கியம்
சொல்லவேண்டுமென்றுரைத்தேன்   கிராமமான்யூல்பாரு
சொல்லும்விவரமெல்லாம்   செவிகொடுத்துக்கேளு
மழையளக்குங்கருவியில்லாக்   கிராமமாகயிருந்தால்
மழையளவைப்பதியும்விதம்   உரைத்திடுவேன்நன்றாய்
புஞ்சைஉழுவதற்குப்   போதுமானமழையாய்ப்
பூமியில்விழுந்தாலதை   ஒரு(பதினு)செவியாய்க்
கணக்கிட்டுக்கலமிரண்டில்   காட்டவேண்டும்நேராய்க்
காலஸ்திதிவஜாவுக்கிது   முக்கியமென்றுபாராய்

(21-நம்பர்)

விவசாயந்தனக்குதவும்   விவசாயக்கருவி
விருப்பமுள்ளகால்நடைகள்   வெள்ளாட்டுவகைகள்
இதைப்போலநேகவகை   இருக்கிறதைஒருநாள்
எண்ணிக்கணக்கிட்டுமே   இதிலெடுத்துநலமாய்
வருஷமைந்துக்கொருதடவை   வரையுங்கணக்கிதுவாம்
வாகுடனேஒவ்வொன்றையும்   கூட்டிமொத்தம்பதிவாம்

22-நிர். ஸ்டேட்மெண்டு.

இருத்திரண்டாம்நம்பர்   என்றுசொல்லுங்கணக்கு
எடுபட்டுப்போனதினால்   சொல்லவில்லைஉனக்கு

23-நிர். ஸ்டேட்மெண்டு.

பத்தாமநம்பர்பிரிவிரண்டில்   பகரும்ஒன்றும்ஐட்டம்
பதிந்ததொகையுடனேதண்ணீர்த்   தீர்வைசேர்ந்தமொத்தம்

வந்ததொருமொத்தமதை   வாருடனேபார்த்து
வகுப்புவாரிதனிப்பட்டாக்கள்   கூட்டுப்பட்டாப்பிரித்து

ஒருரூபாய்க்குள்பட்டதை   முன்னாகவேபதிந்தும்
உகந்தபத்துமுப்பதைம்பது   ரூபாய்நூறுஎன்றும்

சதத்துக்குமேலிருநூற்றைம்பது   ரூபாய்வரைகண்டும்
சாற்றுமிந்ததொகைக்குமேலே   ரூபாய்ஐநூறென்றும்

ஐந்நூறுரூபாய்க்குமேலே   ரூபாய்ஆயிரம்வரையும்
அதற்குமேலேகூறுகின்ற   தொகையின்வகைமுழுதும்

இவ்விதமாய்ப்பட்டாக்களைக்   கூட்டுதனிப்பிரித்தும்
ஏற்றகலம்ஐந்துவரை   தனிப்பட்டாக்கள்குறித்தும்

ஆறுமுதல்பத்துவரை   கூட்டுப்பட்டாப்பதிந்தும்
ஆகமொத்தம்கூட்டியதன்   மொத்தமொன்றுவரைந்தும்

வருஷம்ஐந்திற்கொருதடவை   வரையவேண்டுமென்று
வாகுள்ளமான்யூலும்   வழுத்தியதைக்கண்டு

எடுத்துரைத்தேனுந்தனுக்கு   எல்லாம்அறிவாயே
இன்பாய்த்கைப்பற்றின்   ஸ்திதிவளப்பம்நீயே

24-நிர்.ஸ்டேட்டுமெண்டு.

இருபத்துநாலாம்நம்பர்   என்னும்ஸ்டேட்மெண்டு
இயம்புகின்றசுரங்கங்களின்   விவரங்களைக்கொண்டு

எட்டுக்கலப்பாரத்திலே   எடுத்துநன்றாய்ப்பதிந்து
இதற்குற்றவிவரங்களைச்   சரியாகவேதெரிந்து

தங்கமதைஅவுன்ஸ்கணக்கில்   தாக்கல்செய்யவேண்டும்
தக்கவயிரக்கற்களை   மஞ்சாடிஎன்றும்

படிகாரம்அரக்குகல்நார்   பகரும்தகரமுதலாய்
பதிந்திடுவாய்அந்தர்பவுன்   கணக்கிலிதைநேராய்

இரும்புசுண்ணாம்புகாந்தம்   இவைகள்போலமற்ற
இதராதுவர்க்கமான   சிலேட்டுக்கற்கள்உற்ற

தாதுவர்க்கமாயிருந்தால் டன்கணக்கில்காட்டி
தக்க தக்ககலங்களிலே பக்குவமாய்நாட்டி
இக்கணக்கைமுடித்திடுவாய் என்றுரைத்தேன் அறிவாய்
இறைவனருளினாலே சகலமும்நீதெரிவாய்

சம்பாஷணை.

லட் — அண்ணா! இப்போது என்சகோதரர்கள் கேட்டுக்கொண்டபடி 13-ம் நம்பர் முதல் 24-ம் நம்பர் வரையிலுள்ள கணக்குகளின் விவரங்களையும் தயாரிக்கும் விவரங்களையும் பாட்டாகச் சொல்லி வந்தது எனக்குக் கொஞ்சம்கூடத் தெரியவில்லை. அவைகளையும் முன் சொல்லி வந்தது போல எனக்கு வசனமாகச் சொல்லி வந்து தயாரிக்கும் விதத்தை மட்டும் கடாசியில் சொல்ல வேண்டும் அண்ணா!

இரா — அப்படியே சொல்லுகிறேன் கேள்.

வசூல்கணக்கு

13-நிர்.ஸ்டேட்மெண்டு.

லட்.—13-நிர்.ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?

ராமன்.—தினசரி வசூலைக் காட்டும் தண்டல் சிட்டா.

லட்.—இதற் கேற்பட்ட 5-வது கலத்தில் என்ன அய்ஸங்கள் காட்ட வேண்டும்?

ராமன்.— 5வது கலத்தில் லாண்டுசெஸ் ரெவினியூசெஸ்களையும் மற்றவைகளை (பீ) என்னும் 6,7, கலங்களிலும்பதியவேண்டும்

லட்—பாரஸ்டு ரெவினியூவை எந்த கலத்தில் பதிய வேண்டும்?

ராமன்.—இந்த 13, நிம்பரிலும் 15, நிர். கணக்கிலும் தனியாகக் காட்டவேண்டும்.

லட்.—கிஸ்திபாக்கி வலத்தொகை வந்தால இதில் எப்படிக்காட்ட வேண்டும்?

ராமன்.— 13, நம்பர் கணக்கிலும் 15, நிர் கணக்கிலும் தனியாகக் காட்டவேண்டும்.

லட்.— தாலுகாவுக்கு இருசால் அனுப்பும் போது எந்த பாபத்துக்களை இந்தக் கணக்கில் கழிக்கவேண்டும்?

ராமன்.—கிராமச்சிப்பந்திகளுக்குக் கொடுக்கும் சம்பளங்களையும் தேவாலயங்களுக்குக் கொடுக்கும் தொகையையும் பதிவு செய்யவேண்டியது.

லட்சுமணன்.— இதர கிராமத்து பாக்கிக்காக வசூலாகும் தொகையை இந்தக்கணக்கில் தாக்கல் செய்யலாமா.

ராமன்.— இந்தக்கணக்கில் தாக்கல் செய்து கொண்டு ஷராக்கலத்தில் காட்ட வேண்டும்.

லட்சுமணன்.— எந்தச் சமயத்தில் கர்ணம் கிஸ்தி பணம் வாங்கலாம்.

ராமன்.— கர்ணம் என்னும் ஹோதாவில் எப்போதும் வாங்கக் கூடாது இரண்டு வேலையும் பார்த்தால் வாங்கலாம்.

லட்சுமணன்.— இந்தக்கணக்கை தயார் செய்பவர் யார்?

ராமன்.— அசல் பிரதியை பெரியதனக்காரரும் தாலுகாவுக்கு அனுப்பவேண்டி பிரதியை தினந்தோறும் கர்ணமும் எழுதி இருசால் அனுப்பும் போது இரண்டும் ஒத்துப் பார்த்து கர்ணமும் கி-மு-வும் கையெழுத்து செய்து தாலுகாவுக்கு அனுப்பவேண்டும்-

லட்சுமணன்.— அசல் பிரதி யாரிடத்தில் இருக்க வேண்டும்.

ராமன்.— அசல் பிரதி மறுபசலி வரையில் பெரிய தனக்காரரிடத்தில் இருக்கும் நகல் பிரதி 5 வருஷம் வரையில் தாலுகாவில் இருக்கும்.

14- நிர் ஸ்டேட்மெண்டு.

லட்சுமணன்.— 14, நிர் ஸ்டேட்மெண்டு என்றால் என்ன?.

ராமன் — வசூல் கோஷ்வாரு.

லட்சுமணன்—.14, நிர் ஸ்டேட்மெண்டில் என்ன விவரம் தெரிந்து கொள்ளலாம்.

ராமன்.— 13, நிர் தண்டல் கணக்கில் கண்ட வசூல் தொகைகளைப் பட்டாவாரி தெரிந்து கொள்ளலாம் ஆகையால் தான் வசூல் கோஷ்வாரு என்று இதற்குப் பெயர்.

லட்சுமணன்—. இதன் இரண்டாவது கலத்தில் என்ன விவரம் பதிய வேண்டும்

ராமன்,— 13 நிர் ஸ்டேட்மெண்டிலுள்ள வசூலை எடுத்துப் பதிய வேண்டும்

லட்சுமணன்—. தாளடித்தீர்வை என்றால் என்ன? அதை இந்தக் கணக்கில் காட்ட வேண்டுமா?

ராமன்—-இரண்டாம் போகத் தீர்வைக்குத் தான் தாளடித் தீர்வை என்று பெயர், அதுலாண்டுரிவினியூவைச்சேர்ந்ததால் இதில் பதிய வேண்டும்.

லட்சுமணன்.—முந்தின பசலி பாக்கி இருந்தால் அந்தத் தொகையையும் இதில் சேர்த்துக் காட்ட வேண்டுமா?

ராமன்.— முந்தின பசலி பாக்கிக்கு ஏற்பட்ட விவரங்களை முதலில் பட்டா நிம்பர் வரிசையாகப் பதிந்து கொண்டு நிகழும் பசலிக்கு எழுத வேண்டும்.

லட்சுமணன்.— வட்டிக்குடிமாண்டு பதியும் போது எதைப் பார்த்துப் பதிய வேண்டும்?

ராமன்.— 17, நிர் கணக்கிலிருந்து எடுத்துப் பதிய வேண்டும்.

லட்சுமணன்.— வசூலாகமாட்டாதென்று கணக்கிலிருந்து கழிக்கப் பட்ட தொகையை இதில் காட்ட வேண்டுமா?

ராமன்.— ஆம் இதில் காட்டி அடியில் கழித்து விட வேண்டும்.

லட்சுமணன்.— முந்தினபசலி ஜாஸ்தி வசூல்களை எந்தக்கலத்தில் பதிய வேண்டியது?

ராமன்.— வசூல் கலத்தில் பதிய வேண்டும்.

லட்சுமணன்.— முன்னால் எழுதியிருக்கும் முந்தின பசலி பாக்கி இனங்களில் டிமாண்டுக்கு மேல் ஜாஸ்தி வசூல் இருந்தால் அந்த ஜாஸ்தி வசூலை நிகழும் பசலிக்கு வரவு வைக்கலாமா?

ராமன்.— வரவு வைத்துக் கொள்ளலாம்.

லட்சுமணன்.— பசலியின் ஆகையரில் இந்த ஸ்டேட்டுமெண்டில் என்னென்ன அம்சங்கள் பதிய வேண்டும்?

ராமன்.— ஜமாபந்தி முடிந்தவுடனே ஒவ்வொரு பட்டாவுக்கும் தலைப்பில் ஏற்பட்ட டிமாண்டை எழுதிக் கொண்டு, ஜூன் மாதம் வரை பதிந்திருக்கிற வசூலை மொத்தம் கூட்டி ஜாஸ்தி வசூல் இருந்தால் அது விவரத்தையும் பாக்கி இருந்தால் அது விவரததையும் ஒவ்வொரு பட்டாவுக்கும் அடியில் பதிந்து கோஷ்வாரா போட வேண்டும்.

14-நிர்.(ஏ) உள்ளடக்கம்.

லட்சுமணன்—. 14, (ஏ) உள்ளடக்கத்தின் பிரயோஜனம் என்ன?

ராமன்—. கிராம மொத்தம், டிமாண்டையும் அதன் பின் ஒவ்வொரு பட்டாவுக்கு ஏற்பட்ட மொத்த வசூலையும், கடைசியில் கிராம மொத்தத்திற்கு ஏற்பட்ட வசூல், ஜாஸ்தி வசூல், பாக்கி முதலிய விவரங்களையும் தெரிந்து கொள்ளலாம்.

14-நிர்.(பீ) உள்ளடக்கம்.

லட்சுமணன்—. 14, (பீ) உள்ளடக்கத்தில் என்னென்ன விவரம் தெரியும்?

ராமன்—. 1864ம் வருஷ 2, வது ஆக்டாகிய வசூல் ஆக்டின்படி எவ்வித காரணத்தினாலும் வசூலாக மாட்டாத பாக்கியை கழிப்பதற்கு ஏற்பட்ட வருஷவாரி ஸ்டேட்மெண்டு,

லட்சுமணன்—. இந்த ஸ்டேட்மெண்டில் எவ்வித காரணத்திலும்

வசூல் செய்ய மார்க்கமில்லாத தொகையைத்தவிர வேறே தொகையைப் பதியக்கூடாதோ?

ராமன்.— கைததசவறுகலாய் பேரீஜில் ஜாஸ்தியாகப் பதியப் பட்ட சவறுகல் தொகையையும் பொது நன்மைக்காக எடுத்துக் கொள்ளப்பட்ட நிலம் பட்டாவிலிருந்து கழிக்காமலிருந்தால் அந்தத் தொகையையும் ஆக மூன்று விதமான தொகைகளையும் இந்த ஸ்டேட்மெண்டில் பதிய வேண்டும்.

லட்சுமணன்.—இதில் கண்ட தொகையை கணக்குகளிலிருந்து எப்போது கழிக்க வேண்டும்.

ராமன்.— டிவிஷனுபேசர் 12, முதல் 15, வரையிலுள்ள கலங்களை பதிவுசெய்த மேல்தான் கணக்குகளில் கழிக்க வேண்டும்.

14-நிர் (சி) உள்ளடக்கம்.

லட்சுமணன்.— 14-நிர். சி-உள்ளடக்கத்தில் என்ன விவரம் தெரிந்து கொள்ளலாம்.

ராமன்.— ஜாஸ்தி வசூல் ஏற்பட்ட இனங்களை பட்டாவாரியாகத் தெரிந்து கொள்ளலாம்.

லட்சுமணன்.— ஜாஸ்தி வசூல்களை எத்தனை பிரிவாக எழுத வேண்டும்.

ராமன்.— அடுத்த பசலிக்கு அந்தப் பட்டாவுக்கு முஜராத் தண்டல் வைப்பவைகளை I—வது பிரிவாகவும் ரீபண்டாக வேண்டிய தொகைகளை II—வது பிரிவாகவும் எழுத வேண்டும்.

லட்சுமணன்.— முஜராத்தண்டல் வைப்பதென்றால் அர்த்தம் என்ன.

ராமன்.— முஜராத்தண்டல் வைப்பதென்றால் ஈடு செய்வது.

லட்.— இதில் கண்ட ஜாஸ்தி வசூல்களை எப்போது எந்தக் கணக்கில் ஈடு செய்வது.

ராம.— அடுத்த பசலி 14-நிர். ஸ்டேட்மெண்டில் வசூலாவதற்கு முன் சம்பந்தப் பட்ட பட்டாக்களுக்கு வரவு வைத்துக் கொள்ள வேண்டும்.

15-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 15, ம் நிர் ஸ்டேட்மெண்டின் பிரயோஜனம் என்ன.

ராம.— கிஸ்தி தொகைகளை தாலுகாவுக்கு அனுப்பும்போது 13-ம் நிர் ஸ்டேட்மெண்டின் மொத்தத்தை எடுத்து அதில் தாக்கல் செய்திருக்கும் தொகைகளை சம்பந்தப்பட்ட கலங்களில் தாக்கல் செய்து அனுப்புவதற்கு ஏற்பட்ட ஸ்டேட்மெண்டு

லட்.— சம்பளக்கழிவை இதில் கழிக்க வேண்டுமோ.

ராம— 13, நிர் ஸ்டேட்மெண்டில் பதிவது போல் இதிலும் பதிந்து கழித்து, கழித்து நின்ற பாக்கிக்கு நாணய வாரி காட்டி தொகையை எழுத்தால் எழுதி அனுப்ப வேண்டும்.

லட் — இதில் கழிக்கும் தொகைகளுக்கு வவுச்சர்கள் அனுப்ப வேண்டுமோ

ராம.— வவுச்சர் அனுப்ப வேண்டும் பெற்றுக் கொள்ளும் தொகைகள் இருபது ரூபாய்க்கு மேலிருந்தால் ஒரு அணா ஸ்டாம்பு ஒட்டி கையெழுத்து வாங்க வேண்டும்.

லட் — இந்தக் கணக்கில் யார் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

ராம.— பெரிய தனக்காரரும் கர்ணமும் கையெழுத்துச் செய்ய வேண்டும்.

லட் — தாலுகா உத்தியோகஸ்தர்களில் கையெழுத்துச் செய்பவர் எவர்.

ராம.— சரூப் குமாஸ்தா நகதி குமாஸ்தா தாலுகா ஹெட் அக்கவுண்டாண்டு கஸ்பாவில் தாசில்தார் இருந்தால் அவரும் கையெழுத்துச் செய்ய வேண்டும.

லட்.— கிஸ்திபாக்கிக்காக போடப்பட்ட ஏலத்தி லெடுத்த பணம் கொடுத்தால் கிராம பெரிய தனக்காரர் பெற்றுக் கொள்ளலாமா.

ராம — கிஸ்தி பாக்கி ஏலத்தொகையைப் பெற்றுக் கொண்டு 13-ம் நிர் கணக்கிலும் இதிலும் பதிவு செய்ய வேண்டும்,

லட்.— பாஸ்டு ரிவினியூவைப் பற்றிக் கவனிக்க வேண்டிய விஷயங்கள் என்ன.

ராம—. பாஸ்டு பயிலில் சண்ட நம்பர்களை அடியில் தாககல் செய்வதுடன் (1) வெட்டு மரம் (2) விறது (3) கரி (4) வீடுமேயும் புற்களும் கால் நடைகள் தின்னும் புற்களும் (5) இதர சில்லரை மாசூல் விற்பனையால் ஏற்பட்ட தொகை என்ற விவரமாய் எழுத வேண்டியது.

லட்.— இருசால் கொண்டு போகும்போது கால தாமதம் ஏற்பட்டுச் செலுத்த முடியாமல் போனால் என்ன செய்ய வேண்டும்?

ராம — அதை வாங்கி அமானத்தில் வைத்து தனி ரசீது கொடுப்பார்கள் மறு நாள் ரசீதைக் கொடுத்து பணத்தை வாங்கி (15) நிர் ஸ்டேட்மெண்டை வைத்துப் பணத்தைச் செலுத்த வேண்டும்.

16-நிர். ஸ்டேட்மெண்டு

லட்.—16, நிர் ஸ்டேட்டமெண்டு என்றால் என்ன?

ராம.— நபர்கதி யாதவாரி பாக்கி ஸ்டேட்மெண்டு இதை வரியேடு என்றும் சொல்வார்கள் ஒவ்வொரு பட்டாதாரும் செலுத்த வேண்டிய கிஸ்தியைத் தெரிவிக்கும் கணக்கு.

லட்.— இதை எப்போது தயார் செய்ய வேண்டியது?

ராம.— வசூல் காலங்களில் முதல் முதல் தயார் செய்ய வேண்டிய கணக்கு இது தான்.

லட்.— அப்போது ஜமாபந்தி முடிந்திருக்கமாட்டாதே எப்படி கிஸ்தி பதிகிறது?

ராம.— உத்தேசமாக டிமாண்டு ஏற்படுத்திக் கொண்டு கிஸ்தி வாரி பதிந்து கொடுக்க வேண்டும்.

லட்.— உத்தேச டிமாண்டு தெரிவ தெப்படி?

ராம.— சென்ற பசலி 10, நம்பர் 11-வது விரிவிலுள்ள தொகைகளில் கழிக்க வேண்டியவைகளைக் கழித்து தர்க்காஸ்து

ஜாரி, தீர்வை ஜாஸ்தி, பசலி ஜாஸ்தி, முதலியவைகளைச் சேர்த்து உத்தேசமாக டிமாண்டு ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

லட்.—கிஸ்தி பிரிக்கும் விதம் எப்படி?

ராம.— மொத்தம் தொகையை நாலாகப் பகிர்ந்து 3, கிஸ்தி வரை அணுமட்டமாகக் கண்டது போக மீதத்தை 4-ம் கிஸ்தியில் பதிவு செய்ய வேண்டும்.

லட்.— ஒரே கிஸ்தியாக பதிவு செய்ய வேண்டிய தொகைகள் கிடையாதோ?

ராம— ஒரு ரூபாய்க்கு குறைவான தொகைகளையும் பட்டா இல்லாத குடிகள் சர்க்கார் நிலத்தைப்பற்றிய தொகைகளையும் கிஸ்திவாரி யில்லாமல் ஒரே மொத்தமாகப் பதிவு செய்து கொடுக்க வேண்டும்.

லட்.—கிஸ்தி பதிவதைத் தவிர வேறொன்றும் இதில் பதிவு செய்வதில்லையோ?

ராம.—இதில் இருசாலனுப்பும் ஒவ்வொரு மாதத்திலும் 14, நிர் ஸ்டேட்மெண்டிலிருந்து வசூல் பதிந்து அதிலிருந்து அட்வான்ஸ் பாக்கி பதிந்துகோஷ்வாறுபோட்டுப் பணத்துடன் தாலுகாவுக்கு அனுப்பிக் கொண்டு வர வேண்டும்.

லட்.— 14, நிர் (சீ) உள்ளடக்கத்தில் கண்ட ஜாஸ்தி தொகையை இந்தக்கணக்கிலும் யீடு செய்ய வேண்டுமோ?

ராம.— 14, நிர் ஸ்டேட்மெண்டில் ஈடு செய்திருக்கும் தொகையை அதில் பதிந்திருக்கும் வசூல் தொகைகளுடன் சேர்த்து இதன் வசூல் கலத்தில் பதிவு செய்ய வேண்டும்.

லட்.— ஒரே மாதத்தில் இரண்டு தடவை இருசால் செய்கிறதாயிருந்தால் இந்தக் கணக்கில் எப்படி தாக்கல் செய்கிறது?

ராம.— ஒவ்வொரு மாதத்துக்கும் இரண்டு வசூல் கலங்கள் ஏற்பட்டிருக்கிறது முந்தின வசூல் கலத்தில் முதலாவது இருசாலையும் பிந்தின வசூல் கலத்தில் பிந்தின இருசாலையும் பதிய வேண்டும்.

17-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 17-நிர் ஸ்டேட்மெண்டில் என்ன தெரிந்து கொள்ளலாம்?

ராம.— வட்டிக்கு ஏற்பட்ட டிமாண்டு, வசூல், பாக்கிகளைத் தெரிவிக்கும் கணக்கு என்பதைத் தெரிந்து கொள்ளலாம்.

லட்.— எத்தனை பிரிவாக எழுத வேண்டும்?

ராம —லாண்டு ரிவினியூ, ஸ்பெஷல்பண்டு, லோக்கல்பண்டு என்று மூன்று பிரிவாக எழுதவேண்டும்.

லட்.— இதில் எந்தத் தொகைகளை பதிவு செய்யவேண்டும்?

ராம.— ஜூன் மாதம் ஆக யாராகிய பசலி முடிவில் நின்ற பாக்கி இனங்களை பட்டாவாரி ஒவ்வொரு பாபத்தின் கீழே பதிவு செய்ய வேண்டும்.

லட்,— ஜூன் மாதம் கடாசியில்நின்றபாக்கிக்கு ஜூலை மாதம் 28-ம் தேதி பணம் செலுத்தினால் வட்டி உண்டோ?

ராம.— இந்தக் கணக்கில் பதிவு செய்ய வேண்டும் அதற்கு வட்டி கிடையாது அரை குறை மாதத்துக்கும ஒரு ரூபாய்க்குள் பட்ட தொகைக்கும் வட்டி கிடையாது.

லட் — இந்தக்கணக்கில் கண்ட வசூல் கலம் எப்போது பதிவு செய்கிறது?

ராம — ஒரு பட்டாதார் பணம் செலுத்த வரும் போது முதலில் வட்டிக்கு வரவு வைத்துக் கொண்டு தான் மற்ற பாபத்துக்களுக்கு வரவு வைக்க வேண்டுல் அப்படி 13-நிர். ஸ்டேட்மெண்டில் வட்டி வசூல் பதிந்தவுடனே இந்தக் கணக்கில் வரவு வைக்க வேண்டியது.

லட் — 14-நிர் (பீ) உள்ளடக்கத்தில் கண்ட தொகைகளுக்கும் இதில் வட்டி விதிக்க வேண்டுமோ?

ராம — ஒவ்வொரு மாதமும் மற்ற பாக்கிகளுக்கு விதிப்பது போல 14-நிர். (பீ) உள்ளடக்கத்தில் கண்ட பாக்கித் தொகைகளுக்கும் வட்டி ஏற்படுத்திக் கொண்டு வந்து கணக்கிலிருந்து

கழித்தவுடனே வட்டியையும் அடித்து விட வேண்டும் இதற்கு தனியாக உத்திரவு வேண்டியதில்லை.

லட்.— ஒவ்வொரு மாசமும் இந்தக் கணக்கை இருசாலோடு அனுப்ப வேண்டுமோ?

ராம.— பூரா பாக்கிகளும் வசூலாகிற வரையில் இதை 16-நிர். கணக்குடன் அனுப்பிக் கொண்டு தான் வர வேண்டும்.

18-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 18-நிர். எதற்காக உபயோகப்பட்டது?

ராம.— குடிகள் கிஸ்தி தொகை செலுத்துவதற்கு ஆதாரவிற்காக பெரியதனக்காரரால் கையெழுத்துச் செய்து கொடுக்கப்படுவது.

லட்.— பட்டாதாரில்லாமலும் ரசீதுப்புஸ்தகமில்லாமலும் பணம் செலுத்தினால் ரசீது கொடுப்பதெப்படி?

ராம — தனிரசீது ஒன்று கொடுக்க வேண்டும் ரசீதுப் புஸ்தகத்தை ஆஜர் செய்யும் பொழுது அந்தத் தொகைகளை அதில் பதிந்து பெயர்த்தெழுதப் பட்டதென்று ஷராக்கலத்தில் குறிக்க வேண்டியது.

லட் — முந்தின பசலி 14-நிர்.(சீ) கணக்கில் கண்டதும் நிகழும் பசலி 14-நிர். ஸ்டேட்மெண்டில் ஈடு செய்திருப்பதுமான ஜாஸ்தி 'வசூல்களை இந்த ரசீதுப் புஸ்தகத்தில் பதிவு செய்து கொடுக்கலாமா?

ராம — பதிவு செய்து கொடுக்கலாம் ஆனால் ரசீது புஸ்தகம் 2-வது. கலத்தில் ஜாஸ்தி வசூலிலிருந்து தண்டல் வைக்கப் பட்டதென்று தெளிவாய்க் கண்டெழுத வேண்டும்.

19-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 19-நிர். ஸ்டேட்மெண்டு எதைப் பற்றியது?

ராம.— இது மூன்று பிரிவுகளையுடையது I-வது. பிரிவில் ஜெனனங்களையும் II-வது பிரிவில மரணங்களையும். III-வது பிரிவில் கால் நடை மரணங்களையும் பதியும் தினசரி ரிஜிஸ்டர்

லட்—ஜெனனமரணங்கள் நேரிட்டால் அதைரிஜிஸ்டாருக்கு சொல்லாவிட்டால் அபராதம் விதிப்பார்களா மே அது வாஸ்தவமா

ராம — 1899 ஞூ 3வது ஆக்ட்டாக ஒரு ஆக்ட் ஏற்படுத்தியிருக்கிறார்கள் அந்த ஆக்ட் அனுஷ்டானத்தி லிருக்கும் கிராமங்களில் அந்தவித ஏற்பாடுண்டு

லட.— அந்த ஆக்ட்டுப்படி ஒவ்வொன்றையும் சொல்வதற்கு ஏற்பட்ட காலம் என்ன

ராம.— ஜெனனங்களை இரண்டு வாரத்திற் குள்ளாகவும் மரணங்களை நான்குதினத்திற் குள்ளாகவும் சொல்ல வேண்டும்

லட.— ஜெனன மரணங்களைக் குறித்து தாலூகாவுக்கு அனுப்ப வேண்டிய கணக்குகள் எவை

ராம.—ஒவ்வொரு மாதத்திலும ஏற்பட்ட மொத்தத்தை அடுத்த மாதம் முதல்தேதியன்று மொத்தங்கூட்டி ஜெனன மொத்தத்தை (19-ஏ-நமூனுவிலும்) மரண மொத்தத்தை (19-பீ-நமூனுவிலும்) கால் நடை மரண மொத்தத்தை (19-III-ஏநமூனுவிலும்) பதிந்து தாலூகாவுக்கு அனுப்ப வேண்டும்

லட்.— இவை களின் 1-வது கலத்தில் எந்த நம்பரை பதிப வேண்டியது

ராம.— ஜெனவரி மாதமுதல் டிசம்பர் மாதம் வரைக்கும் கூடுகிற கேசுகளுக்கு துபர்ச்சி நம்பர் கொடுத்து காலண்டர் வருஷமாக கணக்கு வைக்க வேண்டும்

லட்.— ரயில்வேயின் ஹத்துக்குள்ளே குழந்தை பிறந்தால் இதில் பதியக் கூடாதாமே.

ராம.— பதியக்கூடாது கோஷ்வாராவிலும் காட்டக் கூடாது ஸ்டேஷன் மாஸ்டர் ரிஜிஸ்டர் வைத்துப் பதிந்து அம்மைகுத்தும் ரிஜிஸ்ட்டரில் குழந்தைகளின் பேர் பதிவதற்கு ஜெனன ஜாப்தா ரிஜிஸ்ட்டாருக்கு அனுப்புவார்

லட்.— செத்துப்பிறந்த குழந்தைகளை எந்த ரிஜிஸ்ட்டரில் தாக்கல் செய்கிறது

ராம.— ஜெனன ரிஜிஸ்ட்டரிலும் மரண ரிஜிஸ்ட்டரிலும் பதிந்து ஷராக்கலத்தில் செத்துப் பிறந்தது என்று எழுதவேண்டும்

லட்.— இந்துக்கள் மரணத்தைப் பதிவது போலவே ஐரோப்பியர் யூரோஷியர் மரணத்தையும் பதிய வேண்டுமா ஏதேனும் பேதம் உண்டா.

ராம.— அவர்கள் மரணத்தின் காரணத்தையும் வயதையும் கணக்கின் அடியில் காட்ட வேண்டியது.

லட்.— மரணங்களின் காரணத்தில் சந்தேகம் நேரிட்டால் கவனிக்க வேண்டியதென்ன?

ராம.— சானிட்டேரி கம்மிஷனர் ரிப்போர்ட்டுகளினாலும் கெஜட்டுகளில் பிரசித்தம் செய்யும் வகைகளினாலும் தெரிந்து பதிய வேண்டும்.

லட.— காயங்கள் என்பதில் பதியும் விவரங்கள் என்ன?

ராம.— துஷ்ட மிருகங்கள் பாம்பு கடி தற்கொலை காயங்கள் அகஸ்த்மாத் முதலியவைகளால் உண்டான மரணங்களை பதிய வேண்டியது.

லட்.— துஷ்ட மிருகங்களால் மரணம் நேரிட்டால் இன்ன மிருகத்தால் நேரிட்டதென்று எழுத வேண்டாமா?

ராம.— ஷராக்கலத்தில் எந்த மிருகத்தால் கொல்லப் பட்டதென்று எழுத வேண்டும்.

லட்.— ஆகாரத்துக்காக அடிக்கப் பட்ட மிருகங்களையும் இந்தக் கணக்கில் சேர்க்க வேண்டுமோ?

ராம.— அவைகளை இந்தக் கணக்கில் சேர்க்க கூடாது.

அம்மை குத்தும் ரிஜிஸ்டர்.

லட்.— அம்மை குத்தும் ரிஜிஸ்டரில் என்ன விவரம் தெரிந்து கொள்ளலாம்?

ராம.— அம்மை குத்தாத பாக்கிக் குழந்தைகளை எடுத்தெழுதி அம்மை குத்தினவுடன் இதில் பதிந்து கொண்டு வர வேண்டும் ஜெனன ரிஜிஸ்டரில் குழந்தைகளை பதிந்தவுடன் இதில் பதிவு செய்ய வேண்டும்.

லட்.—அசலூரில் பிறந்து வந்த குழந்தைகளையும் இதில் பதிவு செய்ய வேண்டுமோ?

ராம.— இதில் பதிந்து கொள்ள வேண்டும் ஷராக்கலத்தில் விவரம் காட்ட வேண்டும்இவ்வூரில் பிறந்து அசலூருக்குப் போகும் குழந்தைகளையும் இறந்து போன குழந்தைகளையும் ஷராக்கலத்தில் குறிக்க வேண்டியது

லட்.— 8-வது. கலத்தில் வீட்டு நம்பர் தாக்கல் செய்வதற்கு சுதவிலக்க மில்லாவிட்டால் எவ்விதம் பதிகிறது?

ராம.— வீதியின் பெயரும் முக்கிய அம்சங்களும் குறிக்க வேண்டியது.

லட்.— வாக்வி நேட்டர் அல்லது டிப்டி இன்ஸ்பெக்ட்டர் கிருமத்துக்கு வரும்போது பெரியதனக்காரர் கவனிக்க வேண்டியதென்ன

ராம.— வாச்வி நேட்டர் வரும்போது குழந்தைகளை கொண்டு வந்து அம்மை வைத்துக் கொள்ளும் படியாகவும் வாக்வி நேஷன் டிப்டி இன்ஸ்பெக்ட்டர் வரும் போது பார்வையிடுவதற்காக குழந்தைகளை ஆஜர்படுத்தவும் வேண்டும் எல்லா ரிவினியூ உத்தியோ கஸ்தர்களும் இதைப் பார்வை யிடுவார்கள்

லட்.— 19-நம்பர்-சி-டி என்று இரண்டு ரிஜிஸ்டர் களிருக்கிறதே அது எதற்காக

ராம.— அநுஷ்டான மில்லாக் கிராமத்திற்கு (19-சி-பாரமும்) அநுஷ்டான கிராமத்துக்கு (19-டி)பாரமும் வைத்திருக்க வேண்டும் இது விஷயத்தைப் பற்றிய முறைகளை இன்னவிதமென்று கலெக்ட்டர் தெரிவிப்பார்

20-நம்பர்.

லட்.— 20-நம்பர் ஸ்டேட்டுமெண்டின் உபயோகமென்ன

ராம.— கிருமத்தில் மழை பெய்த தேதியுடன் மழையளவையும் பாய்ச்சலா தாரங்களுக்குத் தண்ணீர் வரவு சிலவு களையும் பற்றியது

லட் — இது எப்போது தயாரிக்க வேண்டியது.

ராம — மழை பெய்யும்போதும் கண்மாய்களுக்குத் தண்ணீர் வரும்போதும் இதில் எழுதி ஒவ்வொரு மாதம் 25-உக்குள் ரிவினியூ இன்ஸ்பெக்ட்டருக்கு அனுப்ப வேண்டியது

லட்.— மழை யளவைப் பதிவு செய்யும் விதமெப்படி

ராம.— மழை யளவு கருவி யிருந்தால் அந்த அளவுப்படி $\frac{1}{4}$, $\frac{1}{2}$, $\frac{3}{4}$, என்ற அங்குல கணக்காகப் பதிய வேண்டியது மழையளக்குங் கருவி யில்லாத கிராமமாக இருந்தால் புஞ்சை நிலம் உழுவதற்குப்போதுமான மழையை ஒரு செவியாக கணக்கிட்டு பதிய வேண்டும் இதற்கு (பதினு) மழை என்றும் பெயர்.

லட்.— இதன் ஷுருக்கலத்தில் பதியும் விவரம் எவை

ராம.— காலஸ்திதி, பயிர்களின் ஸ்திதி, கால்நடைகள் சௌக்கியம், அம்மை வைக்கப்பட்ட குழந்தைகள் முதலிய முக்கிய விவரங்களைப் பதிய வேண்டும்.

லட்.—இந்தக் கணக்கில் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்குள்ள சம்பந்தமென்ன.

ராம — இது விஷயத்தில் ரிவினியூ இன்ஸ்பெக்டர் சுற்றுப் பக்க கிராமங்களின் மழை விவரத்துடன் ஒத்துப் பார்த்து அது விவரத்தை இதில் பதிவு செய்து இதன் கடாசிப் பக்கத்தில் விடப் பட்டிருக்கும் வெள்ளைக் காகிதத்தில் கால ஸ்திதியைப் பற்றியும், ஜல சப்ளை விஷயத்தின் ஸ்திதி முதலியவைகளையும் அவர் பார்வையிட்ட விஷயங்களைப் பற்றியும் பதிவு செய்ய வேண்டியது.

21-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்— 21-நிர். ஸ்டேட்மெண்டு எதைப் பற்றியது?

ராம,— 5-வருஷத்துக்கு ஒரு தடவை விவசாய சம்பந்தமான கால் நடை கருவி முதலியவைகளை எண்ணி கணக்கிட்டு பதிந்து அனுப்பும் ஸ்டேட்மெண்டு ஏப்ரல் மாதம் 15-தேதிக்குள் தாலுகாவுக்கு அனுப்ப வேண்டியது.

22-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 22-நிர்- ஸ்டேட்மெண்டு. எதைப் பற்றியது?

ராம.— இப்போது இது தள்ளுபடி செய்யப் பட்டது.

23-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 23-நிர். ஸ்டேட்மெண்டு. எதைப் பற்றியது?

ராம.— ஒரு ரூபாக்குள் பட்டது முதல் 10, 30, 50, 100, 250, 500, 1000-க்குள் பட்டதும் அதற்கு மேல் பட்டதும் என்ற ஒழுங்காய் தனிப் பட்டா கூட்டுப் பட்டா பிரித்து 5-வருஷத்துக் கொரு தடவை தயார் செய்யும் தர்ஜேவாரி

24-நிர். ஸ்டேட்மெண்டு.

லட்.— 24.நிர். ஸ்டேட்மெண்டின் பிரயோஜனம் என்ன?

ராம.— இது உலோக உற்பத்திகளைக்காட்டும் வருஷவாரி ரிஜிஸ்டர்

லட்.— இதன் 4-வது. கலத்தில் எந்த விவரத்தை தாக்கல் செய்ய வேண்டும்?

ராம.— சுரங்கத்தில் விற்பனையாகும் தொகையைக் காட்ட வேண்டியது.

லட்.— 1-வது கலத்தில் சுரங்கத்தைப் பற்றி எழுத வேண்டியதென்றும் 2-வது கலம் உலோகங்களின் விவரமென்றும் தெரிந்து கொண்டேன் 3-வது கலத்தில் உலோகத்தின் அளவை எப்படி தாக்கல் செய்கிறது?

ராம.— சுரங்கத்தில் உற்பத்தியாகும் பொருள்களில் தங்கத்தை அவுன்ஸ் கணக்கிலும் வைரக்கற்களை மஞ்சாடி கணக்கிலும் படிகாரம் அரக்கு வகைகளை அந்தர் பவுன் கணக்கிலும் சிலேட்டு கற்கள் முதலியவைகளை டன் கணக்கிலும் பதிவு செய்ய வேண்டும்.

லட்.— வண்டி வாடகை முதலியவைகளையும் தெண்டந் தீர்வை முதலியவைகளையும் சிலவில் சேர்த்துக் கொள்ளலாமா?

ராம.— சேர்க்கக் கூடாது.

சம்பாஷணை.

லட்.— கணக்குகளின் விவரங்களைத் தெரிந்து கொண்டேன். 13-ம் நம்பர் முதல் 24-ம் நம்பர் வரையிலுள்ள கணக்குகள் தயார்செய்யும் விவரத்தை சொல்ல வேண்டும் அண்ணு

ராம.— உன் கோறுதல் படி 13-முதல் 24-ம் நம்பர் வரையி லுள்ள கணக்குகள் தயார் செய்யும் விவரத்தைச் சொல்லு கிறேன் கேள்.

13-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும் விதம்.

வசூல் காலத்தில் ஒவ்வொரு நாளும் குடித்தனக்காரர் செலுத்தும் தொகையை தேதிவாரியாக சம்மந்தப்பட்ட கலங்களுக்கு நேரே தாக்கல் செய்து அன்று சாயந்திரம் தண்டல் தொகைக்கும் கையிருப்புத் தொகைக்கும ஒற்றுப் பார்த்து ஒவ்வொரு நாள் வசூலையும மொத்தங் கட்டி அதற்குக் கீழ் முந்தின நாள் வசூல் மொத்தத்தை எடுத்துக் காட்டி இரண்டையும் சேர்த்து மொத்தம் காட்ட வேண்டும், தினந்தோறும் இதற்குச் சரியான நகலொன்று எழுதி கர்ணத்துக்கு அனுப்ப வேண்டும் அவர் தாலுகாவிற்கு அனுப்பும் நகல் தண்டலை எழுதிக் கொண்டு பதினாலாம் நம்பர் ஸ்டேட்மெண்டில் வசூலை பதிந்து வருவார் இருசால் அனுப்புவதற்கு முன், 14-நிர். ஸ்டேட்மெண்டில் பதிந்திருக்கும் வசூலைக் கூட்டி 16-நிர். ஸ்டேட்டுமெண்டில் சம்மந்தப் பட்ட மாதத்தின் வசூல் கலத்தில் பதிந்து இருசால் நாமா தயாரித்து (15-16-17) நம்பர் முதலிய கணக்கு களுடன் கர்ணம் தயாரித்த 13-நிர். காப்பியையும் சேர்த்துப் பணத்துடன் தாலூகாவுக்கு அனுப்ப வேண்டும்.

14-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும் விதம்

சென்ற பசலி பாக்கி இனங்களை பட்டா நம்பர் வரிசையாக முன்னடி பதிந்து கொண்டு அதற்கு பின் நிகழும் பசலிக்கு ஒவ்வொரு பட்டாவுக்குத் தக்கவாறு இடம் விட்டு பட்டா நமபரையும், பேரையும், எழுதிக் கொள்ள வேண்டும் அதற்கு பின் சென்ற பசலி 14-நிர். சி, கணக்கில் 6-வது கலத்தில்,கண்ட தொகையை

ஈடு செய்து அப்பால் 13-நிர். ஸ்டேட்மெண்டி லிருந்து ஒவ்வொரு நாளும் வசூலான வசூலை இதில் பதிந்து இருசால் அனுப்புங் காலத்தில் யேற்பட்ட வசூல் மொத்தத்தை எடுத்து 16-நிர். ஸ்டேட்மெண்டில் வசூல் பூரிக்க வேண்டும், ஜமாபந்தி முடிந்தபின் மேலே பட்டா நிம்பருக்கு கீழே டிமாண்டு என்று எழுதி இருப்பதற்கு நேரே ஒவ்வொரு பட்டாவிற்கும் யேற்பட்ட மொத்தத்தைப் பதிந்து கொண்டு சூன்மாசம் கடாசி வரையில், பதிந்த வசூலை மொத்தங் கூட்டி ஒவ்வொரு பட்டாவுக்கு யேற்பட்ட மொத்தம் வசூல், ஜாஸ்தி, அல்லது பாக்கி, என்ற விவரங்களைக் குறிக்க வேண்டும்.

14-ஏ உள்ளடக்கம் தயாரிக்கும் விதம்.

பசலி கடாசியில், 14-நிர். ஸ்டேட் மெண்டி லிருந்து ஒவ்வொரு பட்டாவிற்கு யேற்பட்ட மொத்தத் வசூலை பட்டாவாரி பதிந்து கடாசியில் கிராமத்துக்கு யேற்பட்ட மொத்தம் டிமாண்டு, மொத்தம் வசூல், பாக்கி, ஜாஸ்தி வசூல், முதலிய விவரங்களைப் பதிவு செய்ய வேண்டியது.

14-பீ. உள்ளடக்கம் தயாரிக்கும் விதம்.

வசூலுக்கு ஏற்பட்ட சகல அமுல் நடத்தியும் வசூல் செய்ய மார்க்க மில்லாத இனங்களை 10-நிர். IIவது பிரிவைக் கொண்டு 1முதல்5வரை கலங்களையும், 14-நிர். ஸ்டேட்மெண்டைக்கொண்டு 6-வது கலத்தையும் பாக்கியை 7-வது கலத்திலும் பதிந்து இது விஷயமான சகல அமுல்களையும் 8-வது கலம்வரை கர்ணம்பதிந்து 9-வது கலத்தில் இன்ஸ் பெக்டர் ஷரூவும் 10-வது கலத்தில் தாசில்தார் ஷரூவும் 11-முதல்15-வது கலம் வரை டிவிஷனுபீசர் பைசலும பதிவு செய்வார். இதன் மேல் கணக்குகளிலிருந்து கழிக்கவேண்டும்.

14-ஸீ. உள்ளடக்கம் தயாரிக்கும் விதம்.

14-நிர். ஸ்டேட்மெண்டி லிருந்த, ஜாஸ்தி வசூல் யேற்பட்ட இனங்களை எடுத்து ஈடு செய்ய வேண்டிய வைகளை 1-வது பிரிவாகவும் ஈடு செய்ய மார்க்க மில்லாமல் வாபஸ் கொடுக்க வேண்டிய வைகளை 2-வது பிரிவாகவும் எழுத வேண்டும்.

15-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும் விதம்.

தாலுகாவுக்கு இருசால் பணம் அனுப்பும் போது தண்டலில் தாக்கல் செய்திருக்கிற மொத்தம், சம்பளக்கழிவு, முதலிய விவரங்களைச் சம்பந்தப்பட்ட கலங்களில் தாக்கல் செய்து மொத்தம் போட்டு நாணயவாரி காட்டி தொகையை எழுத்தால் எழுதி இருசால் பணத்துடன் அனுப்ப வேண்டும்.

16-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும்விதம்

பாபத்துவாரியாய் பட்டா நம்பர் வரிசையாக ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்ட டிமாண்டு ஒரு ரூபாய்க்குள்பட்ட தொகைகளை ஒரே கிஸ்தியாகவும் மற்ற தொகைகளை நாலாகப் பகிர்ந்து மூன்று கிஸ்திவரை அணு மட்டமாகவும் கர்ணம் முதலில் பதிந்தும் இருசால் அனுப்பும் போது 14-நிர். ஸ்டேட்மெண்டிலிருந்து அந்தந்த மாதத்திற்கு ஏற்பட்ட வசூலைப் பதிந்தும் அட்வான்ஸ் பாக்கி பதிந்தும் தாலுகாவுக்கு அனுப்பி வந்து பைசலாதி முடிந்த பின் ஒவ்வொரு பட்டாவுக்கும் நிலைத்த மொத்தம் டிமாண்டு பதிந்து ஜூன் மாதம் கடாசி வரை ஏற்பட்ட வசூல, ஜாஸ்தி வசூல், பாக்கி முதலியவைகளைப் பதிய வேண்டும் மேல் கண்ட விவரப்படி முந்தின பசலி பாக்கிகளை முதலில் எழுதிக் கொண்டு நிகழும் பசலி ஆரம்பிக்க வேண்டும்.

17-நிர்.ஸ்டேட்மெண்டு. தயாரிக்கும் விதம்

பசலி கடாசியில் பாக்கி நின்ற இனங்களை லாண்டு ரிவினியூ ஸ்பெஷல் பண்டு,லோக்கல் பண்டு, என்ற பாபத்து வாரியாய்,பட்டா வரிசையாய் மூன்று கலம் வரை பதிந்து கொண்டு,ஜூலை மாதத்திற்குள் வசூலாகாமல்,இருந்தால். ஜூலை மாதம் முதல் வட்டி. ஏற்படுத்திக் கொண்டு வர வேண்டியது.

18-நிர்.ஸ்டேட்மெண்டு. தயாரிக்கும் விதம்.

குடிகள் பணம் செலுத்தும் போது தண்டலில் பதிந்தவுடன் பதினெட்டாம் நம்பர் ரசீதில் கண்ட பாரங்களில் அந்தந்த தேச பாஷையில் எழுதி 5-வது கலத்தில் கண்ட மொத்தம் தொகையை

6-வது. கலத்தில் எழுத்தால் எழுதி பெரியதனக்காரர் கையெழுத்துப் போட்டுக் கொடுக்க வேண்டும், கர்ணமும் கையெழுத்து செய்யலாம்.

19-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும்விதம்.

கிராமத்தில் நேரிடுகிற ஜனனங்களை 19-நிர். I-வது பிரிவிலும் மரணங்களை II-வது. பிரிவிலும் கால் நடை மரணங்களை III-வது பிரிவிலும், தேதிவாரியாகப் பதிந்து வந்து ஒவ்வொரு மாதத்திலும் ஒவ்வொன்றையும் மொத்தம் கூட்டி ஜனன மொத்தத்தை 19-நிர். (ஏ நமூனு) என்னும் பாரத்திலும் மரண மொத்தத்தை 19-நிர். (பீ நமூனு) என்றும் பாரத்திலும், கால் நடை மரண மொத்தத்தை (19-நிர். III ஏ நமூனு) என்னும்பாரத்திலும் பதிந்து அடுத்தமாதம் முதல் தேதியில் தாலுகாவுக்கு அனுப்ப வேண்டும் இவைகள் காலண்டர் வருஷமாக வைக்க வேண்டிய கணக்குகள்.

20-நிர். ஸ்டேட்மெண்டு. தயாரிக்கும் விதம்.

மழை பெய்த தேதியை முதலாவது கலத்திலும் மழையின் விவரத்தை 2-வது.கலத்திலும் கண்மாய்க்கு ஜலம் வந்த விவரத்தை கண்மாய்களின் நேர் கண்டும் ஒவ்வொரு மாதத்திலும் வந்த மொத்த ஜல வரவை கூட்டி செலவானதைக் கழித்து பாக்கி கட்டி காலஸ்திதி விவரங்களை ஷராக் கலத்தில் கண்டு ஒவ்வொரு மாதம் 25-தேதிக்குள் தவணைக் கணக்குடன் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டும்.

21-நிர். ஸ்டேட்மெண்டு. தயாரிக்கும் விதம்.

விவசாயத்துக்கு உதவும் கால் நடைகளையும் விவசாயக் கருவிகளையும் ஐந்து வருஷத்துக்கு ஒரு தடவை கலெக்டரால் நிஷ்கரணை செய்யப்பட்ட தினத்தில் வீட்டுவாரியாக எண்ணி சொந்தக்காரன் பெயரை 1-வது கலத்தில் பதிந்து கால் நடைகளையும், கருவிகளையும், 2-முதல் 21-வரை,உள்ள கலங்களில் சம்பந்தப்பட் கலங்களில் தாக்கல் செய்து மொத்தம் போட வேண்டும்,

22-நிர். ஸ்டேட்மெண்டு.

இப்போது இது தள்ளுபடி செய்யப்பட்டது,

23-நிர். ஸ்டேட்மெண்டு. தயாரிக்கும் விதம்.

5-வருஷத்துக்கு ஒரு தடவை கிராமத்திலுள்ள பட்டாதார்களையும் இனாம்தார்களையும் கைபற்று தீர்வையுடன் தண்ணீர் தீர்வையும் சேர்ந்த மொத்தத்துக்கு ஒரு ரூபாய்க்கு குறைந்தது 10- 30- 50- 100-250- 500- 1000, ரூபாய்களுக்கும் அதற்கு மேலும் செலுத்துகிறவர் என்ற விவரமாய் கூட்டுப் பட்டாக்கள் வேறேயாகவும் தனிப்பட்டாக்கள் வேறேயாகவும் பிரித்துக் குறித்துக்கொண்டு மொத்தம் கூட்டி தனிப் பட்டாக்களை 5-வது கலம் வரை பதிந்து கூட்டுப் பட்டாக்களை 10-வது கலம் வரைபதிந்து மொத்தம் போட வேண்டும்-

24-நிர். ஸ்டேட்மெண்டு தயாரிக்கும்விதம்.

உலோக உற்பத்தியாகிற சுரங்களில் உற்பத்தியாகும் உலோகங்களில் தங்கத்தை அவுன்ஸ் கணக்கிலும் வைரக்கற்களை மஞ்சாடி கணக்கிலும் கல் நார் முதலியவைகளை அந்தர் பவுன் கணக்கிலும் சிலேட் முதலிய தாதுவர்க்கங்களை டன் கணக்கிலும் தாக்கல் செய்ய வேண்டும் 12-வயதுக்கு மேற்பட்ட கூலியாள்களை ஆள் கணக்கில் தாக்கல் செய்ய வேண்டும்.

சம்பாஷணை.

லட்.— அண்ணா (ஏ) ரிஜிஸ்டர் முதல் 24-நிர்வரையிலுள்ள கணக்குகளின் விவரத்தையும் தயார் செய்யும் விதத்தையும் என் கோருதல்படி வசனமாகச் சொல்லிக் கொண்டு வந்ததை நன்றாய்த் தெரிந்து கொண்டேன் என் பிராண சினேகிதர்களாகிய பஞ்சாக்ஷரம் பார்த்தசாரதி என்ற இருவர்களும் அதிக பாலியர்களாக இருப்பதால் அவர்கள் மனதிலும் அவர்களைப் போன்ற எவர்கள் மனதிலும் சீக்கிரத்தில் லேசாகப் படும்படியாக கணக்குகளில் அடங்கியிருக்கும் முக்கிய விவரம் தயார் செய்யும் விதம் இவைகளை அதிகச் சுருக்கமாகச் சொல்ல வேண்டுமென்று அதிகத் தாழ்மையுடன் கேட்டுக் கொள்கிறேன் அண்ணா.

ராம.— உன் கருத்தின்படி ஒவ்வொரு கணக்குகளில் அடங்கியிருக்கும் முக்கிய விவரங்களையும் தயார் செய்யும் சுருக்க வகையையும் சுருக்கமாகச் சொல்லுகிறேன் கேள்.

கணக்குகளின் விவரச் சுருக்கம்.

ஒவ்வொரு கணக்குகளிலும் எந்தெந்த முக்கிய விவரங்கள் அடங்கியிருக்கிறது என்ற சுருக்கம்.

ஏ-ரிஜிஸ்டர்.— சகல விவரமும் அடங்கி யிருக்கிறது.

ரிஜிஸ்டர்(ஏ)உள்ளடக்கம்.— ஒவ்வொரு பாபத்துக் களின் வகுப்புவாரியும், தர வாரியும், மொத்தமும்.

பி-ரிஜிஸ்டர்.— இனம் நிலங்களின் சகல விவரமும்.

தவணைநோட்டு.— ஒவ்வொரு மாதம் சாகுபடியும், அறுவடையும், ஜமாபந்திக்கு வேண்டிய விவரமும்.

1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.—ஒவ்வொரு மாதத்திலும் சாகுபடியான பயிர்களும் மொத்தமும்.

1-ம் நம்பர் (ஏ)உள்ளடக்கம்.— ஒவ்வொரு மாதத்திலும் சாகுபடியான ஒவ்வொரு பயிரின மொத்தமும் அவைகளின் அறுவடை மொத்தமும்.

2-ம்நமபர் ஸ்டேட்மெண்டு.— வருஷ வாரி ஆயக்கட்டு கைப்பற்று சாகுபடி களும் ஜமா பந்திக்கு வேண்டிய சகல விவரங்களும்

1-ம் நம்பர் ஏ.உள்ளடக்கம்.—சிவாய்ஜமா புறம் புகல் முதலியவைகளின் கைப்பற்று விவரம்.

2-ம் நம்பர் பி.உள்ளடக்கம்.— ஒவ்வொரு வருஷத்துக்கு ஏற்பட்ட நீர் பாய்ந்ததும் பாயாதது மான பயிர்களின்விவரம்

2-ம் நம்பர் சி.உள்ளடக்சம்.—மாத்தீர்வை சம்மந்தமான தோப்புகளின் விவரம்•

2-ம் நம்பர் டி.உள்ளடக்கம் — பாய்ச்சலாதாரங் களின் விவரமும்

ஒவ்வொரு வருஷத்தில் நீர் பாய்ந்த பயிர் களின் விவரமும்.

2-ம் நம்பர் இ.உள்ளடக்கம்.— ஐந்து விதம் பிரித்த ஆயக்கட்டு விவரம்.

3-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— சகல மாறுதல் களின் விவரம்.

3-ம் நம்பர் ஏ.உள்ளடக்கம்.— கிரும மொத்தம் கைப்பற்று விவரமும் அதன் மாறுதல் களின் விவரமும்.

4-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— பேரீஜ் வஜாவின் விவரம்.

5-ம் நம்பர் 1.வது பிரிவு — பாய்ச்சலாதார வாரி பட்டா வாரி டிவிஷனுபீசருக்கு அனுப்பும் வஜா விவரம்.

5-ம் நம்பர் 2–வது பிரிவு — சாங்கிஷனுண வஜாவை பட்டா வாரி மொத்தம் கூட்டிக் காட்டும் கணக்கு.

5-ம் நம்பர் 3–வது பிரிவு — அபூர்வ ஸ்பெஷல் வஜாக் களின் விவரம்.

6-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு,— சகல தண்ணீர்த் தீர்வை களின் விவரமும் மொத்தமும்.

6-ம் நம்பர் ஏ.உள்ளடக்கம்.— ஒவ்வொரு பட்டாவுக்கும்ஏற்பட்ட தண்ணீர்த் தீர்வை மொத்தம்.

7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— சகல சில்லரை ரிவினியூக்களின் விவரமும் மொத்தமும.

8-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.—ஒவ்வொரு பாசனங்களில் கூடுகிற ரிவினியூக்களின் விவரம்.

9-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு. சில்லரைகளுக்கு ஏற்பட்ட ரொண்டு செஸ், லோக்கல்பண்டு, ஸ்பெஷல்பண்டுகளின் இனவாரி விவரமும் மொத்தமும்.

10-ம் நம்பர் I-வது பிரிவு.—பட்டாவாரி கைப்பற்று ஸ்தல விவரமும், மொத்தமும், மாறுதல் முதலிய விவரங்களும்.

10-ம் நம்பர் II-வது பிரிவு.— ஒவ்வொரு பட்டாதாருக்கும் ஏற்

பட்ட கைப்பற்றும் அதைச் சேருகிற ரிவினியூ வகைக ளும், மொத்தம் பேரீஜும்.

10-ம் நம்பர் II-வது பிரிவுக்கு உள்ளடக்கம்—ஒரு பட்டாவுக்கு ம் கிரும மொத்தத்துக்கும் ஏற்பட்ட லாண்டு செஸும், மொத்த டிமாண்டும்.

10-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.— பவுத்திதார் பெயரும் பதில் தாக்கல் செய்யும் வார்சுகள்பெயரும்.

11-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— 10-ம் நம்பர் I- II-பிரிவுகளின் பதிவுக்குச் சரியான நகல் குடிகளுக்குக் கொடுக்கும் பட்டா நமூனு.

11-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.—பட்டா இல்லாத குடிகளுக்குக் கொடுக்கும் மிஸ்லேனியஸ் பட்டா நமூனு.

12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— ஒரு கிராமத்துக்கு யேற்பட்ட கை ப்பற்று முதல் சகல விவரங் களும் மொத்தம் பேரீஜும்

13-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— வசூல் காலத்தில் ஒவ்வொரு நாள் வசூல் விவரங் களும அதன் மொத்தமும்.

14-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— ஒவ்வொரு பட்டா வுக்கும் ஏற் பட்ட தேதிவாரி வசூல் டிமாண்டு பாக்கி ஜாஸ்தி முதலி யவைகள்.

14-ம் நம்பர் எ.உள்ளடக்கம்.— பசலியின் முடிவில் ஒவ்வொரு பட்டா வுக்கும் ஏற்பட்ட மொத்த வசூலும் கிராமத்துக் கு ஏற்பட்ட டிமாண்டு வசூல் பாக்கி களும்.

14-ம் நம்பர் பீ.உள்ளடக்கம்.— சகல வசூல் அமுல் நடத்தியும் வசூலாக மாட்டாமல் கணக்கி லிருந்து கழிக்கும் பாக்கி களின் விவரங்கள்.

14-ம் நம்பர் சி. உள்ளடக்கம்.— ஒவ்வொரு பசலிக்கும் பட்டா வாரி-ஏற்பட்ட ஜாஸ்தி வசூல்.

15-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— தாலுகாவுக்கு இருசால் அனுப்பு ம் கிஸ்தி பணங் களின் விவரம்.

16-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— ஒவ்வொரு பட்டா வுக்கும் கிஸ்தி வாரி ஏற்பட்ட டிமாண்டு வசூல் அட்வான்ஸ் பாக்கி முதலிய விவரங்கள்.

17-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— பசலி பாக்கிக்கு ஏற்படுத்தும் வட்டி விவரம்.

18-ம்நம்பர்ஸ்டேட்மெண்டு.—குடிகள் செலுத்தும் கிஸ்தி தொகையின் விவரம். (ரசீது)

19-ம் நம்பர் 1-வது பிரிவு — பிறந்த குழந்தை களின் விவரம்.

19-ம் நம்பர்2-வது பிரிவு.— இறந்தவர் களின் விவரம்.

19-ம் நம்பர் 3-வது பிரிவு.— இறந்த கால் நடை களின் விவரம்.

20-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— மழை பெய்த விவரமும் கண்மாய்க்கு ஜலம் வரவு சிலவு விவரமும்.

21-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— கால் நடைகளின் கணிதி.

22-ம் நம்பர்.— தள்ளுபடி.

23-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.— பட்டா தார்களை தனி கூட்டு பிரித்து, ஒரு ரூபாய்க் குறைவானது முதல் 1000-ரூபாய் வரையிலும் அதற்கு மேலுமாக பல விவரங் களாக செலுத்துகிற இனங்களின் விவரங்கள்.

24-ம் நம்பர்.— தங்கம் முதலிய உலோக உற்பததி விவரங்கள்.

கணக்குகள் தயாரிக்கும் விவரச் சுருக்கம்

(ஏ) ரிஜிஸ்தர்.

இது செட்டில் மெண்டாரால் தயாரித்துக் கொடுக்கப்பட்டது நிலையான மாறுதல் நேரிடும் பொழுது மாறுதலை அனுசரித்து கணக்கு களில் பதிவு செய்து வருஷம் மாதம் தேதியுடன் மாறுதல் உத்திரவின் நம்பரை ஷராக் கலத்தில் குறிக்க வேண்டியது.

(ஏ) ரிஜிஸ்தர் உள்ளடக்கம்.

நிலையான மாறுதல்கள் நேரிடும் பொழுது மாறுதலை அனுச

ரித்து ஒவ்வொரு பாபத்தின் மொத்தத்தைத் திருத்திக் கொள்ள வேண்டியது.

(பீ)ரிஜிஸ்தர்.

ஏ.ரிஜிஸ்தரி லிருந்து செட்டில் மெண்டாருல் தயாரிக்கப் பட்டது இனும் நிலங் களில் நீலயான மாறுதல்கள் நேரிடும் பொழுது (ஏ) ரிஜிஸ்தரைப் போல் மாறுதல் உத்திரவின் நம்பரை வருஷம் மாசம் தேதியுள்பட ஷரூக் கலத்தில் குறிக்க வேண்டியது.

தவணைநோட்டு.

1-முதல் 3-வரை கலங்களை (ஏ)ரிஜிஸ்தரை வைத்தும் மற்ற கலங்களைப் பூமியைப் பார்த்தும் பதிவு செய்ய வேண்டியது.

1-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

தவனை நோட்டை வைத்து பயிர் வாரியாய் எழுதி கோஷ்வாரா போட்டு ஒவ்வொரு மீ 25-ம் தேதிக்குள் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டியது.

1-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

முதல் நம்பர் ஸ்டேட்டுமெண்டை வைத்து சாகுபடி பதிந்தும் தவணைநோட்டை வைத்து அறுவடை பதிந்தும் ஒவ்வொருமாதமும் தவணைக் கணக்குடன் ரிவினியூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டியது.

2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு,

சென்ற பசலி 2-ம் நிர். ஸ்டேட் மெண்டையும் நாளது பசலி 3-ம் நம்பர் ஸ்டேட்மெண்டையும் வைத்து 8-வது கலம் வரையும், 1-நிர். ஸ்டேட்டு மெண்டைக் கொண்டு 9-முதல் 11-கலங்களையும், பதிந்து மொத்தம் போட்டு கோஷ்வாரா போட வேண்டியது.

2-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

2-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டை வைத்து 1-முதல் 11-கலங்களையும், பைசலான (ஏ), (பீ) மிமோக் களால் 12-வது கலத்தையும் பதிந்து மொத்தம் போட வேண்டியது.

2-ம் நம்பர் (பீ) உள்ளடக்கம்.

முதல் நம்பர் ஸ்டேட்மெண்டிலுள்ள 12-மாசத்தையும் கூட்டி பாரத்திற் கண்ட கலங் களுக்கு நேரே பதிந்து மொத்தம் போட வேண்டும்.

2-ம் நம்பர் (சீ) உள்ளடக்கம்.

சென்ற பசலி 2-நிர். (சீ) கணக்கை வைத்து எழுதிக் கழிக்க வேண்டியதைக் கழித்து மரத் தீர்வை கைபீதின்படி சேர்க்க வேண்டியதைச் சேர்த்து மொத்தம் போட வேண்டியது.

2-ம் நம்பர் (டீ) உள்ளடக்கம்.

1-முதல் 7-வரை கலங்களை 2-நிர். ஸ்டேட்டு மெண்டை வைத்தும், 8-9-கலங்களை 2-நிர். (பீ) உள்ளடக்கத்தை வைத்தும், தயார் செய்யவேண்டியது.

2-ம் நம்பர் (இ) உள்ளடக்கம்.

சென்ற பசலி 2-ம்நிர் (இ) ஸ்டேட்டு மெண்டை வைத்து நிலைத்த ஆயக் கட்டு எழுதி நாளது பசலி 3-ம்நிர். ஸ்டேட்டுமெண்டை வைத்து கழிக்க வேண்டியவைகளைக் கழித்து சேர்க்க வேண்டியவைகளைச் சேர்த்து மொத்தம் போட வேண்டியது.

3-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு.

மேலான உத்திரவை வைத்து 4- பிரதம பிரிவு களாகவும் மூன்றும் பிரிவில் 4-உட்பிரிவு களாகவும் பிரித்தெழுதியிருக்கும் பிரிவு களில் மாறுதலுக்குச் சம்மந்தப் பட்ட பிரிவு களில் தாக்கல் செய்து மொத்தம் போட வேண்டியது.

3-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

சென்ற பசலி 3-ம் நம்பர் (ஏ)யிலுள்ள நிலைத்த கைப் பற்றுகளை எழுதிக் கொண்டு நாளது பசலி 3-நிர். கணக்கில் கண்ட பிரகாரம் கழிக்க வேண்டி யதைக் கழித்து கூட்ட வேண்டியதைக் கூட்டி 11-வது ஐட்டத்தில் நிலைத்த கைப்பற்று எழுதிக் கொள்ள வேண்டியது.

4-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

பேரீஜ் வஜா சம்மந்தமான உத்தாவுகளைக் கொண்டு பதிவு செய்ய வேண்டியது.

5-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு I-பிரிவு.

கவர்மெண்டு, இனும், பிரித்து பாய்ச்ச லாதார வாரியாக பட்டா வரிசையாக 2-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டு தவணைநோட்டு வஜாமனு முதலிய வைகளை வைத்து 9-வது கலம் வரை கர்ணமும் 10-11- கலங்களை சம்மந்தப் பட்ட ஆபீசர் களும் பதிவு செய்து டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பி அவர் சாங்ஷன் செய்த வஜாவை கர்ணம் 13-வது கலத்தில் பதிவு செய்ய வேண்டியது.

5-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு II-பிரிவு.

5-ம் நம்பர் முதலாவது பிரிவில் 13-வது கலத்திலுள்ள வஜாத் தொகையை இங்கப் பிரிவில் சம்மந்தப்பட்ட கலங்களில் பட்டாவாரியாகத் தாக்கல் செய்ய வேண்டியது.

5-ம் நம்பர் 3- பிரிவு.

கிரும முழுமைக்கும் வஜா நேரிட்டால் போர்டார் 14-ம் நம்பர் நிலையான உத்தரவை அனுசரித்து ஸ்பெஷல் வஜாக்களைக் குறிக்க வேண்டியது.

6-ம் நம்பர் ஸ்டேட்வெண்டு.

சர்ககார் இனும் பிரித்து பாய்ச்ச லாதார வாரியாய் பட்டா வரிசையாக 2-நிர். ஸ்டேட்மெண்டு தவணைநோட்டு தண்ணீர் மனு முதலியவைகளை வைத்து 7-8-12-13 கலங்களைத் தவிர 14-வது கலம் வரை சர்ணமும் 15-16-வது கலங்களை கலங் களில் கண்ட ஆபீசர்கள் எழுதிய ஷராவும் அதை அனுசரித்து 17-வது கலத்தில் டிவிஷனல் ஆபீசர் பைசல் செய்ததின் மேல் 7-8, 12-13,18-19, கலங்களை கர்ணம் பதிவு செய்ய வேண்டியது.

6-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

10-நம்பர் 2-வது பிரிவில் ஒவ்வொரு பட்டா தாருக்கும் ஏற்பட்ட தண்ணீர்த் தீர்வையை மொத்தம் கூட்டி பதிவதற் காக

6-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டி லிருந்து ஒவ்வொரு பாசனங் களில் ஏற்படும் தண்ணீர்த்தீர்வை மொத்தத்தை இதில்பதியவேண்டியது.

7-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு.

பீ-ரிஜிஸ்தரின் குயிட் ரெண்ட்சு தீர்வை 2-ம் நம்பர் (ஏ) உள்ளடக்க ஏக்சால்கைப் பற்றுத் தீர்வை, 6-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டில் இவைகளுக்குற்ற நீர்த் தீர்வையையும் நீர் பாய்ந்த தெண்டத்தீர்வை இவைகளை இன வாரியாய்ப் பதிந்து 5-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டிலுள்ள வஜாவைக் கழித்து 12-வது கலத்தில் நிகரம் பதிவு செய்ய வேண்டியது.

8-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு.

(ஏ.)(பீ.) ரிஜிஸ்தர்கள் 2-5-6-7-முதலிய நம்பர் கணக்குகளை வைத்துத் தயார் செய்ய வேண்டியது.

9-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு.

பீ. ரிஜிஸ்தர் அல்லது சென்றபசலி 9-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டை வைத்து மானியங்களின் தரம் தீர்வையும் 2-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கத்தை வைத்து ஏக்ஸால் நிலங்களின் கைப் பற்றுத் தீர்வையும் நிலத் தீர்வையைக் காட்டிலும் மரத் தீர்வை ஜாஸ்தி யிருந்தால் (2-சி.) உள்ளடக்கத்தி லிருந்து அந்த மரத் தீர்வை யையும் 6-நம்பர் ஸ்டேட்மெண்டை வைத்து அவைகளின் தண்ணீர்த் தீர்வையையும் பதிந்து செஸ் ஏற்படுத்த வேண்டியது.

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 1-வது பிரிவு.

சென்றபசலி 10-நம்பர் 1-வது பிரிவு வைத்து ஸ்தல வாரி எழுதி நாளது வருஷம் 3-ம் நம்பர் ஸ்டேட்மெண்டுப் பிரகாரம் கழிக்க வேண்டியதைக் கழித்து கூட்ட வேண்டியதைக் கூட்டி நிலத்த கைப்பற்று எழுத வேண்டியது.

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு 2-வது பிரிவு.

முதலாவது பிரிவிலுள்ள கைப்பற்று, 5-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டிலுள்ள காயம் வஜா, ஷை 5-ம் நம்பரிலுள்ள இதர வஜா, 6-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டி லுள்ள தண்ணீர்த் தீர்வை, 7-ம்

நம்பர் ஸ்டேட்டுமெண்டி லுள்ள சகல சில்லரை ரிவின்யூ 9-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டி லுள்ள லாண்டுசெஸ், லோகல் பண்டு, ஸ்பெஷல் பண்டு, முதலிய வைகளை அதுதற்கேற்ற ஐட்டங்களின் நேரே பதிந்து 5-வது ஐட்டத் தொகைக்கு 10-வது ஐட்டத்தில் லாண்டு செஸ் ஏற்படுத்தி கழிக்க வேண்டிய ஐட்டங்களில் கழித்து நிகரம்கண்டு கூட்ட வேண்டிய ஐட்டங் களில் கூட்டியும் சேர்த்துப் பதியவேண்டியது பாரஸ்டு ரெவினியூவை அடியில் தனியாகக் காட்ட வேண்டியது.

10-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு II-வது பிரிவுக்கு உள்ளடக்கம்.

10-ம் நம்பர் 2-வது பிரிவின் 14-வது ஐட்டத்திலிருந்து ஒவ்வொரு பட்டாவுக்கும் யேற்பட்ட மொத்தத்தை 2-வது கலத்திலும், 10-வது ஐட்டத்திலிருந்து லாண்டு செஸ்ஸை 3-வது கலத்திலும், பதிந்து மொத்தம் போட வேண்டும்.

10-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

பட்டாதார் இறந்தவுடன் அவர் களின் வார்சு களின் பெயரை விசாரித்துப் பேரை 3-வது கலத்தில் பதிந்தும் 19-ம் நம்பர் 2-வது பிரிவி லுள்ள மரணத் தேதியை 2-வது கலத்திலும், பதிந்து மாதா மாதம் தாலூகாவுக்கு அனுப்ப வேண்டியது.

11-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

10-ம் நம்பர் I-II-பிரிவுகளைப் பார்த்து எழுத வேண்டியது இது சிட்டா வுக்குச் சரியான நகல்.

11-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

10-ம் நம்பர் 2-வது பிரிவை வைத்தாவது 7-ம் நிர். 9-ம் நம்பர் ஸ்டேட்டு மெண்டுகளை வைத்தாவது தயார் செய்ய வேண்டியது.

12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

2-5-6-7-9-10-நிர். II-வது பிரிவுக்கு உள்ளடக்கம் போஸ் டிங் முதலிய கணக்குகளை வைத்து சம்பந்தப்பட்ட கலங்களில் தாக்ல் செய்து தாக்கல் செய்த தொகையின் தகவலால் மற்றக் கலங்களைப் பூர்த்தி செய்து 4-நிர். ஸ்டேட்டு மெண்டி லிருக்கும் பேரீஜ் வஜாத் தொகையை கழித்து நிகாம் காட்ட வேண்டியது.

13-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

குடிகள் பணம் செலுத்தும் போது பதிந்து கொண்டு அன்ற டம் மொத்தம் போட்டு இருசால் அனுப்பும் போது சம்பளக் கழிவு முதலிய கழிக்க வேண்டியதைக் கழித்து, கழித்து நின்ற தொகைக்கு நாணய வாரி காட்டி இருசால் நாமாவுடன் அனுப்ப வேண்டும்.

14-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

13-ம் நம்பர் தண்டலில் வசூல் பதிந்த வுடனேக்குடன் இந்த ஸ்டேட்டு மெண்டில் பதிவு செய்து ஜமா பந்தி முடிந்த வுடன் பட்டாவாரி டிமாண்டு பதிந்து, பசலி ஆகையரில் மொத்தம் வசூல் ஜாஸ்தி, பாக்கி, முதலிய விவரங்கள் பதிய வேண்டியது.

14-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம்.

பசலி ஆகையரில் 14-ம் நிர். ஸ்டேட்மெண்டி லிருந் ததைவ்வொ ரு பட்டாவுக் குற்ற மொத்த வசூலைப் பதிந்து மொத்தம் போட்டு கிராம மொத்த டிமாண்டு, வசூல், பாக்கி, ஜாஸ்தி வசூல், முதலிய விவரங்களைக் காட்ட வேண்டியது.

14-நிர். (பீ) உள்ளடக்கம்.

எவ்வித காரணத் தாலும் வசூல் செய்ய முடியாத பாக்கி தொகைகளை 10-நிர். 2-வது பிரிவைக் கொண்டும் 14-ம் நம்பர் ஸ்டேட்டுமெண்டைக் கொண்டும் 8-வது கலம் வரை கர்ணமும் (9-10-11-) கலங்களில் முறையே ரிவின்யூ இன்ஸ் பெக்டர் தாசில் தார் பதிவு செய்து டிவிஷனல் ஆபீசர் 12-முதல் 15-வரை கலங் களைப் பதிவு செய்ய வேண்டியது.

16

14-வது (சி) உள்ளடக்கம்.

14-ம் நிர் ஸ்டேட்மெண்டிலிருந்து ஜாஸ்தி வசூல்களை ஈடு செய்வது வாபஸ் கொடுப்பது என்று இரண்டு பிரிவாய் எழுத வேண்டியது.

15-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

இருசால் அனுப்பும்போது தண்டல் மொகசத்தில் தாக்கல் செய்த விவரங்களையும் தொகைகளையும பதிவுசெய்து இருசாலுடன் அனுப்ப வேண்டியது.

16-ம் நிம்பர்ஸ்டேட்மெண்டு.

10-ம் நம்பர் 2-வது பிரிவைக் கொண்டு மாதவாரி கிஸ்தியும 14-ம்நிர். ஸ்டேட்மெண்டிலிருந்து வசூலும பதிந்து பாக்கி அட்வான்ஸ் முதலிய விவரங் களையும் குறித்து இருசாலுடன் அனுப்ப வேண்டியது.

17-ம் நம்பர்ஸ்டேட்மெண்டு.

பசலி ஆகையரில் 14-நிர். அல்லது 16-மநிர். ஸ்டேட்மெண் டிலிருந்து பசலி பாக்கி பட்டா வாரி பதிந்து வட்டி ஏற்படுத்தி இருசாலுடன் அனுப்ப வேண்டியது இதை 3- பிரிவாய் எழுத வேண்டும்.

18-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

13-ம் நம்பரிலிருந்து பதிவு செய்து 5-வது கலத்தில் கண்ட தொகையை 6-வது கலத்தில் எழுத்தால் எழுதிப் பெரியதனக்கா ரர் கையெழுத்துச் செய்து குடிகளுக்குக் கொடுக்க வேண்டும்.

19-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.

1-வது பிரிவில் ஜனனத்தையும் 2-வது பிரிவில் மரணத் தையும் 3-வது பிரிவில் கால்நடை மரணத்தையும் தினசரி பதிவு செய்ய வேண்டியது.

20-நிர். ஸ்டேட்மெண்டு.

மழை பெய்த விவரத்தையும், கண்மாய்க்குத் தண்ணீர் வந்த வரவு செலவுகளையும், தாக்கல் செய்து, தவணைக் கணக்குடன் ரெவின்யூ இன்ஸ்பெக்டருக்கு அனுப்ப வேண்டியது.

21-நிர். ஸ்டேட்மெண்டு.

ஐந்து வருஷத்துக்கொரு தடவை விவசாயக் கால்நடைகளை யும் விவசாயக் கருவிகளையும் வீட்டு வாரியாய் எண்ணிப் பதிவு செய்யும் கணக்கு.

22-நிர். ஸ்டேட்மெண்டு.

இது இப்போது தள்ளுபடி செய்யப்பட்டது.

23-நிர். ஸ்டேட்மெண்டு.

10-ம் நம்பர் II-வது பிரிவிலுள்ள கைப்பற்றுத் தீர்வையுடன் தண்ணீர்த்தீர்வை சேர்த்து தனிப் பட்டா, கூட்டுப் பட்டாக் கள், பிரித்து இத்தனை ரூபாய்க்கு உட்பட்டதென்று வகுத்து, பாரத்தில் கண்ட கலங்களில் பதிவு செய்து மொத்தம் போட வேண்டியது.

24-நிர். ஸ்டேட்மெண்டு.

தங்கம் முதலிய உலோகங்கள் உற்பத்தியாகும் சுரங்கங்களைப் பார்வையிட்டும் கணக்குகளைப் பார்வையிட்டும் பதிவு செய்ய வேண்டியது.

கணக்கின் நம்பர்	எந்த விவரத்தைதெரிவிக்கிறது என்பது	எந்தக் கணக்கிலிருந்து உற்பத்தியானது என்பது	எந்தக் கணக்கு தயார் செய்யஉதவுகிறது என்பது	4-வது கலம் கண்ட கணக்குதவிர எந்தக் கணக்குக்கு தகவல் கொடுக்கும் என்பது	ஷரா
1	2	3	4	5	6
ஏ- ரிஜிஸ்தர்	நிலங்களைப் பற்றியசகல விவரமும் தெரியும்	செட்டில் மெண்டாரால் கொடுக்கப்பட்டது	பீ-ரிஜிஸ்தர் 2-நீர் அடங்கல்	2-ம் நம்பர் ஏ உள்ளடக்கம். 10-வது கலம் பதிவு செய்ய	காயம் மாறுதல்கள் நேரிடும்போது அவைகளை இவைகளில் பதிவு செய்ய வேண்டும்
இதன் உள்ளடக்கம்	அயன் இனும் ஆயக்கட் மொத்தத்தை தரவாரியாயும் பாபத்து வாரியாயும் தெரியும்	ஏ- ரிஜிஸ்தர்	2-நீர் இ	பீ- ரிஜிஸ்தரிலுள்ள மொத்தம் இதற்குச் சரியாக இருக்க வேண்டும்	
பீ- ரிஜிஸ்தர்	இனும் நிலங்களின் விவரம் தெரியும்	செட்டில் மெண்டாரால் கொடுக்கப்பட்டது ஏ-ரிஜிஸ்தரிலிருந்து தயார் செய்யலாம்.	7-நீர் ஸ்டேட் மெண்டு 9-நீர் ஸ்டேட் மெண்டு	2-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு 2-வது செக்ஷன்	
சோதனை நோட்டு	சாகுபடியும் அறுவடையும் தெரிந்து கொள்ளலாம்	1-முதல்3-வரை கலங்களை ஏ-ரிஜிஸ்தரை வைத்தும் மற்ற கலங்களை பூமியைப் பார்த்தும்	1-நிம்பர் 1-ஏ உள்ளடக் 5-நிம்பர் 6-நிம்பர் கணக்குகள்	2-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு 9-10-11 வது கலங்கள் பதிவு செய்யலாம்.	

1-ம்நம்பர் ஸ்டேட் மெண்டு	ஒவ்வொரு மாதம்சா குபடி தெரிய	தவணை நோட்டு	1-நிர். ஏ— 2-நிர். 2-நிர்பீ-	2-நிர். டி	
1-ம் நம்ப ர்(ஏ)	பயிர்வாரியாய் மாத வாரி சாகுபடியும் அறுவடையும்	1-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு. தவணைநோட்டு.			
2-ம் நம்ப ர்ஸ்டே ட் மெ ண்டு	ஸ்தல விவாமும் ஜ மா பந்திக்குச் ச ம்மந்த மான சக ல விவரமும் இ தில் அடங்கும்	சென்ற பசலி 2-நம் பர் நாளது பசலி 3-ம்நம்பர் தவணை அல்லது தவணை நோட்டு	2-ம் நம்பர் ஏ 1-ம் நம்பர் டீ 5-ம்நிர். 1-வது பிரிவு 6-ம் நிர். 8-ம் நிர். ஏ-பீ	12-ம்நிர். ஸ்டேட்மெ ண்டில் 13-18வது கலங்கல் பதிய	3-ம் நம்பரில் கண் ட சகல மாறுதல் களையும் இதில் ப திவு செய்ய வே ண்டும்.
2-ம் நம்பர் (ஏ) உள் ளடக்க ம்	சர்க்கார் நிலங்களை க்கைப் பற்றினவி வரம்.	2-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு (ஏ ரிஜிஸ் தர் 10-வது கல ம்) பைசலான-ஏ- -பீ-மிமோக்கள்.	7-ம் நம்பர் 9-ம் நம்பர்		
2-ம் நம்பர் (பீ) உள் ளடக்க ம்	நீர் பாய்ந்ததும் பா யாதது மான பயி ர் விவரம் தெரிய.	1-ம நம்பர் ஸ்டேட் மெண்டு.	2-ம் நம்பர் (டி) உ ள்ளடக்கம்.	1-நிர். ஏ மொத்தத் துக்கு ஒத்திருக்கும்	
2-ம் நம்பர் (சீ) உள் ளடக்க ம்	மரத்தீர்வை சம்மந்த மான தோட்டம் தோப்பு களின் வி வரம்.	சென்ற பசலி 2-ம் ந ம்பர் சீ உள்ளடக் கம் நாளது பசலி மரத் தீர்வை கை பீது.	7-நிர். நிலத் தீர்வை யைக் காட்டிலும மரத்தீர்வை ஜாஸ் தி இருந்தால் 9-ம் நம்பர்		

2-ம் நம்பர்உள்ளடக்கம்.	பாய்ச்சலாதார விவரமும் நீர்ப்பாய்ந்தபயிரின் விவரமும்.	2-ம் நிர்.— 2-நிர்.பீ		
2-ம் நம்பர்(இ)உள்ளடக்கம்.	ஒவ்வொரு பாபத்தின் ஆகைக்கட் மொத்தமும். மாறுதல் விவரமும்	சென்றபசலி 2-ம் நம்பர்(இ)உள்ளடக்கம். நாளது பசலி 3-நிர்.		ஏ ரிஜிஸ்தர் உள்ளடக்கம்.
3-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.	சகல மாறுதல் களின் விவரம்.	மேலான உத்திரவுகள்.	2-ம் நிர்— 2-ம் நிர்இ 3-ம் நிர் ஏ—10-ம் நிர் 1-வது பிரிவு.	
3-ம் நம்பர் ஏ உள்ளடக்கம்.	முன் பசலி கைப்பற்றும் நாளது பசலி மாறுதலும். நிலைத்த கைப்பற்று விவரமும்	சென்றபசலி 3-ம் நம்பர்(ஏ)நாளது பசலி 3-ம் நம்பர்	12-ம் நம்பர் ஸ்டேட்மெண்டில்1 முதல 6-வரை கலங்கள் பதிய	2-ம் நம்பர் கோஷ்வாராவில் கண்ட கைப்பற்று மொத்தத் தூக்குச் சரி பார்க்கலாம்
4 நம்பர்.	பேரீஜ் வஜா தெரிய	மேலான உத்திரவைக் கொண்டு.		12-நிர்ல்(39-41வது) கலங்களில்கண்ட தொகைக்குக் கீழே பேரீஜ் வஜாபதிய
5-ம்நம்பர் 1-வது பிரிவு.	வஜாவுக்கு டிவிஷனல் ஆபீசருக்கு அனுப்பு வதற்காக.	2-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு தவணை கோட்வெஜாமனு	5-ம்நிர் 2-வது பிரிவு	

5-நிர் 2-வது பிரிவு.	ஒவ்வொரு பட்டாவிற்கும் ஏற்பட்ட வஜா மொத்தம்.	5-நிர். ஸ்டேட் மெண்டு 1-வது பிரிவு.	10-நிர். 2-வது பிரிவில் 2-வது ஜட்டம் 6-வது ஜட்டம் 7-நிரில் 11-வது கலம்	12-ம் நம்பர் 9-10-கலங்களும் 29-வது கலமும் பதிய	
5-நிர் 3-வது பிரிவு.	அபூர்வமான இதர வஜா.	கிராம முழுதும் சேதமடைந்த காலத்தில்		புஞ்சை வஜா நேரிட்ட காலத்தில் 12 நிர். ஸடேட் மெண்டு 7-8-வது கலம்பதிய.	
6-ம் நம்பர்	சர்க்கார் சம்மந்தமான சகல தண்ணீர் தீர்வை விவரம்.	தவணை நோட்டு 2-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு தண்ணீர் மனு.	6-நம்பர் ஏ உள்ளடக்கம் 7-நம்பர் ஸடேட் மெண்டு ஒரே பாய்ச்சலாதார கிராமமாயிருந்தால் 10-நம்பர் 2-வதுபிரிவில்4வது ஜட்டம் பதிய-	9-நம்பர் ஸடேட்மெண்டில் 5-வது கலமும் 12- நம்பரில் 17-22-வது கலங்களும் பதிய.	
6-ம்நம்பர் (ஏ) உள்ளடக்கம்.	ஒவ்வொரு பட்டாவிற்கும் யேற்பட்ட தண்ணீர் தீர்வை மொத்தம்.	6-ம் நம்பர் ஸ்டேட் மெண்டு.	10-ம் நம்பர் 2-வது பிரிவில் 4-வது ஜட்டத்தில் பட்டா நிலத் தண்ணீர் தீர்வை பதிய.	இனும் நிலத்தண்ணீர் தீர்வை நீர்ப்பாயந்த தெண்ட முதலியவைகளை 7-நிர். கணக்கில்பதிந்திருப் பதற்கு ஒத்திருக்க வேண்டும்.	ஒரே பாய்ச்சலாதாரத்துக்கு இந்தக் கணக்குத் தேவையில்லை

7-ம் நம்பர்	எல்லா விதமான சில்லறை ரிவினியூக்களின் விவரம்.	பீ ரிஜிஸ்டர், 2-திர். ஏ உள்ளடக்கம், 2 திர். சீ உள்ளடக்கம், 5-ம் திர். 2-வது பிரிவு, 6-ம்நம்பர் தர்க் காஸ்த்து ஜாரியான அரைகுறை ஸ்தலமாயிருந்தால் சென்ற பசலி 7-ம் நம்பர் ஸ்டேட்மெண்டு.	10-நம்பர் 2-வது பிரிவில் 8-வது ஐட்டம் பதிய.	12-ம் நம்பர் 31-வது கலம்பதிய.	இது சில்லறை ரிவினியூக்களுக்குச் சிட்டா.
8-நிம் பரும்அதன் உள்ளடகக்மும்	ஒவ்வொரு பாய்ச்சலாதாரங்களில்கூடும் ரிவினியூ விவரங்களும் அவைகளின் மேல் ஏற்பட்ட வஜாக்களும்.	ஏ—பீ—ரிஜிஸ்தர்கள் 2-திர். 5-திர். 6-திர். 7-திர். ஸ்டேட்மெண்டுகள்			
9-ம்நம்பர்	சில்லறை வகைகளின் லான்ட் செஸ்ஸுகளும் லோக்கல் பண்டுஸபெஷல் பண்டுகளின் விவரமும்.	பீ ரிஜிஸதர் 2-ம் நம்பர் (ஏ) உள்ளடக்கம் நிலத் தீர்வையைக் காட்டிலும் மரத் தீர்வை ஜாஸதியாயிருந்தால் 2-சீ உள்ளடக்கம் 6-7-ம் நம்பர் ஸடேட் மெண்டு.	10-நம்பர் 2-வது பிரிவில் 11-12-13-வது ஐட்டங்கள் பதிய.	12-ம் நம்பர் ஸடேட்மெண்டு 34-கலம் பதிய.	

10-ம் நம்பர் 1-வது பிரிவு.	ஒவ்வொரு பட்டாதாருக்கும் எற்பட்ட கைப்பற்று ஸதல விவரமும் மொத்தமும்.	முதலில் செட்டில்மெண்ட் டாரால் கொடுக்கப் பட்ட சிட்டாவும் அதற்பின் முந்தின பசலிகளின் 10-ம்நம்பர் 1-வது பிரிவும் நாளது பசலி 3-ம் நம்பரும்.	10-நம்பர் 2-வது பிரிவின் 1-வது ஐட்டம் பதிய 11-ம்நம்பர் 1-வது பாகம் எழுத.	இந்தகணக்குகளின் விவரங்களை பட்டாதார்கள் தெரிந்து கொள்ள வேண்டுமென்று விரும்பினால் அவர்களுக்குக் காண்பித்து இதில் கையெழுத்து வாங்கலாம்.	
10-ம் நம்பர் 2 வது பிரிவு.	ஒவ்வொரு பட்டாதாருக்கு எற்பட்ட கைப்பற்று மூலல் சகல ரிவினியூ களும் மொத்தமும் ஃபேரீஜாும்.	10-ம் நம்பர் 1-வது பிரிவு 5-ம் நம்பர் 2-வது பிரிவு 6ம் நம்பர் எ உள்ளடக்கம் 7-ம் நம்பர் 9-ம் நம்பர் ஸடேட்மெண்டு.	11-ம் நம்பர் 2-ம் பாகம் எழுதுவதற்கும் 11-ம் நம்பர் (எ) தயாரிப்பதற்கும்.		ஒரே பாய்ச்சலாதாரமுள்ள கிராமமா யிருந்தால் 6-நம்பர் ஸ்டேட்மெண்டை வைத்து 4 வது ஐட்டம் பதியலாம்.
10-ம்நம்பர் பிரிவு 2-க்கு உள்ளடக்கம்.	ஒரு பட்டாவுக்கும்ஒரு கிராமத்துக்கும் எற்பட்ட மொத்தமும் லாண்டு செஸகளும்.	10-நம்பர் 2-வது பிரிவின் 10-14-வது ஐட்டங்கள் பதிய.		12-ம் நம்பர். ஸடேட்மெண்டு 33-வது கலம் 14-16-நம்பர் ஸடேட்மெண்டு களில்பட்டாவாரியாயும் மொத்தமாயும் டிமாண்டு பதிய.	

10-ம்நம்பர்(எ)உள்ளடக்கம்.	பவுத்தியானவர்களுக்கு வாரீஸதெரிய.	10-ம் நம்பர் 1வதுபிரிவு 19-ம் நம்பர்2வது பிரிவு.	10-ம்நம்பர் 1-வதுபிரிவின் தலைப்பில் பெயர் மாற்றபவுத்திதார் பட்டாவில் முதலாவது லக்க தாராயிருந்தால் 2-ம் நம்பர் 6வது கலத்தில் வார்சுகளின் பெயரைப்பதிவதற்கும் உதவுகிறது.		
11-ம் நம்பர்.	ஒரு பட்டா தாருக்குள்ள சகல விவரம் தெரிந்துகொள்வதற்காக குடிகளுக்குக் கொடுக்கும் பட்டா நமூனு.	10-நம்பர் 1வது பிரிவு 10-ம் நம்பர் 2-வது பிரிவு.			
11-ம் நம்பர் ஏஉள்ளடக்கம்.	பட்டா இல்லாத குடிகளுக்கு கொடுக்கும பட்டா.	10-ம் நம்பர் 2-வது பிரிவு(7-ம் நம்பர் 9-ம் நம்பர் ஸடேட்மெண்டிலிருந்தும் தயாரிக்கலாம்)			பட்டா இல்லாத குடிகளுக்கு கொடுப்பது.

12-ம் நம்பர்.	ஒரு கிராமத்துக்கு ஏற்பட்டா மொத்தம் கைப் பற்று முதல சகல விவரங்களும் கிராம மொத்தம் பேரீஸும்.	2-நிர்.-4-நிர் -5-நிர். 6-நிர் — 7-நிர் — 9-நிர். 10-நிர். 2-வது பிரிவுக்கு உள்ளடக்கமாகிய போஸ்ட்டிங் ஸ்டேட்மெண்டு.		இதன் 41-வது கலத்தில் கண்ட மொத்தம் பேரீஜ் 14ம் நம்பர் ஏ உள்ளடக்கம் 16-ம் நம்பர் ஸடேட் மெண்டுகளில் டிமாண்டு பதிய உதவும்
13-ம்நம்பர்	தினசரி வசூல் விவரமும் வசூல் மொத்தமும்.	குடிகள் பணம் செலுத்து வதிலிருந்து உற்பத்தியானது.	14-நீரில் வசூல் பதிய 15-நிர் தயார் செய்ய.	14, நிர். கோஷ்வாராப்பதிய.
14-ம்நம்பர்.	ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்டமுந்தின பசலிஜாஸ்தி வசூல் ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்ட தேதிவாரி வசூல் பசலி கடாசியில் மொத்த டிமாண்டு வசூல் பாக்கி முதலிய விவரங்கள்.	சென்ற பசலி 14-நம்பர்(சீ)உள்ளடக்கம் நாளது பசலி 13-நம்பர் 10-நம்பர் 2-வது பிரிவு அதன் உள்ளடக்கம்.	16,ம் நம்பரில்மாதாமாதம் வசூல் பதியவும் பசலியின் கடாசியில் 14, ஏ பீ,சீ, உள்ளடக்கங்கள் தயாரிக்கவும் 17-நிரில்3-வது கலம் பாக்கிபதியவும் உபயோக மாகிறது.	முன்பசலி பாக்கிகளை முன்னால் எழுத வேண்டும்
14-ம்நம்பர் ஏ.	பசலி கடாசியில் ஒவ்வொருபட்டாவுக்கும்ஏற்பட்டமொத்த வசூலும் கிராமமொத்தடிமாண்டுவசூல்பாக்கிகளும்	14-ம் நம்பர்.		16,நீர். ஸடேட்மெண்டின் கோஷ்வாராவுக்கு ஒத்திருக்க வேண்டும்.

14-ம்நம்பர் (பீ) உள்ளடக்கம்.	வசூலாக மாட்டாமல் கணக்கிலிருந்து கழிக்க வேண்டிய பாக்கிகளின் விவரம்.	10-நிர். 2-வது பிரிவு 14-ம் நம்பர்.			
14-ம்நம்பர் (சி)	ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்ட ஜாஸதி வசூல் விவரம்.	14,ம் நம்பர்.			இதில் கண்ட ஜாஸ்தி வசூலை அடுத்த பசலி 14-நிரில் வசூல் ஆரம்பத்திற்கு முன் ஈடு செய்ய வேண்டும்.
15-ம் நம்பர்.	இருசால் அனுப்பும் பணவிவரம்.	இருசால் அனுப்பும்போது 13-ம் நம்பர் கடாசி மொத்தம்.		14-நீர் கோஷ்வாராப்பதிய.	
16-ம் நம்பர்.	ஒவ்வொரு பட்டாவுக்கும் ஏற்பட்ட மாதவாரி கிஸதி அட்வான்ஸ பாக்கி முதலிய விவரங்கள்.	சென்ற பசலி 10-நம்பர் 2-வது பிரிவு தொகையிலிருந்து உத்தேச டிமாண்டும் நாளது பசலி 10-ம்நம்பர் 2-வது பிரிவிலிருந்து கரார் டிமாண்டும் • 14-நம்பர் ஸடேட்மெண்டிலிருந்து மாதவாரி வசூலும்.			சென்ற பசலி பாக்கி இனங்களை முதலில் எழுதிக்கொள்ள வேண்டும் இதில் கண்ட ஒவ்வொரு மாதம் வசூலும் 14-நிர் வசூலுக்கு ஒத்திருக்க வேண்டும்.

17-ம்நம்பர்.	வட்டிக்கு டிமாண்டு வசூல் பாக்கி விவரம்.	முந்திய பசலி வட்டி கணக்கி லிருந்து டிமாண்டும் 14-ம் நம்பரிலிருந்து வசூலும்.		
18-ம்நம்பர்.	குடிகள் கிஸ்திசெலுத்திய ரசீது.	13-ம்பரி லிருந்து.		
19-ம் நிர் 1-வது பிரிவு	பிறந்த குழந்தைகளின் விவரம்.	குழந்தை பிறந்த போது		அம்மை குத்தும்ரிஜிஸட்டரில் இதில் பதிந்த குழந்தைகளைப் பதிய வேண்டும்
19-நிர். 2-வது பிரிவு.	இறந்தவர் களின் விவரம்.	இறந்த போது		10-எ உள்ளடக்கம் 2-வது கலம் பதிய.
19-நிர். 3-வது பிரிவு.	இறந்த கால் நடைகளின் விவரம்.	கால் நடை இறந்த போது		
அம்மைகுத்தும்ரிஜிஸடர்	அம்மை குத்தாத குழந்தைகள் அம்மை குத்தின குழந்தைகள் விவரங்கள்.	19-நிர் 1-வது பிரிவிலிருந்தும் அம்மை குத்தும் போதும்		

20- நம்பர்	மழைபெய்த விவரமும் கண்மாய்க்குத் தண்ணீர் வந்த விவரமும். சிலவு விவரமும்.	மழை பெய்த காலத்திலும் கண்மாய்க்குத் தண்ணீர் வந்த காலத்திலும் தயார் செய்ய			
21- நம்பர்	விவசாய கால் நடை முதலியவைகளின் விவரம்.	5-வருஷத்துக்கு ஒருதடவை வீட்டு வாரியாக எண்ணிப்பதிவு செய்வது			
22- நம்பர்	தள்ளுபடி செய்யப்பட்டது.				
23- நம்பர்	கூட்டுப்பட்டா, தனிப்பட்டாக்களை, பிரித்து மதிப்பு வகுப்பு வாரியாய்க் காட்டக் கூடியது	10-நிர் 1-வது பிரிவிலிருந்து கூட்டுதனி இன விவரமும் 2-வது பிரிவில் தொகையும்			இதன் 5-வது கலத்திலும் 10-வது கலத்திலும் கண்ட தொகைகள் 12-நிர். ஸ்டேட்மெண்டு 28-வது கலத்துக்கு ஒத்திருக்க வேண்டும்.
24- நம்பர்	சுரங்களில் உண்டாகிற உலோக உற்பத்திகளின் விவரங்கள்.	சுரங்கங்களிலுண்டாகிற உலோகத்தை பரீர்வையிட்டு			

உ

ஸ்ரீராமஜெயம்.



ஸ்ரீராம லெட்சுமண சம்பாஷணை

என்ற

கிராமக்கணக்கு

மான்யூல் சுருக்கம்.

இஃது

திருமங்கலம் தாலூகா,

திருமங்கலம்

ஞானதேசிகம் பிள்ளை அவர்கள் குமாரர்,

செங்கப்படை கிராமம் கர்ணம், வேலைபார்த்த

அய்யாத்துரை பிள்ளை என்ற

பால்வண்ணம் பிள்ளை அவர்களால்,

இயற்றியதை

செங்கப்படை கிராமம்

வெ. அ. ராமசாமி நாயக்கர் அவர்களால்

திருமங்கலம்

ஸ்ரீ கிருஷ்ண விலாசம் பிரஸில் பதிப்பிக்கப்பட்டது.

Title page only printed at the

Shunmuga Vilas Press,

MADURA.

Price Rs **1-8-0** **1923.** விலை ரூ. **1-8-0**